To The Government Oriental Manuscripts Library, Madras
A.L. Valliappa 28.11.70

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

குழந்தை இலக்கியப் பணி வெள்ளி விழா மலர்

22·11·1970

Sswari

Commemoration Volume publishcd on the occasion of the Silver Jubilee of service in the cause of Childrens' Literature by Children's Poet AL. VALLIAPPA

விலை ரூ. 3-00

ASIAN PRINTERS, MADRAS - 14.

வணக்கம்

"குழந்தைகள் இன்பமே எனது இன்பம். அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் குறிக்கோள்" என்று இலக்கியப்பணி செய்து வருகின்றார், 'குழந்தைக் கவிஞர்' என்று சிறப்புடன் குறிக்கப்பெறும் திரு அழ. வள்ளியப்பா. இந்த இலக்கியப் பணியை ஓர் இயக்கமாகவே நடத்தி வருகின்றார் கவிஞர். இருபத்தைந்து ஆண்டுகளில் இந்த இயக்கத்தின் இடைவிடாத உழைப்பும் தொண்டும் பல சாதனைகளை ஆற்றியுள்ளன என்பதை எழுத்தாளரும் பதிப்பாளரும் பள்ளி ஆசிரியரும் பெற்றோரும் நன்கு அறிவர். இந்தத் தனி மனிதரின் தொண்டை நன்றியுடன் பாராட்டி, மகிழ்ச்சி தெரிவித்து, மேலும் ஊக்கப்படுத்துவதே இந்த 'இலக்கியப்பணி-வெள்ளிவிழா'வின் நோக்கம்.

கவிஞரின் இலக்கியப் படைப்புக்களைப் போற்றுகிறோம்; அவரது இலக்கியத் தொண்டைப் பாராட்டுகிறோம். அவர் முழுவதும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள 'குழந்தை இலக்கியத்துறை'யின் வளர்ச்சியிலும் அக்கறை காட்டுகிறோம். ஆகவே, இவை அனைத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இந்த மலர் அமைந்திருக்கிறது. பேரறிஞர்களின் வாழ்த்துக்களுடன் தொடங்கியுள்ள இம் மலரில் திரு. வள்ளியப்பாவின் பல துறைப் படைப்புக்களை எழுத்தாள நண்பர்கள் சீர்தூக்கிச் சொல்கின்றனர்.

குழந்தைக் கவிஞரால் உருவாக்கப்பெற்ற எழுத்தாளர்கள், அவர் உதவியால் முன்னேறியவர்கள், அவரது இலக்கிய முயற்சிகளுக்கும் பல்வேறு நிறுவனங்களில் சேர்ந்து உழைத்து அவரது வெற்றிக்குத் துணை நின்றவர்கள் இம்மலரில் தங்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் கூறுகின்றனர்.

இறுதியில் இடம் பெற்றுள்ள—முற்றிலும் ஒரு தனி நூல் எனத் தகும் பகுதி, குழந்தைகளுக்கான பல துறை

இலக்கியம் பற்றிய சிந்தனைச் செறிவு மிக்க சிறப்புக் கட்டுரைகள் கொண்டது.

சுருங்கக் கூறின், இந்தச் சிறப்பு மலர் இன்றைய தமிழ்க் குழந்தை இலக்கியம் பற்றிய சுவையான விவரக் களஞ்சியம் ; குழந்தைகளின் நலம் பேணுவோரின் சிந்தனை முத்தாரம் ; குழந்தைக் கவிஞருக்கு அன்புடன் வழங்கும் பணி-மலர்.

இரண்டு தலைமுறைக் குழந்தைகளுக்கு இலக்கியப் பணியாற்றும் குழந்தைக் கவிஞரைப் பாராட்டும் எண்ணம் எழுந்தபோது பேரறிஞர்களும் பெரும் பதவியில் உள்ளவர்களும் ஆர்வத்துடன் இதில் பங்கேற்க முன் வந்தனர். கவிஞரின் மீது அன்பும் அக்கறையும் கொண்டுள்ளோர் ஏராளம் என அறிய முடிந்தது. எழுத்தாளர்களிடம் பேரன்பும், இலக்கிய வளர்ச்சியில் அக்கறையும் கொண்ட திரு. ஏ.வி. மெய்யப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஆற்றலும் செல்வாக்கும் உள்ள ஒரு விழாக்குழு அமைந்துள்ளமையே சான்று.

கவிஞரின் குழந்தைப் பருவத்து நண்பரும், அவரை ஊக்கப்படுத்தி அவரது முதல் கவிதை நூலை வெளியிட்டவருமான பழனியப்பா பிரதர்ஸ் அதிபர் திரு. செ.மெ. பழனியப்பா அவர்கள் தமது சொந்தப் பொறுப்பில் இந்த மலரை அழகுறத் தயாரித்து வழங்கியுள்ளார்கள். மலர் வெளிவரப் பெரிதும் உதவிய திரு. சுப்பு அவர்கள், கட்டுரை, கவிதை வழங்கியுள்ள அறிஞர்கள், ஓவியர் ஆனந்தன் அவர்கள், அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியும் வணக்கமும்.

—மலர்க் குழுவினர்

விழாக் குழுவினர்

தலைவர்

திரு. ஏ வி. மெய்யப்பன்
அதிபர், ஏ வி.எம். ஸ்டுடியோஸ்

குழுவினர்

திரு. நெ. து. சுந்தரவடிவேலு,
துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

திரு. கி. வா. ஜகந்நாதன்,
ஆசிரியர், கலைமகள்.

திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி,
துணை ஆசிரியர், தினமணி.

திரு. எஸ். ஏ. பி. அண்ணாமலை,
ஆசிரியர், குமுதம்.

திரு. பெ. தூரன்,
பிரதம ஆசிரியர்,
தமிழ்க் கலைக்களஞ்சியம்,
குழந்தைகள் கலைக்களஞ்சியம்.

திருமதி சௌந்தரா கைலாசம்

திரு. செ. மெ. பழநியப்பன்,
அதிபர், பழனியப்பா பிரதர்ஸ்.

அமைப்பாளர்

திரு. க. அ. செல்லப்பன்,
அதிபர், பாரிநிலையம்.

மலர்க் குழுவினர்

திரு. கண. முத்தையா
திரு. வெ. சுப. நடேசன்
திரு. தம்பி சீனிவாசன்
திரு. ரத்னம்

மலரும் மணமும்

வாழ்த்துரை

திரு. நெ. து. சுந்தரவடிவேலு 9

திரு. நாமக்கல் கவிஞர் 9

வந்தினிது சூழும் ; வேல் நல்கும் சுகம்
— திருமதி சௌந்தரா கைலாசம் 10

குன்னக்குடியான் அருளாலே !
— கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு 16

குழந்தைக் கவிஞர்

குழந்தை எழுத்தாளரின் முதல்வர்
— தி. ஜ. ர. ... 17

குழந்தைக் கவிஞரின் கவிதைகள்
— பெ. தூரன் ... 23

குழந்தைக் கவிஞரின் கதைகள்
— அகிலன் ... 29

குழந்தைக் கவிஞரின் கட்டுரைகள்
— சோமு ... 33

குழந்தைக் கவிஞரும் குழந்தைகளும்
— திருச்சி பாரதன் 37

குழந்தைக் கவிஞரும் அறிஞர்களும்
— ரத்னம் ... 43

குழந்தைக் கவிஞரும் இலக்கிய நிறுவனங்களும்

சங்கம் கண்ட கவிஞர்
— தம்பி சீனிவாசன் ... 47

சங்க வளர்த்த கவிஞர்
— கண. முத்தையா 52
புத்தக டிரஸ்டில் புதுமைகள் செய்தவர்
— மணவை முஸ்தபா ... 56
பிற நிறுவனங்களுடன் தொடர்பு
— டி. எஸ். வி. ... 60
பாலர் மலரும், பூஞ்சோலையும்
— வெ. சுப. நடேசன் ... 63

நாங்கள் கண்ட குழந்தைக் கவிஞர்

சங்கம் வளரத் தளராது உழைத்தவர்
— மபிலை சீனி.வேங்கடசாமி ... 67
செய்வன திருந்தச் செய்பவர்
— வைத்தண்ணு ... 68
வாழ்க வள்ளியப்பா
— ஆர்வி ... 71
குழந்தை இலக்கிய உலகில் ஒரு விடிவெள்ளி
— புலவர் தணிகை உலகநாதன் 74
எழுத்தாளரை உருவாக்கிய எழுத்தாளர்
— பூவண்ணன் ... 77
என்னை வாழவைத்த தெய்வம்
— கே. கண்ணுசாமி ... 79
குழந்தைகள் உள்ளத்தில் குடியிருப்பவர்
— நாக முத்தையா ... 82
கவிமணியை மறவாத கவிஞர்
— ஈ. எஸ். ஹரிஹரன் (ரேவதி) 85
எழுத்தாளர் விவரத் தொகுப்புகள் தந்தவர்
— கெ. பக்தவத்சலம் ... 88
நாடகவிழா நடத்திய கவிஞர்
— கூத்தபிரான் ... 91
வண்ணப் பூஞ்சோலையில் ஒரு வெண்ணிலா
— அழகு பழனிச்சாமி ... 93
ஒப்பற்ற சேவையால் உயர்ந்தவர்
— ஜோதிர்லதா கிரிஜா ... 95
இலங்கை மக்களின் இதயம் கவர்ந்தவர்
— கே. வி. எஸ். மோகன் 96
இலங்கை கண்ட குழந்தைக்கவிஞர்
— க. நவசோதி 98
பிறமொழியாளரும் போற்றும் கவிஞர்
— மகிழ்ச்சிக்கண்ணன் 100

வள்ளல் பாரி உள்ளம் கொண்டவர்
— கவிஞர் பு. ஆ. முத்துகிருஷ்ணன் ... 102
தலை விளக்கு
— ரு. துளசிதாஸ் ... 104
குழந்தைக்கவிஞர் என்றதுமே... !
— கவிஞர் தமிழ்முடி 106
மாபெரும் கவிஞர் வாழியவே !
— செல்ல கணபதி, எம். ஏ. 107
உன்னமுதப் பாட்டிசைக்க
ஊமையரும் வாய்திறப்பர்
— வெற்றியூர் சுப. திருஞானம் 108
வெள்ளிவிழாத் திருமகன்
— புலவர் நாக.சண்முகம் 109
A Household Name
— Somalay 111

குழந்தைகளுக்கு

கவிதை
— கி. வா. ஜகந்நாதன் 115
கதை
— டாக்டர் மு. வரதராசனர் ... 121
அறிவியல்
— கே. எஸ். மகாதேவன் ... 127
சித்திரக்கதை
— வாண்டு மாமா ... 133
ஓவியம்
— கல்கி சாமா 139
கலைக்களஞ்சியம்
— பெ. தூரன் ... 145
பத்திரிகை
— தி. ஜ. ர. 150
நூல்நிலையம்
—டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் ... 156
நாடகம்
— ஔவை டி. கே. சண்முகம் 167
கதை சொல்லுதல்
— தம்பி சீனிவாசன் ... 171
குழந்தைக் கவிஞர்
— புலவர் அ. அப்துல் கரீம் ... 176
வாழ்க்கைக் குறிப்பு ... 177
கவிஞர் படைத்தவை 179

துணைவேந்தர் வாழ்த்துகிறார்

இன்றைய குழந்தை நாளைய மனிதன். எனவே குழந்தையின் போக்கு எதிர்கால மனிதனின் போக்கு. குழந்தையின் போக்கை, அதற்குக் கிடைக்கும் இலக்கியம் உருவாக்கும். குழந்தைக்கு உணவும் உடையும் பாதுகாப்பும் எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை நல்ல இலக்கியம். அத்தகைய இலக்கியத்தை வளர்த்தவர் கவிஞர் அழ. வள்ளியப்பா. கவிஞர் வள்ளியப்பா, இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இளைஞர் இலக்கியம் எல்லா வகையிலும் ஏற்றமுறப் பல்லாண்டுகளாகப் பாடுபட்டு வருகிறார். அவர்கள் முயற்சி மேன்மேலும் சிறப்புறுக. அவர் இலக்கியத் திறத்தாலே சிறுவர் சிறுமியர்கள் நன்மக்களாகி, உலக மக்களாகி, வையம் வாழத் துணை புரிவார்களாக. குழந்தைக் கவிஞர் என்றும் இளையராய் இனியராய் வாழ வாழ்த்துகிறேன்.

நெ. து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர் சென்னைப் பல்கலைக் கழகம்

* * *

நாமக்கல் கவிஞர்

வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின்

வாழ்த்து

இனியபொருள் எளியபதம் இணைந்த வாகி
இளைஞர்களின் மனங்கவரும் கவிகள் பாடித்
தனிமுறையில் தமிழ்த்தாய்க்குப் பெருமை கூட்டித்
தகுதிமிக்கோர் புகழ்ந்தபல சான்று பெற்றோன் ;
புனிதமனக் குழந்தைகட்குப் புதுமை யான
இலக்கியங்கள் படைத்தளித்த பூமா னுகும்.
விநயகுண வள்ளியப்பா வெகுநீள் காலம்
சுகித்துவாழ விமலனருள் புரியும்திண்ணம்.

குன்னக்குடியான் அருளாலே

கொத்தமங்கலம் சுப்பு

வள்ளியப்பா ஒரு புள்ளியப்பா—அவர்
வரையும் பாக்கள் வெள்ளியப்பா
வளரும் பிள்ளைக்குப் பள்ளியப்பா—இளைஞர்
வருங்கா லத்திற்குத் தங்கமப்பா.

பச்சைப் புள்ளைக்குப் பசும்பாலாம்—தமிழ்ப்
பண்பைப் பாய்ச்சிடும் வாய்க்காலாம்
லட்சியப் பாதைக்குக் கைக்கோலாம்—எவரும்
லகுவில் படிக்கும் தமிழ்நூலாம்.

பிள்ளையைத் தாயார் வளர்ப்பதுபோல்—அவர்
சொல்லைத் தருந்ததைச் சொல்லுகிருர்
வெள்ளை மனத்தைக் கெடுக்காமல்
கொள்ளையும் கொலையும் தள்ளுகிருர்.

செட்டிப் பிள்ளை யாதலினுல்—அவர்
செஞ்சொற் கவியினும் பிள்ளைமனம்
கட்டித் தழுவி விளையாடி—என்
காதில் மழலைத் தேன்பாயும்.

வள்ளியப் பாவின் பாமாலை—அது
வளரும் தமிழுக்குப் பூமாலை
அள்ளிக் குடிக்கும் நீரோடை—அது
அழகுத் தமிழுக்குப் பொன்னுடை.

நல்லதைச் சொல்லும் அவர்பாடல்—அது
நாட்டுக்கு நன்மை தரும்பாடல்
பிள்ளைக்குத் தாயாய் தொண்டுசெய்யும்—நம்
வள்ளியப்பா என்றும் வாழ்ந்திடுக!

சின்னஞ் சிறுவர்கள் புன்னகையில்—தமிழ்த்
தெய்வத்தைக் காட்டும் கவிராயன்
குன்னக் குடியான் அருளாலே—என்றும்
குழந்தைக் கவிஞர் வாழ்ந்திடவே!

வந்தினிது சூழும்; வேல் நல்கும் சுகம்!

சௌந்தரா கைலாசம்

வையமே வியக்கும் வண்ணம்
வள்ளியப் பா! உன் நெஞ்சுள்
தெய்வமே குழந்தை யாகித்
திருவிளை யாடல் ஒன்று
செய்வமே என்று மெள்ளச்
சேர்ந்ததோ? சிறுவர்க் காகப்
பெய்வமே பாடல் என்று
பெய்ததோ! உண்மை பேசு!

வானத்தை அளந்து பார்க்க
வாய்த்திடும் தெளிவை, தூய
ஞானத்தை எய்தி எய்தும்
நலத்தினை, உயிரின் மேலாம்
மானத்தைச் சின்னச் சின்ன
வார்த்தையில் கோத்து, நெஞ்சின்
ஊனத்தை நீக்கும் பாடல்
உரமிடும் கரமே வாழி!

முற்றிய தலையும் வாங்க
முடிந்திடாக் கருத்தை, வந்து
சுற்றிய குழந்தை நெஞ்சில்
சுலபமாய்ச் சென்று தாவிப்
பற்றியே படரு மாறு
பாடலைப் புனைய எங்கே
கற்றனை? ஐயா! என்றன்
காதிலும் போட்டு வையேன்!

* * *

குடித்தவர்கள் மேலும் குடித்துயர வந்து
வடித்தாய் கவிதை வளர்தமிழில்! சென்று
பிடித்தால் பிடியிருக்கும் பிஞ்சுகளும் வாங்கிப்
படித்தால் பதியும் படி!

மோனை எதுகை முறிவறியாப் பாடலிலே
ஆனை குதிரை அழகையெலாம்—தேனை
மிதிக்கும் தமிழில் மிகத்தருவாய் ; கண்டு
குதிக்கும் குழந்தைக் குலம் !

காட்டிலுறும் யானையினைக் கையினுறும் பானையினுள்
ஓட்டுங் கலையும் ஒருகலையா ? எழுத்துக்
கூட்டுஞ் சிறிய குழந்தைக்குப் பாட்டெழுதிக்
காட்டுங் கலையே கலை !

* * *

வஞ்சகம் அறியாய் ; நல்ல
மனத்தினுல் வளர்வாய் ; சின்னப்
பிஞ்சினுள் கனியின் சாறு
பெருகிடப் புரிவாய் ; எண்ணும்
அஞ்சினுள் ஐம்ப தேற்றும்
அருந்திற லோய் !கு ழந்தை
நெஞ்சினுள் எழுந்த கோயில்
நடுவினுள் நின்ருய் நீயே !

குழந்தைய ரன்றி, கையில்
கோல்பெற முதுகில் கூனல்
விழுந்தவர் தாமும் மெத்த
விரும்பிநின் பாவில் மூங்கி
அழுந்துவர் ; புதியோ ராக
அரும்புவர் மாச கன்று,
செழுந்தமிழ் நின்கை பட்டுச்
சித்தினைப் புரிந்த தென்று !

விதையுளே மரமி ருந்து
வெளிவரும். விரியும் ; வெற்றுச்
சதையுளே உயிரி ருந்து
சாதனை புரியும் ; நின்றன்
கதையுளே கவியி ருந்து
கருத்தினைச் சொரியும் நாளும்
மதியுளே வளர்ந்து மங்கா
மணிவிளக் கெரியு மாறே !

வஞ்சக நேர்க்கு வந்து
வயதுறும் போது பிள்ளை
நெஞ்சக வேலி யாகி
நிற்பதன் முன்னே, நீபோய்

மிஞ்சிடும் அன்பி னாலே
அவனொரு மேலோன் ஆகக்
கொஞ்சுவாய் குலவு வாய்நற்
குழந்தையாய் உலவு வாயே !

வம்பினைப் பண்ணும் சின்ன
வயதினைக் கோட்டை விட்டுத்
தெம்பினை யிழந்த பின்னே
விதைப்பதா தெளிவு ? மாட்டுத்
தும்பினை விட்டு வாலைத்
தொடர்வதா அறிவு ? நன்கு
நம்பினை பருவம் பார்த்து
நலத்தினைப் பயிர்செய் தாயே !

பன்னெடுங் கால மாகப்
பச்சிளங் குழந்தைக் காக
நின்னெடுங் காத லாலே
கவிதையே நிகழ்த்தும் தொண்டு
முன்னிடம் பெற்று வெள்ளி
முளைக்கிற (து) ; இன்னும் ஓங்கிப்
பொன்னிடம் புகுந்த வைரப்
புதுநகை யதுவும் பூணும் !

அறிந்திடும் அறிவை யார்க்கும்
ஆசையாய்ப் பங்கு வைப்பாய் ;
செறிந்திடும் கவிதை யாக்கிச்
சிறுவருக் கீவாய் ; என்றும்
திறந்தநல் மனம்கொண் டேநீ
திகழுவாய் ; திறமை காணில்
புறந்தனில் விளக்கிப் பேசிப்
புகழுவாய் ; பூரிப் பாயே !

நீபுறம் போகாய் ; அன்பு
நெஞ்சுளே நிற்பாய் ; வானத்
தேவரும் வியந்து போகத்
திரளுவாய் அமுத மாக !
ஆபர ணம்தாய்க் கேற
அழைக்கிறேன் ; 'சொக்கத் தங்கக்
கோபுரம் போலப் பாடிக்
குவிக்கிறேன்' என்று வா !வா!

சிறுவருக் குரிய தான
செந்தமிழ்க் கவிதை பாடிப்
பெறுவதற் கரிய தான
அறிவினைப் பெருக்கு கின்றாய்!
நிறுவுதற் கரிய ஞான
நிலையமாய் நெஞ்சம் மாறி
வருவதற் கெளிய சொல்லில்
வந்துவந் துருக்கு கின்றாய்!

முகத்தினை விட்டு நீங்கா
முறுவலும், அன்பு வாழும்
அகத்தினை விட்டு நீங்கா
அழகதும், வம்பு பேசும்
இகத்தினை அதிகம் எண்ணு
எளிமையும், சிறுவர் நெஞ்சம்
புகத்தனி உரிமை கொண்ட
புகழதும் வாழி! வாழி!

எழுதிடுங் கவிதை யாலே
எழுப்புவேன் நாட்டை; நல்ல
தொழிலெனக் கதுவே என்று
சொன்னபா ரதிதான், விம்மி
அழுதழு தோய்ந்த பாப்பா
அறிவுறக் கருதி வாழ்வில்
பழுதறப் பாடி வைத்தான்
பாதையைப் போட்டு வைத்தான்!

தொடர்ந்தனை; பெற்ற தாயர்
தொட்டிலின் அருகி ருந்து
தடந்தனைக் காட்ட நன்கு
தவழ்ந்தனை; எழுந்து நின்று
நடந்தனை; குழந்தைக் கூட்டம்
நனிமகிழ் வெய்தப் பாடும்
இடந்தனில் அரச னாக
இருந்தனை; இருப்பாய் வாழி!

* * *

பிஞ்சுக்குப் பாடல் ஒன்றிரண் டெழுதிக்
காட்டிவைத்தார்—அன்று
பிள்ளையார் சுழியைப் பாரதி யார்தான்
போட்டுவைத்தார்.

அஞ்சுக்குப் பத்தாய்க் கவிமணி வந்து
தீட்டிவைத்தார்—நீ
அவர்வழி சென்று கவிதையின் தொகையைக்
கூட்டிவைத்தாய் !

எமக்கென ஒருவன் உழைக்கிற மனிதன்
இருக்கின்றாய்—பல
எழிற்கவி சொல்லிக் குழந்தைகள் அறிவை
வளர்க்கின்றாய்.
சுமக்கிற சுமையைத் தருகென வாங்கிச்
சுமக்கின்றாய்—படு
சுட்டிகள் உலகின் மத்தியி லேமனம்
உவக்கின்றாய் !

குழந்தைகள் உலகில் நுழைந்தத னாலே
உயர்வடைந்தாய்—அவர்
குறும்பினில் இனிக்கும் கரும்பினைச் சுவைக்கும்
இயல்படைந்தாய் !
பழந்தமி ழினிமை இளந்தளிர் மனதில்
பயிராக—நீ
படுகின்ற பாட்டை அறிகின்ற தகிலம்
தெளிவாக !

அடம்பிடித் தேயழும் குழந்தையும் விரும்பிக்
கேட்டுவரும்—கவி
ஆறு குளத்தினை ஏழு சுரத்தினைக்
காட்டவரும்.
படம்பிடித் தேதர நீவரு வாய்புதுப்
பாட்டுவரும்—இளம்
பருவத்தி லேதமிழ் உருவத்தி லேஅறி
வூட்ட வரும் !

கள்ளங்கப டறியாப் பிள்ளைகளை யுலகம்
அறியவைக்க—வருங்
கவலையி னிருளை அறிவொளி கொண்டு
முறியடிக்க
உள்ளங் களைநாளும் நல்லவித மாக
விரியவைக்க - மிக
உதவுகி றாய்நீ வாழிய வாழி
நனி சிறக்க !

* * *

முத்தினை ஒத்த பாடல்
மொழிந்தனை ; தமிழ்முப் பாட்டன்
சொத்தினைப் பெருக வைத்துச்
சுகந்தனை வரவு வைத்து,
பித்தினை மனம தாகப்
பெற்றவர் சுமைகு றைத்து
வைத்தனை ; வருங்கா லத்தை
வார்த்தனை நன்றே வாழி !

* * *

கண்டுநிகர் என்னும் கவிதையி னைவிரும்பி
உண்டுவளர் கின்ற உயிரெல்லாம்—தொண்டுயர
வாழுமே வாழுமென்று வாழ்த்துவதால் வந்தினிது
சூழும்;வேல் நல்கும் சுகம் !

கவிமணியின் வாழ்த்து

பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள்
பாடிப் பாடி மகிழ்வெய்த
தெள்ளத் தெளிந்த செந்தமிழில்
தேனூர் கவிகள் செய்துதரும்
வள்ளி யப்பா ! நின்இனிய
'மலரும் உள்ளம்' என்றென்றும்
புள்ளி மயில்வா கனனருளால்
புவியில் வாழ்க ! வாழ்கவே !

சின்னஞ் சிறுவர் சிறுமியர்க்குச்
சிறந்த கருத்தைத் தெளிவாகக்
கன்னல் செந்தேன் முக்கனிகள்
கலந்த இனிய சுவையோடு
மன்னும் கவிதை மணம்வீசி
'மலரும் உள்ளம்' என்றென்றும்
பன்னற் கரிய புகழ்பெற்றுப்
பாரில் வாழ்க ! வாழ்கவே !

('மலரும் உள்ளம்' நூலுக்கு அளித்த வாழ்த்து)



தேனொழுகக் கவிபாடும் தேசிக விநாயகமே
நானுனது கவிபாடி நாடோறும் மகிழுவனே

—குழந்தைக் கவிஞர்

தலைநகரில் தலைவர்களுடன்

குடியரசுத் தலைவராயிருந்த
டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களுடன்



மனிதருள் மாணிக்கம் நேருஜியுடன்



குடியரசுத் தலைவராயிருந்த
டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுடன்

26 DEC 1970

அன்றைய கல்வி அமைச்சர்
டாக்டர் அபுல்கலாம் ஆஸாத் அவர்களுடன்

ராஜாஜி மண்டபத்தில் டாக்டர் ஜாகீர் ஹுசேன் அவர்கள்
வெள்ளிக் கேடயம் வழங்குகிறார்.



நீதிபதி கணபதியா பிள்ளை வெள்ளிக் குத்துவிளக்கு வழங்குகிறார்.



‘ நல்ல நண்பர்கள் ’ நூலுக்குத் தமிழக அரசின் பரிசை
திரு. கு. காமராஜ் அவர்கள் வழங்குகிறார்.

26 DEC 1970
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY



‘ மலரும் உள்ளம் ’ நூலுக்கு 1957ல்
கவர்னர் ஏ. ஜே. ஜான் அவர்கள் பரிசளிக்கிறார்.

குழந்தைக் கவிஞரின் நூல்கள் வெளியீடு



' மலரும் உள்ளம் '—முதல் தொகுதியை 'கல்கி' அவர்கள் தலைமையில், கல்வி, நிதியமைச்சராயிருந்த திரு. சி. சுப்பிரமணியம் வெளியிடுகிறார். *(1954)*

' மலரும் உள்ளம் '—இரண்டாம் தொகுதியை *1961*ல் முதலமைச்சராயிருந்த திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் திரு. சி. எஸ். வெளியிடுகிறார்.

'பாட்டிலே காந்தி கதை' கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்களால் வெளியிடப்பெறுகிறது.



தென்மொழிப் புத்தக டிரஸ்ட் சார்பில், 'பறக்கும் பாப்பா'வை வெளியிட்ட திருமதி தாராசெரியனுடன்.

குழந்தைப் புத்தகக் காட்சியில்

செட்டி நாட்டரசர்
டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்களுடன்

தொழில் அமைச்சராயிருந்த
திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுடன்

திரு. ஏ. வி. மெய்யப்பன் அவர்களுடன்

திரு. சி. சுப்பிரமணியம், திரு. வை. கோவிந்தன் அவர்களுடன்

குழந்தைகள் நிகழ்ச்சியில்

இலங்கையில் நடந்த சர்வதேசப் புத்தகக் காட்சியை
துவக்கி வைத்தபோது



சென்னையில் நடந்த சர்வதேசக் குழந்தைகள் தினவிழாவில்
நீதிபதியாயிருந்த ஏ. எஸ். பி. அய்யர்,
திரு. வை. கோ. ஆகியோருடன்

குழந்தைகளின் கலை நிகழ்ச்சியில்.



குழந்தைகளுக்குக் கதை சொல்லுதல்.



கேடயம் வழங்கிப் பாராட்டப் பெற்ற நாடகத் தந்தை
பம்மல் சம்பந்த முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார்
ஆகியோருடன்



தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராயிருந்த போது,
மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாருக்குப் பாராட்டு.

மாணவர் மன்ற வெள்ளி விழாவில் டாக்டர் அழகப்பச் செட்டியார் படத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்துதல். அருகில் அறிஞர் அண்ணு, டாக்டர் மு. வரதராசனர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்



1959-ல் குழந்தை எழுத்தாளர் சங்க முதல் மாநாட்டை வள்ளியப்பா தலைமையில் கவர்னர் விஷ்ணுராம் மேதி அவர்கள் துவக்கி வைக்கிறுர்.

பிறமொழி எழுத்தாளருடன்



பிரபல அமெரிக்க எழுத்தாளர் மன்ரோ லீபுக்குக்
குழந்தை எழுத்தாளர் சங்க வரவேற்பு.
ராஜாஜியும் கலந்துகொண்டு உரையாடுகிறுர்.



மைசூர் கிருஷ்ணராஜசாகரில் நடந்த எழுத்தாளர் முகாமில்
பிறமொழி எழுத்தாளர்களுடன்.

குடும்பத்தினருடன் குழந்தைக் கவிஞர்

உட்கார்ந்திருப்பவர்கள் : குழந்தைக் கவிஞர், மகள் உமா, பேரன் ராமு, மகள் தேவி, துணைவியார் திருமதி வள்ளியம்மை.

நிற்பவர்கள் : மகள் கஸ்தூரி, மகன் அழகப்பன், மகள் திருமதி அலமேலு அழகப்பன்.



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

குழந்தை எழுத்தாளரின் முதல்வர்

தி.ஜ.ர

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே,
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறீர்.

இப்படி ஒரு பாட்டு. நாடு காக்கும் பணியை மிக முக்கியமானதாக மக்கள் அனைவரும் கருதும் இந்த நேரத்திலே, நாளையைப் பற்றி நினைவு கூர்வது மிக்க அவசியமாகும். அப்படி நம்மை நினைவுகூரச் செய்யும் இந்தப் பாடலைப் பல நாளைக்கு முன்னே பாடியுள்ள குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, குழந்தை எழுத்தாளர்களின் முதல்வர்.

இவர் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் குழந்தை இலக்கியப் பணியில் ஈடுபட்டு வருகிறவர்; குழந்தைகளுக்காக எழுநூறுக்கு மேற்பட்ட கவிதைகள் புனைந்தவர்; பல கதை கட்டுரைகள் எழுதியவர். குழந்தைகளுக்கென்று நாற்பது நூல்களுக்கு மேல் இயற்றி வெளியிட்டிருப்பவர்; குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காக ஒரு பெரிய இயக்கத்தையே தோற்றுவித்தவர்; இன்றைய பல குழந்தை எழுத்தாளர்களெல்லாம் தங்களுக்கு வழிகாட்டியாகக் கொண்டு போற்றப் பெறுபவர். குழந்தை எழுத்தாளர் சங்கத்தை 1950-ல் ஸ்தாபித்தவர்.

எப்படி இவர் குழந்தை எழுத்தாளரானார்? தம் எழுத்துத் திறமை முழுவதையும் குழந்தை இலக்கியத் துறையிலேயே ஈடுபடுத்த இவருக்கு உள்ளம் பதிந்தது ஏன்? இதைப் பற்றிச் சிந்திக்கும்போது, முதன் முதல் இவரைச் சந்தித்த காலம் நினைவுக்கு வருகிறது. அதற்குப் பின் இந்த இருபத்தைந்தாண்டுக் காலமும் திரும்பத் திரும்பக் காணும் வள்ளியப்பாவை, அந்த முதல் சந்திப்பில் கண்ட வள்ளியப்பா வோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றுகிறது. அறிவிலே முதிர்ந்த வள்ளியப்பா, உருவிலும் உள்ள மலர்ச்சியிலும் அதே வள்ளியப்பா வாகவே இருக்கிறார். இளைஞரைச் 'சிரஞ்சீவி இன்னார்' என்று விளிப்பது

வ.—2

நமது மரபு. 'குன்றுத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர் போல்' முகம் மலர்ந்த வள்ளியப்பா அத்தகைய சிரஞ்சீவிகளுள் ஒருவர்.

விளையாட்டுக்களிலே எனக்கு என்றுமே அளவற்ற ஆசை. ஆடத் தெரியாவிட்டாலும் பார்த்துக்கொண்டாவது இருப்பதிலே மகிழ்ச்சி அடைவேன். என் கேரம் விளையாட்டு ஆவல் மூலந்தான் அன்று வள்ளியப்பாவுடன் எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்படத் தொடங்கியது. குழந்தைக் கவிஞருடன் குழந்தையின் இயல்பான விளையாட்டின் மூலமே தொடர்பு கொண்டது ஒரு பொருத்தம் இல்லையா? உண்மையில் அன்றே இவர் 'குழந்தைக் கவிஞர்' தான். அன்று இவர் சுமார் இருபது வயது இளைஞர். (திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இராயவரம் என்ற ஊரில் 7-11-22-இல் பிறந்தவர் வள்ளியப்பா.) ஆனால், தமது பதின் மூன்றுவது வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கியவர். எனவே குழந்தைக் கவிஞர் குழந்தைப் பருவத்திலேயே கவிதை எழுதியவர். குழந்தைகளுக்காகவே கவிதை எழுதிக்கொண்டிருப்பவர்.

பெரியவர்களுக்குக் கவிதையோ கட்டுரையோ எழுதுவதைவிடக் குழந்தைகளுக்கு அப்படி எழுதுவது எளிது என்று பலருக்குத் தோன்றும். உண்மை அது அல்ல. குழந்தைகளுக்கு எழுதுவது மிகவும் கடினம். மலரும் குழந்தை உள்ளப் பாங்கு உள்ளவரே, குழந்தை உள்ளத்தோடு ஒன்றிக் கலந்து குழந்தைக்கு எழுத முடியும். பெரியவருக்கு உபதேசமெல்லாம் செய்யலாம்; குழந்தைக்கு உபதேசம் செய்தால் பலிக்காது. அவர்களுடைய அறிவு மலர்ச்சிக்கு ஒத்தாசை புரிய வேண்டும்; உள்ள உவகைக்கு ஊட்டமளிக்க வேண்டும். குழந்தைக் கவிஞரின் 'மலரும் உள்ளம்' கவிதைத் தொகுதிகள் இரண்டும் இந்த முறையிலே சிறந்துவிளங்கும் பாடல்களைக் கொண்டவை.

இங்கே மாண்டிஸோரி அம்மையாரின் அடிப்படைத் தத்துவத்தை நினைவில் கொள்வது நலம். குழந்தைக் கல்விக்கே தம் வாழ்வை அர்ப்பணம் செய்து, பணி புரிந்து, உலகப் புகழ் பெற்றவர் அந்த அம்மையார். அவருடைய காலத்திலேயே அவரது பெயரால் ஒரு கல்வி முறை—மாண்டிஸோரி முறை—தோன்றி உலகெங்கும் பரவியது. எங்கெங்கும் 'மாண்டிஸோரி பள்ளி'யைக் காண்கிறோம். பெரியவரைப் போலவே, குழந்தையும் தனித்த ஓர் ஆத்மா என்று அந்த அம்மையார் கருதினர். உலகிலே தனக்குரிய இடத்தைத் தேடிக் காண பிறப்பு முதலே குழந்தை 'ஆத்மா' தன்னிச்சையாக முயல்கிறது. குழந்தையின் இந்த இயல்பை - அது இந்த உலகிலே வாழ முயலும் ஒரு சுதந்தர ஆத்மா என்பதை - நம்மில் பலர் அறிவதேயில்லை; கல்வி போதகர்களில்

பலர் கூட அறியவில்லை. பாண்டம், பண்டங்களைப் போலக் குழந்தையும் தங்களுடைய ஒருவகைச் 'சொத்து' என்பது மாதிரி பாவித்துக் குழந்தையைப் பெரியவர் நடத்துவது சற்றும் சரியல்ல. குழந்தை வாழவும் வளரவும் பல பொருள்களை அறியவும் ஓயாமல் முயல்கிறது. இந்த முயற்சியிலே நாம் அதற்கு முழு உதவியும் புரியவேண்டும். பெரியவர்களைவிட அழுத்தமான உணர்வுடன் - 'தான்' என்ற பிரக்ஞையுடன் - குழந்தை வாழ்கிறது; அவர்களைவிட அதி வேகமாக அது வளர்கிறது; அவர்களைவிட மிக அதிகமாக மிகக் குறுகிய காலத்தில் அது கற்கிறது. கூர்ந்து கவனித்தால், இந்த உண்மை எவருக்கும் புலனாகும். குழந்தைக்கு, அது வாழவும் வளரவும் கற்கவும் முயலும் முயற்சியில், நாமும் அதன் நிலையிலே அதோடு அதாக ஒன்றியிருந்துகொண்டே உதவவேண்டும். 'குழந்தையை ஐந்து வயது வரையில் அரசனைப்போல் வளர்' என்ற நம் நாட்டுக் கருத்து இதை ஒட்டியதேயாகும். குழந்தைக்கும் நமக்கும் இடையே வேலி போட்டு, நாம் ஒரு குன்றில் ஏறி உட்கார்ந்துகொண்டு, குழந்தையைக் கீழே நிறுத்தி, அதற்கு நாம் உபதேசம் செய்வது, வாழ்வு, வளர்ச்சி, கல்வி மூன்று அம்சத்திலும் குழந்தையின் உடல் - உள்ளம் - அறிவு மூன்றையும் அழுத்தித் திசை மாறத்தான் செய்யும்.

தெய்வப் புலவர் உள்படக் குழந்தையைப் பாடாத பெரும் புலவர் இல்லை. தெய்வத்தையே கண்ணன், கந்தன் என்னும் குழந்தைகளாகப் பாவிப்பவர் நாம். 'குழந்தைகள் என்னிடம் வருவதற்குத் தடை பண்ணாதீர்கள்; பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது' என்றார் ஏசுபெருமான். காந்தி, நேரு போன்ற உலகப் பெரியோரெல்லாம் குழந்தைகளுடன் பேசி விளையாடி மகிழ்ந்து உறவு கொண்டவர்கள்.

ஸ்டீன் மெட்ஜ் என்று ஒரு விஞ்ஞான மேதை இருந்தார். பிறவியிலே ஜெர்மானியர்; குடியேறி அமெரிக்கப் பிரஜையானார். மின்-காந்த இயலில் பிரபல என்சினீயர்களையெல்லாம் திணறச் செய்து கொண்டிருந்த ஓர் உண்மையை அவர் கண்டு பிடித்தார். 'ஹிஸ்டெரீஸிஸ்' விதி என்று அதற்குப் பெயர் கொடுத்தார். கணிதத்திலும், மின்-காந்த இயலிலும் இணையற்ற நிபுணர் அவர். தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளப் பல விஞ்ஞானிகளும் தொழில் அதிபர்களும் அவரைத் தேடி வருவார்கள். உலகப் பிரசித்தி பெற்ற 'ஃபோர்டு மோட்டார் கார்' தொழிற்சாலை ஸ்தாபகரான ஃபோர்டு அவர்களுக்கே தமது காரின் ஹெட்லைட் சம்பந்தமாக ஒரு சிக்கல் ஒரு சமயம் ஏற்பட்டது. ஸ்டீன் மெட்ஜின் வீட்டுக்கு அவர் வந்தார். இருவரும் மாலை உணவு உண்டபின், ஸ்டீன் மெட்ஜின் படிப்

பறையில் அமர்ந்து, அந்தச் சிக்கல் பற்றி ஆராய்ந்து கணக்கெல்லாம் போட்டார்கள். வெகு நேரமாயிற்று. அப்போது ஸ்டீன் மெட்ஜின் பேரப் பெண் - ருட்ஜ் என்னும் குழந்தை - தடதடவென்று உள்ளே வந்தாள். ''தாத்தா, படுக்கும் நேரம் வந்துவிட்டது'' என்றாள்.

சரேல் என்று ஸ்டீன் மெட்ஜ் எழுந்தார். ''படுக்கும் குழந்தைகளுக்கு நான் கதை சொல்லவேண்டும். அரை மணி நேரத்தில் திரும்பி வந்துவிடுகிறேன்'' என்றார். கிளம்பி மாடிப் படியில் ஏறிவிட்டார்.

ஃபோர்டுக்கு ஒரே எரிச்சலாய்ப் போயிற்று. அவர் வேலை செய்யும்போது, யாருமே குறுக்கிடக்கூடாது ; அதுவும் குழந்தைகள் என்றால், கிட்ட அண்டக்கூடாது. 'என்ன மனிதர் இவர்' என்று ஸ்டீன் மெட்ஜைப் பற்றி மதிப்புக் குறைவாக ஃபோர்டு எண்ணினார். விருந்தளித்தவரின் வீட்டை விட்டே வெளியேறினர். அந்தக் கணத்தில் ஏதாவது ரெயில் வண்டி கிடைத்திருந்தால், அதில் ஏறித் தமது இருப்பிடத்துக்கே போய்ச் சேர்ந்திருப்பார்; கிடைக்கவில்லை. அரை மணி நேரம் தெருக்களிலே நடந்தார். அவருடைய நல்ல காலந்தான்! கடைசியில் என்னவோ சற்று மனம் மாறித் திரும்பிவந்து ஸ்டீன் மெட்ஜின் படிப்பறையிலே அமர்ந்தார். ஸ்டீன் மெட்ஜ் இதே சமயம் மாடியிலிருந்து இறங்கிவந்து, அந்தக் கணமே காகிதமும் பென்ஸிலும் கையில் எடுத்து, ஃபோர்டின் சிக்கலுக்கு விடையாக ஒரு கணக்கை ஒரே நொடியில் செய்து தந்தார்!

'அதிசய உலகில் ஆலிஸ்' - என்ற அற்புதக் குழந்தைக் கதையை எழுதிய ஆசிரியர் லூயி காரல் என்பவரும் ஒரு கணித நிபுணர்தான். ஸ்டீன் மெட்ஜைப் போலவே, குழந்தைகளுக்குக் கதை சொல்வதிலே, அவரும் பேரானந்தம் கொண்டவர். அதன் விளைவுதான் அந்த அற்புத நூல்.

இப்படி மகோன்னத புருஷர்களும் மகா மேதைகளும் குழந்தையோடு குழந்தையாகிப் பழகுவது எதனால்? குழந்தைகளோடு பழகும் எவரும் இந்தப் பூலோகத்திலே சொர்க்க இன்பத்தைக் காண்பார்கள். அந்த இன்பத்தைக் காண்பவருள் ஒருவர் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா. குழந்தைகளுக்கு எழுதுவது மட்டும் அல்ல ; அவர்களோடு அவர் ஒன்றிப் பழகுகிறார் ; குழந்தைகள் அவரிடம் ஒட்டிக்கொண்டு விடுகின்றன. பல குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவர்களுக்கு வேடிக்கை வேடிக்கையாக இவர் கதை சொல்கிறார் ; கவிதை படிக்கிறார். தம்மோடு நின்றுவிடுவதில்லை. குழந்தைகளுக்கென்று எழுதியவர், எழுதக்கூடியவர் எல்லாரையும் அழைத்து, இப்படியே குழந்தைகளுக்குக் கதையும் கவிதையும் சொல்லச் செய்கிறார்.

இவரால் இந்த விஷயத்தில் தூண்டுதல்பெற்ற குழந்தை எழுத்தாளர் கோஷ்டியே ஒன்று (அல்லது பலவோ?) இன்று உண்டு.

பெரியவர்களுக்கும் எழுதும் திறனுள்ளவராயினும், சிறுவருக்கு எழுதுவதிலேயே முற்றும் ஈடுபாடு கொள்கிருர். "ஏன் பெரியவருக்கு நீங்கள் ஒன்றும் எழுதுவதேயில்லே?" என்று நண்பர்கள் கேட்கும்போது, "அதற்குத்தான் மிக்க அழகாய் எழுதும் பலர் இருக்கிருர்களே; நான் எதற்கு? சிறுவருக்கு எழுதுவதே எனக்குப் போதும், அதிலேயே எனக்குத் திருப்தி" என்று அடக்கமாகப் பதில் அளிப்பார்.

திரு. வள்ளியப்பா இலக்கிய உலகில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். தம் இளம் வயதில் இத்தனை சாதனைகளைப் புரிந்திருப்பது எவ்வளவு அரிய காரியம் என்பது பற்றிய பெருமையைச் சற்றும் இவரிடம் காணமுடியாது. காலத்தில் தமக்கு முந்திக் குழந்தைக்கு எழுதியவர்களை - என்னைப்போல் ஒன்றிரண்டே எழுதியவர்களைக்கூடத் தான் - தனி மரியாதையுடன் போற்றுபவர், அழ வள்ளியப்பா. அதிலும் என்னிடம் இவர் அலாதியான அபிமானம் வைத்திருப்பது எனது கிடைத்தற்கரிய அதிருஷ்டம். தமிழிலேயே விஞ்ஞான நூல்கள் வெளி வருவது அவசியம் என்று ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்பே பேருற்சாகத்துடன் பேசியும், அதற்கு ஆரம்பமாகச் சிறுவர்களுக்கு விஞ்ஞான நுணுக்கங்களை எளிதில் விளங்கும் முறையில் கட்டுரைகளாக எழுதியும்வரத் தொடங்கிய சிறந்த அறிஞர் பெ. நா. அப்புஸ்வாமி, பெரியவர்க்கு எழுதினுலும் சிறுவரும் புரிந்துகொள்ளத் தக்க விதம் எதையும் விளக்கும் பேராற்றல் படைத்த ராஜாஜி, அதே முறையில் சொல்லழகும் பொருளழகும் மிக்க கவிதைகள் எழுதிய குணக் குன்றுன கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, சிறுவர்க்கு நல்ல நல்ல பல நூல்களை எழுதியுள்ள - முத்துப் பாடல்கள் பல தந்த தமிழ்ப் பெரியார் மயிலை சிவமுத்து ஆகியோரிடமெல்லாம் இவர் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிருர்; அவர்களுடைய மனமுவந்த பாராட்டுதலையும் ஆசியையும் பெற்றிருக்கிருர்; சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, தமிழ் லெக்ஸிகன் தலைமையாசிரியரும் பேரறிஞருமான ராவ்சாகிப் எஸ். வையாபுரிப்பிள்ளை, எழுத்துலகில் தனிப் புகழ் பெற்ற கல்கி, தேன்போன்ற நடையில் - இளைஞர் உள்ளங்களையெல்லாம் கவரும் பாணியில் - பல நூல்களை எழுதியுள்ள புலமைமிக்க மு. வரதராசனுர் ஆகிய பலரின் புகழுரையையும் இவர் அடைந்திருக்கிருர்.

வள்ளியப்பாவின் கவிதை, கட்டுரைகளிலே புரியாத ஒரு சொல் கூடக் கிடையாது. 'மலரும் உள்ளம்' நூலுக்கு அனுப்பிய ஆசிக் கடிதத்தில், ராஜாஜி இதைத் தமக்கே உரித்தான அர்த்த புஷ்டி மிக்க

சொற்களில் 'பல பாடல்களைப் படித்து அனுபவித்துவிட்டேன். மிக நல்ல பிரசுரம்' என்றும், 'பதவுரை, விசேஷ உரை வேண்டாத ஒரு தமிழ் நூல் வெளியானது ஒரு விசேஷம்' என்றும் குறிப்பிடுகிருர். பிஞ்சு உள்ளங்களில் சீரிய பண்புகள் இடம் பெற்று வளர உதவும் முறையிலேயேதான் குழந்தை இலக்கியம் முற்றும் அமையவேண்டும் என்பதில் திட அபிப்பிராயம் உடைய குழந்தைக் கவிஞர், தம் நூல்கள் அனைத்தையும் அதை ஒட்டியே இயற்றியிருக்கிருர். மலரை வியந்து இவர் பாடிநிற்கும் பாடலையே, இங்கே நாமும் பாடி நிறுத்துவது பொருந்தும் :

மலர் என உள்ளம் - நமக்கு
மலர வேண்டுமடி
பலரும் போற்றிடவே - உலகில்
பண்புடன் வாழ்வோமடி.

☆

ராஜாஜி வாழ்த்து

மலரும் உள்ளம் இந்திய அரசினர் பரிசு பெற்றபோது

வேறு யாரும் செய்யாத பணி. அந்தப் பணிக்குச் சரியாய் அமைந்தவர், செய்து மேலிடத்துப் பாராட்டுப் பெற்றது வியப்பும் மகிழ்ச்சியும். மேன்மேலும் தமிழ்க் குழந்தைகளுக்காக வள்ளியப்பா உழைப்பாராக! அந்த உழைப்புக்குத் தரவேண்டிய ஊக்கத்தை அனைவரும் தருவோமாக!

☆

சொல்லின் செல்வர்

ரா. பி. சேதுப்பிள்ளையின் பாராட்டு

இனிய தமிழ்ப் பாட்டால் உள்ளத்தை அள்ளும் கவித்திறம் வாய்ந்தவர் திரு. வள்ளியப்பா. பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர் அவர்.

குழந்தைக் கவிஞரின் கவிதைகள்

பெ. தூரன்

"குழந்தைகளுக்காக எழுதுவதும் ஒரு இலக்கியமா? அதில் என்ன இருக்கிறது? 'நிலா நிலா வா வா, நில்லாமல் ஓடிவா, மலைமேலே ஏறி வா, மல்லிகைப் பூக் கொண்டுவா' என்று எழுதினால் அது குழந்தைகளுக்கு ஒரு வேடிக்கையல்லாமல் ஒரு கவிதையாகுமா?" என்று நினைத்துக்கொண்டிருந்த காலம் உண்டு. ஆனால், குழந்தையின் உள்ளத்தை அறிந்து அதற்கேற்றவாறு பாடல்களும் கவிதைகளும், கதை முதலியவைகளும் எழுதுவது எளிதான காரியமல்ல என்பதை மெதுவாக எல்லாரும் உணரத் தொடங்கினார்கள். குழந்தை இலக்கியமும் ஒரு தனிப்பட்ட இலக்கியத்துறை என்பதையும் இன்று எல்லாரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நிலாவைப் பார்த்து, 'மலைமேலே ஏறி வா, மல்லிகைப்பூக் கொண்டுவா' என்று சொல்லும்போது ஏதோ பிதற்றல் என்று கருதாமல் அதில் அற்புதமான கவிதை நயம் பொங்கிக்கொண்டிருக்கிறது என்று நாம் இன்று மதித்துப் பாராட்டுகிறோம். மல்லிகைப் பூவை எப்படி நிலவு கொண்டுவரும் என்று கேட்பவர்கள்தாம் கவிதையின் சுவையை அறியாதவர்கள் ஆவார்கள்.

குழந்தைகளுக்காக எழுதிய பாடல்களும் ஒரு சிறந்த இலக்கிய வகையைச் சேர்ந்ததுதான் என்பதை. பாரதியாரும் கவிமணியும் அண்மைக்காலத்தில் நிலைநாட்டிவிட்டார்கள். ஆனால் அவர்கள் வயது வந்தவர்களுக்காகக் கவிதைகளும் பிற இலக்கியங்களும் படைப்பதையே தமது முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதும், அவ்வப்பொழுது குழந்தைகளுக்காக எழுதினார்கள் என்பதும் அனைவருக்கும் தெரிந்ததாகும். குழந்தைகளுக்காக எழுதுவதையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாக அவர்கள் கொண்டிருக்கவில்லை.

இந்த உண்மையை அறியும் போதுதான் நமது குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களுடைய இலக்கிய சேவையின் தனித்தன்மை நன்கு புலனாகும். குழந்தைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் முதலிய எழுதுவதோடு முக்கியமாகக் குழந்தைப் பாடல்களும் கவிதை

களும் எழுதுவதையே தமது வாழ்க்கையின் ஒரே நோக்கமாகக் கொண்டவர் நமது குழந்தைக் கவிஞர். அந்த நோக்கத்திலேயே நின்று சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் குழந்தை இலக்கியம் படைத்துக்கொண்டிருப்பதோடு குழந்தை இலக்கியத்திற்கே அதற்குரிய உயர்நிலையை நிறுவுவதிலும் அவர் யாரும் செய்யாத அளவிற்குப் பணியாற்றியிருக்கிறார். மரப்பாச்சி மாப்பிள்ளையைப் பற்றியும், 'மியாவ் மியாவ்' பூனையாரைப் பற்றியும் கவிதை எழுத முடியுமா என்று சற்று ஏளனமாகக் கருதியவர்கள் வள்ளியப்பாவின் பாடல்களைப் படித்தபோது மூக்கின் மேல் விரலை வைத்துக்கொண்டார்கள். அவர்களுடைய ஏளனம் பாராட்டாக மாறத் தொடங்கிற்று. அந்தப் பாராட்டும், வீட்டிலே குழந்தைகள் குதூகலத்தோடு இப்பாடல்களைப் பாடிக்கொண்டிருப்பதைக் கேட்ட பிறகு மேலும் வலிமை பெற்றது.

'அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம்' என்று இப்படித் தொடங்கும் உயர்ந்த அறிவுரைகளைக் கொண்ட ஆத்திசூடி முதலான நூல்களே குழந்தைகளுக்கு ஏற்றவை என்று நம் முன்னோர் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது இந்த அறிவுரைகளைப் படிப்பதைப் போலவே இவற்றை மறைமுகமாகப் போதிக்கும் பாடல்கள் சிறந்தவை என்ற தெளிவு பிறந்திருக்கிறது. சாணைபிடித்துச் செதுக்கிச் செதுக்கி எவ்வளவு குறைந்த சொற்களிலே கொடுக்க முடியுமோ அவ்வளவு குறைந்த சொற்களில் ஒரு நீதிவாக்கியத்தைக் கொடுத்தால் அது முதிர்ச்சியடைந்தவர்களுக்கு வேண்டுமானால் விருந்தாக அமையலாம். ஆனால், குழந்தைகள் அவற்றை சீரணம் செய்ய முடியுமா? அவர்களுக்கு எளிய சொற்களிலே சந்த நயத்தோடு கதை போல ஒரு நீதியைப் புகட்ட வேண்டும். இப்படிப் பு கட்டுவதைத்தான் குழந்தைக் கவிஞர் தமது முயற்சியாகக் கொண்டிருக்கிறார்.

ஏடுதூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்!

என்பது அவருடைய பாட்டு. இந்த உணர்ச்சியை உள்ளத்திலே வைத்துக்கொண்டு அவர் மிகப் பல பாடல்கள் உண்டாக்கியிருக்கிறார்.

பட்டை போடப் போடத்தான்
பளபளக்கும் வைரமே
மெருகு கொடுக்கக் கொடுக்கத்தான்
மினுமினுக்கும் தங்கமே

அரும்பு விரிய விரியத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே
அன்பு பெருகப் பெருகத்தான்
அமைதி அடையும் உலகமே

இப்பாடலின் வாயிலாக எளிய உவமைகளைக் கையாண்டு ஒரு பெரிய உண்மையைக் குழந்தைகளுக்குச் சொல்லிவிடுகிறார். அன்பின் பெருமை பிஞ்சு உள்ளங்களிலே பதிந்துவிட்டால் இன்று கலக்கமுற்றிருக்கும் உலகம் இன்ப வீடாக மாறிவிடுமல்லவா?

குழந்தைக் கவிஞரிடத்திலே காணப்படும் மிக முக்கியமான உள்ளப்பாங்கை இங்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். அவருடைய உள்ளம் குழந்தை உள்ளம். குழந்தைகளுக்கு எது உகந்ததோ அதை மட்டும் தரக்கூடிய ஒரு தன்மை அவருக்கு இயல்பாகவே வாய்த்திருக்கிறது. இந்த இயல்பு குழந்தைகளுடன் அதிகமாகப் பழகுவதால் மட்டும் வந்துவிடாது. உள்ளத்திலே அது தானாகவே ஊற்றெடுத்துக்கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் எழுத்திலே அது மாறாமல் வெளிப்படும்.

கொலை, திருட்டு, கொடுமை நிறைந்த செயல்கள், திடுக்கிடச் செய்யும் நிகழ்ச்சிகள் இவற்றை அவர் ஒதுக்கியிருப்பது பாராட்டத் தக்கது.

ஜவாஹர்லால் இளம் வயதில் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு வேட்டைக்குச் சென்றதைப் பற்றி ஒரு பாட்டு எழுதியிருந்தாலும் அதன் முடிவு கொலைவெறியைத் தூண்டுவதாக இல்லாமல், "இனிமேல் துப்பாக்கியைத் தொடமாட்டேன்" என்று கூறும் அளவுக்கு அதிலே அன்பையும் பரிவையும் பெய்து வைத்திருக்கிறார்.

"எவர்க்கும் கெடுதி செய்தறியேன்
என்னைச் சுட்டது சரியாமோ?
ஜவஹரைப் பார்த்துக் கேட்பதுபோல்
தரையில் கிடந்தது மான்குட்டி"

ஜவாஹர் கண்ணீர்விட்டுக் கலங்கி, "இனிமேல் துப்பாக்கியைத் தொடமாட்டேன்" என்று சத்தியம் செய்கிறார். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத்தான் அழ. வள்ளியப்பா எடுத்துக் கையாள்கிறார்.

குழந்தைகளுக்குப் பாட்டு என்றால் எல்லாம் நீதி போதிப்பதாகவே இருக்கவேண்டும் என்பது தவறு. இளங்குழந்தைகள் பாட்டின் ஒலிநயத்தால் இன்பமடைந்து ஆடுகின்றன. திரும்பத் திரும்ப அந்தப் பாட்டைச் சொல்லி மகிழ்கின்றன. இப்படிப்பட்ட பாடல்களும் நிறைய

வேண்டும். இதை உள்ளத்திற்கொண்டு நமது குழந்தைக் கவிஞர் பல பாடல்களை எழுதியிருக்கிருர்.

"தோ....தோ....நாய்க்குட்டி
துள்ளி வாவா நாய்க்குட்டி
உன்னைத் தானே நாய்க்குட்டி
ஓடி வாவா நாய்க் குட்டி"

என்று தொடங்கும் பாடலிலும்,

'வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி விட்டு
எடுத்தான் மீதம் கிட்டு"

என்ற பாடலிலும்,

"புல் புல் புல்
புல்லைப் பிடுங்கிப் பூமியை உழுதால்
நெல் நெல் நெல்!

வெல் வெல் வெல்
வென்றது ராமர் கையில் உள்ள
வில் வில் வில்!

சொல் சொல் சொல்
சொல்லித் தந்த பாட்டிக் கெங்கே
பல் பல் பல் ?"

என்ற பாடலிலும், ஓசையின்பத்தையும், சந்த இன்பத்தையும் குழந்தை அனுபவிக்கிறது.

"வாசிக்க ஏடு
வசித்திட வீ டு
பாலுக்கு மாடு
பண்ணுதே கேடு "

அரவ வனப்புக்காக எழுதியுள்ள இப்பாடலிலே ஒரு நீதியையும் நயமாக நுழைத்துவிடுகிருர் கவிஞர்.

மலரும் உள்ளம் என்ற தலைப்பில் இரண்டு தொகுதிகளாகப் பல பாடல்களைத் திரட்டித் தந்திருக்கிருர். முதல் தொகுதி பதின்மூன்று ஆண்டுகளில் எட்டுப் பதிப்புகள் வந்துள்ளன என்ருல் குழந்தைகள் அவற்றை எவ்வளவு விரும்புகின்றன என்பதைச் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

திரு. அழ. வள்ளியப்பா வேறு பல பாடல் தொகுப்புகளும் வெளியிட்டிருக்கிறார். குழந்தைகளுக்குக் கதை என்றால் மிகவும் விருப்பம் அல்லவா ? அதிலும் ஈசாப் கதைகள் உலகப் புகழ் பெற்றவை. அவை மொழிபெயர்க்கப்படாத முக்கிய மொழிகளே இல்லையென்று சொல்லலாம். நம் நாட்டுப் பஞ்சதந்திரக் கதைகள் எப்படிப் புகழ் பெற்றிருக்கின்றனவோ அவற்றைப் போலவே ஈசாப் கதைகளும் சிறப்புப் பெற்றவை.

ஈசாப் என்பவர் சுமார் கி. மு. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரை மூன்று முறை அடிமையாக விற்றார்களாம். மூன்றாம் முறையாக வாங்கியவர் இவருடைய நுண்ணறிவைக் கண்டு வியந்து இவரை விடுதலை செய்துவிட்டார். ஈசாப், கூறிய கதைகளில் வரும் பாத்திரங்கள் பெரும்பாலும் விலங்குகளும் பறவைகளும் ஆகும். விலங்குகளைக் கொண்டு பல அரிய நீதிகளைச் சுவையோடு ஈசாப் கதைகளாகப் புனைந்தார். இவருடைய கதைகளைப் பிற்காலத்தவர் தொகுத்து வெளியிட்டனர். " சீ சீ இந்தப் பழம் புளிக்கும் " என்று கூறிச் சென்ற நரியையும், குள்ளநரியின் புகழ்ச்சிக்கு மகிழ்ந்து வடையை இழந்த காக்கையையும், பொன்முட்டை இட்ட வாத்தையும் நம்மால் மறக்க முடியுமா ?

இவைபோன்ற பல ஈசாப் கதைகளைச் செய்யுள் வடிவத்திலே எழுதிக் குழந்தைக்கவிஞர் இரு தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்.

அதிக ஆசை கூடாது என்பதை நயமாக எடுத்துக் கூற ஈசாப் ஒரு கதை சொல்லியிருக்கிறார். தூங்கிக்கொண்டிருந்த முயல் ஒன்றை ஒரு சிங்கம் பார்த்ததாம். அதே சமயத்தில் ஒரு மான் ஓடுவதையும் பார்த்தது. முயலைப் பின்னால் கொன்று தின்னலாம். முதலில் மானை ஒரு கை பார்ப்போம் என்று சிங்கம் மானைத் துரத்திச் சென்றது. மான் வேகமாக ஓடித் தப்பித்துக்கொண்டது. அதனால் ஏற்பட்ட சத்தம் கேட்டு முயல் விழித்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு எங்கோ ஓடி மறைந்துவிட்டது.

" முன்னே பார்த்த இடத்திலே
முயலைக் காணாச் சிங்கமோ
ஒன்றும் தோன்றி டாமலே,
உள்ளம் வெம்பி உரைத்தது:

' கையில் கிடைத்த பொருள்தனைக்
காற்றில் பறக்க விட்டேனே!
ஐயோ, இரண்டும் போனதே!
அதிக ஆசை கெடுத்ததே!'

ஈசாப் கதைகளோடு தாமாகவே கற்பனை செய்த கதைப்பாடல்களை யும் வேறு இரண்டு தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறர். பூனைக் கல்யாணம் என்பது நகைச்சுவையோடு கூடிய கதையாகும். பூனை மாப்பிள்ளைக்குப் பெண்ணைவிடப் பாலே ருசியாக இருந்தது. அதனை உணர்ந்த பெண் வீட்டார்,

" வேண்டாம் இந்தச் சம்பந்தம்
வெட்கக் கேடு போய்வாரோம்"
என்றே பெண்ணின் தாயாரும்
ஏளனமாகக் கூறியபின்
அருமைப் பெண்ணைத் தன்னுடனே
அழைத்துக் கொண்டு போனாளாம் !

வேடிக்கையும் நகைச்சுவையும் கூடிய பாடல்கள் பல நம் குழந்தைக் கவிஞரால் உண்டாக்கப்பட்டுள்ளன.

சாதாரணமாகப் பொழுது விடியுமுன்பு கோழி கூவும். இங்கே ஒரு சேவல் தூங்கிக்கொண்டிருக்கிறது. குழந்தை ஒன்று விழித்து எழுந்து சேவலை எழுப்புகின்றது. சேவல் கூவி எல்லோரையும் எழுப்பவில்லை. இந்தக் குழந்தை கூவிச் சேவலை எழுப்புகிறது !

" கொண்டைச் சேவல், கொண்டைச் சேவல்
எழுந்திருப்பாயே
'கொக்க ரக்கோ !' என்று நீயும்
கூவிடு வாயே !
உறங்கு கின்ற சேவ லேநீ
எழுந்தி ருப்பாயே.
உதித்து விட்டான், சூரியனும்
கூவிடு வாயே !

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா மேலும் ஒரு நல்ல கதையைச் செய்யுளாகக் குழந்தைகளுக்கு வழங்கியிருக்கிறர். சென்ற ஆண்டிலே மகாத்மா காந்தியடிகளின் நூற்றாண்டு விழா நடந்ததல்லவா? அந்த ஆண்டிலே காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றைப் 'பாட்டிலே காந்தி கதை' என்ற அழகிய நூலாகத் தந்திருக்கிறர்.

'பாட்டிலே காந்தி கதை' ஒரு நல்ல படைப்பு.

இவ்வாறு குழந்தைகளுக்காக எழுதுவதையே இலக்கியப் பணி யாகத் தம் வாழ்க்கையில் கொண்ட குழந்தைக் கவிஞர், குழந்தையைப் போல இயல்புடையவர். எப்பொழுதும் சிரித்த முகத்தோடு இருப்பார். அவருடைய இலக்கியப் பணி ஓங்குக ! குழந்தைக் கவிஞர் பல்லாண்டு வாழ்ந்து மேலும் மேலும் தமது இலக்கியப் பணியைத் தொடர்ந்து செய்ய இறைவன் அருள்க !

குழந்தைக் கவிஞரின் கதைகள்

அகிலன்

மகாகவி பாரதியாரை ஒரு கவிஞர் என்ற முறையில்தான் பலருக்குத் தெரியுமே தவிர, அவர் ஓர் உயர்தரமான உரைநடை ஆசிரியர் என்பது பலருக்குத் தெரியாது. கவிதையில் அவர் சொல்லாத பல்வேறு கருத்துக்களை மிகவும் அழகாக அவர் தம் கட்டுரைகளிலும் கதைகளிலும் சொல்லியிருக்கிறார். ஆழ்ந்து படித்தவர்கள் அவர்தம் உரைநடைக்காகவும் அவரைப் போற்றுகிறார்கள்.

'குழந்தைக் கவிஞர்' வள்ளியப்பா அவர்களையும் இந்த நாட்டில் பலருக்குக் 'குழந்தைக் கவிஞர்' என்ற அளவில்தான் தெரியும். அதிலும் வயதில் பெரியவர்கள் பலர் அவர் குழந்தைகளுக்காகக் கவிதைகள் மட்டுமே எழுதக்கூடியவர் என நினைத்திருக்கலாம். ஆனால், தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கோ அவர் கவிஞராகவும், கட்டுரை ஆசிரியராக வும், கதாசிரியராகவும் காட்சியளிக்கிறார். அவருடைய சிறு கதை நூல்கள் பலவற்றையும், நாவல்கள் சிலவற்றையும், கட்டுரைத் தொகுப் புக்கள் சிலவற்றையும் படித்துக் களித்தவர்கள் அவர்கள்.

'கதை சொன்னவர் கதை' எழுதிய இந்தக் கதாசிரியரின் கதைகள் சிலவற்றை இனிக் காண்போம்.

குழந்தைகளுக்கென்று கதை எழுதுவதிலுள்ள சிரமத்தை நான் நன்கு உணர்ந்தவன். வயதும் அனுபவமும் வளர வளர, என்னைப் போன்றவர்களால் குழந்தைகள் உலகத்துக்குள் புகுந்து செல்ல முடிவ தில்லை. அதற்கு நிறைந்த மனப்பக்குவம் வேண்டும். குழந்தைகளோடு குழந்தையாகப் பழகக் கூடிய மனம் இயல்பாகவே இருக்கவேண்டும். அவர்களுடைய ஆசைகள், கனவுகள், இயல்புகள், விருப்பு வெறுப் புக்கள் இவற்றில் மெய்யாகவே ஈடுபடும் பயிற்சி வேண்டும். அவர் களுக்குச் சுவையூட்டும் வகையிலும் பயன்தரும் முறையிலும் கதை சொல்வது அவ்வளவு எளிதான சாதனையல்ல. ஆனால், வள்ளியப்பா

எப்படியோ குழந்தையாகவே மாறிப்போய், அதே சமயம் அறிவூட்டும் ஆசிரியராகவும் இருந்துகொண்டு இந்த அற்புதத்தைச் செய்து கொண்டு வருகிறார்!

சிறு குழந்தைகளுக்கு நாய், பூனை, கிளி முதலிய பிராணிகளைக் கண்டுவிட்டால் ஒரே கொண்டாட்டம். அவைகளிடம் குழந்தைகள் வைக்கும் அன்பை அவர் கூர்ந்து கவனித்திருக்கிறார். 'உமாவின் பூனைக்குட்டி' என்ற கதையில், உமா, தான் செய்யும் தவறுக் கெல்லாம் வாயில்லாப் பிராணியான பூனைக்குட்டியின் மேல் பழி போடு கிறாள். கடைசியில் அன்புதான் வெல்கிறது.

அதேபோல் பிராணிகளிடம் குழந்தைகளுக்குள்ள அன்பை வெளிப் படுத்தும் பல கதைகள் அவரிடமிருந்து வெளிவந்திருக்கின்றன. இந்தக் கதைகளில் தலைசிறந்ததாகக் கருதப்படும் 'நல்ல நண்பர்கள்' என்ற கதைக்குத் தமிழக அரசு பரிசு கொடுத்துப் பாராட்டியிருப்பது முற்றிலும் பொருத்தமாகும். வீரன் என்னும் நாய்க்குட்டியும் கஸ்தூரி என்னும் வாத்துமே அந்த நல்ல நண்பர்கள். கஸ்தூரிக்கு வந்த ஆபத்தி லிருந்து அதைக் காக்க வீரன் அதைத் தன் எஜமானர் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறது. வீட்டுக் குழந்தைகளான முரளியும் சீதாவும் அவற்றின்மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள். ஒரு நாள் வேற்றுச் சிறுவன் ஒருவன் குறும்புத்தனமாக விட்டெறிந்த கல்லால் வாத்தின் உயிர் பிரிகிறது. அந்த வாத்தின் பிரிவுக்காக நாய் துடிக்கும் துடிப்பையும், வாத்து புதைக்கப்பட்ட இடத்திலேயே நாய் உயிர் துறந்து விடுவதையும் மிக உருக்கமாகச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். மனிதர்களிடம்கூடக் காணமுடியாத இந்த உயர்ந்த அன்பையும் நட்பையும் பிராணிகளிடம் உருவாக்கிக் காட்டி, அதன் வாயிலாகப் பிஞ்சு உள்ளங்களில் அன்பை ஊட்ட முயன்றிருப்பது ஆசிரியரின் சிறந்த நோக்கத்துக்குச் சான்றாகத் திகழ்கிறது. பழனியப்பா பிரதர்ஸ் இந்த நூலை வெளியிட்டிருக்கும் சிறப்பையும் நாம் பாராட்டத்தான் வேண்டும்.

'மணிக்கு மணி' என்ற குறுநாவல், ஓர் ஆட்டுக்குட்டியிடம் சிறுவன் ஒருவனுக்குள்ள பாசத்தை விளக்குகிறது. அந்த ஆட்டுக்குட்டியைப் பலிபீடத்திலிருந்து காப்பாற்ற, கந்தன் எனும் அச்சிறுவன் எத்தகைய சோதனைகளுக்கு உள்ளாகிறான் என்பதையும், எப்படியெல்லாம் சோதனைகளோடு அவன் போராடி வெற்றி பெறுகிறான் என்பதையும் அது சொல்கிறது. குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டிவிட்டு மேலே படிக்கச் செய்யும் உத்தியைக் கையாண்டு இதில் ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார்.

பிராணிகளிடம் மட்டுமா குழந்தைகளுக்கு அன்பு ? செடி கொடிகள் மலர்கள் முதலியவற்றிடம் அவர்களுக்குள்ள ஆர்வம் நாம் அறிந்ததே. 'ரோஜாச் செடி' என்ற கதையில் வரும் ஏழைப் பெண் பார்வதி, தான் வளர்த்த ரோஜாச் செடியிடம் எவ்வளவு மெய்ப்பற்றுதல் வைத்திருந் தாள் என்பதையும், அதை அவள் தாயிடமிருந்து விலைக்கு வாங்கிய மற்றொரு பெண் எப்படி அதனால் போலிப் புகழ் பெற நினைத்தாள் என் பதையும் விளக்கியிருக்கிறார். அபாயகரமான வனவிலங்குகளுக்கு இடையில் வாழும் மான்குட்டியைப் பற்றியும் ஒரு கதை இந்த 'ரோஜாச் செடி' எனும் நூலில் உள்ளது. யானை, குதிரை, ஒட்டகம் இவற்றின்மீது சவாரி செய்யத் துடிக்கும் குழந்தைகளின் ஆவலைப் பிரதி பலிப்பதே போல் உள்ளது 'குதிரைச் சவாரி' என்ற நூல்.

இன்னும் ஒரு முக்கியமான கதைக்காகவும் வள்ளியப்பாவை நாம் பாராட்ட வேண்டும். பெரியவர்களுக்கிடையிலும் உறவினர்களுக்கிடை யிலும் சண்டைகள் ஏற்படுவதையும், அவர்கள் பிரிந்துவிடுவதையும் நாம் அறிவோம். ஆனால் இணைப்புப் பாலமாகச் சில இடங்களில் சிறுவர்கள் விளங்கிப் பெரியவர்களின் சண்டைகளைத் தீர்த்து வைத்து விடுகிறார்கள். அம்மாவுக்கும் அத்தைக்கும் ஏற்பட்ட சண்டைக் கிடையில் சிக்கித் தவிக்கும் மணி என்னும் சிறுவன், இருவரிடமும் சமமாக அன்பு செலுத்தும் காரணத்தால், கடைசியில் அவர்களை ஒன்று சேர்த்து வைக்கிறான். இதைத்தான் 'அம்மாவும் அத்தையும்' என்ற கதை சொல்கிறது. இவ்வாறே, 'எங்கள் பாட்டி' என்ற கதை குழந்தைகள் உலகத்தில் கதை சொல்லும் பாட்டிக்குள்ள மகத்து வத்தைச் சொல்கிறது.

சிறுவர்க்கான நாவல் என்ற முறையில் வள்ளியப்பா எழுதி யிருப்பது 'கல்கி'யில் முன்பு தொடராக வந்த 'பர்மா ரமணி' என்ற கதையாகும். ஏழைச் சிறுவன் ஒருவன் நேர்மையைக் கடைப்பிடித்த தால் ஏற்பட்ட துன்பங்களையும், துன்பங்களுக்கிடையிலும் அவன் நெறி பிறழாமல் இருந்ததையும், முடிவில் அவன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதையும் இதில் நாம் காணுகின்றோம். நெஞ்சில் உரமும் நேர்மைத் துணிச்சலும் நம் குழந்தைகளுக்கு—ஏன், பெரியவர்களுக்குந் தான்!—தேவை என்பதை இது நன்கு சுட்டிக்காட்டுகிறது.

வள்ளியப்பா அவர்கள் குழந்தைகள் மனத்தைக் கவர்ந்து அவர்களைக் கெடுப்பதற்கு ஒருபோதும் முயன்றதில்லை. இது அவருடைய தனிப் பெரும் சிறப்பு. துப்பாக்கி, கொலை, கொள்ளை, பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள் முதலியவற்றால் அவர் குழந்தைகளை மயக்க விரும்பாதவர். அதீதக் கற்பனைகளில் அவர்களைச் சஞ்சரிக்க விடாமல், நடைமுறை

உலகத்திலேயே அவர்களை நடமாடவிடுகிறார். ஆனால் நடைமுறையோடு எப்போதும் இலட்சியம் கலந்தே எழுதுவது அவர் பண்பு. நல்ல குணங்களை மறைமுகமாகக் குழந்தைகளிடம் தூண்டிவிடுவதே அவர் இலட்சியம்.

சின்னஞ்சிறு வாக்கியங்களால் அமைந்த எளிய தமிழ்நடை. சுற்றி வளைத்துக் குழப்பாத நேரான கதைப் போக்கு. குழந்தைகளின் இயல்புகளை வெளிப்படுத்தும் பாத்திரப் படைப்பு. இலை மறை காய் போன்று, கதைப் போக்கை மீறி வெளியே தலை நீட்டாத கருத்துப் பின்னல் —இவை இவர் கதைகளின் தனிச் சிறப்புக்கள்.

குழந்தைக் கவிஞர் இன்னும் பல கதைகளையும் எழுதி, குழந்தைக் கதாசிரியராகவும் திகழ வாழ்த்துகிறேன். இறைவன் அவருக்கு ஆரோக்கியம் நிறைந்த நீண்ட நல்வாழ்க்கையை அருள்வானாக !

☆

குழந்தைக் கவிஞர் பரம்பரை

இதுவரையில் குழந்தைகளுக்காகவே பாடிய ஒரு கவிஞரைத் தமிழகம் கண்டதில்லை. அதனால்தான் குழந்தைகளும், பெற்றோரும் ஒரே குரலில், 'குழந்தைக் கவிஞர்' என்று வள்ளியப்பாவைப் போற்றிப் புகழ்ந்து பேரின்பம் காண்கிறார்கள்.

குழந்தைக் கவிஞர் தாம் பாடல்கள் எழுதுவதோடு, பிறரையும் பாடத் தூண்டி யிருக்கிறார். அவருடைய பாடல்களைப் பார்த்துப் படித்து, அவற்றைப் போல எழுதப் பலர் விரும்பினார்கள்; எழுதினார்கள். பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை என்பதைப் போல, நாட்டில் 'குழந்தைக் கவிஞர் பரம்பரை' ஒன்றும் உருவாகி வருகிறது. இன்று குழந்தைகளுக்குப் பாடல் எழுதும் பலர் இந்தப் பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

—பூவண்ணன்

(குழந்தை இலக்கிய வரலாறு (1961) என்ற நூலில்)

குழந்தைக் கவிஞரின் கட்டுரைகள்

சோமு

நண்பர் அழ. வள்ளியப்பாவை நினைக்கும்போதெல்லாம் அவருடைய சிரித்த முகமும், மங்களமான வெற்றிலைக் காவி ஏறிய பற்களும் என் கண்ணுக்கு முன்னால் அப்படியே வந்து நின்றுகொள்ளுகின்றன! அவருடைய அந்தக் குழந்தை முகமும் உல்லாசச் சிரிப்புமே அவரது எழுத்தின் உருவம் என்பது என் மதிப்பீடு!

வெற்றிலைக் காவி படிந்த பல்வரிசையைப் போல, செவ்விய தமிழ்ப் பண்பாடு நன்றாக முலாம் ஏறியுள்ள இதயம் வள்ளியப்பாவின் இதயம். இந்தப் பண்பாட்டோடுகூட, சின்னஞ்சிறு குழந்தைகளுடனும் பள்ளிச் சிறுவர்களுடனும் இதயம் கலந்து பழகி, அன்பை வழங்கி, அன்பைப் பெற்று அவர்களுடைய பூங்குமுத இயல்புகளையெல்லாம் நன்கு அறிந்து அனுபவித்துள்ள சிறந்த ஆனந்தம் அவருக்கு உண்டு. இது காரணமாக அவர் எதை எழுதினாலும் எதைப் பேசினாலும், என்ன சிந்தித்தாலும் அவருக்கு எதிரே அவருடைய மனக் கண்ணின் முன்னால் குழந்தை என்ற உல்லாச தத்துவம் வந்து கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு நிற்கிறது! அந்த உல்லாச தத்துவத்தை ஆர்வத்தோடு கண்ட அவருடைய உள்ளம், வாசகர்களுக்கு முன்னாலும் அதை அப்படியே கொண்டுவந்து நிறுத்தி இலக்கியம் சமைத்துத் தமிழை வளர்க்கிறது. அவர் தமது கண்ணாரக் கண்டு அனுபவித்த குழந்தை என்ற களிப்பு, அவருடைய எழுத்திலே இறங்கி, வாசிப்பவர்களின் உள்ளத்துக்குள்ளும் பாய்கிறது. இதுவே வள்ளியப்பாவின் இலக்கிய சேவை!

வள்ளியப்பா பல நூல்கள் எழுதியிருக்கிறார். பல பாடல்கள் எழுதியிருக்கிறார். இத்தனையிலும் ஊடுருவி நிற்கக்கூடிய பண்பு, இந்தக் குழந்தைக் களிப்புதான்! குழந்தைகளுக்காகக் குழந்தையாக மாறி நிற்கக்கூடிய ஒரு குழந்தை எழுத்தாளரின் குழந்தைப் பண்பு இருக்கிறதே,

அதுவே நண்பர் வள்ளியப்பாவின் இலக்கியப் படைப்புக்களில் நான் காண்கிற சிறப்பு; இதுவே அவருடைய எழுத்தின் வெற்றியும் ஆகும்.

வள்ளியப்பாவின் கட்டுரைகளைப் பற்றி நான் என்ன கருதுகிறேன் என்பதைச் சொல்ல வேண்டும் என்று விழாக் குழுவினர் என்னைக் கேட்டிருக்கிறார்கள். ஆகையால் அவருடைய கட்டுரை நூல்களைப் பற்றி மட்டுமே இங்கே நான் மதிப்புரை கூறவேண்டும். அந்த முறையில் அவருடைய கட்டுரை நூல்களை மட்டும் ஓரளவு இப்போது பார்க்கலாம்.

பாடல்களிலே நாம் பார்க்கும் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வேறு, கதைகளில் விளையாடுகிற வள்ளியப்பா வேறு, கட்டுரைகளிலே வந்து நிற்கிற வள்ளியப்பா வேறு - என்று தனித்தனியாக இல்லாமல், எந்த உடைகளை எப்படி மாற்றி, எந்த வேடங்களிலே நின்று அவர் ஆடினாலும், எல்லா வேடங்களுக்குள்ளும், நான் அந்த வெற்றிலைக் காவிப் பற்களையே பார்க்கிறேன். அந்தக் குலுங்கற் சிரிப்பையே கேட்கிறேன். அந்த ஒரு குழந்தை உருவமே என் முன்னால் நிற்கிறது.

குழந்தைகளுக்கு எது வேண்டும், குழந்தைகள் எதைச் சுவைப்பார்கள், எதைச் சுவைக்க வேண்டும்,—என்றெல்லாம் நன்கு ஆராய்ந்து கண்டவர் வள்ளியப்பா. இந்த ஆராய்ச்சியை அன்போடும் ஆர்வத்தோடும், குழந்தைகளின் நல்வாழ்விலுள்ள மெய்யான கவலையோடும் அவர் ஆழ்ந்து முயன்று செய்திருப்பதால், அவர் தமது எழுத்திலே ஆரோக்கியமான எண்ணங்களை உருவாக்கி, ஆரோக்கியமான எழுத்து - உணவை, சுத்தமான புத்தகப் பேழையிலே அடைத்துக் குழந்தைகளுக்கு வழங்குகிறார். பொறுப்புணர்ச்சியோடும், ஒரு தந்தையின் அக்கறையோடும் இதைச் செய்கிறார். விஷச்சத்துக்களோ, குழந்தையின் மனமாகிய உள்வயிற்றுக்கு அஜீரணம் உண்டாக்கி நோவைத் தருகிற கலப்படங்களோ வள்ளியப்பாவின் கட்டுரைகளிலே இல்லை. கலப்படம் இல்லாத சுத்தமான பாலைப் பொடியாக்கி நல்ல முறையிலே எளிய தமிழில் அடைத்துப் புத்தகங்களாக விளம்புகிறார் வள்ளியப்பா என்று சொன்னால் புகழ்ச்சியில்லை.

''பிள்ளைப் பருவத்திலே'' என்று ஒரு புத்தகம்! தம்முடைய திறமையாலும், அறிவாற்றலாலும், ஊக்கத்தினாலும், உழைப்பினாலும் முன்னேறிப் பெரும்புகழ் பெற்ற உலக மேதைகள் முப்பது பேரைப் பற்றி இந்த நூல் கூறுகிறது. மகா அலெக்சாந்தர் சிறுவனாய் இருந்த போது குதிரையை எப்படி அடக்கினார் என்பதிலிருந்து, சூரியமூலை என்ற கிராமத்தில் ஆனந்த வருடத்திலே நடந்த நம்மூர் அதிசயக்கதை வரை ஒரே வியப்புணர்ச்சியோடு கதை சொல்லுகிறார் வள்ளியப்பா. அந்த வியப்புணர்ச்சியை நூலைப் படிக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டி விடுகிறது அவருடைய கட்டுரைப் பாங்கு.

"சின்னஞ்சிறு வயதில்" என்று இன்னொரு நூல். பாரத நாட்டுப் பெரியோர்கள் பத்தொன்பது பேர், வெளிநாட்டார் பத்தொன்பது பேர்—ஆக முப்பத்தெட்டுப் பெரியோர்களின் இளமை வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கிறது இந்த நூல். பொம்மைகளை வைத்து நாடகம் நடத்திய பையன் மனிதர்களை வைத்தே நாடகம் நடத்தக்கூடிய கதாசிரியனாக மாறுகிற பரிணாம விந்தையும், வானத்தைப் பார்த்துக்கொண்டே ஓடி விபத்துக்கு உள்ளான சிறுவனும், அபராதம் கட்டிய சிறுவனும் பின்னர் எப்படி மாறினார்கள் என்ற வரலாறும், இவை போன்ற இன்னும் பல சுவையான நிகழ்ச்சிகளும் இந்த நூலில் பார்க்கிறோம். இது போலவே நமது தேசத்திற்கும் மொழிக்கும் சிறந்த தொண்டுகள் செய்துள்ள பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் **"பெரியோர் வாழ்விலே சுவையான நிகழ்ச்சிகள்"** என்ற தலைப்பில் இரண்டு தொகுதிகளாக வந்திருக்கிறது. எட்டு ரூபாயில் படித்தவரையும், சொந்தக் கையிலே சூடு போட்டுக் கொண்டவரையும், பதினோரு வயதில் பாட்டுப் பாடியவரையும் இந்த நூலிலே சந்திக்கலாம். வெள்ளைக்கார நீதிபதிக்கு மூன்று ரூபாய் அபராதம் போட்ட வீரரையும் சந்திக்கலாம். சந்திப்பதோடு இல்லை; இந்தப் பெரியோர்களின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை எதிர்காலப் பெரியோர்களாகிய இக்காலத்துக் குழந்தைகள் குறிக்கோளாக வைத்துக் கொண்டும் முன்னேறலாம்.

இன்னொரு புத்தகம், **"கதை சொன்னவர் கதை"** என்பது! கதைகள் கூறுகிற ஆசிரியர்கள் சிலரின் வாழ்வு பற்றிய கதைகளைக் கூறுகிறது இந்த நூல். குழந்தைகள் விரும்பக்கூடிய முறையில் கதைகள் சொல்லும் ஆசிரியர்களைப் பொறுக்கி எடுத்து, ஒவ்வொரு கதாசிரியரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் சொன்ன ஒரு கதையுடன் தொடங்குகிறார் வள்ளியப்பா. மூன்று தொகுதிகளாக, ஒரு தொகுதிக்கு நான்கு கதாசிரியர்களைப் பற்றிக் கூறுகிறது இந்த நூல்.

மனித உலகம் இப்படி இருக்கிறது. இதோடு நிற்கவில்லை வள்ளியப்பாவின் இலக்கியம்! சிங்கம், கங்காரு என்று அழைக்கிற காங்கரு, நீர்யானை, ஒட்டகம், யானை ஒவ்வொன்றும் தமிழில் பேசுகிறது! குழந்தைகளுக்குப் புரிகிற தமிழில் பேசித் தான் பிறந்து வளர்ந்த உண்மைக் கதையை உண்மையான இயல்போடு எளிமையாகப் பேசுகிறது, **"எங்கள் கதையைக் கேளுங்கள்"** என்று!

இன்னொரு நூலும் எழுதியிருக்கிறார் வள்ளியப்பா, **"மிருகங்களுடன் மூன்று மணி"** என்று! மிருகக்காட்சி சாலைக்குள்ளே குழந்தைகளைக் கையைப் பிடித்துக்கொண்டே அழைத்துச் செல்கிறார் ஆசிரியர்.

வள்ளியப்பாவின் நூல்களுக்குள்ளே ஒரு தனியான சுவை கொண்டது இந்த நூல் !

இத்தனையும் குழந்தைகளுக்காக ! இவற்றோடு நில்லாமல், பெரியவர்களையும் மறந்துவிடாமல், இரண்டு நூல்கள், கட்டுரை நூல்கள் வள்ளியப்பா எழுதியிருக்கிறார். ஒன்று தமிழக நாட்டுப் பாடல்களின் தொகுப்பு. மற்றொன்று 'வாழ்க்கை விநோதம்' என்ற கட்டுரைத் தொகுப்பு. இந்த இரண்டு புத்தகங்களும் பெரியவர்களுக்காக அமைந்த போதிலும் குழந்தைக் கவிஞரின் இயல்பான குழந்தை உள்ளத்து உல்லாசங்களையே இவற்றிலும் காண்கிறோம், கண்டு மகிழ்கிறோம்.

தண்ணீரானது எந்தப் பாத்திரத்தில் வைத்தாலும் அதன் உருவத்தைக் கொள்ளுகிறது. எந்த வண்ணத்தைக் குழைத்தாலும் அந்த வண்ணம் ஆகிறது. ஆனாலும் தண்ணீர் நல்லெண்ணெய் ஆகாது. நல்லெண்ணெய் தண்ணீராகாது. இது போலவேதான் ஓர் இலக்கிய ஆசிரியனுடைய இதயப் பண்பும்.

வள்ளியப்பாவின் உள்ளம் சுத்தமான உணவுகளைக் குழந்தைகளுக்கு ஆக்கித் தருகிற நல்ல தண்ணீர் சுரக்கும் கற்பனை ஊற்று. அந்தத் தண்ணீர் நல்ல குடிதண்ணீர். உப்புத் தண்ணீர் இல்லை ! அதோடு குழந்தைகளின் உடம்பைக் கெடுக்கக்கூடிய "கடு" எதுவும் இல்லாத தண்ணீர். சாப்பிடுங்கள் என்று தைரியமாகக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

நாள்தோறும் இப்படிக் குழந்தைகளுக்கு இலக்கிய உணவு ஊட்டி வருகிற வள்ளியப்பா, நாடெல்லாம் கொண்டாடும் விதத்தில் பல பரிசுகள் பெற்று, இப்போது வெள்ளி விழாவுக்கு உரிய கதாநாயகராக விளங்குகிறார் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன் !

நண்பர் வள்ளியப்பா தமது எழுத்தைப் போலவே வாழ்விலும் எளிமையாகப் பழகும், சிரித்துப் பழகும், இயல்பு கொண்டவர். அவருடைய பல நூல்களும் தமிழ் மக்களிடையே, தமிழ் நாட்டுக் குழந்தைகளிடையே நன்கு பரவியிருப்பது போலவே அவருடைய சிரிப்பும் தமிழுலகிலே பரவி அவர் பல்லாண்டு வாழவேண்டும், சிரித்துக் கொண்டே வாழவேண்டும் என்று ஆசைப்படுகிற அவருடைய நண்பர்கள் பலருள் நானும் ஒருவன். அதுவே எனக்கு மகிழ்ச்சியும் ஆகும் ! அவருக்கு என்னுடைய நல்வாழ்த்துகள் !

குழந்தைக் கவிஞரும் குழந்தைகளும்

திருச்சி பாரதன்

"குழந்தைகள் இன்பமே எனது இன்பம் ; அவர்களுக்குத் தொண்டு செய்வதே என்னுடைய குறிக்கோள்'' என்று கூறிய குழந்தைக் கவிஞர், கொண்ட கொள்கையில் கொஞ்சமும் மாறவில்லை. உண்மையான இலட்சியவாதி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிவருகிறார்.

இந்த 25 ஆண்டுகாலத்தில் குழந்தை இலக்கியத்தில் அவர் செய்த சாதனைகளும், பெற்ற சிறப்புகளும் எவ்வாறு ஏராளமோ, அதே போல் அவரே குழந்தையாக மாறி ,குழந்தைகளுடன் பழகி, சுவை கண்ட அனுபவங்களும் பலவாகும்.

கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் வீட்டிற்கு ஒரு நாள் குழந்தைக் கவிஞர் சென்று இருந்தார்.

"வள்ளியப்பா, நீதான் குழந்தைக் கவிஞன் என்று நினைத்துக் கொள்ளாதே ! இங்கு எங்கள் வீட்டிலும் ஒரு குழந்தைக் கவிஞர் இருக்கிறார். வரவழைக்கட்டுமா ?'' என்று கேட்டார், சுப்பு. புன்னகையோடு தலைஅசைத்தார் குழந்தைக் கவிஞர்.

சுப்பு வீட்டிற்குள் சென்றார். ஐந்து வயதுப் பையனை அழைத்து வந்தார். "டேய் ! உன் பாட்டை இவரிடம் பாடிக் காட்டு !'' என்று கூறினார். உடனே சிறுவன் பாடத் தொடங்கினான் :

"பாட்டி பாட்டி பாட்டி
பாட்டி புடவை ரெண்டாக் கிழிஞ்சா
வேட்டி வேட்டி வேட்டி !''

பொடியனின் பாட்டைக் கேட்டதும் குழந்தைக் கவிஞர் பொறுமை கொள்ளவில்லை; பூரித்தார். அவனை அருகில் அழைத்துத் தட்டிக் கொடுத்தார். ஏன் தெரியுமா ?

"நில் நில் நில்
நில்லா விட்டால் உடனே ஓடிச்
செல் செல் செல்.

சொல் சொல் சொல்
சொல்லித் தந்த பாட்டிக் கெங்கே
பல் பல் பல் !''

என்ற குழந்தைக்கவிஞரின் பாடல்தான் அந்தக் குழந்தையைக் 'கவிஞர்' ஆக்கிவிட்டது ! அந்த ரகசியம் அறிந்தவர் ஆயிற்றே அவர் !

பின்னொரு சமயம் திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு பதிப்பகத் திற்குக் குழந்தைக் கவிஞர் சென்றார். அங்கு நான்கு ஐந்து குழந்தைகள் கூடி இருந்தார்கள். அவர்களில் ஒரு சிறுமி பாடத் தொடங்கினாள் !

''சாமிக்கு ஒரு தோட்டம் உண்டு
தாம்பரத்திலே....தாம்பரத்திலே''

இதையே அவள் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டு இருந்தாள். மேற்கொண்டு பாடத் தெரியவில்லை.

உடனே குழந்தைக் கவிஞர், ''இதோ சம்பத்து இருக்கிறானே ! சம்பத்துக்கு ஒரு தோட்டம் உண்டு. எங்கே தெரியுமா ?'' என்று கேட்டார்.

மறுகணம்,

பாப்பா என்ற சிறுமி ''சைதாப் பேட்டையிலே'' என்று உரத்த குரலில் கூறினாள்.

''சம்பத்துக்கு ஒரு தோட்டம் உண்டு சைதாப் பேட்டையிலே ! அப்புறம் 'பாப்பாவுக்கு ஒரு தோட்டம் உண்டு ...''

குழந்தைக் கவிஞர் முடிக்கவில்லை.

''பறங்கி மலையிலே'' என்றான் ஒரு பொடியன்.

இப்படி அங்கே இருந்த ஒவ்வொருவர் பெயரிலும் ஓர் இடத்தில் ஒரு தோட்டத்தை உண்டாக்கிப் பாடினார்கள்.

இறுதியில் குழந்தைகளும் குழந்தைக் கவிஞரும் கூட்டாகச் சேர்ந்து இப்படிப் பாடினார்கள் :

''சாமிக்கு ஒரு தோட்டம் உண்டு
தாம் பரத்திலே
சம்பத்துக்கு ஒரு தோட்டம் உண்டு
சைதாப் பேட்டையிலே
பாப்பாவுக்கு ஒரு தோட்டம் உண்டு
பறங்கி மலையிலே
மீனாவுக்கு ஒரு தோட்டம் உண்டு
மீனம் பாக்கத்திலே
கோமதிக்கு ஒரு தோட்டம் உண்டு
குரோம் பேட்டையிலே''

ஆம், குழந்தைக் கவிஞரும், குழந்தைகளும் கூடிப் பாடினர்கள். பாட்டு ஒன்று உருவாகி விட்டது !

"ஆமாம் ! உங்கள் ஒவ்வொருவர் பெயரிலும் ஒரு தோட்டம் இருக்கிறது. ஆனல், எனக்கு மட்டும் தோட்டம் இல்லையா ?"— ஏங்குவது போல் கேட்டார் குழந்தைக் கவிஞர் !

"வள்ளியப்பாவுக்கு ஒரு தோட்டம் உண்டு ... வள்ளியப்பாவுக்கு ஒரு தோட்டம் உண்டு ... மாம்பலத்திலே" என்று பாடிவிட்டாள் பாப்பா ! உடனே குழந்தைகளிடத்திலே ஒரே மகிழ்ச்சி ஆரவாரம் ! கும்மாளம் !

இதில் இன்னெரு வேடிக்கை. குழந்தைகள் குறிப்பிட்ட தாம்பரம், சைதாப்பேட்டை, பறங்கிமலை, மீனம்பாக்கம், குரோம்பேட்டை, மாம்பலம் எல்லாமே மின்சார ரெயில் நிலையங்கள் !

குழந்தைக் கவிஞரின் நண்பர் ஒருவருக்கு நான்கு குழந்தைகள் உண்டு. அவர்களில் ராஜா என்ற ஆறு வயதுச் சிறுவன் மிகவும் சூட்டிகை ஆனவன்.

ஒரு நாள் அந்தப் பையனைக் குழந்தைக் கவிஞர் அருகில் அழைத்தார். "ராஜா ! உனக்கு இப்போது ஒரு கணக்குப் போடப் போகிறேன். இரண்டாம் கிளாஸ் வாத்தியாருக்கு இரண்டு கால் ! மூன்றாங் கிளாஸ் வாத்தியாருக்கு எத்தனை கால் ?" என்று கேட்டார்.

"மூணு கால்" - பட்டென்று பதில் அளித்தான் ராஜா.

இதைக் கேட்டதும், குழந்தைக் கவிஞர் சிரித்தார். அவருடன் அங்கிருந்த இரு குழந்தைகளும் 'கொல்' என்று சிரித்தார்கள். ஆனல் பத்து வயதான கோதை மட்டும் சிரிக்கவில்லை !

"ஏன் மாமா சிரிக்கிறீர்கள் ? அந்த மூணாங் கிளாஸ் வாத்தியார் கிழவராய் இருந்து அவர் 'கோல்' ஊன்றி நடக்கப் படாதா ? அப்போது அவருக்கு மூணுகால்தானே ?" என்று கேட்டாள்.

சிறுமியின் 'சமயோசித' புத்திக்கு, குழந்தைக் கவிஞர் 'சபாஷ்' போட்டார். சிறுவனை மடக்கிவிட்டதாக நினைத்துச் சிரித்த அவர், சிறுமியால் மடக்கப்பட்டதை அறிந்து சிரித்தார்.

இதைவிட வேடிக்கையான மற்றெரு சம்பவமும் நடந்தது.

குழந்தைக் கவிஞரின் வீட்டிலே வாரத்திற்கு ஒரு முறை குழந்தைகளைக் கூட்டிவைத்து, கதை சொல்லுவது உண்டு. தாம் மட்டும் அல்லாமல் பிற எழுத்தாளர்களையும் அழைத்துக் குழந்தை களுக்கான கதைகளைச் சொல்ல ஏற்பாடு செய்வார்.

சில நேரங்களில் கதை சொல்பவர் வந்து சேரும்வரை அவரே குழந்தைகளுடன் வேடிக்கையாகப் பேசி, அவர்களை உற்சாகப் படுத்துவார் ; அவர்களுக்குக் களிப்பூட்டுவார்.

குழந்தைகளில் சிலர் அவரிடமே விடுகதை, புதிர் முதலியவற்றைப் போட்டு விடை கேட்பார்கள்.

குழந்தை எவ்வளவுக்கு எவ்வளவு சாதுவானதோ அவ்வளவுக்கு அவ்வளவு குறும்புத்தனம் கொண்டது.

நாட்டு மக்களைப் பேச்சால் துள்ளி எழச்செய்யும் எவ்வளவு பெரிய பேச்சாளராக இருந்தாலும் குழந்தைகள் கூட்டத்தில் பேசிச் சமாளிப்பது சிரமம் ! இஃது அனுபவப்பட்டவர்களுக்கே தெரியும்.

குழந்தைகள் சங்கம் ஒன்றில் ஆண்டு விழா நடந்தது. கூட்டத்தில் பேசிய சிலர், குழந்தைகளுக்கு எட்டாத விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசி, குழந்தைகளின் பொறுமையைச் சோதித்துக் கொண்டு இருந்தனர். இதனால் குழந்தைகளின் கூச்சல் அதிகரித்தது. அப்போது குழந்தைக் கவிஞர் பேச எழுந்தார்.

''அருமைக் குழந்தைகளே ! இப்போது நான் ஒன்று சொல்லுவேன். அதை அப்படியே நீங்கள் எல்லாம் திருப்பிச் சொல்ல வேண்டும். சொல்லுவீர்களா ?'' என்று கேட்டு நிறுத்தினார்.

''ஓ ! சொல்லுகிறோம்'' என்றார்கள் குழந்தைகள்.

''அமைதியாக இருப்போம்''—குழந்தைக் கவிஞர் கூறினார்.

''அமைதியாக இருப்போம்'' குழந்தைகள் திரும்பக் கூறினர்

''ஆனந்தமாய்க் கேட்போம்''—குழந்தைக் கவிஞர்.

''ஆனந்தமாய்க் கேட்போம்''—குழந்தைகள்.

பிறகு ''அமைதியாக ... '' என்றார் குழந்தைக் கவிஞர்.

''இருப்போம்'' என்றனர் குழந்தைகள்.

''ஆனந்தமாய் ... '' என்றார் குழந்தைக் கவிஞர்.

''கேட்போம்'' என்றனர் குழந்தைகள்.

இப்படியே மூன்று முறை திரும்பத் திரும்பச் சொல்லச் செய்தார். பிறகு, ''நீங்கள் எல்லாம் மிக நல்ல குழந்தைகள். சொன்னபடி நடப்பீர்கள், இல்லையா ?''. என்று கேட்டார்.

''ஆம்.''

''அப்படியானால், இனி நீங்கள் அமைதியாக இருப்பீர்கள். ஆனந்தமாய்க் கேட்பீர்கள்; நான் பேசுவது உங்களுக்கு ஆனந்தமாக இருந்தாலும், இல்லாது போனாலும், நீங்கள் ஆனந்தமாய்க் கேட்க வேண்டும்,'' என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு, மேலே பேசத் தொடங்கினார்.

குழந்தைகளும் சிரித்துக்கொண்டே, ஆனந்தமாய்க் கேட்டார்கள்! ஆனால், அவர்கள் சிரித்ததுகூட அமைதியாகத்தான்; சத்தம் வெளியே வரவில்லை!

தாம் எழுதிய கதை அல்லது பாடலைக் குழந்தைகளிடத்தில் படித்துக் காட்டி, அவர்கள் அதை எப்படி வரவேற்கிறார்கள் என்று அறிந்த பிறகே, அதை அச்சுக்குக் கொடுப்பது குழந்தைக் கவிஞரின் வழக்கம்.

'குழந்தைப் பதிப்பகம்' என்ற குழந்தை நூல் வெளியீட்டகம், தனது முதல் புத்தகமாக அவர் எழுதிய 'நல்ல நண்பர்கள்' என்ற கதையை வெளியிட ஏற்பாடு செய்து இருந்தது.

அந்தக் கதையை அச்சுக்குக் கொடுப்பதற்கு முன்பு, அந்தப் பதிப்பாளரின் எட்டு வயதுச் சிறுவன் காந்தியிடம் குழந்தைக் கவிஞர் படித்துக் காட்டினார்.

கதையை மகிழ்ச்சியோடு கேட்டு வந்த சிறுவனின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கதையில் வந்த ஒரு சோக நிகழ்ச்சி அவனைக் கண் கலங்க வைத்தது. சிறிது நேரத்தில் அவன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்!

அவன் அழுததைப் பார்த்ததும் குழந்தைக் கவிஞரின் மனத்திலும் ஒரு மாறுதல் ஏற்பட்டது. "குழந்தைகளுக்கு மகிழ்ச்சி ஊட்டும் கதையைத்தான் நாம் எழுத வேண்டும். அழ வைக்கும் கதை தேவை இல்லை" என்ற முடிவுக்கு வந்துவிட்டார். அதனால் அந்தக் கதையை அச்சுக்குக் கொடுக்க மறுத்துவிட்டார்.

ஆனால், முதல் புத்தகமாக அவரது கதையை வெளியிட விரும்பிய பதிப்பாளரை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கவும் அவர் விரும்பவில்லை! அவசரம் அவசரமாக, 'பாட்டிக்குப் போட்டி' என்ற வேறு ஒரு கதையை எழுதிக் கொடுத்து, குறித்த காலத்தில் புத்தகம் வெளிவரச் செய்தார்.

இதில் ஒரு வேடிக்கை—

குழந்தைக் கவிஞர் 'வேண்டாம்' என்று விலக்கிய சோகக் கதையை அதே பதிப்பாளர் மிகவும் பாராட்டிப் புத்தகமாக வெளியிட்டுவிட்டார்! அப்புத்தகம் விறுவிறுப்பாகப் பல பதிப்புகள் வெளி வந்துவிட்டது. இதுவரை ஏழு பதிப்புகள் வெளி வந்துள்ளது. தமிழக அரசின் பரிசையும் தட்டிக் கொண்டு வந்தது!

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்று சொல்வது வழக்கம். தவறு செய்த பெரியவர்களைத் திருத்துவது கடினம். ஆனால், குழந்தைகளை...?

குழந்தைக் கவிஞர் லிங்கிச் செட்டித் தெருவில் ஒரு வீட்டில் குடி இருந்தார். அவர் அலுவலக வேலைகள் முடிந்து வீடு திரும்பும் போது, அவரைத் தொடர்ந்து ஒரு சிறுவர் படையே வீட்டுக்குள் நுழையும்.

ஏன் தெரியுமா?

அந்தச் சிறுவர்களுக்காக அவர் வாங்கி வைத்து இருந்த புத்தகங்களையும் பத்திரிகைகளையும் இரவல் வாங்கிப் படிப்பதற்காகத்தான்.

அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த களைப்பையும் மறந்து புன்முறுவலோடு அவர்களுக்குப் புத்தகங்களைக் கொடுத்து அனுப்பிவிட்டுத் தான் அவர் வேறு வேலை பார்ப்பார்.

அந்த வீட்டை அவர் காலி செய்ய நேர்ந்தது. சிறுவர்கள் வாங்கிச் சென்ற புத்தகங்களை அவரவரே தமது அன்பளிப்பாக வைத்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார்.

அந்த வீட்டை விட்டு அவர் கிளம்பும் போது, சிறுவர்கள் கூடி அவருக்குப் பிரியா விடை அளித்தார்கள். புறப்படும் நேரம் வந்தது. தலை தெறிக்க ஒரு சிறுவன் அவரை நோக்கி ஓடி வந்தான். கையில் இருந்த புத்தகத்தை அவரிடம் நீட்டினன்.

அவன் கண்களில் நீர் வழிந்துகொண்டிருந்தது.

"அண்ணு ! நான் ரொம்ப நாளைக்கு முன்பு இதை வாங்கிப் போனேன். படங்கள் நிறைய இருந்ததால், திருப்பிக் கொடுக்க மனம் வரவில்லை. வீட்டிலே ஒளித்து வைத்தேன். இதை எங்கே கேட்டு விடப் போகிறீர்களோ என்று இந்தப் பக்கமே வாராமல் இருந்தேன்.

"ஆனல், நீங்கள் எல்லோருக்கும் அன்பளிப்பாகப் புத்தகம் கொடுத்தீர்கள் என்று கேள்விப்பட்டதும், இவ்வளவு நல்ல அண்ணுவை ஏமாற்றப் பார்த்தோமே; இவ்வளவு நல்ல அண்ணு நம்மை விட்டுப் பிரிந்து போகிருரே என்று வருத்தமாய் இருந்தது. இதை எடுத்துக்கொண்டு ஓடி வந்தேன்"—தட்டுத் தடுமாறிக் கூறினன் அந்தச் சிறுவன்.

குழந்தைக் கவிஞர் அவனைச் சமாதானப்படுத்தினர்.

"கண்ணைத் துடை! எல்லோருக்கும் கொடுத்தது போல் உனக்கும் இதை அன்பளிப்பாகத் தருகிறேன். இனி இந்தப் புத்தகம் உன்னுடைய சொந்தப் புத்தகம். நீயே வைத்துக் கொள் ! ஆனல் ஒளித்து வைக்காதே !" என்று கூறினர்.

சிறுவனின் கண்ணைத் துடைக்கச் சொன்னர்; ஆனல், அவரது கண்களையே துடைத்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஆம்; 'இந்த அன்புச் சிறுவர் கூட்டத்தைப் பிரிய வேண்டி இருக்கிறதே' என்பதை நினைத்தே அவர் கண் கலங்கினர். இந்த நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து அருமையான சிறுவர் கதை ஒன்றை எழுதியிருக்கிருர், முரசொலி சொர்ணம் அவர்கள்.

'குழந்தைகள் உலகம் இனியது; அன்பு மயமானது. அந்த உலகில் நுழைவது எல்லோருக்கும் எளிதானது அல்ல' என்பதைக் குழந்தைக் கவிஞரின் வாழ்க்கைச் சம்பவங்கள் நன்கு வெளிப்படுத்தும்.

குழந்தைக் கவிஞரும் அறிஞர்களும்

ரத்னம்

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா பத்தொன்பதாவது வயதிலே சென்னைக்கு வந்துவிட்டார். அவரைச் சென்னைக்கு அழைத்து வந்து, தாம் நடத்திய 'சக்தி' அலுவலகத்தில் காஷியர் பொறுப்பை அளித்தவர் புத்தக உலகிற்குப் புத்தொளி காட்டிய திரு. வை. கோவிந்தன் அவர்கள்.

தமிழகத்திலே தன்னிகரற்றுத் தனித் தன்மையுடன் விளங்கிய 'சக்தி'யின் ஆசிரியராயிருந்தார் தி. ஜ. ர. அவர்கள். காஷியராயிருந்த வள்ளியப்பாவின் தமிழார்வத்தை அறிந்து ஊக்கம் அளித்து உற்சாக மூட்டி எழுத்துத் துறையில் ஈடுபடுத்தினர், தி. ஜ. ர. நகைச்சுவை ததும்பப் பல கதை, கட்டுரைகளை வள்ளியப்பா எழுதினர். 'வாழ்க்கை விநோதம்' என்ற நகைச்சுவைக் கட்டுரைகளடங்கிய நூலே அதற்குச் சான்று. 'இலக்கியத் துறையில் என் குரு தி. ஜ. ர. அவர்களே' என்று வள்ளியப்பா அடிக்கடி கூறுவார்.

சக்தியில் ஒன்பது மாதங்கள் பணியாற்றிய பிறகு இந்தியன் பாங்கில் சேர்ந்தார் வள்ளியப்பா.

சக்தியில் இருந்த போதும், பாங்கில் சேர்ந்த பிறகும் இராயப் பேட்டையிலிருந்த தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களை வள்ளியப்பா அடிக்கடி சென்று பார்த்து மரியாதை செலுத்துவார். ஒரு முறை 'விவேகானந்தரும், ஆள்வார் சமஸ்தானத்து மன்னரும்' என்ற தலைப்பில் தாம் எழுதிய ஒரு கவிதையை, திரு. வி. க. அவர்களிடம் காட்டினர். திரு. வி. க. அவர்கள் அந்தக் கவிதையை மிகவும் பாராட்டியதோடு, காரைக்குடி இந்து மதாபிமான சங்க வெள்ளி விழா மலரில் வெளி வரவும் ஏற்பாடு செய்தார். (1967-ஆம் ஆண்டுதான் அந்தச் சங்கத்தின் பொன் விழா நடந்தது.) 'வல்லி' என்ற புனை பெயரில் அந்தக் கவிதை வெளி வந்தது. இளைஞர்களை ஊக்குவித்து அவர்களது திறமையைப் பாராட்டும் திரு. வி. க. அவர்களது பெருந்தன்மையை வள்ளியப்பா வியந்து வியந்து மகிழ்வார்.

பேராசிரியர் ஐயன்பெருமாள் கோனர் அவர்கள், அக்காலத்தில் சென்னை வரும் போது பவளக்காரத் தெருவில் வள்ளியப்பாவின் இல்லத்திலே தங்குவது வழக்கம். வள்ளியப்பா தமது கவிதைகளை அவரிடம் காட்டிச் சரி பார்த்துத் தரச் சொல்லுவார். கோனரய்யா அவர்களின் அரிய யோசனைகள் வள்ளியப்பாவின் கவிதை முயற்சி களுக்குப் பெரிதும் உதவின. ஒரு சொல் பொருத்தமாயில்லை என்று கருதினல், "இதை விட நல்ல சொல்லை உங்களால் போட முடியும் ஐயா. எங்கே, நீங்களே சொல்லுங்கள், பார்க்கலாம்" என்று கோனரய்யா அவர்கள் அன்பொழுகக் கூறுவார். வள்ளியப்பாவின் வாயிலிருந்தே பொருத்தமான சொல்லை வரவழைத்துவிடுவார்! "கவிதைத் துறையில் நான் ஓரளவு வெற்றி பெறக் காரணமாயிருந்தவர்களில் கோனரய்யா அவர்களையே முதன்மையாகக் குறிப்பிட வேண்டும்" என வள்ளியப்பா கூறுவார்.

வள்ளியப்பாவைக் கண்டால், ஒரு குழந்தையைக் கண்டது போல் மகிழ்ச்சி அடைவார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள். குழந்தை இலக்கியம் பற்றிப் பேசும் போதெல்லாம் வள்ளியப்பாவைக் குறிப்பிடாமல் இருக்கமாட்டார். ஒரு முறை மத்திய அரசினரிடமிருந்து குழந்தை இலக்கியம் பற்றிச் சில விவரங்கள் கேட்டுப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராயிருந்த சொல்லின் செல்வருக்குக் கடிதம் வந்திருந்தது. சொல்லின் செல்வர் வள்ளியப்பாவுக்குத் தகவல் அனுப்பி வரவழைத்தார். "நான் சர்வகலாசாலையில் இருப்பதால் சர்வ கலா வல்லவன் என்று நினைத்து எல்லாவற்றிற்கும் எனக்கு எழுதுகிருர் கள். இதற்கு நீங்கள்தான் தக்க பதில் தரவேண்டும்" என்று சிரித்துக் கொண்டே கூறினர். 'பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர்' என வள்ளியப்பாவை மனமார அவர் பாராட்டியிருக்கிருர் "மலரும் உள்ளம்' நூலின் அணிந்துரையில்.

சிறிய வயதிலே பாரதியார் பாடல்களையும், கவிமணி பாடல்களையும் பாடிப் பாடிப் பாடல் எழுதும் பக்குவம் பெற்றவர் வள்ளியப்பா. பாரதியார், வள்ளியப்பா பிறப்பதற்கு ஓராண்டுக்கு முன்பே மறைந்துவிட்டார். ஆனல் கவிமணியை நேரில் காண வேண்டுமென்ற ஆவல் வள்ளியப்பாவுக்கு நீண்ட நாளாயிருந்தது. 1954 - இல்தான் அந்த ஆவல் நிறைவேறியது.

வள்ளியப்பாவின் பாடல்களை அவ்வப்போது பத்திரிகைகளில் கண்ட கவிமணி அவர்கள், குழந்தைகளுக்கு நல்ல முறையில் அவர் எழுதி வருவதைப் பாராட்டிச் சிலரிடம் கூறியிருந்தார். கவிமணி அவர்களின் மருமகனர் குமாரசாமிப் பிள்ளை அவர்கள் மூலம் இத்தகவலை அறிந்த

வள்ளியப்பா தமது 'மலரும் உள்ளம்' முதல் தொகுதிக்குக் கவிமணி அவர்களின் வாழ்த்துரையைப் பெறவேண்டுமென விரும்பினர். அச்சான பாடல்களைக் கவிமணி அவர்களுக்கு அனுப்பித் தமது விருப்பத்தையும் தெரிவித்தார். கவிமணி அவர்கள் பாடல்களைப் படித்துப் பார்த்து, 'நல்ல பாடல்கள்; குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டும் பாடல்கள். வாழ்த்துரை தருவதில் எனக்கு மகிழ்ச்சி' என்று அறிவித்தார்கள். 'தங்கள் வாழ்த்தினை நான் தபாலில் பெற விரும்பவில்லை. நேரிலே வந்து, தங்களைக் கண்டு, தங்கள் வாழ்த்தினைப் பெறுகின்றேன். தங்களை நேரில் காணும் நாள் என் வாழ்க்கையிலே பொன்னன, புனிதமான நாளாக இருக்கும்' என்று பதில் எழுதினர், வள்ளியப்பா. அவ்வாறே சென்றார்; கவிமணி அவர்களைக் கண்டார். கரையிலா இன்பம் அடைந்தார்.

மறுநாள் காலையில் கவிமணி அவர்கள் வாழ்த்துக் கவிதைகளைக் கூற வள்ளியப்பா நோட்டுப் புத்தகத்தில் எழுதிக்கொண்டே வந்தார். அப்போது கவிமணி அவர்கள் கூறிய ஒரு பாட்டைக் கேட்டு வள்ளியப்பாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது; கண்கள் கலங்கின. சில விநாடிகள் எழுதமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. காரணம் இந்தப் பாடல்:

நித்தம் இளமை நிலைக்கும் படிஈசன்
வைத்தில னேஎன்று வருந்துகின்றேன் - சித்தமகிழ்
சித்திரமும் பாட்டும் சிறந்து விளங்கிடுமிப்
புத்தகத்தைப் பார்க்கும் பொழுது.

'எக்ஸிமா' என்ற நோயால் பீடிக்கப்பட்டு முதல் நாள் இரவெல்லாம் தூங்காது 'செந்தில் முருகா! திருச்செந்தூர் வேலவா!' என்று மீண்டும் மீண்டும் அரற்றிக்கொண்டேயிருந்த கவிமணி அவர்களின் மெலிந்த உடலையும் முதிர்ந்த வயதையும் பார்த்துக்கொண்டிருந்த வள்ளியப்பா,

'நித்தம் இளமை நிலைக்கும் படிஈசன்
வைத்தில னேஎன்று வருந்துகின்றேன்'

என்று ஏக்கத்தோடு கவிமணி அவர்கள் கூறியதைக் கேட்டுத்தான் கண் கலங்கினர்.

பேராசிரியர் கல்கி அவர்களை நானும் வள்ளியப்பாவும் ஒரு முறை சந்தித்த போது "நீங்கள்தானு அந்த வள்ளியப்பா? உங்கள் பாட்டுப் புத்தகம் ஒன்றுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் பரிசு தருவதாயிருந்தது. நான்தான் வேண்டாம் என்று கூறிவிட்டேன்" என்றார். அவர் பேச்சு எங்களுக்கு வியப்பூட்டியது. புதுக்கோட்டைத் தமிழ் நிலையத்தார் வெளியிட்டிருந்த 'பாலர் பாடல்' என்ற புத்தகத்தைப் பற்றித்தான் அவர் அப்படிச் சொல்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டோம். "புத்தகம் நன்றாக இருக்கிறது. பாடல்களும் நன்றாயிருக்கின்றன.

ஆனாலும், 500 ரூபாய் பரிசு பெறும் புத்தகம் மிகச் சிறியதாயிருக்கலாமா? இன்னும் சற்றுப் பெரிய அளவில் இருந்தால், நிச்சயம் அதற்குத்தான் பரிசு'' என்றார். அவர் கூறியது போல் வள்ளியப்பாவின் பாடல்கள் 'மலரும் உள்ளம்' என்ற நூலாகப் பெரிய அளவிலே வெளிவந்தது. அதன் வெளியீட்டு விழாவில் கல்கி அவர்களே தலைமை வகித்து மிகச் சிறப்பாக நூலைப் பாராட்டினார். அந்தப் புத்தகம் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசை மட்டுமல்ல; இந்திய அரசினர் பரிசையும் பெற்றது! இப்போது 'மலரும் உள்ளம்' இரண்டாம் தொகுதியும் பெரிய அளவிலே கவர்ச்சியாக வெளி வந்திருக்கிறது. இதற்கெல்லாம் தூண்டு கோலாயிருந்தவர் பேராசிரியர் கல்கி அவர்களே !

பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் பேரன்பைப் பெற்றவர் வள்ளியப்பா. இளம் வயதில் வள்ளியப்பா படித்த பாட நூல்களில் மயிலை சிவமுத்து அவர்களின் பாடல்கள் பல இருந்தன. ஆயினும் அப்புத்தகங்களில் பெயர் குறிப்பிடாத காரணத்தால், இயற்றியவர் யார் என்று தெரியாமலே பாடி வந்தார்.

'பூஞ்சோலை'யின் கௌரவ ஆசிரியராயிருந்த போது 'நித்தில வாசகம்' என்ற பாட நூல்களைக் கண்டார். 30 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப் பெற்ற அந்த நூல்கள் மிகப் புதுமையாக, குழந்தை உள்ளம் கவரும் வகையில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு வியந்தார். தாம் இளமையில் பாடிய பல பாடல்கள் அதில் இடம் பெற்றிருந்ததைக் கண்டதும் அவரது வியப்பு அதிகரித்தது. உடனே அங்கு வந்த புலவர் தணிகை உலகநாதன் அவர்களிடம் இப்பாடல்களைப் பற்றிக் கேட்டார். "எல்லாம் என் ஆசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் எழுதியவையே'' என்றார். "இவை மிகவும் அருமையான பாடல்கள். இப்படி மொத்தம் எத்தனை பாடல்கள் இருக்கும்? எல்லாவற்றையும் தொகுத்து வெளியிட்டால் நன்றாயிருக்கும்'' என்றார் வள்ளியப்பா.

புலவர் தணிகை உலகநாதன் அவர்கள் பெரு முயற்சி எடுத்துப் பேராசிரியரின் பாடல்களைத் திரட்டினார்; தொகுத்தார். 'முத்துப் பாடல்கள்' என்ற பெயரில் வெளிக்கொண்டு வந்தார். அப்புத்தகத்தின் வெளியீட்டு விழாவை, குழந்தை எழுத்தாளர் சங்கம் மூலமாக வள்ளியப்பாவே முன்னின்று நடத்தினார். பிறகு முத்துப் பாடல்களின் சிறப்பை உணர்ந்து இந்திய அரசினர் பரிசு அளித்ததை அறிவோம்.

வள்ளியப்பா என்ற எழுத்தாளர் குழந்தைகளுக்குச் சொந்தமான கவிஞராக இருக்கலாம். ஆனால் வள்ளியப்பா என்னும் அன்பர் எல்லா எழுத்தாளர்களுக்கும் நண்பர். முதுபெரும் தமிழறிஞர்களின் அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரமானவர்.

குழந்தைக் கவிஞரும் இலக்கிய நிறுவனங்களும்

சங்கம் கண்ட கவிஞர்

தம்பி சீனிவாசன்

பல்வகையான திறன் படைத்து, நிறைய சாதித்தவர்களைப் பற்றிக் கூறும்போது, "இவர் ஒரு தனி மனிதர் அல்ல ; இவரே ஒரு ஸ்தாபனம்" என்று புகழ்ச்சியாகக் கூறுவதுண்டு. இந்த வாசகத்தைப் பொருத்தமாகக் குறிப்பிடப் பொருத்தமானவர் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள்.

"குழந்தைகள் இன்பமே என் இன்பம். அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கிய குறிக்கோள்" என்று கூறும் குழந்தைக் கவிஞர் இந்தக் குறிக்கோளின்படியே வாழ்ந்து காட்டி வருகிறார். இந்தக் குறிக்கோளுக்கெனவே இவர் நிறுவிய ஸ்தாபனம் 'குழந்தை எழுத்தாளர் சங்கம்.'

ஸ்தாபன சாதனைகளைத் தனி மனிதர் சொந்தப் பெருமைகளாகப் பறைசாற்றிக் கொள்வது வழக்கமாக இருக்க, இந்த மனிதரோ தமது சொந்த முயற்சிகளையும் புதுக் கருத்துக்களையும் உழைப்பையும் பொருளையும் செலவிட்டுப் பெற்ற சாதனைகளை, ஸ்தாபனத்தின் பெருமையாக மனமாரக் கருதுகிறார். அவ்வாறே எழுதியும் பேசியும் வருகிறார்! நெருங்கிப் பழகியவர்களுக்கே தெரியும் : குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் வரலாறு என்பது பெரும்பாலும் குழந்தைக் கவிஞரின் உழைப்பின் வெற்றியே என்னுமாறு ஸ்தாபனத்துடன் இரண்டறக் கலந்தவர் இவர்.

இரண்டாவது உலகயுத்தம் முடிந்த காலம் முதல், குடியரசு தோன்றிய காலம் வரை (1945-50) தமிழ் நாட்டில் பல பெரிய நகரங்களிலும் சிறிய ஊர்களிலும் பல ரகமான குழந்தைப் பத்திரிகைகள் திடீர் திடீர் என்று தோன்றி, பல குழந்தை எழுத்தாளர்களைத் தோற்றுவித்தன. புதுக்கோட்டை சமஸ்தானத்திலே மட்டும் பல எழுத்தாளரும் பதிப்பாளரும் இந்தத் துறையில் நல்ல ஆர்வமுடன் ஈடுபட்டனர். இந்தச் சூழ்நிலையில் 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' என்று தொடங்கும் எண்ணம் கவிஞருக்குத் தோன்றியது. பதிப்பாளர் திரு. பழநியப்பா அவர்களின் சென்னை இல்லத்தில், 1950 தமிழ்ப் புத்தாண்டு தினத்தில், சங்கம் தொடங்கியது. குழந்தை இலக்கிய வளர்ச்சியில் எழுத்தாளராயும் பதிப்பாளராயும் ஆர்வம் காட்டிய அனுபவசாலி திரு வை. கோவிந்தன் அவர்களைத் தலைவராகவும், ஊக்கமும் உற்சாகமும் கொண்ட குழந்தைக் கவிஞரைச் செயலாளராகவும் கொண்டு தொடங்கியது சங்கம். துணைத் தலைவராக இருந்தவர் 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணன்.

இந்தச் சங்கம் தோன்றிய ஒன்பது மாதங்களுக்குப் பிறகே பேராசிரியர் கல்கி அவர்கள் இன்றைய 'தமிழ் எழுத்தாளர் சங்கத்'தைத் தோற்றுவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பாலர் மலர், டமாரம், சென்னையில் வெளியான 'பூஞ்சோலை' பத்திரிகைகளில் ஆசிரியப் பொறுப்பு வகித்த கவிஞர், தம்முடன் தொடர்புகொண்ட குழந்தை எழுத்தாளர்களையெல்லாம் குழந்தை எழுத்தளர் சங்கத்தில் அக்கறை கொள்ளச் செய்தார். இவ்வாறு பொதுப் பணியில் பல இளைஞர் ஆர்வமும் அனுபவமும் அடையக் காரணமாக இருந்துள்ளார்.

குழந்தை எழுத்தாளரின் மதிப்பு உயரவும் குழந்தைப் புத்தகங்களின் தரம் உயரவும் குழந்தை இலக்கிய வளர்ச்சியில் பதிப்பாளர் ஆசிரியர் பெற்றோர் ஆகியோர் ஈடுபடவும், இந்தச் சங்கம் கடந்த இருபது ஆண்டுகளில் எத்தனையோ பணிகளின் வாயிலாகப் பாடுபட்டு வருகிறது. இத்தனை பணிகளுக்கும் பின்னணியில், ஆதார சுருதியாகத் திகழ்ந்து வருபவர் திரு. வள்ளியப்பா என்றால் அது மிகையாகாது.

சங்கத்தின் தொடக்க நாட்களில் குறிப்பிடத்தக்க பணி குழந்தைப் புத்தகக் காட்சியே ஆகும். 1951 தொடங்கி ஒவ்வோராண்டும் ஒரு பேட்டையாக, பொங்கல் திருவிழா சமயத்தில் சென்னை நகரின் பல பேட்டைகளிலும் குழந்தைப் புத்தகக் காட்சிகள் நடந்தன. தொடக்க ஆண்டுகளில் ஆங்கில அமெரிக்கப் புத்தகங்களோடு ஒப்பிடும்படி தமிழ்ப் புத்தகங்கள், அளவிலோ பரப்பிலோ படத்திலோ அச்சு அமைப்பிலோ இல்லைதான். ஆனால் நாளடைவில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு இந்தக் காட்சிகளும் மறைமுகமான ஒரு காரணம்தான். எத்தனையோ ஓவியரும் ஆசிரியரும் பதிப்பாளரும் இந்தக் காட்சி வாயிலாக அந்தக் குறையைக் கண்டதாலன்றோ அது நீங்க முயற்சி தொடங்கப் பெற்றது ?

குழந்தைகளுக்குப் புத்தகத்திலிருந்த தணியா ஆர்வத்தை இந்தக் காட்சிகளில் நன்கு அறிய முடிந்தது. கவிஞர் நாளடைவில் சங்கத்தின் செயலகம் தமது இல்லத்தில் இருந்தபோது தமது பார்வைக்குக் கிடைத்த குழந்தைப் புத்தகங்களையெல்லாம் திரட்டி, குழந்தை நூலகமாக மதித்து நூற்றுக்கணக்கான குழந்தைகள் படிக்க உதவி செய்தார். பல வயதுக் குழந்தைகளும் மாலை நேரத்தில் கூடும்போது அங்கே குழந்தை எழுத்தாளர்களும் இருந்தால் குழந்தைகளுடன் பழகலாம்; அந்த அனுபவம் அவர்கள் எழுத்துக்கு மெருகு ஊட்டும் என்று கருதி, சங்கத் தலைவர் தமது இல்லத்திலே சனிக்கிழமைகளில் 'கதை சொல்லும்' நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். குழந்தை எழுத்தாளர் பலரும் தாம் இயற்றிய கதைகளையும், தெரிந்த கதைகளையும் குழந்தைகளுக்குச் சொன்னார்கள். தாம் புதிதாக எழுத இருந்த கதைகளையும் சொல்லிப் பார்த்துக்கொண்டார்கள். இந்த அனுபவம் எளிய நடையில் எழுதும் பழக்கத்தையும், புரியும்படி சொல்லும் திறனையும் எழுத்தாளரிடையே வளர்த்தது.

காந்தி ஜயந்தியன்று, காந்தி பற்றிய கதைகள், கல்கி தினத்தில் பேராசிரியரின் சில கதைகள் என்றெல்லாம் பொருத்தமாகச் சொல்லிவர ஏற்பாடு செய்தார்.

குழந்தைகளின் மற்றொரு தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனே குழந்தை நாடகவிழா ஒன்றை முற்றிலும் புதுமையாக நடத்திக் காட்டினார் கவிஞர். அது எவ்வளவு சிரமமான முயற்சி என்பதைக் காட்டுவதே போல் இதுவரை அது போன்ற முயற்சியில் வேறு யாருமே ஈடுபடவில்லை!

குழந்தைப் புத்தகக் காட்சி, நாடகவிழா நிகழ்ச்சிகளுக்கு நிர்வாகிகளையும் பேரறிஞர்களையும் வரவழைத்து, பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தார் திரு. வள்ளியப்பா. சென்னைக் கல்வி அமைச்சர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றவர்களே. முதலமைச்சர் குமாரசாமி ராஜா, கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம், பேராசிரியர் கல்கி, மதிப்புக்குரிய ராஜாஜி போன்றோர் இந்தத் தனிமனிதரே ஒரு ஸ்தாபனமாக இயங்குவதைப் பாராட்டி, குழந்தை இலக்கிய வளர்ச்சி பற்றிய ஆர்வத்தை ஆசி கூறி வளர்த்துள்ளனர். இத்தனைக்கும் குழந்தை எழுத்தாளர் சங்கம், அங்கத்தினர் தொகையாலோ பொருள் வசதியாலோ பெரிதானதல்ல. ராஜாஜி கலந்துகொண்ட போது, அங்கத்தினர் தொகை 107 என்றிருந்ததை அறிந்து, "நான் இதன் நூற்றெட்டாவது அங்கத்தினன் ஆகிறேன்" என்று அறிவித்தார் என்றால், இந்த இயக்கத்தில் அவருக்கு இருந்த ஈடுபாடு புலப்படுகிறதல்லவா?

ஒவ்வொரு தீவிர முயற்சியிலும் சில நல்ல துணைப் பயன்களும் விளைகின்றன. குழந்தைப் புத்தகக் காட்சி நடத்திக் கிடைத்த அனுபவம், 1956-ஆம் ஆண்டு கவிஞருக்குப் புதுதில்லியில் பயன்பட்டது. சாகித்திய அக்காதெமிச் சார்பில் நடைபெற்ற பெரும் புத்தகக் காட்சியில் தமிழ்ப்

பிரிவைத் திறம்பட நிர்வகித்துப் பெருமை தேடிக்கொடுத்தார் திரு. வள்ளியப்பா.

இங்ஙனமே நாடகவிழாவில் அரங்கேறிய நாடகங்கள் பின்னர் புத்தகங்களாக வெளிவர வழிசெய்தார் கவிஞர்.

1955-ஆம் ஆண்டு முதல், ஜவாஹர்லால் நேருவின் பிறந்த நாள் நாடெங்கும் 'குழந்தைகள் தின'மாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. குழந்தை எழுத்தாளர் சங்கமும் கொண்டாடி வருகிறது. ஒரு வித்தியாசம். குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்துவது ஓர் இலக்கிய நிகழ்ச்சி. இந்தக் கருத்துப் பிறந்ததே சுவையான சூழ்நிலையில். 1956-இல் தில்லியில் திரு. வள்ளியப்பா நிர்வகித்த புத்தகக் காட்சியைப் பார்வையிட வந்தார், திரு ஜவாஹர், தமது பிறந்த தினத்தில். புத்தகங்களிடையே தலைவருக்கு வாழ்த்துச் சொல்லிய கவிஞரின் உள்மனம் இப்படிச் சிந்தித்ததோ என்னவோ : 'சாகித்திய அக்காதெமித் தலைவராயும் இலக்கிய ஆசிரியராயும் குழந்தைகளின் தோழராயும் உள்ள நேருஜியின் பிறந்த நாள், குழந்தை இலக்கிய நாளாய் விளங்கினால் என்ன பொருத்தமாக இருக்கும் !'

கவிஞர் சென்னை திரும்பியதும் செயல்பட்டார். எத்தனையோ ஆர்வமுள்ள எழுத்தாளர்கள் குழந்தை இலக்கியம் படைத்து, வெளியிட வாய்ப்பில்லாமல் இருந்தனர். இத்தகைய கையெழுத்துப் பிரதிகள் இருப்பதே தெரியாது பதிப்பாளருக்கு. இரண்டையும் இணைக்கும் பணி செய்ய முன்வந்தார் கவிஞர். அங்கத்தினருக்கு அறிவிப்புச் செய்து பலரும் எழுதிய புத்தகக் கையெழுத்துப் பிரதிகளைத் திரட்டினார். பல பதிப்பாளரைத் தமது இல்லத்திலே கூட்டி, நல்ல புத்தகங்களை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார். குழந்தைப் புத்தகம் வெளியிடுவது என்றால் பதிப்பாளருக்கு ஓவியம், பிளாக் என்றெல்லாம் செலவு அதிகம். ஆகவே தயங்குவார்கள். அவர்களிடையே, "நீங்கள் பெரியவர்களுக்காக ஆண்டு முழுவதும் பல நூல்கள் வெளியிடும்போது குழந்தைகளுக்காக ஒரே ஒரு நூலாவது வெளியிடவேண்டும். உங்கள் வீட்டுக் குழந்தைக்குச் செய்யும் உதவியாகவே நினைத்துச் செய்யுங்கள்" என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். இப்படி வெளிக்கொணரும் புதுப் புத்தகங்களையெல்லாம் ஒன்றுசேர ஒரு விழாவில் குழந்தைகள் தினத்தில் வெளியிடலாம் என்றார். கூட்டாக வெளியிடுவதால் மொத்தமாக விளம்பர வசதியும் விற்பனை வாய்ப்பும் கிட்டும் என்று சுட்டினார். இங்ஙனம், முதல் முதலாக 1957 நவம்பர் 14-ம் தேதி பத்துப் புதுப் புத்தகங்களை மொத்தமாக, ஒரு நிகழ்ச்சியில் வெளியிட்டுவைத்தார் கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்.

ஆண்டுதோறும் இவ்விழா இப்போது நிரந்தர நிகழ்ச்சியாகிவிட்டது. இந்தப் பதின்மூன்று ஆண்டுகளில் சுமார் 350 புத்தகங்கள் இந்த நிகழ்ச்சிகளிலே வெளியானவை. இவற்றுள் பல பரிசும் பாராட்டும் பெற்றுள்

ளவை. இந்த இனிய விழாக்களில் பதிப்பாளரும் நூலாசிரியர்களும் அறிமுகம் செய்விக்கப்படும் நிகழ்ச்சியே 'பல்கலைக்கழக விருது தருவது போல இருக்கிறது' என்றார் ஓர் அன்பர். இதன் வெற்றியை அறிந்து ஆந்திரத்திலும் கேரளத்திலும் குழந்தைகள் தினத்தில் புதுக் குழந்தைப் புத்தகங்கள் வெளிக்கொண்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றிக்குப் பின்னே, ஒரு பின்னணி உண்டு. புத்தகங்கள் குறிப்பிட்ட தேதியில் வெளிவர கையெழுத்துப் பிரதியைச் செப்பனிட்டு, ஓவியரிடையே வேலை வாங்கி, அச்சகம் தேடிக் கொடுத்து, புரூப் பார்த்து, ஒவ்வொரு நிலையிலும் இரவு பகல் பாடுபட்ட உழைப்பு பின்னணியில் இருக்கிறது. திரு. வள்ளியப்பாவும் அவருடன் மிக நெருங்கிய அன்பர்களும் சொந்த வேலைகளை மறந்து, இந்தப் பொதுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். ஆம், திரு. வள்ளியப்பாவின் சாதனைகளில் சிறந்தது, குழந்தை எழுத்தாளர் சங்கப் பணிகளுக்கு அவர் தேர்ந்தெடுத்த நண்பர்களே. சங்கத்தின் ஆக்கப் பணிகளெல்லாம் திறமை மிக்க, தன்னலமற்ற, உழைப்பாளிகளின் கூட்டு முயற்சியாகவே திகழ்ந்தன. இந்த 'டீம் ஸ்பிரிட்'தான் சங்கத்தின் உழைப்புச் செல்வம்; தன்னம்பிக்கை ஊற்று.

அவ்வப்போது தேவைக்கேற்ப விளம்பரமோ நன்கொடையோ சேர்த்து முக்கிய பணிகளை நிகழ்த்திக்கொள்வது பழக்கமே தவிர சங்கத்திற்கெனப் பொருள் சேர்க்கவில்லை திரு. வள்ளியப்பா. பொருள் முக்கியம் என்று கருதாதது போல எந்தப் பதவியையும் பெரிதாகக் கருதவில்லை இவர். எனவேதான் தாம் செயலாளராக இருந்தபோதும் சரி, பின்னர் தலைவராக இருந்தபோதும் சரி, ஆலோசகராக விளங்கிய காலத்திலும் சரி, ஒரே சீராக, தொண்டுள்ளத்துடன் எந்தப் பணியையும் பொறுப்பேற்று உயர்வுதாழ்வு பாராது உழைத்து வருகிறார்; தமது செயலால் பிறருக்கு வழிகாட்டி வருகிறார்.

1959-60 ஆண்டுகளில் குழந்தை இலக்கிய மாநாடுகளைப் பெரிய அளவில் நடத்திக் காட்டியது, ஒரு முக்கிய சாதனை. முதுபெரும் குழந்தை எழுத்தாளருக்குக் கௌரவம் அளிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி, திருவாளர்கள் மயிலை சிவமுத்து, பெ. நா. அப்புஸ்வாமி, தி. ஜ. ரங்கநாதன், ம.ப. பெரியசாமித்தூரன் ஆகியோரைப் பாராட்டினர். (அதற்கடுத்த மூன்றாவது மாநாட்டில் திரு. வள்ளியப்பாவே பாரதத் துணை ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் ஹுஸேன் பாராட்டப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.)

இன்று மாநில அளவிலும் அனைத்திந்திய அளவிலும் குழந்தை இலக்கிய வளர்ச்சி பற்றிய பல முயற்சிகள் அரசி... ஆதரவிலும் பெரிய ஸ்தாபனங்களின் உதவியுடனும் நடைபெற்று வருகின்றன. பரிசுகளும் பாராட்டுக்களும் பல உள்ளன. ஆனால் இவையெல்லாம் தொடங்குவதற்கு முன்பேயே ஒரு தனி மனிதராய், ஒரு ...யக்கத்தின் வளர்ச்

சியைத் தீர்க்க தரிசனமாகக் கண்டு, அதற்கெனத் தம்மை முழுதும் அர்ப்பணித்தவர் திரு. வள்ளிப்பா.

அவ்வப்போது நடந்து முடியும் சிறு நிகழ்ச்சிகளாயினும், நீடித்து நிலைக்கும் ஆழ்ந்த பணிகளாயினும், சங்கத்தின் வளர்ச்சிக்கும், அதன் வாயிலாகக் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கும் உதவும் வகையிலேயே சிந்தித்துச் செயல்படுவது குழந்தைக் கவிஞர் இயல்பு. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஒரு குழந்தைப் புத்தகமாவது எழுதுமாறு முதிய எழுத்தாளரையும், ஒரு குழந்தைப் புத்தகமாவது வெளியிடும்படி பதிப்பாளரையும், ஒரு புத்தகமாவது வாங்கிப் பள்ளிக்கூடத்திற்குப் பரிசளிக்குமாறு பெற்றோரையும் வேண்டியபடியே இருக்கிறார் இவர். இது இயக்கமாகப் பரவி நிலைத்தால்தான் எழுத்தாளர் நிலையும் குழந்தைச் செல்வங்களின் மன வளர்ச்சியும் உயரும் என நம்புகிறார். இதற்கே அயராது பாடுபட்டு வருகிறார்.

உயர்ந்த லட்சியங்கள், எளிய வாழ்க்கை முறை, அயராத உழைப்பு, ஈடுபட்ட துறையில் திறமை, தெளிவான சிந்தனை, நண்பர்களை அணைத்துச் செல்லும் பண்பு, கூட்டு முயற்சியில் நம்பிக்கை, கலகலப்பான இனிய சுபாவம், தரமான நகைச்சுவை உணர்ச்சி, நிர்வாகப் பயிற்சி, நீடித்த அனுபவம், பெருமக்கள் தொடர்பு—ஆகிய நிறைந்த ஒரு தலைவர் கிடைத்துவிட்டால் ஒரு சங்கத்திற்கு வேறென்ன வேண்டும்? குழந்தை எழுத்தாளர் சங்கத்திற்குத் திரு. வள்ளியப்பா கிடைத்துள்ளார். வேறென்ன வேண்டும்?

சங்கம் வளர்த்த கவிஞர்

கண. முத்தையா

பொதுவாக எழுத்தாளர்களைப்பற்றி ஒரு குறை சொல்லப்படுவதுண்டு. 'எழுத்தாளர்கள் அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டை போன்றவர்கள். ஒன்றுகூடி ஒற்றுமையாகச் செயல்படமாட்டார்கள்' என்று அவர்களைப் பற்றிக் கூறப்படும் குறையில் பெரும் அளவிற்கு உண்மை உண்டு. சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலும் தன்னுடைய படைப்பைப் பற்றி உயர்ந்த எண்ணமும் இயற்கையாக வாய்க்கப்பெற்ற எழுத்தாளர்கள் அதிக உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். தங்கள் பொது நலனுக்காக ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து ஒன்றுகூடிச் செயல்படும் உலகாயத மனப்பாங்கு குறைவானவர்கள். இந்த மாதிரி மனப்பாங்குள்ள தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி நின்று ஒற்றுமை

யுடன் செயல்படும்படி பத்து ஆண்டுக்காலம் கட்டி வளர்த்த அற்புதத்தைச் சாதித்தவர் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா.

தமிழ் எழுத்தாளர்கள் பலரையும் ஒன்று சேர்த்து ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தும் முயற்சி முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப் பெற்றது. பல முறை மாநாடுகளும் கூட்டங்களும் கூட்டப்பெற்றதாயினும், அவை மாநாட்டுப் பேச்சுக்களுடனும் தீர்மானங்களுடனுமே முடிவடைந்தன. நீண்ட கால முயற்சிக்குப்பின் இப்பெரிய காரியத்தைச் சாதிப்பதில் அமரர் கல்கியவர்கள் வெற்றி பெற்றார். தமிழ் எழுத்தாளர் சங்கம் தோன்றியது.

சங்கம் தோன்றிவிட்டது. அமரர் கல்கியவர்களின் திறமை சங்கம் உடைந்துவிடாமல் காப்பாற்றியதாயினும், எழுத்தாளர்களின் நலனுக்காக ஒற்றுமையுடன் செயல்படும் நிலைமை முழுவதாக ஏற்படவில்லை. இந்திய ஊழியர் சங்கக் கட்டடத்தில் நடந்த பேரவைக் கூட்டத்தின் காரசாரமான நிகழ்ச்சியே இதற்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு. இந்த நிகழ்ச்சிக்குப் பின்தான் 'குமுதம்' ஆசிரியர் எஸ். ஏ. பி. எந்தப் பொதுப்பணியிலும் பொறுப்பேற்கத் தயங்கி ஒதுங்கிவிட்டார்கள் என்பது என் போன்ற பலருடைய கருத்து.

இந்த நிலையில் 1956-ஆம் ஆண்டு, ஆசிரியர் தேவன் அவர்கள் தலைமையில், திரு. அழ. வள்ளியப்பா சங்கச் செயலாளர் பதவியை ஏற்றார். அன்று முதல் 1966-ஆம் ஆண்டு இறுதியில் அவர் சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வு பெறும்வரை பத்தாண்டுகளுக்கும் மேலாகச் சங்கத்தைக் கட்டி வளர்த்ததோடுமட்டுமல்ல, தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்று செயலாற்றும் அதிசயத்தையும் வளர்த்தார்.

அவர் பொதுச்செயலாளர் பதவிஏற்ற 1956-ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் மாநாடு அதுவரை தமிழகம் கண்டிராத மாபெரும் விழாவாகவே நடந்தது. அம்மாநாட்டில் கேடயம் பெற்ற முதுபெரும் புலவர் இருவரையும் பாராட்டுவதற்காக வந்த பேராசிரியர், நடமாடும் பல்கலைக்கழகம் தெ. பொ. மீ. அவர்கள் "ஞானசம்பந்தப் பெருமானின் பூம்பாவைப் பதிகங்கள் திரு உலா வந்த மயிலை மாட வீதியில் இன்று தமிழ்ப்பெரும் புலவர்களின் படைப்புக்கள் உலா வருவதைக் காணும்போது என் நெஞ்சம் மகிழ்ச்சியால் நிறைகிறது" என்று நாத் தழுதழுக்கக் கூறிய சொற்கள் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

வள்ளியப்பா செயலாளர் பதவியை ஏற்றது முதல் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போயிற்று. எழுத்தாளர்கள் அடிக்கடி ஒன்றுகூடவும், நட்புடன் பழகவும் தொடங்கியதோடு, தங்கள் பிரச்னைகள், நலன்களைப் பற்றியும் விவாதித்துச் செயல்படும்படியும் செய்தார்.

வள்ளியப்பா அவர்களின் பெருமுயற்சியால் ஏற்பாடு செய்யப் பெற்ற எழுத்தாளர்களின் முதலாவது சுற்றுலா மிக வெற்றிகரமாகவும் மகிழ்ச்சிமிக்கதாகவும் அமைந்ததற்கு இவருடைய அயராத உழைப்பும் அதிக முன்ஜாக்கிரதையும் காரணங்கள். அந்த ஏற்பாட்டில் மகாபலிபுரம் போய் வந்தவர்கள் யாவரும் அந்த இன்பமயமான பயணத்தை மறக்கவே முடியாது. இப்போதுள்ள வசதிகள் எதுவும் அப்போது மகாபலிபுரத் தில் கிடையாது என்பதை நினைத்துப் பார்த்தால், அதிகாலையில் சென்னை யிலிருந்து புறப்பட்ட அந்த வசதி மிக்க பயணிகள்-பேருந்து இரவு பத்து மணிக்குச் சென்னை வந்து சேரும் வரை, சட்டென்று உணர்ச்சி வசப்பட்டு விடக்கூடிய அத்தனை எழுத்தாளர்களுக்கும் ஒரு குறையும் தோன்றாதபடி அவர்கள் மகிழ்ச்சியோடு பயணத்தை அனுபவிக்கும்படி செய்த வள்ளியப்பாவின் மனப்பக்குவத்தை நினைந்து வியக்காமலிருக்க முடியாது.

வள்ளியப்பா பொதுச்செயலாளர் பதவியை ஏற்றதுமே சங்கத்தின் வளர்ச்சியில் முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டுவிட்டார். சங்கத்தின் அறிக்கை ஏடாக இருந்த "பாரதி"யை மாத இதழ் என்ற தரத்திற்கு உயர்த்தி, தபால் கட்டணச் சலுகையைப் பெற்று மாதந்தோறும் தவறா மல் குறிப்பிட்ட காலத்தில் பத்திரிகை வெளிவர ஏற்பாடு செய்தார். முதுபெரும் புலவர்களுக்குக் கேடயம் அளித்துக் கௌரவிப்பதோடு அமையாது, வெளி உலகில் தமிழ் பரப்பும் அறிஞர்களுக்குப் பதக்கம் அளித்துப் பாராட்டவும் ஏற்பாடு செய்தார்.

கல்கத்தா நகரத்தில் நடந்த முதலாவது அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டிற்குத் தமிழ் எழுத்தாளர்களின் பிரதிநிதிக் குழு ஒன்றைச் சங்கம் அனுப்பியது. அந்தக் குழுவில் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி., காங்கிரஸ்காரரான ஏ. ஜி. வி., கம்யூனிஸ்ட் தலைவரான திரு. K. முத்தையா போன்ற பல அரசியல் கருத்துடையவர்களுமிருந் தார்கள். ஆயினும் அந்த மாநாட்டிலே மிக ஒற்றுமையுடன் இயங்கிய குழு, தமிழ் எழுத்தாளர் குழுதான். ஹிந்தி எழுத்தாளர்களின் பிரிவால் மாநாடே முறிந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டபோது பல மொழி எழுத்தாளர்களையும் ஒன்றாக இணைக்கும் சமாதானத் தூதுவர்களாக விளங்கியவர்களும் தமிழ் எழுத்தாளர்களே. இந்தக் குழுவின் செயலாள ராகச் சென்ற பொதுச்செயலாளர் வள்ளியப்பாவின் இடையறாத உழைப்பே இந்த மகத்தான நற்பெயர் தமிழ் நாட்டிற்குக் கிடைக்க உதவிற்று. ஏ. ஜி. வி., ம. பொ. சி. போன்ற பெரியவர்கள் அகில இந்திய மாநாட்டில் ஒற்றுமைக்கு முயன்றுகொண்டிருக்கும் போது வள்ளியப்பா தமிழ்ப்பிரதிநிதிகளின் வசதிகள், தேவைகள் எதுவும் குறைந்துவிடாதபடி வங்கத் தலைநகரிலும் கவனித்து உழைத்தார்.

1966-இல் அவர் சங்கத் தலைமைப் பதவி ஏற்றதும் எழுத்தாளர்களின் கூட்டத்திலேயே அவர்களின் எழுத்துக்களை விமர்சிக்கத் துணிவோடு ஏற்பாடு செய்தார். அந்த நாவல் விழாக் கருத்தரங்கின் சொற்பொழிவு

கள் காற்றிலே கலந்து போய்விடாமல் யாவற்றையும் தொகுத்துப் புத்தகமாக வெளியிடவும் ஏற்பாடு செய்தார். அதில் சிலருடைய கட்டுரையை அவர் எழுதி வாங்கியதை அசுர சாதனையென்றுதான் சொல்ல வேண்டும்.

அவருடைய தலைமைக் காலத்தில் அவர் சாதித்த மற்றொரு சாதனையை நினைத்தால் நெஞ்சு நெகிழ்கிறது. எழுத்தாளர்கள் ஒன்று கூடுதல் என்ற ஏற்பாட்டில் நுங்கம்பாக்கத்தில் புத்தக டிரஸ்ட் இருந்த மாளிகையில் 200-க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களை ஒரு நாள் முழுவதும் சேர்த்து வைத்த அற்புதத்தை வள்ளியப்பாவைத் தவிர வேறு யாரால் சாதிக்க முடியும் ? டாக்டர் மு. வ., நெ. து. சுந்தரவடிவேலு போன்ற பேரறிஞர்கள் முதல் என் போன்ற சாதாரண ஆள் வரை 200-க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் காலை முதல் மாலை 6 மணி வரை ஒரே மகிழ்ச்சியுடனும் 'எழுத்தாள இன' உணர்ச்சியுடனும் வெளி உலகை மறந்து இருக்கச் செய்த பெருமை வள்ளியப்பாவைச் சேரும்.

அவருடைய பத்தாண்டு காலச் சேவைக்கு முத்தாய்ப்பு வைப்பது போல் 1966-இல் 'தமிழ் எழுத்தாளர் - யார் - எவர்' வெளி வந்தது. இரண்டே வரிகளில் இதைச் சொல்லிவிட்டேன். இந்த அதிசயத்தைச் சாதிக்க வள்ளியப்பா கொடுத்துள்ள விலையை நினைத்தால் நெஞ்சு கலங்குகிறது. இந்தப் பெரிய சாதனையை நிறைவேற்ற அவர் ஈடுபட்ட ஓய்வற்ற வேலை அவரை 50 நாட்கள் மருத்துவமனையில் கிடத்திவிட்டது.

இந்த அற்புதங்களையெல்லாம் வள்ளியப்பாவால் எப்படிச் சாதிக்க முடிகிறது ? அவருடைய சக்தி என்ன ? சுலபமாக உணர்ச்சி வசப்பட்டு விடாத தன்னடக்கமும் எப்போதும் முகத்தில் மறையாமல் விளங்கும் புன்னகையும்தான் அவருடைய ஆயுதங்கள்.

எழுத்தாளர் சங்கத்தில், பொதுச் செயலாளர், துணைத் தலைவர், நிர்வாகக்குழு உறுப்பினர், வரவேற்புக்குழுத் தலைவர், தலைவர் என்று பல பதவிகளை வள்ளியப்பா வகித்திருக்கிறார். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும், யாருக்கும் அவர் என்ன பதவி வகிக்கிறார் என்பது நினைவுக்கு வருவதில்லை. வள்ளியப்பா என்றால் எழுத்தாளர் சங்கத்தின் எல்லா வேலைகளையும் செய்பவர் என்று மட்டுமே எல்லோருக்கும் தெரியும். இந்த ஓயாத உழைப்பாலும் இனிய சுபாவத்தாலுமே ஒருவரை ஒருவர் முறைத்துக்கொண்டிருக்கக்கூடிய எல்லா எழுத்தாளர்களையும் ஒன்று கூட்டி ஒரு நிறுவனத்தின் கீழ் பல்லாண்டு வாழச் செய்ய முடிந்தது அவரால்.

''துஞ்சும் பொழுதும் தாய் பதத் தொண்டினை மறந்திடாத'' என்ற மகாகவி பாரதியாரின் பாடல் வரிகள் கவிதை உயர்வு நவிற்சி என்று நான் எண்ணியிருந்தேன். பாரதியாரின் வாக்கு சத்தியமானது என்ற உண்மையை வள்ளியப்பா அவர்கள் மருத்துவமனையிலிருந்த

போதுதான் உணர்ந்தேன். அவர் நோய் அபாயகரமானது, அவர பேசவோ சிந்திக்கவோ கூடாது என்று பெரிய மருத்துவர்கள் கட்டாய மாகக் கட்டளையிட்டிருந்தபோதும், எழுத்தாளர் மாநாட்டை வெற்றி கரமாகவும் சிறப்பாகவும் நடத்தி முடிக்க வேண்டுமென்பது பற்றியே ஓயாமல் சிந்தித்துக்கொண்டும் பேசிக்கொண்டுமிருந்தார். தனது உடல் நிலையையும் மறந்து மாநாட்டு வேலைகளில் அவர் காட்டிய ஆர்வம் அவருடைய குடும்பத்தினரைக் கவலையில் ஆழ்த்திவிட்டது. அந்தத் தொண்டுள்ளமும், எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் வரை அதிலே ஐக்கியமாகிவிடும் மனப்பான்மையும்தான் அவருடைய வெற்றிகளுக்குக் காரணம்.

பத்தாண்டுக் கால உழைப்பினால் எழுத்தாளர் சங்கத்தில் அவர் சாதித்த சிறந்த சாதனைகள் சிலருடைய உள்ளத்தில் பொறாமையை ஏற்படுத்தியதுமுண்டு. அதன் விளைவாகவும், எழுத்தாளர்கள் பலர் தம்முள் ஏற்படும் கருத்து வேற்றுமையினால் உணர்ச்சி வசப்படும் பொழுதும் வள்ளியப்பாவைக் குறை கூறியதுண்டு. சில சமயங் களில் வள்ளியப்பா கடுமையாகவும் தாக்கப்படுவார். அந்தச் சமயங் களில் எல்லாம் வள்ளியப்பா மிகப் பொறுமையுடன் நடந்து, தமது இனிய பேச்சினாலும் புன்முறுவலாலுமே எல்லாவற்றையும் சமாளித்து விடுவார். காரணமின்றியே அவரை யாரேனும் குறை கூறும் போதும் அவருடைய அன்பால் கவரப்பட்டு அவருக்காகவே அங்கு செயல்படும் சிலர் மிக்க ஆத்திரமடைவதுண்டு. அவர்களையும் தமது புன்முறுவ லாலேயே சாந்தப்படுத்திவிடுவார் வள்ளியப்பா. அப்பொழுதெல்லாம் "அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய் உனதருளுக்கு அஞ்சினேனே" என்று பீமன் வாக்காகக் கூறும் வில்லிபுத்தூராழ்வா ரின் வரிகளே என் நினைவுக்கு வரும்.

அந்த முரசுயர்த்த தர்மபுத்திரனின் புகழ் போல வள்ளியப்பா பல்லாண்டு பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கிறேன்.

புத்தக டிரஸ்டில் புதுமைகள் செய்தவர்

மணவை முஸ்தபா

அன்று புது வெள்ளிக்கிழமை. மாலை நேரம். குழந்தைக் கவிஞரின் இல்லத்தை நோக்கிப் படகு போன்ற கார் ஒன்று வேகமாக வந்து நிற் கிறது. ஆஜானுபாகுவான ஒருவர் அதிலிருந்து இறங்கி வீட்டிற்குள் நுழை கிறார். வந்திருப்பவர் 'டெக்கான் ஹெரால்ட்' ஆங்கில இதழின் முன்னாள்

ஆசிரியரும் தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் நிர்வாக அலுவலருமான திரு. கிருபாநிதி என்பதை அறிந்துகொண்ட குழந்தைக் கவிஞர் வழக்கம் போல் இன்முகத்தோடு வரவேற்று உபசரிக்கிறார். "தென்னகக் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கென ஒரு திட்டத்தை டிரஸ்ட் வகுத்துள்ளது. அதனை வெற்றிகரமாகச் செயலாக்க நீங்களே தகுந்தவர் என டிரஸ்ட் ஒருமனதாகத் தீர்மானித்துள்ளது. இப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்" என அழைப்பு விடுக்கிறார். சிறிதும் எதிர்பாரா நிலையில் வந்த அழைப்பு, குழந்தைக் கவிஞரைத் திகைக்க வைக்கிறது. தமக்கு இஃது உவப்பான பணியே யாயினும் தற்போது ஆற்றிவரும் வங்கிப் பணியை இடையிலே தற்காலிகமாக விட்டுவிட்டு ஒரு குறிப்பிட்ட வரம்புக்குட்பட்ட பணியை ஏற்பது எங்ஙனம் ? என எண்ணி மறுகுகிறார் கவிஞர். வந்தவர் கவிஞரின் இக்கட்டான நிலையை உணர்ந்துகொண்டவராய், "வங்கித் தலைமையகத்திடமிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு 'பணிமீள் உரிமை' (Lien) நாங்களே பெற்றுத்தருகிறோம். நீங்கள் இவ்வழைப்பை ஏற்றுக்கொண்டே யாகவேண்டும்" எனக் கூறிக் கவிஞரின் மறுமொழியை ஆவலோடு எதிர்பார்க்கிறார். உடனே கவிஞர் புன்முறுவல் பூக்கிறார். அதனையே சம்மதத்தின் அறிகுறியாக எடுத்துக்கொண்டு வந்தவர் மலர்ந்த முகத்தோடு வெளியேறுகிறார். இது நடந்தது 1957 - ஆம் ஆண்டில்.

தரமான குழந்தை இலக்கியங்கள் தென்னக மொழிகளில் வெளிவர ஆக்கச் சிந்தனையும் கற்பனை வளமிக்க எழுத்தாற்றலும் இளையோர் உளவியல் புலமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற குழந்தைக் கவிஞரின் பணியின் முக்கியத்துவத்தை டிரஸ்ட் விளக்கி வற்புறுத்தியதற்கிணங்க இந்தியன் வங்கித் தலைமையகம் பதினெட்டு மாதங்களுக்குக் கவிஞரின் தொண்டினை டிரஸ்டுக்குத் தந்துதவ முன் வந்தது. பின்னர், டிரஸ்டின் விருப்பத்திற்கிணங்கக் கால அனுமதி அவ்வப்போது வங்கித் தலைமையகத்தால் நீட்டிக்கப்பட்டு, மொத்தம் ஐந்தரை ஆண்டுகள் கவிஞர் டிரஸ்டில் சேவை புரிந்தார்.

குழந்தை இலக்கியச் சிறப்பு அலுவலராக (Special officer for children's literature) டிரஸ்டில் காலடி எடுத்து வைத்த குழந்தைக் கவிஞரின் பெருந்தொண்டால் சிறுவர் இலக்கிய உலகு பெற்ற பெரும் பயன் எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகவும், தென்னகக் குழந்தை இலக்கியத் துறைக்கே ஒரு முன்னோடிப் பணியாகவும் அமைந்தது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு தென்மொழிகளிலும் தரமான, கவர்ச்சி மிக்க சிறுவர் இலக்கியங்கள் இல்லையே என்ற குறையை ஓரளவு தீர்த்த பெருமை இவருக்குண்டு.

பெரியவர்களுக்குப் புத்தகம் தயாரிப்பதைக்காட்டிலும் குழந்தைகளுக்கென நூல்களைத் தயாரிப்பது எத்துணை கடினமான செயல் என்பது அத்துறையைச் சார்ந்தவர்களுக்குத்தான் தெரியும். குழந்தை

உளவியல் வல்லுநரான குழந்தைக் கவிஞர் அவர்கள் இதனை நன்குணர்ந் தவராதலால் கவர்ச்சியாகச் சிறுவர் நூல்களை வெளிக் கொணரப் பெரு முயற்சியை மேற்கொண்டார். இரவுபகலாக உழைத்தார். குறித்த காலத்திற்குள் குறிப்பிட்ட எண்ணிக்கை நூல்களை வெளிக் கொணரும் பொறுப்பேற்றிருந்த கவிஞர் அவர்கள், பல இரவுகள் அச்சு இயந்திரத்தின் அடியிலேயே படுத்துறங்கியுள்ளார்கள் எனில் குறையற்ற முறையில் சிறுவர் நூல்களை வெளிக் கொணரும் அவர்தம் வேட்கை எத்தகையது என்பதை ஊகித்தறிந்துகொள்ளலாம்.

இவர் டிரஸ்ட் பணியை மேற்கொள்வதற்கு முன்பு சிறுவர் இலக்கி யங்கள் பரிசு பெறுவது 'வானம் பார்த்த பூமி' போன்றிருந்தது. அத்தி பூத்தாற் போன்றிருந்த அந்நிலை மாறியதோடு டிரஸ்டிற்காகத் தயாரித் தளித்த ஐம்பது நூல்களில் பல யுனெஸ்கோ, இந்திய, தென் மாநில அரசு களின் பரிசுகளைப் பெற்றுத் தன் கொழுமையான வளர்ச்சியை அளந்து காட்டின. முற்ற முற்ற அப்பெருமை குழந்தைக் கவிஞரையே சாரும்.

கண்ணுக்கும் கருத்துக்குமினிய குழந்தை இலக்கியங்களைத் தயாரித் தளித்துத் தென்னகக் குழந்தை இலக்கியத் துறைக்கே பெருமை சேர்த்த கவிஞர் அவர்கள், குழந்தை இலக்கிய உலகுக்கு என்றென்றும் வள்ங் கூட்டவல்ல சாதனைகள் பலவற்றையும் இக்கால கட்டத்தில் நிகழ்த்திக் காட்டினர்கள்.

அச்சு வாகனமேறி வெளிப்பட்ட குழந்தை இலக்கிய நூல்களுக்குப் பரிசளிக்கும் போக்குத்தான் அன்று வரை இருந்து வந்தது. எழுத்தாற்றல் மிக்க சிறுவர் இலக்கிய எழுத்தாளர்கள் பலர் வசதிக்குறைவின் காரண மாகத் தாங்கள் உருவாக்கிய சிறந்த படைப்புக்களை வெளியிட்டுப் பரிசு பெற வாய்ப்புப் பெறாது குடத்துளிட்ட விளக்குப் போலிருந்தனர். அவர் களது எழுத்தாற்றலை வெளிக்கொணர்ந்து பாராட்டும் முறையில் குழந்தைக் கவிஞர் ஒரு திட்டம் வகுத்தார். சிறுவர் இலக்கியப் போட்டி களை நடத்திச் சிறந்த சிறுவர் இலக்கியக் கையெழுத்துப் பிரதிகளுக்குப் பரிசளிப்பது, அப்படிப் பரிசு பெறும் கையெழுத்துப் பிரதிகளை நான்கு மொழிகளிலும் நூல் வடிவில் வெளியிடுவது, அதற்கான உரிமைத் தொகையில் ஒரு பகுதியை முன்பணமாகக் கொடுத்து எழுத்தாளரை ஊக்குவிப்பது—இப்படி ஒரு திட்டத்தை முதன் முறையாக டிரஸ்டில் தொடங்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தினர். இதன் மூலம் வாய்ப்பும் வசதியுமில்லாது திரைமறைவில் கேட்பாரற்றுக் கிடந்த திறமைமிகு சிறுவர் இலக்கியப் படைப்பாளர்கள் சிலர் அரங்கத்தில் தோன்றித் தம் புகழ்க் கொடிகளை நாட்டினர். மற்றவர்களின் திறமையை மதிப்பதிலும் அவற்றை வெளிக்கொணர்ந்து மணம் வீசச் செய்வதிலும் குழந்தைக் கவிஞர்க்குள்ள தனியார்வம் விண்டுரைக்க முடியாத ஒன்றாகும்.

டிரஸ்டின், 'பொது மக்கள் தொடர்புப்பணி'யையும் சிறப்புற ஆற்றி வந்த குழந்தைக் கவிஞரின் முனைப்பான முயற்சியின் விளைவாகத்

தமிழில் முதன் முதலாகத் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய சகல தகவல் களையும் தரவல்ல 'தமிழ் எழுத்தாளர் யார், எவர் ?' என்ற அருமையான செய்தித் தொகுப்பு நூல் வெளி வந்தது என்பது பலரும் அறிந்ததே. இத் தொகுப்பு நூல் வெளிவந்த பின்னர், இதனையே முன்னோடி நூலாகக் கொண்டு தெலுங்கு, கன்னட, மலையாள மொழிப் பகுதி 'எழுத்தாளர் யார் - எவர் ?' தொகுப்பு நூல்களை டிரஸ்ட் வெளியிட்டது. இத்துறை யில் தென்னகத்துக்கு முன்னோடிப் பாதை அமைத்தவர் குழந்தைக் கவிஞரேயாவார்.

தென்னக - இந்திய - யுனெஸ்கோ குழந்தை இலக்கிய ஆய்வுக் கருத்தரங்குகளில் டிரஸ்டின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு தம் பரந்த அனுபவ அடிப்படையில் சிறுவர் இலக்கியம் பற்றி ஆய்வுக் கருத்துரை களை வழங்கி வந்த குழந்தைக் கவிஞர், 1960 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ வின் பெருந்துணை கொண்டு டிரஸ்டின் ஆதரவில் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் விரிவாகச் சுற்றி ஆராய்ச்சி செய்து "தமிழ் நாட்டுச் சிறுவர்களிடையே படிக்கும் பழக்கம்" (A Report on the Survey of the Reading interests of Juveniles in Tamil) என்ற ஆராய்ச்சி அறிக்கையைத் தயாரித்தார்கள். கடும் உழைப்பின் விளைவாக உருவான இந்த அறிக்கை சிறுவர் இலக்கிய உலகம் பற்றிய பல சுவையான தகவல்களைத் தருகின்றது. சிறுவர் இலக்கியங்களை எழுதுவோரும் வெளியிடுவோரும் கருத்திற்கொள்ள வேண்டிய பல அடிப்படையான உண்மைகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது இவ்வறிக்கை.

வருங்காலச் சந்ததிகள் வளமாக உருவாகவேண்டும் என்பதில் தணியாத ஆர்வம் காட்டி இடையறாது உழைத்து வரும் குழந்தைக் கவிஞர், இளைஞர்களை ஊக்குவித்து அவர்தம் திறமைகளை முழுமையாக வெளிப்படச் செய்வதில் ஆர்வம் மிக்கவர். அதற்கு உறுதுணையாக ஒல்லும் வகையெல்லாம் உதவுவதைத் தம் கடமையாகக் கொண்டு வாழும் பெருந்தகையாளர். இதை நானே பல முறை கண்டு வியந்து வாயடைத்துப் போயிருக்கிறேன்.

டிரஸ்டிலிருந்து விடைபெற்று வங்கிக்குச் சென்ற பின்னர், டிரஸ்டின் தமிழ்த்துறை அலுவலர் பணியினை நான் மேற்கொள்ளக் குழந்தைக் கவிஞர் அவர்கள் காட்டிய ஆர்வமும் அக்கறையும் என் வாழ்வில் என்றும் மறக்க முடியாததாகும். எனது பணிகளைச் சிறப்புற ஆற்ற எந்த நேரத்தில் அவர்கள் உதவியை நாடினாலும் ஒத்துழைக்க அவர்கள் தயங்கியதே இல்லை.

ஒருமுறை, என்னைப் பொறுப்பாசிரியராகக் கொண்ட டிரஸ்டின் 'புத்தக நண்பன்' இதழில் புத்தக உலக அறிஞர்கள் பலரைப் பேட்டி கண்டு எழுத எண்ணி, ஒரு குறிப்பிட்ட அறிஞரை முதலாவதாகப் பேட்டி காண விரும்பினேன். அவர்கள் எனக்கு முன்பின் அறிமுகமில்லாதவராதலால் குழந்தைக் கவிஞரின் உதவியை நாடினேன். அவர்கள் பெரிதும் உடல்

நலிவுற்றிருந்த சமயம் அது. அவர்கள் என் விருப்பத்தைக் கேட்டு மகிழ்ந்ததோடு தம் உடல் நலிவையும் பொருட்படுத்தாது இரவு நேர மென்றும் பாராது ஆர்வத்தோடு என்னை அந்தத் தமிழறிஞரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்ததோடு இனிய முறையில் பேட்டி காணவும் உதவினார்கள். இது போன்று அவர் எனக்குச் செய் துள்ள பற்பல உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் கண்டு எத்தனையோ முறை நான் மனமுருகிப் போயிருக்கிறேன். இன்றைய எழுத்துலகச் சூழலில் இத்தகையவர்களைக் காண்பதே அரிதன்றோ ?

டிரஸ்டில் ஐந்தரை ஆண்டுகள் பணியாற்றி அவர் அமைத்த ராஜ பாட்டையில்தான் இன்று குழந்தை இலக்கியப் பணிகள் செழுமையாக நடைபெற்று வருகின்றன. டிரஸ்டிற்கு மட்டுமல்லாது தமிழகக் குழந்தை இலக்கிய உலகிலேயே தண்ணளி தரும் வெண்ணிலவாக இன்று விளங்கி வருபவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் எனில் அஃது மிகையன்று.

குழந்தை இலக்கியத் துறைக்குக் கடந்த இருபத்தைந்தாண்டுகள் இடையறாப் பெரும் பணியாற்றிக் கால வெள்ளத்தை எதிர்த்து நிற்க வல்ல இணையற்ற படைப்புக்கள் பலவற்றை உருவாக்கி இலட்சோப லட்சம் குழந்தைகளின், இளைஞர்களின் இதயத்தில் அமரத்துவ இடத் தைப் பெற்றுள்ள குழந்தைக் கவிஞர் அவர்கள் பல்லாண்டு வாழ்க! அவர் தம் அறிவுப்பணி என்றென்றும் தொடர்க என வாழ்த்துவதில் அளவிலா உவகையடைகிறேன்.

பிற நிறுவனங்களுடன் தொடர்பு

டி. எஸ். வி.

குழந்தைகள் புத்தக டிரஸ்ட், புது தில்லி

குழந்தைகளின் அன்பர் நேருஜியின் ஆதரவுடன் தொடங்கிச் செயல் பட்டு வருகிறது குழந்தைகள் புத்தக டிரஸ்ட் (சில்ரன்ஸ் புக் ட்ரஸ்ட்). மேல்நாட்டுக் குழந்தைப் புத்தகங்களுக்கு இணையான தரத்தில், மலிவான விலையில், அழகான புத்தகங்கள் வெளியிட்டு, அயல்நாட்டுக் குழந்தை களுக்கும் ஏற்றுமதி செய்துவருகிறது இந்த நிறுவனம். இதன் தமிழ்ப் பதிப்புக்கள் நல்ல முறையில் வெளிவரப் பெரிதும் உதவிவருகிறார் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா.

இந்த டிரஸ்ட் 'சில்ட்ரன்ஸ் வேர்ல்ட்' (Children's World) என்று ஓர் ஆங்கிலப் பத்திரிகை வெளியிடுகிறது. குழந்தைக் கவிஞரின் பல பாடல் கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இதில் வெளிவந்துள்ளன.

தேசியப் புத்தக டிரஸ்ட், புது தில்லி

தேசியப் புத்தக டிரஸ்ட் தொடங்கிய புதிதில், திரு. மஞ்சேரி ஈஸ்வரன் செயலாளராக இருந்தபோது, அந்த நிறுவனத்தின் ஆலோசகர்களுள் ஒருவராகப் பணிபுரிந்தார் திரு. வள்ளியப்பா. இந்த நிறுவனத்திற்காகப் "பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள்" என்று நாடோடி இலக்கியம் குறித்து ஒரு நூல் இயற்ற ஒப்புக்கொண்டிருந்தார் குழந்தைக் கவிஞர். 1966-ஆம் ஆண்டு இறுதியில் திடீரென நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கையெழுத்துப்பிரதியைத் தயாரித்து அனுப்ப ஒப்புக்கொண்ட நேரம் அது. குறித்த காலத்தில் புத்தகம் வெளிவரவேண்டும் என்ற கடமையுணர்ச்சியால், மருத்துவமனையிலிருந்தவாறே, வீட்டுக் குழந்தைகளிடம் சொல்லி, எழுதச் செய்தார். கைப்பிரதியைக் குறித்த காலத்தில் அனுப்பிவைத்தார். புத்தகம் வெளிவந்து, பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.

தற்போது இந்த டிரஸ்டுக்காக, "தென்னாட்டு ஆறுகள்" என்று குழந்தைகளுக்காக ஒரு நூல் இயற்றியுள்ளார் கவிஞர். இது 14 இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் வெளிவர இருக்கிறது.

1968-இல் சிம்லாவில் பல மொழி எழுத்தாளர்களை அழைத்துக் குழந்தை இலக்கியம் பற்றி ஒரு கருத்தரங்கு நிகழ்த்தியது இந்த டிரஸ்ட். தமிழ்நாட்டிலிருந்து திரு. நெ. து. சுந்தரவடிவேலு, திரு. கல்வி கோபாலகிருஷ்ணன் ஆகியோருடன், குழந்தைக் கவிஞரும் கலந்து கொண்டார்.

சாகித்திய அக்காதெமி

1956-ஆம் ஆண்டு, யுனெஸ்கோ ஆதரவுடன் புது தில்லியில், அனைந்திந்தியப் புத்தகக் காட்சி ஒன்று அமைத்தது சாகித்திய அக்காதெமி. மிக விரிவான அளவில் ஒன்றரை மாத காலம் நடைபெற்ற காட்சியில் தமிழ்ப் பிரிவை நிர்வகிக்கும் பணி திரு. அழ. வள்ளியப்பாவுக்கு வழங்கப்பட்டது. தமிழ்ப் பிரதிநிதியாக இவரைத் தேர்ந்தெடுக்கக் காரணமாயிருந்தவர் மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களே. தமிழ்ப் பகுதியைச் சிறப்புடன் அமைத்த வள்ளியப்பா, குழந்தைகள் பகுதியை அழகுற அமைக்க அமைப்பாளர்களுடன் பெரிதும் ஒத்துழைத்ததும் குறிப்பிடத்தக்கது. சுமார் 2000 தமிழ் நூல்களைப் பற்றிய முழு விவரங்களையும் தனித்தனி அட்டையில் எழுதித் தயாரித்து வழங்கியதும், தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி ஓர் ஆராய்ச்சிக்கட்டுரை தயாரித்துச்சென்றதும் மிகவும் பயனுள்ள பணி. சென்னையில் அக்காதெமியின் அலுவலகம் தொடங்குமுன், இந்த நிறுவனத்திற்குப் பல வகையிலும் கவிஞர் உதவி வந்துள்ளார்.

யுனெஸ்கோ

இலக்கியப் பணி தேவை என்றால் வள்ளியப்பாவின் சேவை அங்கே இருக்கும். ஆதலால், உலகப் பொது ஸ்தாபனமாகிய யுனெஸ்கோ

தென்னிந்தியாவில் குழந்தைகளிடையே படிக்கும் பழக்கம் பற்றி ஓர் விரிவான ஆராய்ச்சி நடத்தத் தீர்மானித்தபோது, தென்மொழிப் புத்தக டிரஸ்ட் திரு. வள்ளியப்பாவின் பெயரையே முன்மொழிந்தனர். ஏற்ற பணியைச் சிறப்பாகச் செய்து, 'சர்வே' ஆராய்ச்சிக்கு நல்ல முன்மாதிரியாகத் தாம் கண்டறிந்தவற்றைக் கோவையாக வகைப்படுத்தி ஆங்கிலத்தில் எழுதிக்கொடுத்தார் இவர். இந்த அறிக்கை யுனெஸ்கோ ஆதரவுடன் அச்சிடப்பெற்றுப் பல நாடுகளுக்கும் அனுப்பப் பெற்றுள்ளது.

1962-ல், கொழும்பு நகரத்தில் பதிப்பாளர், நூலாசிரியர், மொழி பெயர்ப்பாளர், விற்பனையாளர், நூலகர் ஆகிய துறையினரை இணைக்கும் வகையில் யுனெஸ்கோ ஒரு கருத்தரங்கு நடத்தியது. இதில் திரு. வள்ளியப்பா இந்திய நூலாசிரியரின் பிரதிநிதியாய்க் கலந்துகொண்டு ஆராய்ச்சிக் கட்டுரை படித்தும், வேறு பல வகையிலும் உதவியுள்ளார்.

பெங்களூரில் குழந்தை இலக்கியம் பற்றி நடந்த விரிவான கருத்தரங்கிலும் கலந்துகொண்டு அதில் முதல் ஆராய்ச்சிக் கட்டுரை வழங்கினர் வள்ளியப்பா.

இந்திய அரசின் கல்விப்பிரிவு 1962-ஆம் ஆண்டு மைசூர் கிருஷ்ண ராஜசாகரில், மொழிக்கு இரு எழுத்தாளர் வீதம் 14 மொழி எழுத்தாளர்களையும் கூட்டி நடத்திய எழுத்தாளர் முகாமில் திரு. பி. ஸ்ரீ. அவர்களுடன் கலந்துகொண்டு, குழந்தை இலக்கியம் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை படித்தார்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் மாநாடு

1962 கோடையில், பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் தலைமையில் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளரின் இரண்டாவது மாநாடு இரண்டு நாள் சென்னையில் நடத்தத் தீர்மானமாயிற்று. அம்மாநாட்டுக்குத் திரு. வள்ளியப்பா வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். பதினெட்டே நாளில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, ஒரு வாரத்தில் எல்லாக் கணக்குகளையும் முடித்துக் காட்டியது ஒரு பெரிய சாதனை.

தமிழக அரசு 1962-ஆம் ஆண்டில் நடத்திய பாரதியார் 81-வது பிறந்த தின விழாவில் பெரிய அளவில் காட்சி அமைக்க உதவினர் கவிஞர்.

ஆலோசனைப் பணி

தமிழக அரசு அமைத்த குழந்தை இலக்கிய வளர்ச்சிக் குழுவில் அங்கம் வகித்தும், தமிழக அரசு, மத்திய அரசு நடத்திய குழந்தை இலக்கியப் போட்டிகளில் நீதிபதியாக இருந்தும் தொண்டாற்றியுள்ளார்.

குழந்தைகள் கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்காகத் தமிழ் வளர்ச்சிக் கழகம் அமைத்துள்ள ஆலோசனைக் குழுவிலும் உறுப்பினராயிருக்கிறார்.

பாலர் மலரும், பூஞ்சோலையும்

வெ. சுப. நடேசன்

குழந்தைகளே விரும்பி வாங்கிப் படிக்கத்தக்க வகையில் தமிழில் ஏராளமான பத்திரிகைகள் வெளிவந்தன. இன்றும் சில வெளி வருகின்றன. இந்தப் பத்திரிகைகளுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்தது 'பாப்பா மலர்' என்பதாகும். குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா பிறந்த, திருச்சி மாவட்டத்திலுள்ள இராயவரத்திலேதான் அப் பத்திரிகையும் பிறந்தது என்பது குறிப்பிடத் தக்கது. காலணா விலையில் திரு. முத்துநாராயணன் அவர்களால் துவக்கப்பெற்ற இப் பத்திரிகை 9 மாதங்களே வெளிவந்தது என்றாலும், அது பல குழந்தைப் பத்திரிகைகள் தோன்ற அடிகோலியது.

அதன் பிறகு 'பாலர் மலர்' என்ற பத்திரிகையை எங்கள் பதிப்பகமாகிய தமிழ் நிலையத்தின் வாயிலாக வெளியிட்டு வந்தோம். ஏழரை ஆண்டுகள் (1944—1951) நடந்தது இப்பத்திரிகை. வள்ளியப்பாவின் மேற்பார்வையில் நடந்த இப்பத்திரிகையில்தான் அவர் பல கவிதைகள், கட்டுரைகள், கதைகள் எழுதினார். இதன் மூலமே தமிழ்க் குழந்தைகள் அவரை நன்கு அறிந்து கொண்டனர். வள்ளியப்பாவின் பாட்டு, பாலர் மலரின் முகப்பில் இரு வண்ணப் படங்களுடன் வெளிவரும். ஈசாப் கதைப் பாடல்கள் பல அப்படி வெளிவந்தவையே. இளம் எழுத்தாளர்கள் பலரை பாலர் மலர் மூலம் அறிமுகம் செய்து வைத்ததோடு, 'பாலர் கதைகள்', 'நிமிஷக் கதைகள்' என்ற தொகுப்பு நூல்களையும் வள்ளியப்பா எங்கள் தமிழ் நிலையம் மூலம் வெளியிட்டார். முதன் முதலாகக் குழந்தைகளுக்கு வெளிவந்த இந்தக் கதைத் தொகுப்பு நூல்கள் இதுவரை பல பதிப்புக்கள் வெளிவந்து விட்டன.

பாலர் மலரில் வந்த வள்ளியப்பாவின் பாடல்களை முதல் முதலாக இருவண்ணப் படங்களுடன் 'பாலர் பாடல்' என்ற பெயரில் வெளியிட்டதும் தமிழ் நிலையம்தான். அதன் பிறகு 'சிட்டுக்குருவி', 'மல்லிகை' போன்ற கவிதைத் தொகுப்புக்களையும் தமிழ் நிலையம் வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தது. ஓரணா விலையில் வெளிவந்த பாலர் மலரின் தீபாவளி மலர் எட்டணாத்தான்! பெரியவர்கள் கையை எதிர்பாராமல் பிள்ளைகளே தங்களுக்குக் கிடைக்கும் பணத்தில் ஆர்வமுடன் வாங்கிப் படித்த பத்திரிகைகளில் ஒன்று பாலர் மலர். இதன் பிறகு அரையணா விலையில் 'டமாரம்', காலணா விலையில் 'சங்கு' என்ற பத்திரிகைகளைத் துவக்கினோம். இவையும் வள்ளியப்பாவின் மேற்பார்வையிலே வெளி வந்தன. டமாரத்தில் பல புதுமைகளைப் புகுத்தினார். முதல் பக்கம் சிரிப்பூட்டும் கார்ட்டூன்கள் வெளிவரும். அந்தக் கார்ட்டூன்களுக்கான யோசனைகளை அவரே தெரிவித்து ஓவியரிடம் பொருத்தமாகப் படம்

போட்டு வாங்குவார். குழந்தைகள் அறியத்தக்க செய்திகள், வேடிக்கைப் புதுமொழிகள், விநோத விளையாட்டுக்கள், விஞ்ஞான விந்தைகள், மூளைக்கு வேலை போன்ற அம்சங்களும், அறிவை வளர்க்கும் பல போட்டிகளும் வெளிவந்தன.

'சங்கு' வாரம் இருமுறைப் பத்திரிகையாக, சனியும், புதனும் தவறாமல் வெளிவந்தது. எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்படி பெற்றோர்கள் வற்புறுத்துவார்களே என்று பயந்து அந்த இரு கிழமைகளையும் வெறுத்து வந்த குழந்தைகள் எப்போது அந்தக் கிழமைகள் வரும் என ஆவலாக எதிர்பார்க்கும் ஒரு நிலை ஏற்பட்டது.

முகப்புப் பக்கத்தில் பெரியோர் வாழ்விலே நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சிக்குப் படம் போடப்பட்டிருக்கும். இரண்டாவது பக்கத்திலே சுவை ததும்ப வள்ளியப்பா அந்நிகழ்ச்சியை எழுதியிருப்பார். 'பாரதியாரும் சுண்டலும்', 'கவிமணியும் அப்பமும்', 'கோகலேயும் கணக்கும்' — பிள்ளைகள் விரும்பும் இப்படிப்பட்ட தலைப்புக்களைக் கொடுத்திருப்பார்.

வள்ளியப்பா பிறந்த இராயவரத்திலே பிறக்கும் பேறு பெற்ற நானும், என் தம்பி சொக்கலிங்கமும், நடத்திய இம்மூன்று பத்திரிகைகளும் மலிவான விலையிலே இருந்தும், இவற்றிற்கு வள்ளியப்பாவின் பேராதரவு கிடைத்தும் எங்களால் அவற்றைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. காரணம் உற்பத்திச் செலவு அதிகமாகியது. விளம்பரங்கள் கிடைக்க வில்லை. பத்திரிகை விற்பனையாளர்களில் பலர் சரியாக நடந்துகொள்ள வில்லை. இக்குறைகள் இன்றுவரை தொடர்ந்து இருந்துவருவதாகத் தெரிகிறது.

இராயவரத்திலே பிறந்த திரு. வை. கோவிந்தன் அவர்களும், அவர் தம்பி திரு. இராம. தியாகராஜன் அவர்களும் மிகவும் சிறப்பாக நடத்திய 'அணில்', 'பாப்பா' போன்ற பத்திரிகைகளிலும், புதிய உருவம் பெற்றுப் பெரிய அளவில் திரு. அ. கு. அரு. அருணாசலம் அவர்களால் வெளியிடப் பெற்ற 'பாப்பா மலர்' பத்திரிகையிலும் வள்ளியப்பா பல கவிதைகள் எழுதி வந்தார். அது மட்டுமல்ல ; அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் பலவற்றிலும் வள்ளியப்பாவின் கவிதைகள் இடம் பெறுவதுண்டு. காந்திஜியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து திரு. பூவண்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'கரும்பு' என்ற பத்திரிகையில் எழுதி வந்தார்.

திரு. தமிழ்வாணனை ஆசிரியராய்க் கொண்ட 'அணில்' வார இதழ் தான் "குழந்தைக் கவிஞர்" என்ற சிறப்புப் பெயரை வள்ளியப்பாவுக்குப் பொருத்தமாகச் சூட்டியது.

வள்ளியப்பாவைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு 'பூஞ்சோலை' மாத இதழாக வெளிவந்தது. கௌரவ ஆசிரியர் என்று முகப்பிலே அச்சிட்டிருந்தாலும் முழுக்க முழுக்க அவரே அப்பத்திரிகையின்

உழைக்கும் ஆசிரியராக இருந்து கவனித்து வந்தார். பெரிய அளவில் அதாவது 64 பக்கங்களுடன் அது வெளிவந்ததால், மேலும் பல புதுமை களை அதில் வள்ளியப்பா செய்து காட்டினர்.

சுவையான கதைகளுடன், அறிவியல் விஷயங்களுக்கும் அதிகமாக இடம் அளித்தார். திரு. வி. க., சேதுப்பிள்ளை, மு. வ., நாமக்கல் கவிஞர் போன்ற நல்லறிஞர்கள் 'நான் சிறுவனாக இருந்தபோது' என்ற தலைப்பில் எழுதினர்கள்.

அப்போது தமிழக முதலமைச்சராயிருந்த திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள், தமது இளமைப் பருவம் பற்றி இதில் எழுதியபோது, ஆனந்தவிகடனில் அதை விரிவாக எழுதவேண்டும் என ஆனந்த விகடன் நிர்வாகிகள் விரும்பி குமாரசாமி ராஜா அவர்களைக் கேட்டுக்கொண்டார் கள். அவ்வாறே அவர் விரிவாக ஆனந்தவிகடனில் எழுதியதும், பின்னர் அது நூல் வடிவில் வெளி வந்ததும் தெரிந்ததே.

'நான் பிறந்தது கேரளம்', 'நான் பிறந்தது ஆந்திரம்' என்று அந்தந்த மாநிலக் குழந்தைகளைக் கொண்டு, தமிழ்க் குழந்தைகளுக்காகக் கட்டுரைகள் எழுதச் செய்தார். தேசிய ஒருமைப்பாட்டுக்கு இது ஒரு சிறிய தொண்டல்லவா ?

'இதுதான் இன்ஷ்யூரன்ஸ்', 'இதுதான் பாங்க்', 'இதுதான் சட்ட சபை' போன்ற தலைப்புக்களில் தக்கவர்களைக்கொண்டு, குழந்தைகளுக்கு ஏற்ற வகையில எழுதச் செய்தார். விவரங்களைத் திரட்டிச் சில கட்டுரை களை அவரே எழுதுவார். அந்தந்தத் துறையில் நிபுணர்களிடம் அவற்றைக் காட்டி அவர்களின் அங்கீகாரம் பெற்ற பின்னரே வெளியிடுவார். இன்னரால் அங்கீகரிக்கப்பட்டது என்ற குறிப்புடன் கட்டுரை வெளிவரும். அறிவியல் விஷயங்களில் தவறு இருக்கக்கூடாது என்பதற்காக அவர் மிகுந்த சிரமம் எடுத்துக்கொள்வார்.

குழந்தை எழுத்தாளருக்கு ஊக்கமூட்டி, அவர்களின் எழுத்தோவியங் களை வெளியிட்டதோடு, அவர்களது புகைப்படங்களையும் வெளியிட்டு அறிமுகப் படுத்துவார். இளம் எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டுவரும் கதை கட்டுரைகளைப் படித்துப் பார்ப்பார். தவறு இருப்பின் நாசுக்காகச் சுட்டிக் காட்டுவார். திருத்தம் தேவையானல் எடுத்துக் கூறுவார். கொஞ்சம் திறமை இருந்தாலும், தட்டிக் கொடுத்து ஊக்கமளிப்பார். 'பாலர் கவியரங்கம்' என்ற பகுதியைத் துவக்கி, சிறுவர்களின் கவித் திறத்தை வளர்த்தார். சிறந்த கவிதைகளுக்குத் தம் சொந்தச் செலவில் பரிசுகள் வழங்கினர். இப்படிப் பலர், அவர் அளித்த ஊக்கத்தால் நல்ல எழுத்தாளர்களாய், கவிஞர்களாய் உருவாயினர்.

'சிறிய வயதில் பெரிய மனிதர்கள்', 'பள்ளிப் பருவத்திலே' போன்ற தலைப்புக்களிலே உலகத் தலைவர்களின் இளமைப்பருவம் பற்றி எழுது வார். இன்று பலர் இம்மாதிரிக் கட்டுரைகள் எழுதினலும் வள்ளியப்பா

தான் வழிகாட்டி. பெரியோர்களின் பிள்ளைப்பருவப் படங்களையும் தேடி வெளியிடுவார்.

பூஞ்சோலைப் பொங்கல் மலர்கள், குழந்தைகளின் கலைக்களஞ்சியம் போல் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும். மலர் தயாராகும் போது வள்ளியப்பா, தன் குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிடுவார். பகலெல்லாம் தாம் பணியாற்றும் பாங்கிலும், இரவு வெகுநேரம் வரை பூஞ்சோலை அலுவலகத்திலும் இருந்து மலர் வேலைகளைக் கவனிப்பார்.

3½ ஆண்டுகளே (1951-1954) பூஞ்சோலை வெளிவந்தது. பூஞ் சோலையின் கடைசி இதழில் 6 பக்கங்களில் பத்திரிகையை நிறுத்துவது குறித்து எழுதியிருந்தார். பூஞ்சோலை மூலம் சிறுவர் உலகுக்கு என்னென்ன செய்ய நினைத்தோம், அதுவரை என்னென்ன செய்ய முடிந்தது என்பதை விளக்கியதோடு, இனி, சிறுவர் பத்திரிகை தொடங்குவோர், நாங்கள் செய்ய நினைத்து, ஆனால் செய்ய முடியாது விட்டவைகளைப் பரிசீலனை செய்து, தக்கவற்றை ஏற்றுத் தங்கள் பத்திரிகைகள் மூலம் செய்யவேண்டும் என்று அக்கடைசி இதழில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதைப்பற்றித் 'தீபம்' இதழில் கவிஞர் எழுதியிருந்த கடைசி வரிகள் உள்ளத்தைத் தொடுவன.

"காலையில் மலர்ந்து, பகலெல்லாம் மணம் பரப்பி, மாலையில் வாடி மறையும் மலர் போல, பூஞ்சோலையின் கதையும் முடிந்தது. போர்க் காலத்திலே, குண்டுக்கு அஞ்சிக் குழிக்குள் போய் ஒளிந்தும், மண் சரிந்து விழுந்ததால் மரணமடைந்தவனைப் போலன்றித் தாய்நாட்டுக் காகக் களத்திலே அஞ்சாமல் போரிட்டு அமரத்துவம் அடைந்த வீரனைப் போல், பூஞ்சோலை வெளிவருவது நின்றாலும், இன்றும் அது பலர் மனத்தில் நீங்காது நிற்கின்றது."

இன்னொன்றையும் இங்கே குறிப்பிடவேண்டும். பல குழந்தை எழுத்தாளர்களை உருவாக்கிய குழந்தைக் கவிஞர், பல ஓவியர்களையும் குழந்தைகளுக்காகச் சித்திரங்கள் வரையும்படி தூண்டினர். சமீபத்தில் காலஞ்சென்ற ஓவியர் சாகர் அவர்கள் வள்ளியப்பாவுடன் இணைந்து பணியாற்றி, அவரது நூல்கள் வனப்புடன் விளங்கப் பெரிதும் உழைத் தவர். தற்போது ஆனந்த விகடனில் ஓவியராக விளங்கும் மாயா (அப்போது தேவன் என்ற பெயரில் வரைந்தவர்) பாலர் மலர், டமாரம் ஆகியவற்றில் படம் வரைந்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

பத்திரிகைத் துறைக்கு வள்ளியப்பா செய்துள்ள தொண்டு அளவிட முடியாதது. இவ்வளவு செய்தும் இன்னும் குழந்தைப் பத்திரிகைப் பஞ்சம் தீரவில்லையே என்பதுதான் அவரது கவலை !

நாங்கள் கண்ட குழந்தைக் கவிஞர்

சங்கம் வளரத் தளராது உழைத்தவர்

மயிலை சீனி. வேங்கடசாமி

குழந்தைக்கவிஞர் வள்ளியப்பா அவர்கள் பணிக்கு வெள்ளிவிழா நடத்துவது எல்லோருக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும். ஏனையோர் குழந்தை இலக்கியத்தைப் பற்றிச் சிந்திக்காத காலத்தில் வள்ளியப்பா அவர்கள் 1950-ஆம் ஆண்டில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவி நடத்தினர். அச்சங்கத்தின் வழியாகக் குழந்தை இலக்கிய ஆசிரியர்களை ஒன்றுசேர்த்து அவர்கள் எழுதிய குழந்தை இலக்கியங்களைப் பொது ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தினர். அவர் எழுதிய குழந்தை இலக்கியங்களைப் பாராட்டிச் சென்னை அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் பரிசுகள் வழங்கின. நற்பண்பு வாய்ந்த வள்ளியப்பா தென்மொழி புத்தக டிரஸ்டில் குழந்தைப் புத்தகத் தனி அலுவலராகச் சில காலம் பணியாற்றியுள்ளார். 1963-ஆம் ஆண்டில் லக்னோ நகரத்தில் நடைபெற்ற அனைத்திந்திய குழந்தை எழுத்தாளர் மகாநாட்டில், குழந்தைகளுக்காக எழுதப்பட்ட தமிழ்நூல்களின் சிறந்த ஆசிரியர் என்று வள்ளியப்பா தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதக்கமும் பாராட்டும் அளிக்கப்பட்டார்.

வள்ளியப்பா அவர்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் சேர்ந்து உழைத்திருக்கிறார். சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்

குழு அங்கத்தினராகப் பல ஆண்டு இருந்தார். செயலாளராகவும் துணைத்தலைவராகவும் இருந்திருக்கிறார். 1966-ஆம் ஆண்டில் அச் சங்கத்தின் தலைவராக உழைத்தார். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்த்தெழுதுகிறவர்களுக்குப் பதக்கம் அளித்துப் பாராட்டுகிற வழக்கத்தைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் நிறுவியவர் இவரே.

தில்லி மாநகரத்தில் 1966-இல் சாகித்திய அகதமி நடத்திய அனைத்திந்திய புத்தகக் காட்சியில், வள்ளியப்பா தமிழ்ப் பகுதியின் அமைப்பாளராக இருந்து அக்காட்சியைச் சிறப்பாக நடத்தினர்.

"தமிழ் எழுத்தாளர் யார்—எவர்?" என்னும் நூலைத் தொகுத்து 1966-இல் வெளியிட்டது இவருடைய சிறந்த பணிகளில் ஒன்றாகும். தமிழ் எழுத்தாளர் சங்கத்தைச் சிறப்பாக உயரச் செய்து அதற்கு நற்புகழைத் தேடித் தந்தவர்களில் வள்ளியப்பா அவர்கள் முதன்மையானவர்.

வெள்ளிவிழா பெறுகிற வள்ளியப்பா அவர்கள் நீடு வாழ்ந்து பொன் விழாவையும் வைரவிழாவையும் பெறவேண்டுமென்று வாழ்த்துகிறேன். உடல் நலமும் நல்வாழ்வும் நீண்ட ஆயுளும் அமைய அவருக்கு இறைவன் திருவருள் புரிவாளுக!

செய்வன திருந்தச் செய்பவர்

வைத்தண்ணு

(முதல்வர், வீரராகவன் குழந்தை இல்லம், ஆனைமலை)

நெருங்கிய நண்பரைப் பற்றி எழுதுவது மிகவும் இக்கட்டான நிலை. வள்ளியப்பா அவர்களைத் தெரியாத குழந்தைகள் இரார். எழுத்தாளர்கள் இரார். பொது மக்களும் அங்ஙனமே.

அவரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் திரு. வை. கோவிந்தன் அவர்களே. அவர் தனிப் பத்திரிகையைப் பதிப்பித்து வரும் பொழுது குழந்தைகளின் மேல் ஏற்பட்ட தனி அக்கறையால், தாமே சில கையேடுகளை ஆயத்தமாக்கினர். அயல் மொழிகளிலெல்லாம் கண்ணைக் கவரும் குழந்தை நூல்கள் இருக்க, நம் தாய்மொழியில் இல்லாத குறையை நிறைவேற்றவே இவ்வேடுகளை ஆயத்தமாக்கிக்கொண்டிருந்தார்.

எங்களுடைய பால பாரத் பள்ளி ஹபிபுல்லா ரோடில் இருந்தது. தனிப் பாட நூல்களுக்குப் பதிலாகக் குழந்தைகளுக்குக் கண்ணையும் சிந்தனையையும் ஈர்க்கும் கை ஏடுகளை நாங்களே ஆயத்தமாக்கி வருவதுண்டு. அந்த ஏடுகளை எங்களிடமும் வேறு பள்ளிகளிலிருந்தும்,

தனி எழுத்தாளர் ஓவியர்களிடமும் பெற்று, சென்னையின் வெவ்வேறு பகுதிகளில் கண்காட்சிகளை அமைத்துக் குழந்தை இலக்கியத்தில் குழந்தைகளுக்கும், முதியோர்க்கும், எழுத்தாளர்களுக்கும் ஒரு புது ஆர்வத்தை ஊக்குவித்தார்.

இவ்வாறு செய்வது இலேசான காரியமா ? மெய்வருத்தம் பாராமல் பல ஓவியர்கள், எழுத்தாளர்கள், இளைஞர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் காட்சியை நிறைவேற்றி, இரவல் பெற்ற நூல்களைப் பதிப்பாசிரியர்களுக்கும், பள்ளிகளுக்கும் ஒப்படைப்பது அவரால்தான் முடியும்.

குழந்தைகளிடம் இவருக்கு அலாதி அன்புண்டு. எந்தக் கூட்டத்துக்கு அழைத்தாலும் சரி, அடுக்கு மாடியானாலும், தனிக் குடிலாயினும் சரி, உடனே ஏற்றுக்கொண்டு தவறாமல் கூட்டத்தில் பங்கு கொண்டு குழந்தைகளை மகிழச் செய்வார். இவரை நினைத்தால் சிரித்த முகம், பேசப் பேசச் சிரிப்பு, கடிந்து பேசா வாய், ஆடம்பரம் அற்ற தோற்றம், சிறியவர் சாதனைகளைப் பெரிதாகப் பாராட்டும் மனப் பாங்கு, தான்தான் கோபுரம் தாங்கி என்று எண்ணாத அடக்கமுடைமை, பண்டிதரிடமும் பாமரரிடமும் சமமாக நடந்துகொள்ளும் தன்மை, பழிக்குப் பழி வாங்காத வெள்ளை உள்ளம், தன் சேவைக்கு விளம்பர மோகம் கொள்ளாத சீர்மை, பிற மொழிகளிடமும் அவை பேசும் இனத்தாருடனும் தோழமை முதலியன இவருடைய சிறப்பியல்களெனலாம்.

தாம் இதுவரை பெற்ற பதிப்புத்துறை அனுபவம் இவருக்குத்தென் மொழி டிரஸ்டில் பணியாற்ற உதவியது. அங்கு கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற பிறமொழி எழுத்தாளர்களுடன் அளவளாவவும் வாய்ப்புப் பெற்றதால் குறுகிய மனப்பான்மையும் பிறமொழி வெறுப்பும் பெறாமல் பரந்த நோக்கத்தைப் பெற்று அவர்களில் சிறந்தவர்க்குத் தக்க பரிசுகளும் பாராட்டுகளும வழங்க வழிவகைகளைக் கண்டார்.

வாரந்தோறும் தமது இல்ல மொட்டை மாடியில் மாலையில் குழந்தைகளுக்குக் கதை சொல்வதென்று ஏற்பாடு செய்து பல எழுத்தாளர்களை வரவழைத்துக் குழந்தைகளுக்கு நேரடியாக அறிமுகப்படுத்திக் கதை சொல்ல வைத்தார். கதைப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் எல்லாம் ஏற்பாடு செய்து இளம் எழுத்தாளர்களைத் தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்திய சேவைக்கு நன்றி செலுத்துவோம். எழுத்தாளர்களின் புகைப் படங்களுடன், அவரவர் பற்றிய சிறு வரலாற்றுக் குறிப்பையும் ராஜாஜி மண்டபத்தில் கண்காட்சியில் அமைத்துப் பிறகு எழுத்தாளர் பட்டியலையும் நூல் வடிவில் அச்சிட்டது என்றும் மறவாத செயலாகும். மயிலை சிவமுத்துத் தாத்தா இயற்றிய பல குழந்தைப் பாடல்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. அவை இன்று நம் கைக்குக் கிடைத்தமைக்கு மூல காரணமாயிருந்தவர்கள் புலவர் தணிகை உலகநாதன் அவர்களும், வள்ளியப்பா அவர்களுமே.

எனக்கு இப்பொழுது நினைவு வருகிறது. எங்கள் பால பாரதத் பள்ளிக்கு அவரும் 'பறக்கும் பாப்பா' ஆசிரியரும் வந்திருந்தனர். 'பறக்கும் பாப்பா' நூல்' வெளியீட்டு விழாவிற்கு எங்கள் உதவியை வள்ளியப்பா கோரினர். அவர் விருப்பப்படியே அந்த நூலின் சில பகுதிகளை எங்கள் குழந்தைகள் மூலம் நாடகமாக வாணிமகாலில் நடிக்க ஒப்புக்கொண்டோம்; நடித்தோம். அன்று சென்னை மேயரா யிருந்த திருமதி செரியன் அம்மையார் தலைமை தாங்கியதையும், மண்டபத்தில் எள் போட இடமில்லாதபடி கூடியிருந்த சிறுவர் கூட்டத்தையும் சென்னைவாசிகள் மறக்க முடியுமா? வெற்றிக்குக் காரணம் யார்? சொல்லவும் வேண்டுமோ?

எத்துணை அகில இந்திய எழுத்தாளர் கூட்டங்களையும் கருத்தரங்கங் களையும், பாராட்டு விழாக்களையும் கூட்டுவித்திருக்கிருர்! வங்காளி, இந்தி போன்ற வடமொழிப் புலவர்களுக்கும் தென்மொழிப் புலவர்களுக்கும் பாராட்டுப் பத்திரங்கள், கேடயங்கள், பதக்கங்கள் வழங்க ஏற்பாடு செய்து எழுத்தாளர் இனத்தை ஒன்றுபடுத்தியிருக்கிருர்!

இவர் எப்பணி ஏற்றுக்கொண்டாலும், பிறர் தம் பொறுப்பைக் கை விட்டாலும், எல்லாம் தாமே எற்று, பிறர் அறியாமல் தம் கைப் பணத்தையும் செலவு செய்து செம்மையாக நடத்தி வைப்பார். இது இவருடைய போக்கு!

அரசியல் கட்சிகளில் சேராமல் குழந்தை நலனையும், எழுத்தாளர் நலனையுமே குறிக்கோளாகக்கொண்டு தொடர்ந்து பணியாற்றி வருகிருர். எங்காவது எழுத்தாளர்களுக்கிடையே வேண்டாத போட்டியோ பூசலோ இருக்குமாயின் இவர் இன்சொலால் புன்னகையால் அமைதியை நிலை பெறச் செய்துவிடுவார்.

தன்னை மறந்து அளவுக்கு மீறி ஓயாது உழைத்ததால் இடையில் எல்லோரது கவலைக்கும் இடமளிக்கும் வகையில் உடல் நலம் குன்றிப் பிறகு ஆண்டவன் அருளால் உடல் நலம் பெற்றது மற்றவர் செய்த புண்ணியமாகும்.

இவருடைய திறனை அறிந்து மாநில அரசும், மத்திய அரசும், பரிசளித்துப் பாராட்டியிருக்கின்றன. டில்லியிலும், கடல் கடந்தும் புத்தகக் கண்காட்சிகளை அமைத்துப் புகழ் பெற்றிருக்கின்ருர். இந்தப் பெருமைகளுக்கெல்லாம் மேலாகப் பட்டிதொட்டிகளிலும் இவர் பாடலைக் குழந்தைகள் தாமே பாடிக் களிப்பதே இவர்க்குரிய அழியாப் புகழ் ஆகும்.

இன்று வெள்ளிவிழாக் கொண்டாடும்பொழுது இவருக்கு உறு துணையாக இருந்துவரும் இவருடைய மனைவியாருடைய பங்கையும் பாராட்ட வேண்டும். அவ்வப்பொழுது கூடும் கூட்டங்களுக்கு வந்த குழந்தை முதல் முதியோர் வரை அம்மையார் இன்முகத்துடனும் அடக்கத்துடனும் வரவேற்பார்கள். உறவினர் போல் பாசமுடன் நடந்து கொள்வார்கள்! அவருடைய மக்களும் தாயைப் போல சேலைதாம். இவ்வாறு விருந்தோம்பல் இவர் குடும்பப் பண்பாகும்.

இவர் வங்கித் தொழிலோடு இவ்வளவும் சாதிப்பதென்றால் இவரிடம் ஓர் இரகசியம் இருத்தல் வேண்டும் ; தனிச்சக்தி இருத்தல் வேண்டும். அதுதான் என்ன? குழந்தைகளிடம் தனி அன்பு, எழுத்தாளர்களிடம் தனிப் பரிவு, பதிப்பாசிரியரிடம் மதிப்பு, தாய்மொழியிடம் தனிக் காதல், கற்றறிந்தோரிடம் பணிவும் அடக்கமும், தன்னம்பிக்கை, ஆண்டவனிடம் பக்தி.

இவருக்கு ஓர் இரகசியம் கூற விரும்புகிறேன். மற்றவர் செவி சாய்க்க வேண்டா—நம் இலக்கியத்தில் திருப்புகழ், காவடிச்சிந்து போன்றவற்றில் பலப்பல சந்தங்கள் குவிந்து கிடக்கின்றன. அவைகளையும் குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்ளும் பாடல்களில் அமைத்துத் தந்தால் எதிர்கால இலக்கியத்தைக் குழந்தைகள் சுவைக்கத் தூண்டுகோலாக இருக்கும். மற்றொன்று, 'நான் கண்ட எழுத்தாளர்' என்ற நூலை எழுதினால் அது தமிழ் நாட்டு வரலாற்று நூலாகும்.

இவர் இலக்கியத் தொண்டினை இன்று வெள்ளிவிழாவாகக் கொண்டாடுகிறோம். ஆண்டவன் அருளால் பொன்விழாவும் கொண்டாடுவோம். நூற்றாண்டுவிழாவும் கொண்டாடுவோமாக !

வாழ்க வள்ளியப்பா

ஆர்வி

(ஆசிரியர், 'கண்ணன்')

எந்த ஆண்டு என்று எனக்குச் சரியாக ஞாபகமில்லை. இருபது ஆண்டுகளுக்குமேல் இருக்கலாம். வேப்பேரி முத்தையா செட்டியார் பள்ளியில் ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்கப் பள்ளியில் அழைத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில்தான் நான் முதன் முதலாக நண்பர் திரு. அழ. வள்ளியப்பாவைச் சந்தித்தேன். அன்று அவரும் ஒரு பேச்சாளர். அதற்கு முன்பே அவரைப் பற்றி நான் சில நண்பர்கள் மூலமாகக் கேள்விப்பட்டிருந்தேன். அவருடைய குழந்தைப் பாடல்கள் சிலவற்றையும் படித்திருந்தேன். சிரித்த முகமும், சிறிது கூச்சமும் கொண்டவராக அவர் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

இருவரும் அறிமுகமான மகிழ்ச்சியில் கூட்டத்தைக்கூட மறந்து விட்டுப் பேசிக்கொண்டிருந்தோம்.

எங்களுக்குள் ஓர் ஒற்றுமை இருப்பதைக் கண்டேன். மேடையில் ஏறிப் பேசுகிற பழக்கம் எனக்கு அவ்வளவாக இல்லை. அவரும் கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இருந்தார்.

ஒரு கவிஞர் அல்லது எழுத்தாளர் என்ருல் மேடையில் ஏறிப் பொழிந்து தள்ளினுல்தான் இந்தக் காலத்தில் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நிலை கிட்டத்தட்ட வந்திருக்கிறது.

ஓர் எழுத்தாளரோ, கவிஞரோ 'எதற்காக மேடையேறிப் பேச வேண்டும்' என்று எனக்கு இன்னமும் சரியாக விளங்கவில்லை. இது போகட்டும். பொதுமக்களும் மேடையேறிப் பேசுகிற ஆற்றலை அவர்களிடம் எதிர்பார்க்கிருர்கள். மேடைப்பேச்சு என்பது ஒரு தனிக் கலை. விஷயமில்லாமல் சொற்களை அடுக்கிப் பொழிவதெல்லாம் சொற்பொழிவாகிவிடாது. தட்டுத் தடங்கல் இல்லாமல் எதையோ பேசிவிட்டு, கைதட்டல் வாங்கிக்கொண்டு போகிற சாதுரியம் சிறந்த பேச்சாகிவிடாது. இந்த வரிசையில் எனக்கும் இடமில்லை; திரு. வள்ளியப்பாவுக்கும் இடமில்லை என்பதைக் கண்டேன். அதுவே என் மனத்தில் அந்தச் சந்திப்பு நன்ருகப் பதிந்திருக்கக் காரணமாக இருந்ததோ என்றுகூட எண்ணிப் பார்க்கிறேன்.

ஆனுல், அவரிடம் குழந்தைகளிடம் உள்ள அக்கறையையும் அன்பையும் என்னுல் காண முடிந்தது. குழந்தையுள்ளமும் கவிதையுள்ளமும் உண்மை அழகைத்தான் காண்கின்றன. வெளிப்பகட்டுக்கு அவை மசிந்துவிடுவதில்லை.

எதிர்காலக் குடிமக்களாக விளங்கப்போகும் இன்றைய குழந்தைகளுடைய உள்ளத்தில் அழகையும் உண்மை பொதிந்த பண்புகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும் என்ற வேகம் அவரிடம் முனைந்து நிற்பதைக் கண்டேன்.

அது முதல் அடிக்கடி என்று இல்லாவிட்டாலும் அவ்வப்போது எங்களிடையே பழக்கமும் தொடர்பும் இருந்து வந்திருக்கின்றன. குழந்தைகளுக்காக மட்டுமல்ல, அவர்களுக்கு என்று எழுதுகிறவர்களுக்காகவும் சிறப்பான தொண்டு ஆற்றுகிற அவருடைய முயற்சிகள் விரிவடைந்து வந்திருப்பதை நான் தெரிந்துகொண்டு வந்திருக்கிறேன். குழந்தைகள் எதை விரும்புகிருர்கள் என்று அவர்களுக்கு அவர் எதையும் வழங்கத் துணியவில்லை. எதை விரும்பவேண்டும் என்கிற துணிவோடுதான் அவர் கவிதைகளையும் கட்டுரைகளையும் சிறுசிறு கதைகளையும் எழுதி வழங்கியிருக்கிருர். அதே போல, குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவி, குழந்தை இலக்கியம் நல்ல முறையில் வளரவும் தழைக்கவும் வேண்டிய சூழ்நிலையை அவர் உருவாக்கி வந்தார். குழந்தை எழுத்தாளர்களின் பணி சிறக்கவும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும் பொதுமக்களுடைய கவனத்துக்கு அவர்களை அறிமுகப்படுத்தவும் வேண்டிய பணிகளை அவர் சிறப்பாக மேற்கொண்டார்.

அவர் கவியுள்ளம் படைத்தவர்; அழகிய இதயம் படைத்தவர். கவிகளையும் கவிஞர்களையும் போற்றுகிற நெஞ்சம் கொண்டவர். எழுத்துத் துறையிலுள்ளவர்களை மதிக்கவும் அவர்களைப் பெருமைப்படுத்தவும் தெரிந்தவர்.

அவருடைய பாடல்களில் தெய்வ மணமும் தேச பக்தி மணமும் கமழ்கின்றன. எளிய சொற்களால் குழந்தையுள்ளத்தைக் கவர்ந்து விடுகிறார். பின்னாளில் பரிமளிக்க வேண்டிய பண்புகளை அந்தப் பிஞ்சுள்ளத்தில் வித்தாகப் பதிக்கிற மாயசக்தி அவருடைய தீஞ்சொற் பாடல்களில் பொதிந்து கிடக்கிறது. இது வெறும் புகழ்ச்சியல்ல. சிறு வயதில் அவர் பாடல்களைப் படித்திருந்த ஒருவர் அவற்றை வயதான பிறகு சொல்லிக்காட்டி ரசித்ததை நான் நேரில் பார்த்துவிட்டுத்தான் இதைக் கூறுகிறேன். பாடல்களின் கருத்து அவர் நெஞ்சில் எத்தனை ஆழமாகப் புதைந்து பக்குவமாக வளர்ந்து பரிமளித்து நிற்கிறது என்பதை நான் கண்டிருக்கிறேன். அவர் தேர்ந்தெடுக்கும் பொருள் அத்தகையது. அவருடைய கவி திருஷ்டிக்கு வேண்டாத, அவசிய மில்லாத நிகழ்ச்சிகள் தாமாகவே விலகிவிடுகின்றன. எதையும் சுவை யோடு தருகிற பக்குவம் அவருடைய சொற்கள் பெற்றிருக்கின்றன. பெரிய புலவர் ஒருவருடைய யாப்பிலக்கணப் பாடல்களை முதலில் பாடிப் பார்ப்பதே கடினம். பல் உடைபடுவது போலச் சந்தம் அமைக்கப்பட்டு, படாடோபமாக இருக்கும். அப்புறம் கருத்து - அந்தக் கலம் அநேகமாகக் காலியாகத்தான் இருக்கும். வெறும் சொற்களை அடுக்கிக் கட்டடமாகக் கட்டிவிட்டால் கவிதையாகிவிடுமா? எதுகை மோனை முறியாமல் பாடுகிற பல கவிகளுடைய லட்சணம் இப்படித்தான் உயிரற்ற சடலத் துக்கு அலங்காரம் செய்து வைத்தது போல் இருக்கும்.

பாடலின் கருத்தும், கருத்துச் சுட்டுகிற உண்மையும், உண்மையின் அழகும் இனிய சந்தத்தோடு சேர்ந்து எளிய முறையில் பாடவும் நெஞ்சில் பதியவும் வைக்கிற குழந்தைப் பாடல்களுக்கு ஒரு தனி அருள் பெற்றிருக்க வேண்டும். அந்த அருளை நிரம்பப் பெற்றிருப்பவர் அழ. வள்ளியப்பா. பாடல்களின் அழகும், கருத்து அழகும் அவற்றைப் பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைக்கிற அழகும் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்றன. அவருடைய பெயருக்கு முன்னால் இருக்கிற அழ. என்ற சுருக்கம் அழகு அல்லது அழகிய என்று இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று கூறுவேன்.

நண்பர் வள்ளியப்பா ஆற்றல் மிகுந்தவர்; பழகுவதற்கு இனியவர்; உதவுவதற்கு ஓடி வருகிறவர். எழுத்தாளர்களுக்கு மகாநாடு நடத்துவதி லும் நிதி சேர்ப்பதிலும் ஈடுபாடு உள்ளவர். எதையும் முறையாக, அழகாக, பிறர் மனம் புண்ணாகாதவாறு நடத்துகிற பண்பு மிக்கவர். இவை எல்லாவற்றைக்காட்டிலும் அவர் தமிழ்க் குழந்தைகளின் நெஞ்சங் களில் மறக்க முடியாத இடம்பெற்றிருப்பது ஒன்றுதான் அவர் அரசாங்கப் பரிசு பெற்ற அனைத்தையும்விட பெரிய பரிசிலாகும். அதுதான் அவர் பெயரைக் கவிஞர்கள் வரிசையில் நிலைக்க வைக்கும். அவர் இன்று தோன்றி, நாளை இருக்கிற இடம் தெரியாமல் மறைந்துவிடுகிற கவிஞர் வரிசையைச் சேரவில்லை. அவருடைய அழகிய பாடல்களை இளம்

நெஞ்சங்களில் எழுதியிருப்பதால், என்றும் புகழோடு, மணத்தோடு விளங்குகின்ற கவிஞர் குழாமைச் சேர்ந்தவர் அவர். அவர் மேலும் பல காலம் வாழ்ந்து இன்னும் இன்னும் கனிவையும் செறிவையும் வாரிக் குழந்தைக் குலத்துக்கு வழங்கிக்கொண்டிருக்க வேண்டும்.

குழந்தை இலக்கிய உலகில் ஒரு விடிவெள்ளி

புலவர் தணிகை உலகநாதன்
(தலைவர், சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவை)

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் நாடறிந்த ஒரு பூஞ்சோலை. ஆயிரம் ஆயிரமான மழலைச் செல்வங்களின் மனக்கோயிலில் என்றும் நீங்கா இடம் கொண்ட தலை சிறந்த குழந்தை எழுத்தாளர். அவர்தம் குழந்தைக் கவிதைகள் இலக்கியச் சோலையில் என்றும் வாடா நறுமலர்கள். குழந்தை இலக்கிய உலகில் அவர் ஒரு விடிவெள்ளி.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக நான் குழந்தைக் கவிஞருடன் பழகும் பேறு பெற்றுள்ளேன். அவர்தம் நட்பு 'நவில்தொறும் நூல் நயம் போல' இனிக்கும் தன்மையுடையது. 'பூஞ்சோலை' என்னும் அரிய குழந்தை இலக்கிய இதழை அவர் தொடங்கி நடத்திய போதுதான் முதன் முதலாகச் சந்தித்தேன்.

பூஞ்சோலை வாயிலாகத்தான் என்னையும் ஒரு குழந்தை எழுத்தாளனாகக் கவிஞர் அவர்கள் தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்வித்தார். கதைகள் வாயிலாகத் தமிழைப் பிழையில்லாமல் எழுதும் வாய்ப்பினை எனக்கு அளித்தார். பூஞ்சோலை ஏடெல்லாம் தித்திக்கும் திங்கள் இதழாக மழலையர் உலகில் பவனி வந்தது. அதன் வெற்றிக்கு அவர் மேற்கொண்ட அரிய முயற்சிகளையும் உழைத்த உழைப்பையும் நினைக்க நினைக்க இன்றும் என் நெஞ்சம் உருகும் ; கண்ணீர் பெருகும்.

பிஞ்சு நெஞ்சங்களைக் கெடுக்கும் துப்பறியும் கதைகளையும் துப்பாக்கிக் கதைகளையும் திரைப்பட விளம்பரங்களையும் தமது இதழில் வெளியிட மறுத்து, அக்கொள்கையில் வெற்றிமாலை சூடிய வீரர் நம் குழந்தைக் கவிஞர். அந்தக் காலத்தில் குழந்தைகளுக்காக எழுதுபவர் சிலர் ; மிகச் சிலர். அன்று முதலே குழந்தைகளுக்கு எழுதுவதைத் தமது இலட்சியமாகக் கொண்டவர் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள்.

சென்னையில் குழந்தை எழுத்தாளர் சங்கம் தோன்றுவதற்கு மூலையாக இருந்தவர் அவரே. குழந்தை எழுத்தாளர் சங்கம் தமிழகத்தில்

ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது; நாட்டின் மூலைமுடுக்குகளிலிருந் தெல்லாம் நல்ல பல குழந்தை எழுத்தாளர்கள் தோன்றுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது. சுருக்கமாகக் கூறினால் குழந்தை எழுத்தாளர் சங்கமே திரு. வள்ளியப்பா என்றுதான் சொல்லவேண்டும். சங்கம் குழந்தை எழுத்தாளரின் உற்பத்திச்சாலையாக இன்று விளங்கு வதற்குக் காரணமாக விளங்குபவர் நம் வள்ளியப்பா அவர்களே ஆவார்கள்.

குழந்தைக் கவிஞரின் நட்பு நாளடைவில் எங்கள் குடும்ப நட்பாக மாறியது. அவர் எங்கள் வீட்டுக்கு வரும்போது குழந்தைகள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இராது. அவர் முன்னிலையில் அவர்தம் பாடல்களைப் பாடி ஆடுவார்கள். அவர் வந்து சென்ற நேரம் சிறிது நேரமானாலும் அன்றெல்லாம் எங்கள் வீட்டுக் குழந்தைகளுக்குத் தனியான இன்பத் திருநாளாகத்தான் இருக்கும்.

விருந்து போற்றுவதில் அவருக்கு இணை அவரேதான். நான் அவர் தம் வீட்டுக்குப் போகும்போதெல்லாம் அவர்தம் அருமைத் துணைவியார் திருமதி வள்ளியம்மை அவர்கள் இனிய சிற்றுண்டிகள் படைப்பார்; அவை யாவும் விடுதியிலிருந்து வாங்கி வந்தவையாக இரா; வீட்டிலேயே செய்தவை. அவற்றை உண்டவர் கையும் மணக்கும்; வாயும் மணக்கும். பேர் சொன்னால் நாவில் நீர் சுரக்கும். இப்படி அவர் குடும்பத்தினர் செய்யும் உபசாரத்தைக் கண்டு, 'இவர்கள் என்ன, தின்பண்டச் சுரங்கம் வைத்திருக்கிறார்களோ, கா:ஃபிக் கிணறு தோண்டி இருக்கிறார்களோ!' என அடிக்கடி நான் பிற நண்பர்களிடம் கூறுவதுண்டு.

கவிஞர் வள்ளியப்பா அவர்கள் தாம் வெளியிடும் நூல்களில் அச்சுப் பிழையோ, இலக்கணப் பிழையோ, கருத்துப் பிழையோ, ஒரு சிறிதும் உண்டாகக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்துபவர். தாம் எழுதும் நூல்களைக் கையெழுத்துப் படியாக இருக்கும்போதே நண்பர்கள் பலரிடமும் காட்டி - ஏன்? குழந்தைகளுக்கும் படித்துக் காட்டி - வேண்டிய திருத்தங்களைச் செய்துகொள்வார்.

அண்மையில், பாட நூலாசிரியர் பலர் எழுதிய துணைப்பாட நூல் களில் தமிழ் நாடு பாடப்புத்தகக் குழுவினரால் திருத்தங்கள் பல சுட்டிக் காட்டப்பட்டன. ஆனால், நம் வள்ளியப்பா அவர்கள் எழுதிய 6,7,8 வகுப்பு களுக்கான 'பிள்ளைப் பருவத்திலே', 'மணிக்கு மணி', 'கதை சொன்னவர் கதை' என்னும் துணைப்பாட நூல்களில் எத்தகைய திருத்தமும் குறிப்பிடப்படாமல் செம்மையானவை என ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சியே இதற்குத் தக்க சான்று.

குழந்தைகளுக்காகப் பழங்காலத்தில் எழுதிய முதுபெரும் புலவர்கள் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார், மணி திருநாவுக்கரசர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து ஆகியோர் பரம்பரை விளங்கப் பாடுபடுபவர் அழ. வள்ளியப்பா அவர்கள்.

'மலரும் உள்ளம்', வளரும் செல்வங்களாக இருபதாம் நூற்றுண்டில் மலர்ந்த ஒரு பொன்மலர். அவர்தம் கவிதைகள் எல்லாம் குழந்தைகளின் உள்ளத்துக்கு மட்டுமன்று; உயிருக்கும் உரமூட்டுபவை. குழந்தை உலகில் அவர் ஒரு தாகூர் ; ஒரு பாரதி ; ஒரு ஷெல்லி ; ஓர் ஆண்டர்சன் ; ஒரு காந்தி.

என் தலைமையில் நடக்கும் குருவிக் குடில் சிறுவர் மன்ற நூல் நிலையத்தில் சில புத்தகங்கள் காணுமல் போய்விட்டன என்றால், அவை வள்ளியப்பாவின் புத்தகங்களாகத்தான் இருக்கும். அதற்காகவே வள்ளியப்பாவின் புத்தகங்களில் ஒவ்வொன்றும் இரண்டு மூன்று பிரதிகளாக வாங்கி வைத்துக்கொள்வது வழக்கம். ''மணிக்கு மணி' என்னும் உருக்கமான கதையை என் குழந்தை பாவை இதுவரை பத்துத் தடவை படித்திருக்கிருள். "படித்ததையே ஏன் படிக்கிருய் ?" என்று கேட்டால் "ஆயிரம் முறை படிப்பேன் ! கதை அவ்வளவு சுவையாக இருக்கிறது !" என்கிருள்.

குழந்தைக் கவிஞர் ஒரு தொண்டுச் செல்வர். சங்கச் சார்பில் நடக்கும் புத்தகக் காட்சிகள், சிறப்புக் கூட்டங்கள், ஆண்டுவிழாக்கள், மாநாடுகள் ஆகியவற்றில் கொடிகள் கட்டுதல், அஞ்சல் அனுப்புதல், மேடை அமைத்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றியதை நேரில் கண்டது ஒரு முறையன்று; பல முறை. இந்தப் பணிகளில் இவர்தம் மக்களையும் ஈடுபடுத்திக்கொள்வதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்.

திரு. வள்ளியப்பா அவர்கள் அன்பே உருவமானவர் ; அடக்கத்தின் இருப்பிடமானவர் ; தன்முனைப்பு அற்றவர் ; பொன்மனம் படைத்தவர் ; சிறந்த செயல் வீரர் ; ஆட்சித்திறன் மிக்கவர் ; எந்தச் சிக்கலையும் எளிதில் தீர்க்க வல்ல நுண்ணறிவு வாய்ந்தவர் ; சிறந்த ஒப்புரவாளர். அவர்தம் தலைமையில் இன்று குழந்தை எழுத்தாளர் சங்கம் பெருமித நடையிட்டுச் செல்கிறது. அவர்தம் தலைமையில் சங்கம் மேலும் பல முன்னேற்றங்களைக் காணவேண்டுமென விழைகிறேன்.

திரு. வள்ளியப்பா அவர்களின் பெயரைக் குறிப்பிடும்போதெல்லாம் எங்கள் குழந்தைகள் வாய் தவறி, **வெள்ளியப்பா** என்றும் சில சமயங்களில் கூறிச் சிரிப்பார்கள். ஆனால் அவர்கள் வாய்ச்சொல் தவறவில்லை. வள்ளியப்பா அவர்களின் குழந்தை இலக்கியப் பணி—**வெள்ளிவிழா** இன்று நடைபெறுகிறது. வள்ளியப்பா—வெள்ளியப்பாவானார் ; இனி, 'தங்க அப்பா' ஆகி அவர்தம் குழந்தை இலக்கியப்பணி—பொன்விழாவும்; 'மணியப்பா'வாகி மணிவிழாவும் கண்டு இனிது வாழ்க ! வளர்க! வெல்க! விளங்குக ! என அகம் குளிர—முகம் மலர வாழ்த்துகின்றேன்.

எழுத்தாளரை உருவாக்கிய எழுத்தாளர்

பூவண்ணன்
(துணைத்தலைவர், குழந்தை எழுத்தாளர் சங்கம்)

என் வாழ்க்கையில் 1949-ஆம் ஆண்டு போற்றத்தக்க ஆண்டு ! பொன்னான ஆண்டு ! அந்த ஆண்டின் சிறப்பு என்ன ? அந்த ஆண்டில்தான் நான் முதன்முதலாகக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவைக் கண்டேன்.

அதற்கு முன் அவர் எழுதிய பாடல்களைப் பத்திரிகைகளில் படித்திருந்தேன். அவர் சென்னையிலிருக்கிறார் என்பதை அறியவில்லை. அதை அறிந்தபோது மிக ஆனந்தத்துடன் என் நண்பர் ஜெ. எத்திராஜனுடன் அவரைக் காணச் சென்றேன். சென்னை சூளையிலிருந்து, ராயபுரத்தைத் தொட்டு நிற்கும் லிங்கிச் செட்டித் தெருவின் முனைக்கு நடந்து சென்றேன். நடந்ததால் வந்த துன்பம், அவரைக் கண்டதால் இன்பமாக மாறியது.

மலர்ந்த முகத்தோடு சின்னஞ் சிறுவர்களாகிய எங்களை வரவேற்று உட்கார வைத்தார். அதே நேரத்தில் அவர் என் இதயத்திலே உட்கார்ந்து கொண்டார். இன்றும் அங்கேயே இருக்கிறார் ; என்றும் அங்கேயே இருப்பார்.

வள்ளியப்பாவைக் கண்ட போது நான் ஒரு கரித்துண்டு. என்னை வைரமாக்கிப் பட்டைதீட்டி உன்னத நிலைக்கு உயர்த்தியவர் அவரே. அன்றுமுதல் அவர் என் எழுத்துலகக் குருவானார் ; நான் அவருக்கு ஏற்ற, அவருக்குப் பிடித்த மாணவனானேன்.

குழந்தைகளுக்கு எழுவது அரிய கலை ; அற்புதமான கலை. இந்தக் கலையை எனக்குக் கற்றுத் தந்தவர் வள்ளியப்பா ; புகழ் பெற்றுத் தந்தவர் வள்ளியப்பா. என் முதல் சிறுகதை, முதல் தொடர்கதை, முதல் புத்தகம், முதல் நாடகம்—யாவும் அவர் தந்த ஆதரவாலும் அறிவுரையாலும் பிறந்தவை. என் கதைகளைப் பற்றி மற்றவர்களிடம் அவர் எப்படிப் புகழ்ந்துள்ளார் என்பதை அறிந்தபோது அதிசயித்தேன். என் கதைகளைப் பலருக்கு அவரே படித்துக் காட்டிப் பூரிப்படைவார் ; என் கதைகளை மட்டுமா, நல்ல கதைகளைக் கண்டால், அவை யார் எழுதியவையாக இருந்தாலும் இப்படித்தான் பலருக்கும் படித்துக் காட்டுவார்.

அவர் குழந்தை இலக்கியத்திற்குப் பெரும் மதிப்பைப் பெற்றுத் தந்தவர். எழுத்தால் மட்டுமல்லாமல் உழைப்பாலும் பெற்றுத் தந்தவர். ஆம், வள்ளியப்பா பொதுப்பணி புரிய என்றுமே தயங்கியதில்லை. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பல நிகழ்ச்சிகளைத் தனி ஒருவராக நின்றே வெற்றிகரமாக நடத்திக் காட்டியுள்ளார்.

தமிழகத்தின் முதல் குழந்தைப் புத்தகக் காட்சியை நடத்தியவர் அவர்; முதல் சிறுவர் நாடக விழாவை நடத்தியவர் அவர்; குழந்தைகள் தினத்தை இலக்கிய விழாவாக மாற்றியவர் அவர்; தமிழில் முதல் 'எழுத்தாளர் யார் - எவர்' நூலை வெளியிட்டவர் அவர். இவற்றிற்கெல்லாம் சிகரமாக உலகத்திலேயே முதல் முதலாகக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கியவர் அவர்.

குழந்தை எழுத்தாளர்களில் சிலருக்கு எப்படியோ ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டிருந்தது. பெரியவர்களுக்கு எழுதுவோரைப் பார்க்கும்போது தாம் சிறப்பில் குறைந்தவர்கள் என்று எண்ணியதுண்டு. அதனாலேயே தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராவதற்குக்கூடத் தயங்கியதுண்டு. இந்தத் தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிந்தவர் வள்ளியப்பா. அவர் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் சேர்ந்தார். பிற குழந்தை எழுத்தாளர்களைச் சேரச் செய்தார். அவர்கள் அச்சங்கத்தின் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்கச் செய்தார். அவரே அச் சங்கத்தின் தலைவரானார். உலகத்தின் எந்தக் குழந்தை எழுத்தாளருக்கும் கிடைத்திராத சிறப்பு இது. வள்ளியப்பா எந்தச் சங்கத்தில் இருந்தாலும் சரி, அவரால் சங்கத்திற்குப் பலன் இருக்கும். சங்கத்தால் பலன் பெறும் நோக்கம் அவரிடம் அணுவளவும் கிடையாது.

வள்ளியப்பா குழந்தை எழுத்தாளர்களை உண்டாக்கினார்; உற்சாகப்படுத்தினார்; உயர்த்தினார். குழந்தை எழுத்தாளரில் பலருக்கு அறிவுரை மட்டுமல்லாமல் பொருளுதவியும் செய்துள்ளார். சிலர் அவரிடம் பொருளுதவி என்று கேட்டே பெற்றதுண்டு; சிலர் கடன் என்ற பெயரில் பெற்றுக்கொண்டு அதைப் பின்னர்ப் பொருளுதவியாக மாற்றிக் கொண்டதுண்டு. குழந்தை எழுத்தாளர்களில் சிலர் அவர் வீட்டிலே பலநாள் தங்கி உணவு உண்டு வந்ததையும் நான் கண்டிருக்கிறேன். வள்ளியப்பாவின் இந்தப் பரந்த உள்ளத்தை எண்ணும் போது, அதற்கு என்றும் துணைநிற்கும் அவர்தம் துணைவியாரின் அன்பு உள்ளத்தை யாரும் மறக்கமுடியாது. வள்ளியப்பாவைப் போலவே அந்த அம்மையாரும் எப்போதும் புன்சிரிப்போடு காட்சிதந்து மற்றவர்களை உவகையோடு உபசரிப்பார். வள்ளியப்பாவின் குழந்தை இலக்கியப்பணி குறைவற நடைபெற அம்மையார் பெரிதும் துணை செய்துள்ளார். குழந்தை இலக்கியம் வள்ளியப்பாவுக்குப் பேரளவு கடமைப்பட்டுள்ளதென்றால், அவர் துணைவியாருக்கு ஓரளவாவது கடமைப்பட்டுள்ளது.

வள்ளியப்பாவிடம் உதவி பெற, அவரை அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. முன் பின் அறியாதவர்க்கும் அவர் உதவுவார்; தம் கருத்துக்கு முரணான கொள்கையாளர்க்கும் உதவுவார். அதனால் தான் வள்ளியப்பாவை 'அவர் வள்ளலப்பா' என்று பலரும் புகழ்கின்றனர்.

வள்ளியப்பாவுக்கு, அவர் புத்தகம் ஒவ்வொன்றும் ஒரு குழந்தை போல. அவர்தம் புத்தகம் தயாரிப்பதை அருகே இருந்து பார்ப்பவர்கள் திகைத்துப் போவார்கள். சுமார் நாற்பது புத்தகங்கள் வெளியிட்ட பிறகு, இன்றும் முதல் புத்தகத்தை உருவாக்குவது போன்ற ஆர்வத்தோடும் அக்கறையோடும் தம் புத்தகத்தை வெளியிடுவார். தம் நூலில் ஒரு சிறு குறையும் இருக்கக்கூடாது என்பது அவர் கொள்கை.

எழுத்தாளர்கள் பலரை உருவாக்கிய வள்ளியப்பா ஓவியர்கள் சிலரையும் உண்டாக்கினுர். ஒழுங்காகப் படம் வரையத் தெரியாது, பல படங்களை வெட்டியும் ஒட்டியும் ஓவியராகத் திகழ்ந்த சிலரை வள்ளியப்பா தலைசிறந்த ஓவியராக மாற்றியுள்ளார்.

ஒரு பத்திரிகை நடத்துவது எவ்வளவு சிரமம் என்பது எல்லார்க்கும் தெரியும். 'பாலர் மலர்' என்னும் மாதம் இருமுறை இதழ், 'டமாரம்' என்னும் வார இதழ், 'சங்கு' என்னும் வாரத்திற்கு இருமுறை வெளிவரும் இதழ்—ஆக மூன்று பத்திரிகைகள் ஒரே நேரத்தில் வள்ளியப்பாவின் பொறுப்பில் உருவாகி வெளிவந்தன. பத்திரிகைகள் மூன்றும் அச்சாவது புதுக்கோட்டையில்! அவற்றிற்கான எழுத்தோவியம், பிளாக் முதலியவற்றை வள்ளியப்பா காலக்கெடு தவருமல் சென்னையிலிருந்து அனுப்பிவைப்பார். மூன்று பத்திரிகைகளும் தாமதம் இன்றி வந்தன! தரமாக வந்தன! இது வள்ளியப்பாவின் இமாலயச் சாதனை!

வள்ளியப்பாவுக்கு உயிர், உணர்வு, உணவு—யாவும் குழந்தை இலக்கியமே என்று கூறினுல், அது மிகையாகாது.

வள்ளியப்பா தம்மையும் வளர்த்து, பிறரையும் வளர்த்த தலைவர் வரிசையைச் சேர்ந்தவர். அவர் என் குரு என்று கூறிக்கொள்வதில் பெருமையும் பெருமகிழ்வும் அடைகிறேன்.

இலக்கியப் பணியில் வெள்ளி விழா கொண்டாடும் வள்ளியப்பாவின் குணம் தங்கம்! உளம் வைரம்! நூல்கள் மரகதம், மாணிக்கம், வைடூர்யம்!

என்னை வாழவைத்த தெய்வம்

கே. கண்ணுசாமி

'கவிமணி' என்றுல் தேசிக விநாயகம்பிள்ளை!
'தமிழ்த் தென்றல்' என்றுல் திரு. வி. க.!
'தேசிய கவி' என்றுல் சுப்பிரமணிய பாரதி!

'புரட்சிக் கவி' என்றால் பாரதிதாசன் !

'பெரியார்' என்றால் ஈ. வெ. ரா. !

'அறிஞர்' என்றால் அண்ணா !

அதேபோல் **'குழந்தைக் கவிஞர்'** என்றால் உயர்திரு அழ. வள்ளியப்பா அவர்கள் என்று முதல் வகுப்பில் "வட்டமான தட்டு ; தட்டு நிறைய லட்டு" என்று பாடும் குழந்தைகூடக் கூறிவிடும் !

இருபத்தைந்து ஆண்டுகளாகக் குழந்தை இலக்கியம் வளரப் பாடு பட்டு வரும் குழந்தைக் கவிஞர் அவர்களை 13 - 4 - 50 அன்றுதான் நான் சந்தித்தேன், குழந்தை எழுத்தாளர் சங்க ஆரம்ப விழாவுக்குத் தூத்துக் குடியிலிருந்து வந்த மாணவ எழுத்தாளனை என்னை மகிழ்வோடு வரவேற்ற குழந்தைக் கவிஞரின் அன்புக்கு அடிமையானேன். அன்று முதல் இன்றுவரை நான் குழந்தைக் கவிஞர் அவர்களை என் சொந்தத் தமையனாராகவும், குருநாதராகவும் மதித்து வருகிறேன். ஏன் ? என்னை வாழவைத்த தெய்வமே அவர்கள்தாம் !

குழந்தை எழுத்தாளர் சங்க ஆரம்ப விழாவுக்குப் பிறகு தூத்துக்குடி திரும்பிய என் வாழ்க்கையிலே பெரிய பூகம்பமே ஏற்பட்டுவிட்டது. மூன்று வயதிலேயே தாயைப் பறிகொடுத்துவிட்டு மாற்றாந்தாய்க் கொடுமையிலே சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தேன். எல்லா வசதியும் உள்ள குடும்பத்தில் பிறந்தும் எல்லாவித இன்னலும் அடைந்தேன். என் சிற்றன்னையின் சொற்படி இயங்கிவந்த என் தந்தை என்னை வீட்டை விட்டே விரட்டி விட்டார்.

தற்கொலை செய்துகொள்ள நினைத்துக் கடற்கரைக்கு ஓடினேன். மனம் மாறியது. என் நண்பர் மீளவிட்டான் நடராஜனின் உதவியுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தேன், அண்ணா அழ. வள்ளியப்பா அவர்களிடம். நிராதரவான நிலையிலே அதிகாலையில் ரயிலை விட்டு இறங்கி டிராமில் சென்று லிங்கிசெட்டித் தெருவிலுள்ள வள்ளியப்பா அண்ணா குடி யிருந்த வீட்டின் கதவை நான் தட்டிய நிகழ்ச்சியை நான் என் உயிருள்ள வரை மறக்கமாட்டேன்.

அலைகடல் துரும்பு போலத் தத்தளித்த நிலையிலிருந்த அநாதையான என்னை அன்புத் தெய்வம் வள்ளியப்பா அண்ணா அவர்கள் அன்புடன் வரவேற்று அடைக்கலம் தந்தார்கள். அண்ணா வள்ளியப்பா அவர்களின் அன்புத்துணைவியார் என் வணக்கத்திற்குரிய தெய்வத்தாய் வள்ளியம்மை ஆச்சி அவர்கள் 'தாயினும் சாலப் பரிந்து' உபசரித்து அடியேனுடைய துன்பத்தைப் போக்கினார்கள்.

அப்போது வள்ளியப்பா அண்ணா பாங்கியில் குறைந்த சம்பளமே பெற்று வந்தார்கள். அதுவோ சரியான பஞ்சகாலம். 'ஆறு அவுன்ஸ்' ரேஷன் காலம்! அந்தப் பயங்கரமான நேரத்தில் அவர்கள் 'அந்நியனை' என்னைத் தமது சொந்த உயிராக மதித்துக் காப்பாற்றிய அருஞ்செயலை

என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. அவர்கள் வீட்டுப் பிள்ளையாகவே வளர்ந்தேன்.

இச்சமயம் பெரியார் அவர்களின் விடுதலைப் பத்திரிகைக்கு உதவி ஆசிரியர் தேவை என்று அந்தப் பத்திரிகையில் விளம்பரம் வந்திருந்தது! உடனே விண்ணப்பம் செய்தேன். தந்தை பெரியார் அவர்கள் என்னைப் பேட்டிக்கு அழைத்தார்கள். இடையில் இருந்த இரண்டு நாட்களில் அண்ணா வள்ளியப்பா அவர்கள் 'புரூப்' திருத்தும் முறை பற்றியும் பத்திரிகைத் தொழில் நுணுக்கம் பற்றியும் போதித்து என்னைப் பத்திரிகைத் தொழிலுக்கேற்றவனாகத் தயார்ப்படுத்தி அனுப்பி வைத்தார்கள். 'விடுதலை' அலுவலகத்தில் உடனே எனக்கு வேலை கிடைத்தது. பணியேற்று அந்த மாதச் சம்பளம் வாங்கும் வரை வள்ளியப்பா அண்ணாவின் ஆதரவிலே வாழ்ந்தேன். ஏன்? அதற்குப் பிறகுகூடச் செலவுக்குப் பணம் வேண்டுமென்றால் அண்ணாவிடம் செல்வேன். குறிப்பறிந்து உடனே வாய் திறந்து கேட்காமல் உதவி செய்வார்கள்.

என்னைப் போல் எவ்வளவோ பேருக்கு அவர் தமது 'தகுதிக்கும் மிஞ்சிய' உதவிகள் செய்திருக்கிறார். இது மிகைப்படுத்தப்பட்ட வர்ணனையல்ல. உண்மையான செய்தி.

அவரிடம் உதவிபெற்று உயர்நிலை பெற்றவர்களில் சிலர் 'தீட்டிய மரத்திலேயே பதம் பார்த்தபோது' கூட அது பற்றிக் கலக்கம் அடைந்ததில்லை. அந்த நண்பர்களுக்கே திரும்பவும் உதவிகள் செய்து அவர்கள் துயரைத் துடைத்திருக்கிறார்.

எழுத்தாளரில் பலர் சிறந்த லட்சியங்களை எழுதுவார்கள். ஆனால், எழுதியபடி நடப்பவர் ஒரு சிலரே. அந்த ஒரு சிலருள் குழந்தைக் கவிஞரும் ஒருவராவார்.

கண்ணே பார்க்கும் பார்வையிலே
கருணை பொழிந்திட வேண்டும் நீ

என்று எழுதியதோடு நின்றுவிடவில்லை. அந்தப் பொன்னான கவிதையின் பொழிப்புரையாகவே அவர் திகழ்கிறார். கஷ்டப்படுபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்குக் கைகொடுத்து உதவி செய்யும் கருணை வள்ளல்.

நான் 'விடுதலை'யில் உதவி ஆசிரியராகப் பணியேற்ற சில மாதங்களில் 'பூஞ்சோலை' பத்திரிகை ஆரம்பிக்க ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது. அதற்கு உதவி ஆசிரியராகப் போய்விடலாம் என்று முயற்சி செய்தேன். ஆனால், அதே சமயம் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நண்பர் (தற்போதைய பிரபல திரைப்பட வசனகர்த்தா) முரசொலி சொர்ணத்துக்கு உதவி செய்ய விரும்பிய வள்ளியப்பா அண்ணா அவர்கள் அவருக்கே அந்த வேலையை வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.

"கண்ணுசாமி, நீயோ ஒரு வேலே பார்த்துக்கொண்டிருக்கிருய். அவனே வேலேயில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிருன். ஆகவே அவனுக்குத்தான் அந்த வேலேயைக் கொடுக்கவேண்டும்... பாவம், அவன் ரொம்பக் கஷ்டப்படுகிருன்" என்று எனக்குச் சமாதானம் சொன்னுர்கள்.

'குழந்தை எழுத்தாளர்' என்றுலே கேள்விக்குறியுடன் பார்த்தவர்கள் முகத்திலே ஆச்சரியக் குறி விழவைத்த பெருமை, குழந்தைக் கவிஞர் அவர்களேச் சாரும்.

பகலெல்லாம் பாங்கில் வேலே. மாலேயில் பொதுப்பணி. இரவெல்லாம் எழுத்து. உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் கடுமையாக உழைத்து வரும் குழந்தைக் கவிஞர் தமிழ்த்தாயின் சிறந்த புதல்வர்களுள் ஒருவர் ஆவார். இருபத்தைந்து வருடகாலம் இந்த நாட்டின் இளம் தலேமுறையினரின் இனிய நெஞ்சத்திலே நல்ல நல்ல கருத்துக்களேக் கவிதை மூலம் வளரச்செய்து வரும் குழந்தைக் கவிஞரின் ஆற்றலேப் போற்றிப் புகழுவோமாக !

குழந்தைகள் உள்ளத்தில் குடியிருப்பவர்

நாக முத்தையா

படித்த புத்தகங்களேயெல்லாம் பிடித்த புத்தகங்கள் என்று கூறிவிட முடியாது. பிடித்த புத்தகங்களேயெல்லாம் படித்த புத்தகம் என்று கூறிவிடவும் இயலாது. எனக்குப் பிடித்த புத்தகம் ஒன்று இருந்தது. அதனேப் படித்தது இல்லே; ஆனுல் படிக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் அடக்கவொண்ணுத அளவுக்கு இருந்தது. படிக்காத ஒன்று பிடித்த ஒன்ருக எப்படி இருக்க முடியும் ?

படித்தவர்கள்—அந்தப் புத்தகத்தைப் படித்தவர்கள்—அதனேப் பாராட்டிப் பேசிய வண்ணம் இருந்தனர். எனவே அது எனக்குப் பிடித்த புத்தகமாகத் திகழ்ந்தது.

அது எந்தப் புத்தகம் ?

அதை யார் எழுதினுர்கள் ?

இக்கேள்விகளுக்கு உரிய பதிலேக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளே அவர்களின் வாய்மொழியாகவே அறிந்துகொள்வோம்.

இதுதான் கவிமணியின் வாய்மொழி.

'பாலும் பழமும் ஏனம்மா ?
பசியே இல்லே,' எனக்கூறிச்
சீலச் சிறுவர் சிறுமியர்கள்
சிறந்த 'மலரும் உள்ளம்' இதைக்

காலை மாலை என்றென்றும்
கற்று மகிழச் செய்யும் இந்த்ர
ஜாலக் கவிஞன் வள்ளியப்பன்
தழைத்து வாழ்க வாழ்கவே''

ஆம், அழ. வள்ளியப்பாவின் மலரும் உள்ளம் என்ற புத்தகம்தான் எனக்குப் பிடித்த புத்தகமாக இருந்தது ; பிறகு அதுவே நான் படித்த புத்தகமாகவும் திகழ்ந்துவிட்டது !

புத்தகத்தைப் பல முறை படித்தேன். தோண்டத் தோண்டக் கேணியில் நீர் ஊறும் ; அது போலவே படிக்கப் படிக்கப் புதுப் புதுச் சுவைகளை அப்புத்தகம் அளிக்கலாயிற்று.

'தோலை உரித்த பிறகுதான்
சுளையைத் தின்று பார்க்கலாம்
பாடு பட்ட பிறகுதான்
பலனைக் கண்டு மகிழலாம்,'

பாட்டைப் படித்த பிறகுதான் பழுதில்லா இன்பத்தைப் பெற்று மகிழ முடிந்தது.

'பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியேபோல்
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள்போல்'

மலரும் உள்ளத்தை நான் நாடிச் சென்று பல நல்ல உண்மைகளை உணர்ந்துகொண்டேன்.

இப்படியாகக் கவிதைகளோடு தொடர்புகொண்ட நான் அக்கவிதைகளை யாத்துத் தந்த கவிஞரோடும் தொடர்புகொள்ள விரும்பினேன்.

திரு. அழ. வள்ளியப்பா அவர்களைக் காணச் சென்றேன். கனிவு தோன்ற வரவேற்றார்.

நான் என் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக்கொண்டேன். என்னைத் தெரியும் என்று கூறி என்னோடு பிரியமாகப் பேசினார்.

குழந்தை இலக்கியத்தை வளர்க்கப் பாடுபடுபவர் என்றுதான் நான் அவரைப் பற்றி அறிந்திருந்தேன். ஆனால் அவரோ குழந்தை இலக்கிய எழுத்தாளர்களையும் வளர்க்கப் பாடுபடுபவராகவே எனக்குத் தோன்றினார். அவரால் உருவாக்கப்பட்ட, பெருமைக்குரிய பல குழந்தை எழுத்தாளர்கள் இன்று நம்மிடையே திகழ்ந்து வருவதை நான் அறிவேன்.

திருவிளக்கு ஒன்று பல விளக்குகளை ஏற்றப் பயன்படும் என்பார்கள். அழ. வள்ளியப்பா ஒருவர், பல வள்ளியப்பாக்களை உண்டு பண்ணும் இயக்கத்தைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நடத்தி

வருகிறார். அதனால்தான் அவர் நாட்டு மக்களின் - நல்ல அறிஞர்களின் - போற்றுதலுக்கும் புகழுரைகளுக்கும் பொருந்துமிடமாகத் திகழ்கின்றார்.

அறிமுகப்படுத்திக்கொண்ட பிறகு அவரோடு அடிக்கடி நெருங்கிப் பழக விரும்பினேன். ஒரு முறை அவரோடு போன் மூலம் தொடர்பு கொண்டேன்.

'இன்று இரவு என் வீட்டுக்கு வாருங்கள். நீண்ட நேரம் பேசி மகிழலாம்,' என்றார்.

அழைப்பை ஏற்றுக்கொண்டேன். அந்த இரவு என் வாழ்நாளில் மறக்க முடியாத ஓர் இரவாகும். அப்போது அவர் கூறிய சில செய்திகள் இன்றும் எனக்கு நல்வழி காட்டுவனவாகவும், சிரிக்கச் சிந்திக்க வழிவகுப்பனவாகவும் உள்ளன.

அச்செய்திகளாவன : (1) நம் நாட்டில் பரம்பரை பரம்பரையாக வழங்கும் குழந்தைப் பாடல்களையும் கவிதைகளையும் திரட்டி நல்ல முறையில் படங்களோடு வெளியிட வேண்டும்.

(2) பிற மொழிகளில் சிறந்து விளங்கும் கதை கவிதைகளைத் தமிழில் அழகாக அச்சிட்டுத் தருதல் வேண்டும்.

(3) குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் பாலர் கலைக்களஞ்சியங்கள் வெளி வருதல் வேண்டும்.

(4) குழந்தைகளுக்குப் புரியும்படி எழுதக்கூடிய ஒருவரும், அறிவியல் துறை வல்லுநர் ஒருவரும் சேர்ந்து அறிவியல் துறை நூல்களை அதிக அளவில் உற்பத்தி செய்து தருதல் வேண்டும்.

(5) அரசினர் குழந்தை இலக்கியங்களுக்கும், குழந்தை எழுத்தாளர்களுக்கு ஆதரவும் ஆக்க உதவிகளும் அயராது செய்தல் வேண்டும்.

இப்படியாகப் பற்பல கருத்துக்களை எடுத்துச் சொல்லிய திரு. வள்ளியப்பா வேடிக்கையாக ஒரு செய்தியையும் விவரித்தார்கள்.

'குழந்தைகளுக்காகத் தொடங்கப் பெற்ற சில பத்திரிகைகள் குழந்தைகளுடனேயே வளர்ந்து இன்று வாலிப—வயோதிகப் பத்திரிகைகளாக மாறிவிட்டன. எனவே, இன்று குழந்தைகளுக்காகப் பத்திரிகைகள் இல்லை—மாஜி குழந்தைப் பத்திரிகைகளைத் தவிர !'

இது வேடிக்கையான செய்திதான் என்றாலும், வேதனைக்குரிய நிலைமையை விளக்குவதாகும்.

திரு. வள்ளியப்பா சிறந்த எழுத்தாளர் மட்டுமல்லர் ; நல்ல பேச்சாளருங்கூட ! அலுப்புத் தட்டாமல் பேசுவார் - அருமையான நகைச்சுவைகள் தோன்றவும் பேசுவார்.!

அவர் பல நல்ல திட்டங்களைத் தெரிவித்து உள்ளார். அவற்றுள் ஒன்று 'தேர்தல் குழு' என்பதாகும்.

நல்ல நூல்களைத் தேர்ந்தெடுக்க ஒரு **புத்தகத் தேர்தல் குழு** வேண்டும். குழந்தை உள்ளம் அறிந்தவர்களாகக் குழந்தைகளின் தேவைகளை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும் அக்குழு உறுப்பினர்கள்.

இப்படிப்பட்ட தேர்தல் குழு ஒவ்வொரு குழந்தை நூலகத்திலும் இருப்பது இயலாத காரியம். பொதுவாகத் தமிழகம் முழுமைக்கும் ஒரு தேர்தல் குழு இருப்பது நலம். உடனடியாக அத்தேர்தல் குழு தற்போது தமிழில் கிடைக்கும் குழந்தை நூல்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து, நல்ல நூல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்துடன் இனிப் புதிதாக வெளிவரும் நூல்களையும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது தேர்ந்தெடுத்து நூலகங்கட்குச் சிபாரிசு செய்யலாம்.

குழந்தைகளின் அறிவையோ ஒழுக்கத்தையோ கெடுக்கும் வகையில் ஒரு புத்தகம் இருந்தால் எக்காரணம் கொண்டும் அதைத் தேர்ந்தெடுக்கவோ, சிபாரிசு செய்யவோ கூடாது. **நூலகங்கட்குப் புத்தகங்களைச் சிபாரிசு செய்யும் குழு, பிறரின் சிபாரிசுகளுக்கு இரையாகிவிடக்கூடாது.**

இது போன்ற ஆயிரமாயிரம் கருத்துக்களின் விளைநிலமாக விளங்கும் திரு. அழ. வள்ளியப்பா ஆல் போல் தழைத்து அரசு போல் விரிந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அந்த இரவைக் கழித்து வீடு திரும்பினேன்.

மறுநாள் என் வீட்டில் அடுத்த பகுதியில் வாழ்ந்து வந்த என் மற்றொரு நண்பர், 'நீங்கள் நேற்று எங்கே போயிருந்தீர்கள் ?' என்று கேட்டார்.

'திரு. அழ. வள்ளியப்பாவின் வீட்டுக்குச் சென்றிருந்தேன்,' என்றேன் நான்.

'அவர் எங்கே வசிக்கிறார் ?' என்றார் என் நண்பர்.

'அவர் இன்றைய குழந்தைகளின் உள்ளத்தில் எல்லாம் வசிக்கிறார்,' என்றேன் நான்.

'வசிக்கட்டும்,' என்று வாழ்த்தினார் வயதால் மூத்த அந்த நண்பர்.

குழந்தைகள் வாசிக்கப் பாடல்களைத் தருகிறார் திரு. அழ. வள்ளியப்பா; எனவேதான் திரு. வள்ளியப்பா வசிக்கத் தங்கள் உள்ளங்களைத் தருகிறார்கள் குழந்தைகள் !

கவிமணியை மறவாத கவிஞர்

ஈ. எஸ். ஹரிஹரன் (ரேவதி)

1951-ம் ஆண்டில் குழந்தை இலக்கியக் கழகம் நடத்திய சிறு கதைப் போட்டியில் இரண்டாவது பரிசாகக் கவிமணியின் 'மலரும் மாலையும்' என்ற நூல், வள்ளியப்பாவின் அன்பளிப்பாக எனக்குக்

கிடைத்தது. அதே ஆண்டில் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியிலும் எனக்கு இரண்டாவது பரிசு கிடைத்தபோது, நண்பர்கள் பூவண்ணனும் ஏத்திராஜனும் 'பூஞ்சோலை' அலுவலகத்தில் குழந்தைக் கவிஞருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

பள்ளி மாணவனுன எனக்கு அப்பொழுது கவிதையில் அதிக ஈடுபாடு இருக்க முடியாது என்பதை உணர்ந்துகொண்ட வள்ளியப்பா, "மலரும் மாலையும் நூலை நீ படித்துச் சுவைக்காவிட்டாலும் பரவாயில்லை, பழைய புத்தகக் கடைக்கு அனுப்பி, கவிமணியின் நூலை நடை பாதைக்குக் கொண்டுவந்து விடாதே" என்ற பொருள்படக் கூறினர். கவிமணியிடம் அவ்வளவு ஈடுபாடு அவருக்கு. அந்த ஈடுபாடு, இந்தப் பத்தொன்பது ஆண்டுகளில், கவிமணி மறைந்த பிறகும், நாளுக்கு நாள் வளர்ந்து வந்திருப்பதைத்தான் காண்கிறேன். வள்ளியப்பா கலந்து கொண்டு உரையாற்றும் இலக்கியக் கூட்டங்களில் கவிமணியைப் பற்றி ஒரு சிறு குறிப்பாவது இல்லாது போகாது.

குழந்தைப் பத்திரிகைகளில் குழந்தைகள் காணத்தகாத விளம்பரங்கள் இடம்பெறக் கூடாது என்பது வள்ளியப்பாவின் உறுதியான கொள்கை. அவர் நடத்திய பூஞ்சோலை அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அற்ப ஆயுளே வாழ்ந்த மார்க்கண்டேயன், சிரஞ்சீவித் தன்மை எய்தி விட்டதைப் போல், மூன்றரை ஆண்டுகளே நடந்த பூஞ்சோலை குழந்தை இலக்கிய உலகில் தனக்கென்று ஓர் அழியா இடத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. வள்ளியப்பா மட்டும், விளம்பரத்தைப் பொறுத்த வரை தன்னுடைய கொள்கையைத் தளர்த்திக் கொண்டிருந்தால் பூஞ்சோலையின் ஆயுள் நீடித்திருக்கும் என்பது பல நண்பர்களுடைய கருத்து.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, சங்கத்தின் செயலாளன் என்ற முறையில் குழந்தைப் பத்திரிகைக் காட்சிக்கும், பத்திரிகை ஆசிரியர்களுடன் கருத்துப் பரிமாற்றத்திற்கும் ஏற்பாடு செய்தபோது, என்னுடைய எதிரிலேயே நண்பர் ஒருவர் கவிஞரிடம், "கொள்கைக்காகப் பத்திரிகையை நிறுத்தும்படி செய்துவிட்டீர்களே! பத்திரிகை இருந்தால் எவ்வளவோ செய்யலாமே! இதனால் யாருக்கு என்ன பயன்?" என்ற பொருள்படக் கேட்டார். "பத்திரிகை நின்று 15 ஆண்டுகளுக்குப் பிறகு, அது நின்றதற்காக இன்னும் வருந்தும் அளவுக்கு உங்களைப் போன்ற பலரைச் செய்து வைத்திருக்கிறதே...$3\frac{1}{2}$ வயது வளர்ந்து மறைந்த ஒரு பத்திரிகையால் இதைவிட வேறு என்ன அதிகமாகச் சாதிக்க இயலும்" என்ற பொருள் படப் பதிலளித்தார் கவிஞர். அது உண்மைதான்.

கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் குழந்தைப் புத்தகக் காட்சி நடந்த தினத்தன்று பேச்சாளர்களை வரவேற்க நண்பர்களோடு காத்திருந்த கவிஞர், நேரத்தை ஓட்டுவதற்காக ஒலி பெருக்கியில் அன்று பிரபலமாக இருந்த சினிமாப் பாட்டைக் கேட்டதும், தானே விரைந்து வந்து அந்தப் பாட்டைப் பாதியில் நிறுத்தி வைத்துவிட்டு, "இந்த மாதிரி சினிமாப்

பாட்டைக் கேட்டு வரும் கூட்டம் நமக்கு வேண்டாம். முடியுமானால் ஏதாவது குழந்தையை அழைத்து வந்து பாடச் சொல்,'' என்று கூறினர்.

இதே போல் குழந்தைகள் நாடக விழாவின்போது, பிரபல ஒரு நாவலாசிரியை தயாரித்தளித்த நாடகத்தில் வந்த ஒரு பாட்டின் சில வரிகளை மாற்றும்படி நேர்ந்தது. இந்தக் கொள்கையில் இன்றும் அவர் மாறவில்லை.

விழாவுக்கு அழைத்துவரும் பேச்சாளர்களை, விழா முடிந்ததும் மரியாதையோடு வீட்டில் கொண்டுவிட வேண்டும் என்பதில் அவருக்கு உள்ள தீவிரத்தை நான் வேறு யாரிடமும் கண்டதில்லை. இந்த வகையில் பலமுறை, தூரன், தி. ஜ. ர., கி. வா. ஜ , கொத்தமங்கலம் சுப்பு, பெ. நா. அப்புசுவாமி, பி. ஸ்ரீ., நாரண துரைக்கண்ணன், ஆர்வி போன்ற அறிஞர்களின் இல்லங்களுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

தவறு செய்யும்போது சாதாரணமாக அவர் கண்டிப்பதில்லை. ஆனால் குறைப்பட்டுக்கொண்டு வருந்துவார். அதிலும் அந்தத் தவறால், பலருடைய நேரமும் உழைப்பும் வீணாகும்போது அவரால் தாங்கவே முடியாது. அதே சமயத்தில் ஒரு செயலை அவர் எதிர்பார்த்திருந்த தற்கும் மேலாக வெற்றியோடு செய்து முடித்தால், பலர் முன்னிலையில் வெளிப்படையாக வாய்விட்டுப் பாராட்டவும் தவறமாட்டார்.

வள்ளியப்பா என்றாலே குழந்தை எழுத்தாளர் சங்கம்தான் கண்முன்பு வந்து நிற்கிறது. அந்த அளவுக்குச் சங்கம் அவரோடு, அவரது உழைப்பில் ஒன்றிவிட்டது. அவரது அயரா உழைப்பினால் சங்கமும், அவரது செல்வாக்கும் உயர்ந்து இன்று அகில இந்திய இலக்கியத்துறையில் எல்லோருக்கும் அறிமுகமான நிலைக்கு அவரது பெயர் விளங்குகிறது. அவருக்கு இன்று ஏற்பட்டுள்ள செல்வாக்கைக் கொண்டு அவர் பயனடைகிறாரோ என்னவோ, அவரிடம் உதவி கோரி வரும் பல துறையினரும் பயனடைகிறார்கள். அப்படிப் பயனடைந்தவர்களில் நானும் ஒருவன்.

பூஞ்சோலையின் மூலம் அவர் மலரவைத்த எத்தனையோ இலக்கிய மலர்கள், இன்று மணம் வீசி, அவருக்கென்று ஒரு சீடர் படையையே உருவாக்கியுள்ளது. சங்கம் வளர்ந்து எத்தனையோ ஆண்டுகளாகியும், சங்கத்திற்கு என்று ஒரு நிலைத்த பெயரும், வசதியும் செல்வாக்கும் ஏற்பட்டிருக்கும் நிலையிலும், இன்று சாதாரணமான இலக்கியக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும்போது நாங்கள் படும் இன்னலை எண்ணும் போதுதான், பல ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய வசதிகள், செல்வாக்கு, பெயர் ஏதுமே இல்லாத நிலையில், எந்தக் குறைக்கும் இடமில்லாது மாநாடுகளை அவரால் எப்படி நடத்த முடிந்தது என்ற வியப்பும், அதற்காக அவர் நல்கிய உழைப்பும் நம்மை நெகிழ வைக்கின்றன.

தமிழ்நாட்டில் அறிஞர்களுக்கும், புலவர் பெருமக்களுக்கும் மணிவிழா எடுத்து, பொற்கிழி வழங்கி மகிழும் இயக்கத்தைத் துவக்கி வைத்தவர் கல்கி. அவருக்குப் பிறகு அந்த இயக்கத்திற்கு உயிர் நாடியாக இருந்து இயக்கி வருபவர் வள்ளியப்பா அவர்களே. மணிவிழாக்களெடுத்தவரின் குழந்தை இலக்கியப் பணிக்கு வெள்ளிவிழா நடைபெறும் இனிய காட்சியைக் காண எத்தனையோ இலக்கிய உள்ளங்களும் அவரால் முன்னேறியவர்களும் காத்திருக்கின்றனர்.

எழுத்தாளர் விவரத் தொகுப்புகள் தந்தவர்

கெ. பக்தவத்சலம்
(செயலாளர், ஒய். எம். சி. ஏ, பட்டி மன்றம்)

குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களுடன் எனது மாணவப் பருவத்திலிருந்தே, கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நெருங்கிப் பழகும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. அன்று முதல் இன்றுவரை அவரைச் சந்தித்து, குறைந்தது அரை மணி நேரமாவது பல்வேறு செய்திகளை மனம் விட்டுப் பேசித் திரும்பும் பொழுதெல்லாம், குடும்பப் பற்று மிகுந்த மூத்த சகோதரர் ஒருவரைச் சந்தித்த பாச உணர்வும், நமது நலம் நாடும் நண்பர் ஒருவரைக் கண்டு உரிமையோடு உறவாடிய நேயப் பாங்கும், பல்வேறு இலக்கியச் சூழல்களையும் ஒன்று சேர்க்கும் அறிஞர் ஒருவரைக் கண்டு மகிழ்ந்த மன நெகிழ்வும் இயல்பாக என்னுள் எழும். இந்த அனுபவம் எனக்கு மட்டும் சொந்தமானதல்ல...! அவரோடு பல்லாண்டுகளாகப் பழகிவரும் நூற்றுக்கணக்கான இளைஞர்களில் யாரைக் கேட்டாலும் இப்படித்தான் சொல்வார்கள் என்பது நிச்சயம்.

குழந்தைக் கவிஞரின் ரசிகர் குழாத்தில்—குழந்தைகள் மட்டுமன்றி, அனுபவத்திற் பழுத்த மூதறிஞர் பலரும் இடம் பெற்றுள்ளனர் என்பது நாடறிந்த உண்மை. பள்ளிக்குச் செல்லும் சிறுவர் முதல், தன்னையொத்த கவிஞர்கள், எழுத்தாளர்கள் வரை, இன்னும் சொன்னால், அவர் பணியாற்றும் பாங்கின் வாடிக்கைக்காரர்களிலும்—பரந்ததொரு நண்பர் வட்டத்தைப் பெற்றுள்ள இனிய நற்பேறு குழந்தைக் கவிஞருக்குக் கிடைத்துள்ளது. பல்வேறு மனப் போக்குடையோரையும் தழுவிச் சென்று பழகுவதை ஒரு கலையாகவே கைவரப் பெற்றவர் திரு. வள்ளியப்பா. இந்த அவரது இனிய குணமே பொதுவாழ்வில் அவருக்குப் பெரிய வெற்றியைத் தேடித் தந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

தாம் எழுதுவதோடு அமைதியடையாமல், திறமையுள்ள எத்தனையோ மலரும் எழுத்தாளர்களைப் 'பூஞ்சோலை'த் திங்களிதழ் வாயிலாக இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்திப் புகழ் மணம் கமழச் செய்த ஆசிரியர் அழ. வள்ளியப்பா. அதற்குப் பிறகு குழந்தை எழுத்தாளர்களுக்கென்றே 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' கண்டு அதனைக் குளிர் நிழல் வழங்கும் ஆலமரமாகக் கிளைக்கச் செய்த பெருந்தகையும் அவரே என்பதை நாமறிவோம். அவர் குழந்தை எழுத்தாளர்களுக்கு மட்டும் உரியவரல்லர் என்று 'தமிழ் எழுத்தாளர் சங்க'மும் பின்னர் அவரது சேவையைப் பெரிதும் விழைந்து, ஏற்றம் பெற்றது. இந்தச் சங்கங்களுக்கெல்லாம் மூளையாய், முதுகெலும்பாய் விளங்கி, திரு. வள்ளியப்பா அவர்கள் முனைந்து சாதித்த சாதனைகள் பல. எந்தச் செயலை மேற்கொண்டாலும் அதனைப் பொறுப்புணர்ச்சியுடனும், முழு மூச்சுடனும் செய்து முடித்த பிறகே நிறைவுபெறும் செயல்வீரர் திரு. வள்ளியப்பா. ஓர் இலக்கு முடிந்ததும், அதன் விளைவுகளின் பயனைப் பிறர் பெற விடுத்து, மற்றொரு முயற்சியில் முன்னைப் போலவே உழைக்கத் தலைப்படுவது அழ. வள்ளியப்பா அவர்களுக்குப் பழகிவிட்டது!

குழந்தைக் கவிஞரின் பொதுவாழ்வில் குறிப்பிடத் தகுந்த சாதனை குன்று போல் குவிந்திருந்தாலும், அக்குன்றின் மேலிட்ட விளக்காய் நின்று ஒளிர்வதாக நான் கருதுவது அவர் முயற்சியால் வெளிவந்துள்ள **'எழுத்தாளர் யார்—எவர்?'** நூல்களே.

தமிழில் பல்வேறு துறைகளிலும் எழுதி வரும் எழுத்தாளர்களைக் கணக்கெடுத்தால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் பெயர்களை நினைவுக்குக் கொண்டுவர முடியும். இவர்கள் அனைவரைப் பற்றிய விவரங்களையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது, பதிப்பாளர், நூலகத்தினர், பத்திரிகையாளர், வாசகர், வானொலி நிலையத்தார் முதலிய இலக்கியத் தொடர்புள்ள அனைவர்க்கும் பயன்படும் என்று தமிழ் எழுத்தாளர் சங்கச் செயற்குழு பத்தாண்டுகளுக்கும் மேலாக எண்ணி, தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய தகவல்களைத் தரும் **'யார்—எவர்'** நூல் ஒன்றைச் சங்கச் சார்பில் வெளியிடவேண்டும் என்று ஆண்டுதோறும் தீர்மானங்களை நிறைவேற்றி வந்தது! ஆனால் 1966-ஆம் ஆண்டு திரு. அழ. வள்ளியப்பா அவர்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகப் பணியாற்றிய போதே இக்கனவு நனவாகியது!

திரு. அழ. வள்ளியப்பா அவர்கள் பல ஆண்டுகள் 'குழந்தை எழுத்தாளர் சங்கத்' தலைவர் பொறுப்பை அணிசெய்து வருகின்றார்கள். அவர்கள் தலைமையில் 1961-ஆம் ஆண்டு, குழந்தைகளுக்காக எழுதும் 201 எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய 'குழந்தை எழுத்தாளர் யார்—எவர்?' என்னும் தொகுப்பு நூல் எட்டணா விலைக்கு வெளியிடப் பெற்றது. அதுவே முதன்முதலாகத் தொகுப்பு நூலாகும். அதற்குப் பிறகு, திரு. வள்ளியப்பா அவர்கள் தென்மொழிகள் புத்தக

டிரஸ்டில் குழந்தை நூல்கள் தனி அலுவலராகச் சில காலம் பணியாற்றி வந்தார்கள். அப்பொழுது 1962-இல் எல்லாத் துறைகளிலும் ஈடு பட்டுள்ள 563 தமிழ் நூலாசிரியர்களைப் பற்றிய விவரத் தொகுப்பு நூல் ஒன்றைப் புத்தக டிரஸ்ட் வெளியிட முடிந்தது ! ஆனால் இவை எல்லா வற்றையும்விடச் சிறப்பாகவும், பெரிய அளவிலும் வெளிவந்தது, தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட 'தமிழ் எழுத்தாளர் யார்—எவர் ?' (1956) நூலாகும். இந்நூலில் 1146 எழுத்தாளர்களைப் பற்றிய தகவல்கள் தரப்பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட மூன்று நூல்களையும், சிறப்பாகக் கடைசி நூலையும் உருவாக்குவதில் திரு. அழ. வள்ளியப்பா செலவழித்த நேரம், உழைப்பு, அவற்றிற்கும் மேலாக அவர் விட்டுக்கொடுத்த உடல் நலம், குடும்ப நலம் ஆகியவற்றுக்காகத் தமிழ் எழுத்தாளர் உலகம் அவருக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்களை நான்கைந்து மாதங்களில் திரட்டி, அவற்றை ஒழுங்குபடுத்தி, கையெழுத்துப் படியைத் தயாரித்து, அச்சுக்குக் கொடுத்து, டெம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 300 பக்கங்கள் கொண்ட பெரு நூலாகக் கொண்டு வருவது என்பது எளிய செயலல்ல. இம் முயற்சியில் சில எழுத்தாள நண்பர்கள் திரு. வள்ளியப்பா அவர்களுக்கு ஓரளவு உதவி புரிந்தனர் என்றாலும், குறுகிய காலத்தில் நூலைத் தயாரிக்க, திரு. வள்ளியப்பா அவர்கள் பல இரவுகள் உறக்கத்தைத் துறக்க வேண்டியிருந்தது. அவர்கள் மூத்த மகள் திருமதி அலமேலு அழகப்பன், புதல்வன் திரு. வ. அழகப்பன், மற்றும் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்த திரு. எஸ். இராமசாமி, ஏன், இவர்களுக்கும் மேலாகப் பொறுமையாகவும் புன்னகை பூத்த முகத்துடனும் இவர்களை வேலை பார்க்க விட்டு, குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்திய குழந்தைக் கவிஞரின் துணைவியார் ஆகிய அனைவரும் இந்நூல் தயாரிக்கும் வேலையில் பல வாரங்கள் ஈடுபட் டிருந்ததை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். எத்தனையோ இரவு கள் குழந்தைக் கவிஞர், தம் வீட்டில் மற்றவர் அனைவரும் உறங்க, 'எழுத்தாளர் யார்—எவர் ?' கையெழுத்துப் படியைத் தயாரிக்கும் பொழுது அருகிருந்து உதவும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையும் இப்போது எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

பகலில் தொழிலாற்றும் துறை, இரவில் தொண்டாற்றும் துறை என்று பல மணி நேரங்கள் வேலை பார்த்து இதய நோய்க்கு ஆளானார் குழந்தைக் கவிஞர். நூல் அச்சாகும் கடைசி நேரத்தில் அவர் சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. வள்ளியப்பா நேரில் கலந்து கொள்ள இயலாத நிலையில், அவ்வாண்டு நடைபெற்ற 14-வது தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் 'தமிழ் எழுத்தாளர் யார்—எவர் ?' நூல் வெளியாகி அனைவரது பாராட்டுதலையும் பெற்றது !

மூன்று 'தமிழ் எழுத்தாளர் யார்—எவர்?'—நூல்களை உருவாக்குவதிலும் குழந்தைக் கவிஞர் பெரும் பங்கு ஏற்றிருந்தாலும், ஒரு தொகுப்பிலும் தன் பெயரைத் தொகுப்பாசிரியர் என்று வெளியிட்டுக் கொள்ளாத 'பெருந்தன்மை' அவரது தன்னடக்கத்தையும் தொண்டுள்ளத்தையும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது!

குழந்தைக் கவிஞரின் வீடு தேடிச் செல்லும் நண்பர்களுக்கு அறிவுக்கு விருந்து மட்டுமன்றி, வயிற்றுக்கும் இனிய விருந்து எப்போதும் கிடைக்கும். ஆனால், அவர்கள் மருத்துவமனையில்—படுக்கையிற் கிடந்தபோது, தம்மைத் தேடி வருவோரை அதே ஆர்வத்தோடு வரவேற்று, ஆர்லிக்சும் ஆரஞ்சுப் பழங்களும் தந்து உபசரித்த பண்பு யாரைத்தான் இதயம் நெகிழச் செய்யாது? எத்தனையோ இதய நண்பர்களின் இறைஞ்சுதலினால், திரு. வள்ளியப்பா அவர்களைப் பீடித்த இதயப் பிணி நீங்கியது. அவர்கள் முற்றிலும் குணமடைந்து முன்னைப் போலவே, புதுமலர்ச்சியுடன் தம்மாலியன்ற தொண்டுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். திரு. வள்ளியப்பா அவர்கள் செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு வாய்த்த நல்வயிரம். அந்நல்வயிரத்தின் இலக்கியப்பணி வெள்ளிவிழா நாளில், அருங்குணச் செம்மல் திரு. அழ. வள்ளியப்பா அவர்களை, குழந்தைகளுக்காக மட்டுமன்றி, தமிழ் எழுத்துலகுக்காகவும் 'இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்' என்று இறைஞ்சி அமைகிறேன்.

நாடக விழா நடத்திய கவிஞர்

கூத்தபிரான்

மாம்பலம் வைத்தியராமய்யர் தெருவில், ஓர் இல்லத்தில் பலூன்கள், தோரணங்கள், வண்ணக் கொடிகள் பறக்கின்றன. பலர் காரிலும் சைக்கிளிலும் வந்து இறங்குகிறார்கள். பலர் நடந்தும் வருகிறார்கள். அவர்களை வாசலில் நின்று ஒவ்வொருவராக அழைத்துச் சென்று விருந்துக்கு உட்கார வைக்கிறார் ஒருவர். விருந்துக்கு அன்று வந்தவர்கள் அனைவருமே பெரிய மனிதர்கள், படித்தவர்கள், அதிகாரிகள், அலுவலகத்தில் பணிபுரியும் பெரியவர்கள் என்று எண்ணிவிட வேண்டாம்! அன்று வந்தவர்கள் அனைவரும் குழந்தைகளே! சின்னஞ்சிறு குழந்தைகள்! என்ன, குழந்தைகளா? குழந்தைகளுக்கா ஒரு பெரிய விருந்து என்று ஆச்சரியப்படலாம்! உண்மை. விருந்து கொடுத்தவர் குழந்தைக் கவிஞர், குழந்தைகளின் உள்ளத்தில் குழந்தையாக விளங்குபவர், திரு. அழ. வள்ளியப்பா அவர்கள்.

குழந்தைக் கவிஞர் அன்று கொடுத்த விருந்தில் பல குழந்தைகளுடன் நானும் விருந்துக்குச் சென்றேன். குழந்தைக் கவிஞரை அன்று தான் சந்தித்தேன். விருந்து எதற்கு என்று சொல்ல மறந்துவிட்டேனே! குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் எழுதிய 'பாட்டி' என்ற நாடகம், அன்று சென்னை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பாயிற்று. அதைக் கேட்டு மகிழ்ந்த உள்ளங்கள் ஏராளம், ஏராளம். அந்நாடகத்தில் நடித்த குழந்தை நடிகர்களைச் சந்திப்பதற்கும், அவர்களை மற்றக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கும், பாராட்டுவதற்குமே அன்றைய விருந்து!

எத்தனை பிரியம் குழந்தைகளிடம் அவருக்கு இருந்தால் இத்தகைய விருந்தும் பாராட்டும் குழந்தைகளுக்குக் கொடுக்க முன் வருவார்! அது மட்டுமா? விருந்துக்குப் பிறகு அவர்களை அன்போடு அனுப்பிவைத்த குழந்தைக் கவிஞரின் அன்பு உள்ளத்தை மலரின் மென்மைக்குத்தான் ஒப்பிடவேண்டும். குழந்தைகளைக் கண்டால் மலரும் அவர் உள்ளம். அந்த உள்ளத்தின் உற்சாகத்தின் பிரதிபலிப்புத்தான் பாட்டும், பாட்டிலே கதையுமாக மலர்ந்து இன்று தமிழகம் முழுவதும் ஏன், தமிழறிந்த உலகம் முழுவதும் நல்லன எல்லாம் மணக்கச் செய்கிறது.

துள்ளும் குழந்தைகள் என்றென்றும் படித்து உற்சாகம் அடையக் குழந்தைக் கவிஞரின் அற்புதப் படைப்புகள், அழியாத செல்வங்கள். என்றும் எக்காலத்துக்கும் இலக்கியப் பொக்கிஷங்களாக இருக்கக்கூடிய படைப்புகள். 24-3-55 ல்-ராஜாஜி அவர்கள் துவக்கிவைக்க-தமிழகத்தில் முதல் முதலாகக் குழந்தைகள் நாடகவிழா ஒன்றை நடத்திய பெருமை குழந்தைக் கவிஞரையே சேரும். அன்றுதான் நான் குழந்தைகளுக்காக முதன் முதல் "அன்னை சொல் அமிர்தம்" என்ற நாடகத்தை எழுதினேன். அது விழாவில் முதல் பரிசு பெற்றது. குழந்தைகளுக்கு நாடகம் எழுதும் ஆர்வத்தை எனக்குத் தூண்டிய முதல்வர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களேயாவார். குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் மூலம் எத்தனையோ இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய பெருமை குழந்தைக் கவிஞருக்கு உண்டு. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் குழந்தை இலக்கியப்பணி வெள்ளிவிழா கொண்டாடுவது, குழந்தை உலகமே அன்னாரின் இதயத்தில் இருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

அவர் பாடல்கள் நெஞ்செல்லாம் என்றும் இனிக்கும்.
அவர் அன்பு மனம் துன்பமெல்லாம் துடைக்கும்.
அவர் கவிதை மணம் என்றென்றும் நறுமணம் வீசும்.

குழந்தைக் கவிஞர் பல்லாண்டு வாழ்க! அவரின் சேவை குழந்தைகளின் நல்வாழ்விற்குத் தேவை; தேவை.

வண்ணப் பூஞ்சோலையில் ஒரு வெண்ணிலா

அழகு பழனிச்சாமி

''குழந்தைக் கவிஞர் திரு அழ. வள்ளியப்பா அவர்களின் குழந்தை இலக்கியப் பணி—வெள்ளிவிழா !''

செய்தி எழுகின்றது; ஒலிக்கின்றது. அந்த ஒலி, இனிக்கும் இன்பத் தேனாய்ச் செவிகளில் பாய்கின்றது; இதயமெல்லாம் அமுதக் கடலாய்ப் பொங்குகிறது; இன்ப வெள்ளமாய் மகிழ்ச்சிக் குமிழ்கள் கிளம்புகின்றன. அந்த மகிழ்ச்சிக் குமிழ்களுக்கிடையே இன்பப் பெருக்கில் மிதந்தவாறே நிமிர்ந்து பார்க்கின்றேன். பொங்கிவரும் பெருநிலவு போன்றதொரு வண்ணநிலா புன்னகை தவழ என் கண்களுக்குக் காட்சியளிக்கின்றது. பிறை காணு அந்தப் பெருநிலவை நோக்கி என் கரங்கள் குவிகின்றன; கைகூப்பி வணங்குகிறேன். குழந்தை இலக்கிய உலகில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் அந்த வண்ண நிலாதான், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்.

நினைக்கின்றேன்; நெஞ்சம் இனிக்கின்றது.

சங்க காலந் தொட்டு நேற்றுவரை இலக்கியம் என்ற ஒன்றுதான் இருந்தது. நாடும் மக்களும் அது ஒன்றை மட்டுந்தான் கண்டிருந்தார்கள். ஆனால் அதனின்றும் ஒன்றைப் பிரித்தெடுத்து, 'குழந்தை இலக்கியம் என்பது இதுதான்' என்று தமிழ்கூறு நல்லுலகத்துக்கு அடையாளங்காட்டி, அதற்கு உயிரளித்து, வளர்ச்சியும் வனப்பும் தந்து, நல்ல ஆரோக்கியத்துடன் அதைத் தமிழ் இலக்கியப் பூங்காவில் உல்லாசமாக உலாவவிட்டு, அந்த இன்பக்காட்சியை வெற்றிக் களிப்புடன் கண்டு ரசித்து மகிழ்ந்துகொண்டிருக்கும் உள்ளம் ஒன்று உண்டு. அதுதான் மலர்ந்த உள்ளம்! அப்படி 'மலரும் உள்ளம்' தான் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் !

'கவிச்சக்கரவர்த்தி' என்றவுடன் நம் நினைவுக்கு வருகிறவர் கம்பர். நாட்டிலே எத்தனையோ பாரதிகள் இருந்தாலும், 'பாரதி' என்றவுடன் நம் மனத்தில் தோன்றுகிறவர் அமரகவி சுப்பிரமணிய பாரதிதான்! 'கவிமணி' என்றவுடன் நம் நினைவுக்கு வருகிறவர், தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்! அது போல, 'குழந்தைக் கவிஞர்' என்றவுடன் நம் நெஞ்சில் உதிப்பவர், அழ. வள்ளியப்பா அவர்களேதாம் !

நினைவு எழுந்த நேரத்திலிருந்து, கையில் எடுத்த பேனாவைக் குழந்தைகளுக்குத் தவிர - குழந்தை இலக்கியத்திற்குத் தவிர - வேறு எதற்குமே செலவிடாமல், எண்ணம், எழுத்து, சிந்தனை, செயல், எல்லாமே ஒரே மூச்சாகி, குழந்தைகளுக்காகவே எழுதி வருகிறவர் ஒருவர் உண்டு. அவர் தான் 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்கள்!

தமிழ் இலக்கிய உலகில், அதன் மறுமலர்ச்சிக் காலத்தின் ஒரு மைல் கல்லாக 'மணிக்கொடி' காலம் என்று ஒன்றைக் கூறுவார்கள். அது போலவே தமிழ்க் குழந்தை இலக்கிய மறுமலர்ச்சிக் காலத்தின் ஒரு மைல் கல்லாக விளங்குவது 'பூஞ்சோலை' காலமாகும். அந்த மைல் கல்லை நட்ட பெருமை குழந்தைக் கவிஞரையே சேரும்! அக்காலத்தில், கள்ளங் கபடற்ற குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைக் கலக்கும் கதைகளைச் சிலர் எழுதி வந்தனர். அன்பு வழியிலே அவர்களின் போக்கைத் தடுத்து, அவர்களைப் பண்பட்ட பூஞ்சோலைக்கு அழைத்து வந்து அந்த உல்லாசப் 'பூஞ்சோலை'யில் செல்லமாக வளர்த்த பெருமையும் குழந்தைக் கவிஞர் திரு. அழ. வ. வுக்கு உண்டு! இன்று குழந்தை இலக்கிய உலகிலே முன்னணியில் இருக்கும் பல எழுத்தாளர்களெல்லாம், அன்று அந்தப் 'பூஞ்சோலை'யில் செல்லமாக வளர்ந்தவர்களே! நல்ல பல எழுத்தாளர்களைத் தோற்றுவித்த பெருமையும் 'குழந்தைக் கவிஞருக்கு' உண்டு.

கவிஞர்கள் பலர் பிறக்கின்றனர். அவர்களில் பலர் வாரிசு இல்லாமலேயே போய்விடுகின்றனர். ஆனால், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவைச் சுற்றிலும் ஒரு குழாமே இருக்கிறது! இது அவருக்குக் கிடைத்த பேறு; பெருஞ் சிறப்பு !

நினைத்துப் பார்க்கிறேன். மனம் பின்னோக்கி நடைபோடுகிறது!

எழுத்து என்ற பெயரில் எதை எதையோ அனுப்பியதையெல்லாம் செப்பம் செய்து, அழகுபடுத்தி என்னையும் இலக்கிய உலகத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளாரே, அந்த அன்பு உள்ளத்தை வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

நட்பிலே சிறந்த நட்பு எது ? அதற்கு இலக்கணம் என்ன ? தெய்வப் புலவர் திருவள்ளுவர் தெளிவாக விளக்குகின்றார்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்." (குறள் 785)

ஒருவர்க் கொருவர் நேரில் காணாமலும், பேசாமலும், பழகாமலும் உள்ளத்து ஒத்த உணர்ச்சி அளவில் கொள்வதே நட்பில் சிறந்த நட்பு என்பது கருத்து. இத்தகைய உயர்ந்த நட்பை சங்க இலக்கியத்திலே கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் கொண்டிருந்ததாக அறிஞர் கூறுவர்.

எளியேனையும் ஒரு பொருட்டாக மதித்து, நேருக்கு நேர் கண்டோ பேசியோ பழகாத ஒரு நிலையில் என்பால் செலுத்திய அன்பினை-நட்பினை நினைக்கின்றேன். அந்த உயர்ந்த உள்ளத்தை வணங்குகின்றேன். வாழ்த்துகின்றேன்.

வசதி இல்லாததால் பள்ளிப்படிப்பு இடையிலேயே நின்றுவிட்டது...

திடீரென்று, குறைந்த வருவாயுள்ள பகுதிநேர வேலையும் போய் விட்டது......

கண் கலங்கினேன்; கண்ணீர் விட்டேன். குழந்தைக் கவிஞருக்கு எழுதினேன். அவர் எனக்கு ஓர் இடத்திலே வேலை வாங்கிக்கொடுத்தார். ஆனால் அந்த இடம் வெகுதூரத்தில் இருந்தது. அங்குச் செல்லப் பணம் ஏதும் என்னிடம் இல்லை. இந்நிலையை அவருக்கு எழுதினேன். உடனே தாமதம் இல்லாமல் இருபத்தைந்து ரூபாய் அனுப்பி வைத்தார்! ஒரு நயா பைசாவுக்குக்கூட என்னை மதிக்காத எங்கள் ஊரே வியந்தது; வாயடைத்துப் போய் நின்றது !

நெல்லைக்கு வந்தபின் இரண்டு மாதம் கழித்துக் குழந்தைக் கவிஞருக்குப் பணம் அனுப்பினேன்; அதைப் பெற்றுக்கொள்ளாமல் எனக்கே திருப்பி அனுப்பிவிட்டார்! அந்தப் பண்பட்ட உள்ளத்தை எண்ணுகிறேன்; வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களை அடிக்கடி காணும் பேறு பெற்றிலேன். ஆனால் எங்கள் நட்பு இலக்கியச் சான்றான நட்பு! இமாலய நட்பு!

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அன்பின் உருவம்; நட்பின் சின்னம்; பண்பின் உறைவிடம் !

மலர்ந்து மணம் வீசும் தம் மலர்ந்த உள்ளத்தால் அவர் எல்லாரிடத்தும் அன்பைச் சொரிகின்றார். குழந்தைகளின் இதயங்களில் குழந்தையாகவே உலவுகிறார்; அவர்தம் உள்ளங்களிலே நீங்காத இடத்தைப் பெற்றுத் திகழ்கிறார்.

குழந்தை இலக்கியப் பூஞ்சோலையில், அவர் மணம் வீசும் தென்றல்; இசை மழை பொழியும் வீணை; வட்டமிட்டு ஒளி வீசும் வண்ண நிலா!

ஒப்பற்ற சேவையால் உயர்ந்தவர்

ஜோதிர்லதா கிரிஜா

குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பாவைப் பற்றி எடுத்துச் சொல்லுவதென்பது கொல்லன் பட்டறையில் ஊசி விற்பது போன்றது தான் என்று சொன்னால் அது வெறும் சம்பிரதாயத்துக்காகச் சொல்லப் படுகிற ஒன்றில்லை என்பது எல்லாருக்குமே தெரியும்.

வள்ளியப்பாவை 1953-ம் ஆண்டிலிருந்து எனக்குத் தெரியும். அதாவது பதினேழு ஆண்டுகளாகத் தெரியும் ! ஆனால் நான் அவரை நேரில் பார்த்தது 1960-ல் தான். (1960-ல்தான் பத்தாவது குழந்தை இலக்கிய ஆண்டுவிழா நடந்தது என்று நினைவு).

1953-ல் அவர் கௌரவ ஆசிரியராக இருந்த குழந்தைகள் மாதப் பத்திரிகை "பூஞ்சோலை"யில் நான் சிறு கதைகள் எழுதத் தொடங்கிய

காலத்திலிருந்து (கடிதத் தொடர்பின் மூலமே) 1960 வரை நாங்கள் ஒருவரையொருவர் அறிந்திருந்தோம்.

திரு. வள்ளியப்பாவோடு நெருங்கிய பழக்கம் இல்லாவிட்டாலும், அவரைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டிருந்த "பூஞ்சோலை"யில் சிறுகதைகளும், தொடர்கதையும் எழுதியவன் என்ற முறையில் அவரைப் பற்றிய ஒரு விஷயத்தை மிக நிச்சயமாக அடித்துக் கூறமுடியும்.

தமக்கு நேரடியாக அறிமுகமில்லாதவர்களைக்கூடத் தமது கடிதங்கள் வாயிலாக உற்சாகப்படுத்தி அவர்களை மேலும் எழுதவைக்கிற தூண்டுகோல் அவர் என்பதுதான் அது.

தமிழ் நாட்டில் மட்டுமின்றி நம் நாடு முழுவதிலுமுள்ள அத்தனை குழந்தை எழுத்தாளர்களிலும் வள்ளியப்பா குழந்தைகளுக்காகச் செய்திருக்கும் சேவைக்கு ஒப்பான சேவையைத் தம் எழுத்தின் மூலம் வேறு எந்த எழுத்தாளருமே புரிந்திருக்க மாட்டார்களென்று உறுதியாகச் சொல்ல முடியும்.

இப்படிப்பட்ட வள்ளியப்பாவுக்கு வெள்ளி விழா எடுக்காமல் வேறு யாருக்கு எடுப்பது?

இலங்கை மக்களின் இதயம் கவர்ந்தவர்

கே. வி. எஸ். மோகன்
(ஆசிரியர், 'கதம்பம்')

தங்கசாலையில் ஒரு விழா நடந்தது.

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என எண்ணுகிறேன். குழந்தை எழுத்தாளர் சங்க ஆண்டுவிழா என்று சொல்லி என்னை நண்பர் பகீரதன் அங்கு அழைத்துப் போயிருந்தார்.

திரு. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் தலைமையில் திருமதி சௌந்தரா கைலாசம் முன்னிலையில் விழாவும், அதைத் தொடர்ந்து புத்தகக் காட்சியும் நடைபெற்றன.

முதன் முறையாகக் குழந்தைக் கவிஞரை அங்குதான் சந்தித்தேன். என்னை யார் என்று தெரிந்துகொண்டதும் என் அருகில் வந்து என் கரங்களைப் பற்றிக் குலுக்கினர்!

களங்கமில்லாத சிரிப்பும், மென்மையான விரல்களின் உறுதியும் என்னைக் கவர்ந்தன. அவரது கரங்களை விரித்துப் பார்க்கவேண்டும் என்ற துடிப்புடன் கைரேகை நிபுணரைப்போல் அவர் விரல்களை ஆராய்ந்தேன்.

திரு. வள்ளியப்பா மீண்டும் சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலியிலே என் சிந்தனைகள் கடந்த கால நினைவுகளை நோக்கி நழுவின.

பிஞ்சு மனத்தில் ஆழமாகப் பதிந்த, "நல்ல நண்பர்"களை என்னால் இன்றும் மறக்கமுடியாது. அந்த நண்பர்களை உருவாக்கிய குழந்தைக் கவிஞர் திரு. வள்ளியப்பாவைப் பற்றிச் சிறு வயதில் கற்பனை செய்தேன்.

அந்தச் சிந்தனைக்கு என்னால் வடிவம் கொடுக்க முடியவில்லையே தவிர, என் கற்பனை வளம் பிற்காலத்தில் பெருகியதற்கு "நல்ல நண்பர்களே" கருவானது.

பெரியவனானதும் திரு. வள்ளியப்பாவைப் போல் எழுத்தாளனாக வேண்டும் எனப் பன்னிரண்டு வயதில் ஆசைப்பட்டேன். ஆசை வளர்ந்தது! "பூஞ்சோலை"யானது. அந்தச் சோலையின் நிழலில் என் ஆசை விசுவரூபமெடுத்தது!'

திரு. வள்ளியப்பாவுடன் இணைந்து பழகுவோம் என்றோ, அவருடன் கலந்துரையாடுவோம் என்றோ, அவர் வழியைப் பின்பற்றி அவர் தலைமையில் இயங்கும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் கிளையை இலங்கையில் ஏற்படுத்துவோம் என்றோ, இலங்கைத் தீவே வியக்கும் அளவுக்கு திரு. வள்ளியப்பாவின் தலைமையில் கொழும்பு நகரில் மாநாடு நடத்தி, கவியரங்கு அமைத்துப் புத்தகக் காட்சி வைப்போம் என்றோ நான் நினைக்கவே இல்லை.

1959-ம் ஆண்டு ஜூலை மாதம் என் நினைவை விட்டகலாத மாதம்! இந்த மாதத்தில்தான் குழந்தைக் கவிஞரைக் கொழும்புக்கு அழைத்து வந்தோம்! இதே மாதத்தில்தான், பன்னிரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'கதம்பம்' என்ற எனது பத்திரிகையை இலங்கையில் ஆரம்பித்தேன். அதுவும் குழந்தைக் கவிஞர் ஆசியுடன்.

இலங்கையில் ஒரு கிளை ஆரம்பிக்க ஆசைப்படுகிறோம் எனக் குழந்தைக் கவிஞரை நாம் கேட்டபோது அவர் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

"என்றுமே சாகாத இலக்கியங்கள் குழந்தை இலக்கியங்கள்! வருங்காலச் சந்ததி வளர அவர்கள் உள்ளத்தில் பசுமையாகப் பதியக் கூடிய இலக்கியங்களை நீங்கள் இலங்கையில் வளர்க்கவேண்டும். உங்களுக்கு நானும், என் நண்பர்களும் உதவுவோம்!" என ஆசி வழங்கினார்!

குழந்தை எழுத்தாளர் சங்க மாநாட்டை நாங்கள் இலங்கையில் கொண்டாடியபோது திரு. வள்ளியப்பா அவர்களே தலைமை வகிக்கக் கொழும்பு வந்தார்கள்.

கொழும்பு நகர் காணாத வரவேற்பு அவருக்கு! அவர் ஆற்றிய தலைமையுரையைக் கேட்க மண்டபம் கொள்ளாத மக்கள் வெள்ளம்! ஆழமான அவரது கருத்துக்கள், நீண்ட சிந்தனைகள், இளையவர்கள்

மத்தியில் மட்டுமல்லாது பெரியவர்கள் மத்தியிலும் ஆழமாகப் பதிய அந்த விழா உதவியது !

இந்தியாவிலிருந்து எத்தனையோ எழுத்தாளர்கள் அதுவரை இலங்கை வந்து போய் இருக்கிருர்கள். எந்த எழுத்தாளர்களுக்குமே இல்லாத வரவேற்பும், மக்கள் கூட்டமும் குழந்தைக் கவிஞர் திரு. வள்ளியப்பாவுக்கு மட்டுமே இருந்தது.

திரு. வள்ளியப்பா அவர்களின் குழந்தை இலக்கிய சேவையை இலங்கை மக்கள் எத்தனை தூரம் புரிந்து வைத்திருந்தார்கள் என்பதை அவருக்கு இலங்கைத் தமிழர்கள் அளித்த வரவேற்பே எடுத்துக் காட்டியது !

வியாபார இலக்கியம் படைக்கும் இந்நாளில்கூட, புனிதமான குழந்தை இலக்கியத்தை உருவாக்கி வரும் திரு. வள்ளியப்பா அவர்கள் சேவை வருங்கால வரலாற்றில் இடம் பெறத்தக்கது !

குழந்தை இலக்கியம் ஒரு பிரசவ வேதனை ! இந்த வேதனையை இன்ப வேதனையாகத் தாங்கும் புனிதத் தாயாக, குழந்தைக் கவிஞர் எனக்குக் காட்சியளிக்கிருர்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இவர் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குச் செய்துவரும் தொண்டு மகத்தானது. பவித்திரமான ஒரு பணி !

இத்தகைய தன்னலமில்லாத, சாகாத இலக்கியம் படைக்கும் நல்ல குழந்தைக் கவிஞரைத் தமிழ்நாடு பெற்றுவிட்டதே என இலங்கைத் தமிழனை எனக்குப் பொருமையாக இருக்கிறது !

இலங்கை கண்ட குழந்தைக் கவிஞர்

க. நவசோதி

" பட்டணத்தைப் பார்க்கப் போகும்
சின்ன மாமா "

என்ற பாடலினுல் ஈழத்துச் சிறுவரின் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்துவிட்ட குழந்தைக் கவிஞர் பதினெரு ஆண்டுகளுக்கு முன் ஈழத்திற்கு வருகையளித்திருந்தார்.

அப்போது—

குழந்தைக் கவிஞர் தமிழகத்தில் நிறுவிய குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் நற்பணியின் தாக்கத்தின் பயனுக, ஈழத்திலும் தலைநகரிலே உருப்பெற்றிருந்த குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒழுங்கு செய்

திருந்த அனைத்துலகக் குழந்தைகள் புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்தற்கே கவிஞர் சிறப்பாக வருகை தந்திருந்தார்.

கொழும்பில் இலக்கியப் பணியாற்றி வந்த வளரும் எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளர் என்ற முறையிலும், அப்போது ஈழத்தில் வெளிவந்து கொண்டிருந்த **தமிழோசை** எனும் இலக்கியத் திங்க ளிதழின் வெளியீட்டாளர் எனும் முறையிலும் கவிஞரைப் பேட்டி கண்ட போது அவர் உதிர்த்த கருத்து முத்துக்கள் எழுத்துத்துறையினர் அனைவருக்குமே பயனுடைத்தாய் அமைந்திருந்தன.

" தாங்கள் குழந்தைகளுக்காகக் கவிதைகளை எழுதுகிறீர்கள். அக் கவிதைகளைப் படித்துப் பயனடைந்த இளம் எழுத்தாளர்களாகிய நாம் தங்களை ' எங்கள் கவிஞர் ', ' குழந்தைகள் கவிஞர் ' என்றே அழைக்க விரும்புகிறோமேயல்லாமல் குழந்தை எழுத்தாளர் எனக் கூற விரும்ப வில்லை" என என் கருத்தைத் தெரிவித்தேன்.

" நான் எழுத்தாளன் ; குழந்தைகளுக்காகக் கவிதை புனைகிறேன். ஏதோ என்னைக் குழந்தை எழுத்தாளர் என்று பத்திரிகைகள் பாராட்டு கின்றன. பெயர் பெரிதல்ல. செயல்தான் முக்கியம் ; என்னைப் பொறுத்த வரையில் எனக்கு ஒரு இலட்சியம் உண்டு. அதுதான் சேவை. குழந் தைகளுக்காகக் கவிதைகள் எழுதுவதையே என் கடமையாகக் கருது கிறேன் " என்று கூறியவர், " மேடைப் பேச்சிலும், கூட்டம் கூடு வதிலும் எனக்கு நம்பிக்கையில்லை. ஆக்க வேலைகள் செய்வதில் என் நேரத்தை விரயம் செய்கிறேன் " என்றார்.

சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும் தென் னிந்திய மொழிகளில் குழந்தைகளுக்காக நூல்கள் வெளியிடும் நிறுவ னத்தின் அதிகாரியாகவும் அச்சமயம் செயலாற்றி வந்த கவிஞரிடம், இந்தியக் கதைகள், கதாசிரியர்கள், நாவல்கள், நாவலாசிரியர்கள், விமர்சனம், விமர்சகர்கள் பற்றிக் கேட்டபோது, " நான் நாவல் படிப் பதில்லை. குழந்தைகளுக்குக் கூறக்கூடிய நல்ல கருத்துக்களைத் தேடு வதில் ஓய்வு நேரத்தை விரயம் செய்கிறேன்," என்று உரைத்தார்.

கவிஞரிடம் தமிழோசை இதழ்களை அளித்து விடைபெறும்போது "ஈழத்துக் கவிஞர்கள் இலக்கண வரம்புடன் கவிதை புனைவதில் வல்லமையுடையவர்கள்" என்று கூறியபோது என் மனம் குளிர்ந்தது.

குழந்தை இலக்கியத் துறையில் கவிஞரின் கால் நூற்றாண்டுப் பணி இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் மறைக் கவோ, மறுக்கவோ முடியாத மாபெரும் பணியாகும்.

பிறமொழியாளரும் போற்றும் கவிஞர்

மகிழ்ச்சிக்கண்ணன்
(ஆசிரியர், 'மத்தாப்பு')

வடக்கே டில்லிக்குச் சென்றிருந்தபோதும் சரி, தெற்கே குமரி முனைக்குச் சென்றிருந்தபோதும் சரி, 'நீங்கள் குழந்தைப் பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறீர்களே, உங்களுக்குக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களைத் தெரியுமா? அவர்களுடன் பழக்க முண்டா?' என்றுதான் அனைவரும் கேட்டார்கள். இன்றைய தினம் குழந்தை இலக்கியம் என்று சொல்லும் போதே, திரு. வள்ளியப்பா அவர்களைத் தான் நிறையப் பேருக்குத் தெரிகிறது. அதற்கடுத்தாற்போல்தான் மற்றவர்கள் தெரிகிறார்கள்.

குழந்தைக் கவிஞர் அவர்களின் இத்தகைய வெற்றிக்கு ரகசியம் என்ன? அவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதாலா? அதுமட்டும் அல்ல. அவரே ஒரு குழந்தை. ஆம்! அவருடைய பேச்சிலே குழந்தைமை தான் மிகுந்திருக்கும். குழந்தையைப் போலப் பேசுவார்; பழகுவார். அதைவிட, அவர் பாடல்கள் எழுதும் போது குழந்தையாகவே மாறி விடுகிறார். அதனால்தான் அவருடைய பாடல்கள், குழந்தைகளின் மொழியிலே, பாங்கிலே அமைந்திருக்கின்றன. பாடல்கள் மிக எளிமையானவை! தித்திப்பானவை! அதே நேரம் பொருள் மிக்கவை.

அவரது பாடல்கள் தமிழில் மட்டுமன்றிப் பிற இந்திய மொழிகளிலும் சில்ட்ரன்ஸ் புக் ட்ரஸ்ட் நடத்தும் 'Childrens world' போன்ற இதழ்களில் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பரவலாகப் பிஞ்சு உள்ளங்களின் நெஞ்சங்களிலே பதிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் தான் தூக்கத்திலேகூடச் சில குழந்தைகள், 'வட்டமான தட்டு' எனவும், 'இரகசியம் சொல்லாதே' எனவும் பிதற்றுகின்றனவாம்.

தமிழைப் பயில விரும்பும் பிறமொழியினர் கவிஞரின் குழந்தைப் பாடல்களைப் படித்தாலே போதும். தமிழ் தானாக வந்துவிடும். மத்திய அரசில் அமைச்சராக விளங்கும் திருமதி. சரோஜினிமகிஷி அவர்கள் தமிழ் கற்க விரும்பியபோது நமதருமைக் கவிஞரின் 'மலரும் உள்ளம்' பெரிதும் உதவியதாம். கவிஞரின் பாடல்களே அம்மையாரைக் கன்னடத்தில் குழந்தைப் பாடல்கள் எழுதத் தூண்டின. என்பதையும், அவரது கன்னடக் குழந்தைப் பாட்டுப் புத்தகம் அரசினர் பரிசும் பெற்றது என்பதையும் அவரே 'குமுதம்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. வள்ளியப்பா கொஞ்சு மொழி பேசும் மழலைக் குழந்தைகளுக்கும் பாடல்கள் தந்துள்ளார். அதே நேரம் படிப்படியாக, பருவம் பருவமாக வயதுக்கேற்பப் பாடல்களையும் படைத்திருக்கிறார். பள்ளி செல்லும் குழந்தை வகுப்பு மாற மாற, வள்ளியப்பாவின் வகைவகை

யான பாடல்களைப் படித்துக் கொண்டே மாணவப் பருவம் முடிகிற வரை பயின்று கொண்டிருக்கலாம். நல்வழியில் முன்னேற வள்ளியப்பாவின் பாடல்கள் ஏணிபோல் அமையும் என்பதில் ஐயமில்லை. அதனால்தான் கவிஞரை நேரில் பார்த்தறிவதற்கு முன்பே,

" பாரதி, கவிமணி, வள்ளியப்பா—அவர்தம்
பாடல்கள் நமக்கு நல்லதப்பா!"

என்று ஒரு குழந்தைப் பாடலை எழுதியிருந்தேன். உண்மையில் இன்று பாரதி, கவிமணி ஆகியோருக்கு அடுத்து வள்ளியப்பா அவர்கள்தான் தமது அரிய பாடல்களால் குழந்தைகளைக் கவர்ந்திருக்கிறார்.

குழந்தைக் கவிஞரை நான் முதன் முதலாகச் சந்தித்தபோது, மிக்க அன்போடு, ஒரு நெடுநாளைய நண்பனைப் போலப் பாவித்துப் பழகிய தோடு அவரைத் தேடி வரும் அவரது நண்பர்களையும் அறிமுகம் செய்து வைத்தது என்னைப் பிரமிக்கவே செய்தது. என்னுடைய 'குழந்தைப் பாடல்கள்' தொகுதிக்கு மதிப்புரை கேட்டபோது தம் உடல் நலக் குறைவையும் பாராமல் எழுதிக் கொடுத்தார். அதிலே உள்ள சிறந்தவை களைப் போற்றிய அவர், அதிலே இருந்த சில இலக்கணப் பிழை களைச் சுட்டிக் காட்டவும் தயங்கவில்லை. அதோடு, 'இதை இப்படி அமைக்கலாம்', 'இங்கே சந்தி மிகாது' என்பன போன்ற ஆலோ சனைகளையும் நல்கினார்.

பழகுவதற்கு இனிய நண்பர். அவரிடம் பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது. அவருக்குள்ள கவலையெல்லாம் குழந்தை களுக்கு மேலைநாட்டைப் போல் அழகிய வண்ணங்களில், நல்ல நல்ல புத்தகங்கள் வரவேண்டும். தமிழிலே குழந்தை இலக்கியம் சிறந்து நிற்கவேண்டும் என்பதுதான்! அதற்கு முன் மாதிரியாக அவரே மிக அழ கான அமைப்பில் தமது நூல்களைக் கொண்டுவருவார். இத்தனை சிறப் பும், பெருமையும் அடைந்திருக்கும் நேரத்திலும், அவரது புத்தகத்து அச்சுப் படிகளைத் தமது நண்பர்களிடம் காட்டி ஆலோசனை பெறத் தவற மாட்டார்.

குழந்தைகளுக்கென 'மத்தாப்பு' இதழை நான் வெளியிடத் திட்ட மிட்டு அவரைச் சந்தித்தபோது அவருடைய பத்திரிகை அனுபவங்களை மட்டுமன்றி, குழந்தைப் பத்திரிகைகளிலே ஏற்படக்கூடிய குறைகளை யும் விளக்கினார். அவரது அனுபவபூர்வமான ஆலோசனைகள் 'மத் தாப்பு'க்கு மிகவும் பயன்பட்டன. அதன் கௌரவ ஆலோசகராக இருக்க ஒத்துக்கொண்டு இன்று வரை நல்ல ஆலோசனைகளை நல்கி வருகிறார். இது ஒன்றே குழந்தை இலக்கிய வளர்ச்சியில் அவருக்குள்ள ஆர்வத்தைக் காட்டும். 'மத்தாப்பு'ப் பற்றி 'யுனெஸ்கோ' பத்திரிகை யொன்றில் பாராட்டி எழுதியிருந்தபோது, தமது சொந்தப்பத்திரிகைக்குக் கிடைத்த பாராட்டைப் போல் எண்ணி மகிழ்ந்தார்.

இப்படிப் புதிய இலக்கியங்கள் தோன்றவும், எழுத்தாளர்கள் தோன்றவும் ஊக்கமூட்டுகிற அதே நேரம், மறைந்த குழந்தை எழுத்தாளர்களையும் அவர் நினைக்கத் தவறுவதில்லை. கவிமணியின்பால் அளவு கடந்த அன்பு கொண்ட அவர் அவரது நினைவாகக் கவிதைப் போட்டி நடத்தி அதில் வெற்றி பெறுவோர்க்குத் தம் சொந்தச் செலவிலே பரிசு கொடுக்க முன் வந்தார். கவிஞரைப் போற்றும் கவிஞர், நமதருமை வள்ளியப்பா அவர்கள்தான்!

குழந்தைக் கவிஞரின் இலக்கியப் பணிக்கு 25 ஆண்டுகள்தானு பூர்த்தியாகிறது என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஐம்பது அல்லது அறுபது ஆண்டு காலமாகச் செய்து முடித்திருக்க வேண்டிய பணியை இத்தனை குறுகிய காலத்திலே இவர் ஆற்றியிருக்கிறுரென்றால் இவரது புலமைக்கும் திறமைக்கும் எல்லையே இல்லையென்றுதான் கூற வேண்டும்!

கவிஞர் செய்கிற சேவை குழந்தைகளுக்கு! குழந்தையும் தெய்வமும் ஒன்றல்லவா! இறைவனுக்குப் பணியாற்றிடும் கவிஞருக்கு இறைவன் நீண்ட ஆயுளும், நோயில்லா வாழ்வும் நல்கிடுவார்! இது நிச்சயம்!

வள்ளல் பாரி உள்ளம் கொண்டவர்

கவிஞர். பு. ஆ. முத்துகிருஷ்ணன்

ஆண்டு பன்னிரண்டுக்கும் முன்னர் அருணையில் அண்ணுமலையார் சன்னிதியில் தொடங்கியது குழந்தைக் கவிஞர் அவர்களின் நட்புறவு.

> "நிறைநீர நீரவர் கேண்மை"
>
> "நவில்தொறும் நூல்நயம் போலும்..."

என்று குறளில் கூறப்படும் வளரும் நட்பிற்கும் பயிலும் நட்பிற்கும் நல்ல எடுத்துக் காட்டாக விளங்குபவர் வள்ளியப்பா. அவர் அன்பு வழியில் நானும் குழந்தை எழுத்தாளர் சங்க உறுப்பினர் ஆனேன்.

வாடிக் கிடந்த முல்லைக்கொடி ஏறிப் படர வள்ளல் பாரி தேரைக் கொடுத்தான். வள்ளியப்பாவோ எனக்குத் தேர்வைக் கொடுத்தார். நகரத்து வள்ளல்களின் பரம்பரை அல்லவா நம் குழந்தைக் கவிஞர்? அவரது அன்புப் பார்வை நாட்டுப் புறத்தில் பாட்டுப் பணி செய்து கொண்டிருந்த என் வாழ்வில் புதிய திருப்பத்தைக் கொடுத்தது.

நகரத்துக் கவிஞர்களின் நட்புறவு - அனைத்திந்திய, மாநிலத்-தமிழ் எழுத்தாளர், குழந்தை எழுத்தாளர் சங்கங்களின் தொடர்பு-மாநாடுகளின்

அறிமுகம்-கவியரங்குகளில் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பு-இப்படியாக எனது பாட்டுப்பணி சுற்றிப் படர்ந்தது. பற்றித் தொடர்ந்தது.

மற்றைய கவிஞர்களும் வளரவேண்டும், வாழவேண்டும், பெருமை பெறவேண்டும் என்னும் உயர்ந்த நோக்குடையவர் நம் குழந்தைக் கவிஞர். இதோ அதற்கொரு எடுத்துக் காட்டு.

மதிப்பிற்குரிய தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக என் 'குழந்தைப் பாக்கள்' மலர்ந்திருந்தது. 1963-நவம்பரில் அது குழந்தை இலக்கியத் தேர்வில் மத்தியப் பேரரசின் பரிசு பெற்றது. எங்கள் வட்ட ஆசிரியர் கூட்டணியினர் அதற்கொரு பாராட்டு விழா ஏற்பாடு செய்திருந்தனர். எங்கோ ஒரு மூலையில் ஜவ்வாது மலைக் காட்டுக்குப் பக்கத்தில் எங்கள் ஊர் இருக்கிறது. பட்டணத்தில் பாங்குடன் வாழும் அவர் பல காத தூரம் வந்து பரிவுடன் பாராட்டு விழாவில் கலந்து கொண்டார். பாராட்டிப் பேசியும் பொன்னுடை போர்த்தியும் இந்த எளிய கவிஞனுக்குச் சிறப்பு செய்தார் என்றால் அவரது பெருந்தன்மை எத்துணை உயர்ந்தது, சிறந்தது, பாருங்கள்.

இவரது பண்பைப் போற்றிப் புகழ்வதா! பாட்டைப் போற்றிப் புகழ்வதா? அம்மம்மா ஒரே வியப்பு! ஒரே திகைப்பு! எதை எழுதுவது? எதை விடுவது? இங்கும் ஒரு கம்பச் சித்திரந்தான் காட்சி தருகின்றது "தோள்கண்டார் தோளே கண்டார்" என்னும் பாடல்தான் அது.

'பண்பு உயிர் பாடல் உடல்
பண்பு மணம் பாடல் மலர்
பண்பு ஒளி பாடல் மணி'

இப்படி ஒன்றை விட்டு ஒன்று பிரியாத, பிரிக்க முடியாத தனிச் சிறப்பு வாய்ந்தவர் நம் குழந்தைக் கவிஞர். பண்பும் பாட்டுமாக விளங்கும் இவர் நல்ல பண்பாட்டிற்குரியவர், பழகுதற் கினியவர்.

'கண்ணே கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா-வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்பத் தரு.'

இங்ஙனம் நீதிநெறி விளக்கம் நினைவுகூரும் இவருடன் எத்தனை முறை பழகினும் சலிக்காது, வெறுக்காது.

எத்தனை குழந்தைப் பாடல்கள்! எத்தனை குழந்தை இலக்கியங்கள்! கவிநடைகள் எத்தனை! உரைநடைகள் எத்தனை! மொழி பெயர்ப்புகள் எத்தனை! பெற்ற பரிசுகள் எத்தனை! உற்ற சுற்றுலாக்கள் எத்தனை! அத்தனை பெருமை இருந்தும் ஆடம்பரமோ பகட்டோ செருக்கோ ஆரவாரமோ உண்டா? எவ்வளவு தன்னடக்கம்! எத்தனைப் பணிவுடைமை! எத்தனை அமைதியான தோற்றம்!

'நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.'

என்னும் குறள்மணியன்றோ இவருடன் தொடர்புகொள்ளப் பார்க்கிறது.

இனி, குழந்தைக் கவிஞரின் இல்லற இயலுக்கு வருவோம்.

இவரைப் பொறுத்த வரையில் இலக்கிய வாழ்வும் சரிதான், இல்லற வாழ்வும் சரிதான்-இரண்டும் ஒருங்கிணைந்த ஒரே சீரான வாழ்க்கை. தெய்வ பக்தியும், தேச பக்தியும், திருக்குறள் நெறியும் போற்றி ஒழுகப் படும் செம்மையான வாழ்க்கை. நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் அல்லவா?

வெயிலில் களைத்து வருவோர்க்குக் குளிர்ந்த நிழல் தரும் ஆல் போன்றது இவரது உள்ளமும் இல்லமும். இதனை நான் மட்டுமல்ல, அவரை அணுகுவோர் எவருமே நன்குணர்வர். பல முறை சென்னை செல்லும்போதெல்லாம் இந்தப் பாங்கினை உள்ளபடியே அநுபவித் துள்ளேன்.

இவர்தம் விருந்தோம்பல் என்னும் பண்பைப் பார்த்துத்தான் திருவள்ளுவர் விருந்தோம்பல் என்னும் அதிகாரம் இயற்றினரா என்று என்று வியப்புத் தோன்றும் எனக்கு. அத்துணை அன்பும் அறனும் பண்பும் பயனும் உள்ளது அவர் அக வாழ்க்கை. சுருங்கக் கூறுமிடத்து திருக்குறளில் சொல்லப்படுகின்ற இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல் முதலிய இல்லற இயல் முழுவதுமே அங்கே வாசம் புரிகின்றதைக் காணலாம் - கற்றுக் கொள்ளலாம். இங்ஙனம் நாட்டுக்கும் வீட்டுக்கும் குழந்தைப் பாட்டுக்கும் தொண்டு செய்து வரும் மிக நல்ல தமிழ்க் குழந்தைக் கவிஞர் நாளும் வாழ்க! நலமெலாம் வளர்க!!

தலைவிளக்கு

ரு. துளசிதாஸ்

தமிழ்நாட்டில் குழந்தை இலக்கியம் எப்படிப் பிறந்தது என்பதை விட எப்படி வளர்ந்தது என்பதில் சுவை அதிகம். அந்தச் சுவையை ஊட்டியவர் குழந்தைக் கவிஞரே. அவருடைய வளர்ச்சி என்பது குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சி என்பதனுல் பொதுப்படையாக நாம் வெள்ளி விழா கொண்டாடுகிறோம். குறிப்பாக—

"ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்"

என்ற கவிதைக்கு வெள்ளி விழா!

அவர் பல துறைகளில் பங்கெடுத்துக்கொண்டாலும் 'பூஞ்சோலை' மாத இதழோடும் 'குழந்தை எழுத்தாளர் சங்க' நடவடிக்கைகளோடும் பற்றுக் கொண்டதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ஒரு குழந்தை இலக்கியப் பத்திரிகையைக் 'குழந்தை எழுத்தாளர்'களைக் கொண்டே நடத்திய பெருமை அவருக்கு என்றும் உண்டு. தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் குழந்தை எழுத்தாளர்களைத் தேடிக் கண்டுபிடித்து ஊக்குவித்ததனால் அவருக்குத் தம்பிகள் பலர் கிடைத்தார்கள். இந்த உலகத்தைப் பற்றி அரைகுறையாகத் தெரிந்த பருவத்தில் வழி தப்பி விடாமல் நெறிப்படுத்திய வகையில் என்னைப் போன்ற பலருக்கு அவர் அண்ணாவாக விளங்கினார். அவருடைய அரவணைப்பில்—நேருக்கு நேரன்றிக் கடிதப் போக்குவரத்திலேயேகூட—என்னைப் போன்றோர் பலர் துளிர்த்தோம், முகைவிட்டோம், மலர்ந்தோம்.

இத்தகையதோர் ஆற்றலை அவர் பெற்றிருந்ததற்கு முக்கிய காரணம் அவருடைய தனித்தமைந்த குண இயல்பே ஆகும். அவர் இந்திய ஜனாதிபதிக்கும் நண்பர்; மாண்டிசோரிப் பருவத்துக் குழந்தைக்கும் நண்பர்.

குழந்தைப் பாடல்கள் என்றால் ஏதோ அரைகுறையாகத் தமிழ் அறிந்தவர்கள், இலக்கணம் கற்காதவர்கள் இயற்றிய பாடல்கள் என்றே நெடுங்காலம் வரை தமிழகம் நினைத்திருந்தது. அந்த உணர்வை மாற்றி அவற்றுக்குத் தகுதியான இடத்தை இலக்கியத்தில் தேடிக் கொடுத்த பெருமை பெரும்பாலும் குழந்தைக் கவிஞரையே சாரும். அந்தந்த வயதுடைய குழந்தைகளுக்குரிய எளிய ஓசையில், சொல் லமைப்பில் பாடல்களை அமைப்பது எவ்வளவு கடினம் என்பது அத் துறையில் ஈடுபட்டோர்க்கே விளங்கும்.

ஒரு விளக்கை ஏற்றுவித்தால் அது ஆயிரக்கணக்கான விளக்கு களைச் சுடர்விக்கும் என்பது எவ்வளவு பெரிய உண்மை!

அந்தத் தலைவிளக்கின் ஆற்றலுக்கு இன்று வெள்ளி விழா! எல்லா விளக்குகளும் நெஞ்சு நிமிர்த்தி இன்று சுடர்விடலாம்! கோலாகல விழா!

குழந்தைக் கவிஞர் என்றதுமே...!

கவிஞர் தமிழ்முடி

மழலை மொழியைத் தமிழாக்கி
மனது களிக்கும் பாட்டாக்கி,
குழந்தை களுக்குத் தருவதுதான்
குழந்தைக் கவிஞர் பாட்டாகும் !

பாட்டு வாத்தியார் இல்லாமல்
பக்க வாத்தியம் இல்லாமல்
நாட்டுச் சிறுவர், சிறுமியெலாம்
நாளும் பாடிக் களிப்பதற்கு

எழுதும் பாட்டே உயிர்ப்பாட்டு !
இனிய குழந்தை எழில்பாட்டு !
பொழுது மலரும் காலையைப்போல்
புத்தொளி காட்டும் புகழ்ப்பாட்டு !

படித்திட் டறியாச் சிறுவர்களும்
பாட்டை எழுதும் கவிஞர்களாய்த்
துடித்தே கிளம்பச் செய்வதுதான்
சுடரும் குழந்தைப் பாட்டாகும் !

"குழந்தைக் கவிஞர்" பட்டயத்தைக்
கொள்ளை கொண்டவர் யாரென்றால்
அழ.வள் ளியப்பா என்றேதான்
அனைவரும் உடனே கூறிடுவர் !

அழ.வள் ளியப்பா பாட்டென்றால்
அம்மா, அப்பா, பாட்டியுமே
குழந்தைக ளாகிப் படிக்கின்றார்
குதித்திட் டாடி மகிழ்கின்றார்

இத்தகை யான கவிஞரது
இலக்கியப் பணியின் வெள்ளிவிழா
புத்தக மாகிச் சிறந்திடவே
புகழின் தமிழால் வாழ்த்துதுமே !

மாபெரும் கவிஞர் வாழியவே!

செல்ல கணபதி, எம்.ஏ.,
தலைவர், கண்டனூர் பேரூராட்சி மன்றம்.

மழைநீர் புரளும் மண்ணில் திரியும்
மழலைச் செல்வர் செல்வியரை
அழைக்க நினைத்தால் வள்ளியப் பாவின்
அமுதக் கவிதை பாடிடுக!

சின்னஞ் சிறுவர் செவ்விதழ் பூவில்
செந்தமிழ்க் கவிஞர் குடியிருந்தே
பொன்னை அளப்பார் சிறுவர் சிறுமியர்
பூப்போல் சிரிக்கும் அழகினிலே!

பள்ளிக்குச் சென்று துள்ளிக் குதிக்கும்
பட்டாம் பூச்சிக் குழந்தையிடம்
வள்ளியப் பாவின் பாடலைப் படித்தால்
வானில் பறக்கும் பேறுபெறும்.

தேங்குழல் முறுக்கு அதிரசம் சீடையைத்
தேடிடும் பிஞ்சு இதயங்களை
வாங்கி வைத்திருந்து தேங்கனிக் கவிதைகள்
வழங்கிடும் கவிஞரின் புகழ்வாழ்க.

உன்னமுதப் பாட்டிசைக்க ஊமையரும் வாய்திறப்பர்

வெற்றியூர் சுப. திருஞானம்

சின்னக் குழந்தையர்க்குச் சிந்துகவிப் பாட்டெழுத
வண்ணத் தமிழ்நாட்டில் வந்துதித்த நற்கவிஞ !
உன்னை நினைத்தாலென் உள்ளமெலாம் சிலிர்க்குதையா !
என்ன தவமியற்றி ஈன்றனரோ உன்பெற்றோர் !

கள்ளமிலாப் பிள்ளைமுகம் ; களங்கமிலாப் புன்சிரிப்பு;
உள்ளமெலாம் வெள்ளைநிறம் ; ஊறிவரும் தெள்ளமுதம் ;
அள்ளிநீ தருவதெலாம் ஆழ்கடலின் நன்முத்து ;
அத்தனையும் தமிழர்களின் அளப்பரிய பெருஞ்சொத்து.

குழந்தையரின் நெஞ்சமெலாம் குடியேறி விட்டவரே !
குவலயத்தில் மாப்புகழைக் கொள்ளையிட்ட நல்லவரே !
மழலையரைக் கண்டுவிட்டால் மலர்ந்துவிடும் நுமதுள்ளம் ;
மணம்பரப்பும் உமைக்காணில் மழலையர்க்கோ கொண்டாட்டம்.

மண்கூடப் பொன்னகும் வள்ளியப்ப ! நின்பாட்டால்
மன்னரென நாளைவரும் மதலையரும் புகழ்பெறுவர் ;
உன்றனருங் கவிபடித்தால் உவகைமிகும் ; ஆதலினல்
உன்னமுதப் பாட்டிசைக்க ஊமையரும் வாய்திறப்பர்.

கன்றுக்குத் தாயானய் ! கனிவுறுநல் குழந்தையரின்
அன்புக்குப் பொருளானய் ! ஆன்றபெருங் கவிவேந்ததே !
என்றென்றும் திகழ்பவனே ! எங்களுக்கு முன்னேடி
இன்பத்தீந் தமிழெடுத்து இசைமீட்டும் பாவலன்நீ !

மின்னும் கதிர்காட்ட விளக்கெடுப்பார் யாருமுண்டோ ?
இன்னும் என்சொல்ல ! என்னருமைத் தாய்நாட்டின்
வண்ணக் குயிற்பேடே ! மன்னவனே ! இந்நாட்டின்
கண்ணே நீவாழ்க ! கவினுறவே வாழ்ந்திடுக !

வெள்ளி விழாத் திருமகன்

புலவர் நாகசண்முகம்

வட திசையில் வேங்கடத்தார்
மலே ஆட்சி புரிகின்ருர்
தென் திசையில் குமரி அன்னே
அலே ஆட்சி புரிகின்ருள்
இடைப்பட்ட நிலத்தி லெல்லாம்
எவராட்சி புரிகின்ருர் ?
எழிலாட்சி ! இன்ப ஆட்சி !
இதயமதைத் தொடும் ஆட்சி
உயிராகி, உணர்வாகி, உதிரமாகி,
நலமாகி, வளமாகி, நன்மையாகி,
இயலாகி, இசையாகி, நாடகமாய்,
இலங்குகின்ற தமிழன்னே
இனிமை மிகு ஆட்சியன்ருே நடக்கிறது ?
அளவற்ற பிள்ளே பெற்ற அன்னே தன்னே
அவள் பெற்ற பிள்ளேகளே கன்னிஎன்பார்
கன்னி அவள் ஆட்சிதனில்
கவிஞர்களே நல் அமைச்சர்
வீரமென்றும் காதல் என்றும்
வேறுபல உணர்ச்சி என்றும்
வகை வகையாய்த் துறை அமைத்து
வழிவழி யாய் ஆட்சிசெய்தார்
ஐந்தைந்து ஆண்டுகட்கு முன்னர்
அன்னே ஒரு புதுத் துறையை
அமைத்துத் தந்தாள்
அத் துறைக்கு யார் அமைச்சர் ?
அழகு தமிழ் வள்ளியப்பர் தான் அமைச்சர் !
பிறக்கின்ற குழந்தைகளேப் பெரியராக்கும்
பெரும் துறையை உனக்காக ஆக்கியுள்ளேன்
பெரியவரும் அதன் பயனுல் பெரியராவர்-என்று
பேருவகை யோடுநம் அன்னே சொன்ஞள்

அடித்தளத்தின் வலுவாலே வீடமையும்
அடிவேரின் பலத்தாலே மரம்வளரும்
வள்ளியப்பர் கவிதைகளால் குழந்தைச் செல்வம்
வளம் மிகுந்த சக்தியாய் வளர்ந்து வாழும்
குழந்தை இலக்கியச் சோலைக்கு — வள்ளியப்பா
குவியா நறுமணக் குறிஞ்சிமலர்
நல்லனவே எழுதுகின்ற தன்மையாலே
நாட்டிற்கு அறிவூட்டும் நல்ல ஆசான்
பதவியால் தலைவராவார் பல்லோர் — செய்த
உதவியால் தலைவரானார் உயர்திரு வள்ளியப்பா
ஐந்தாண்டு தொண்டு செய்வார் அரிதான நேரத்தில்
இரண்டு பத்து ஐந்தாண்டு ஈடின்றிப் பணிசெய்து
வெள்ளிவிழாத் திருமகனாய் விளங்குகிறார்
வெற்றிகண்டும் எளியவராய் வாழுகிறார்
தாம் பெற்ற பிள்ளைகட்குத்
தாய்க் குலத்தார் அமுதளிப்பார்
அனைவர் பெற்ற பிள்ளைக்கும் — வள்ளியப்பா
அறிவென்னும் அமுதளிப்பார்
அகம் வளர விருந்தளிக்கும் — வள்ளியப்பா
அனைவருக்கும் அன்னையன்றோ?
அன்னைத் திருமணத்தார், அருளாளர்
குழந்தை கவிக்குலத்தின் நாயகரை
கோலமயில் வேலன் வந்து
கோடிநாள் காத்திடுவான்
நாடிநாம் வாழ்த்திடுவோம் — அவர் புகழைப்
பாடிநாம் மகிழ்ந்திடுவோம்.

A HOUSEHOLD NAME

SOMALAY

Wherevar Tamil is spoken and wherever Tamil children live, AL. VALLIAPPA's name is a household name. He is not only a poet of the children for the children, but also their favourite author, their friend, philosopher and guide.

In many ways it can be said without fear of contradiction that Valliappa is the father of modern Tamil writing for children. Of course, he is not the earliest Tamil writer for children. That honour goes to poetess Avvaiyar and since her days a hundred persons have written for Tamil children including such eminent men of letters as the national poet Subramania Bharathi.

Valliappa's greatness lies in the fact that he has given his whole life-time to writing for children. And he continues to do so. He has founded and built up the Children's Writers' Association. He has stimulated writing for children by encouraging many of his own readers to write. He has been responsible for the publication of a comprehensive **Who is who of Children's Writers in Tamil.** As Special officer for Children's Literature in the Southern Languages Book Trust, he has done commendable work. He has emphasised the need to fill in the gap in reading materials for children. He has prepared questionaires and undertaken valuable surveys of the field for children's literature in the southern languages.

During the grim days of World War II; newsprint was in short supply and the publishing trade was in great difficulties. It was left then to the tiny and now defunct princely State of Pudukottai to nurse the publishing field for children in the form of books and magazines. It was there that young Valliappa made his mark and created a market.

Even though he is nearing fifty and is a grandfather, Valliappa identifies himself completely with children He is always at home with the young. He talks to children and writes to children. He is a great master of child psychology not in theory but in practice. Throw him into any group of children and you will find him in a trice moving with children at their own level. His genial temperament, charming manners, sense of humour, ready stock of anecdotes and constructive approach to all problems draw one and all to him. He speaks softly and the smallest child has access to him without any restrictions. Children feel honoured if he graces their homes even for a little while. He is totally devoid of artificially created halo.

Many honours have come to him in the shape of Government Awards from the State and Central Governments, consultancy by the Children's Book Trust and of translations into English of some of his poems by THE CHILDREN'S WORLD, a magazine of the Children's Book Trust. More honours are waiting for him.

Valliappa's writings include stories, poems, nursery rhymes, fables, devotional songs, ballads on Gandhiji, biographical anecdotes, factual books and riddles besides editing the children's monthly **Poonjolai.** He avoids unnecessary words, high-sounding vocabulary and difficult dictions. He wants to convey certain ideas and this he does to the young minds effectively, easily, clearly and quickly

with the minimum number of words — simple, commonplace, popular yet decent and parliamentary words. His is the language of love. In the process, he takes care not to violate the rules of grammar, though poetic licence would entitle him to deviate from the strict rules of traditional grammar. He is modest and unassuming and he takes great pains to check the accuracy of facts. He has his script read by children and commented upon by colleagues before rushing it to print. He is conscious of his responsibility as a writer and he is aware of the consequences of hurried writing and of passing on such hastily-written write-ups to young minds. He draws from the valuable treasuretrove of our ancient literature and also on Western creations and ideas to enrich the outlook of his readers.

This is the background of Valliappa's writings and so parents and teachers place his books into the hands of tiny tots as well as teen-agers without hesitation, without fear and without misgivings. His words exhort children to lead a disciplined life and to establish cordial relations with one and all.

Valliappa spends long hours with artists discussing minute details about pictorial illustration for his textual matter. Thanks to him, Tamil children are now offered a riot of books full of exciting reading, good pictures and feasts of colour. Children's books are no longer dull and for the Tamil children of today, books are fun !

The publication by many publishing houses of children's books on November 14 every year is due in no small measure to Valliappa's constant contact with publishers, follow-up work and genuine interest in the children's literature movement.

Holding of exhibitions of books for children is among his other achievements. He has held these successfully in

Madras, Bombay, New Delhi, and other places. How much time a good exhibition consumes and what an amount of spade-work, preparation, mailing and correspondence it takes are matters which few of us know or can fully realise. No wonder the organisers of the International Children's Book Exhibition in Colombo requested him to inaugurate their exhibition in 1959.

Valliappa has created a generation of eager readers with receptive minds. He has opened to children a new world where there are heroes to worship and saints to emulate. His writings widen the horizon of thought, stimulate ambition and offer a world in which to dream, to love and to learn.

In short, Valliappa has very few equals and certainly none to excel him in the healthy literary tradition he has built up for children for over a quarter of a century. The Children's Encyclopaedia project in Tamil is to a large extent the outcome of the vociferous demand of the Children's Writers Association under his leadership. His many other projects deserve greater recognition at the hands of the Government of Tamil Nadu, the Government of India and the Unesco.

May this pioneer in writing for children live long to continue his distinguished services for Tamil children and to an increasingly important sphere of modern Tamil writing !

குழந்தைகளுக்கு

கவிதை

கதை

அறிவியல்

சித்திரக் கதை

ஓவியம்

கலைக் களஞ்சியம்

பத்திரிகை

நூல் நிலையம்

நாடகம்

கதை சொல்லுதல்

கவிதை

கி.வா.ஜகந்நாதன்

தமிழில் கவிதையும் பாட்டும் ஒன்றோடொன்று தொடர்புடையன. எல்லாக் கவிதைக்கும் இசை உண்டு. இசையோடு கவிதையைப் பாடுவது இந்த நாட்டு வழக்கம். இசையோடு நுட்பமான தாளமும் கவிதைக்கு உண்டு. அந்தத் தாளத்தைத்தான் சீர் என்று சொல்வார்கள். அத்தகைய வரையறையைக் கொண்ட பகுதிக்குச் சீர் என்று யாப்பிலக்கணம் பெயர் வைத்திருக்கிறது. சீர் என்பதற்குத் தாளம் என்பது ஒரு பொருள். ஓசை அமைதியுடைய பாட்டுக்குத் தாளம் உண்டு. பழங் காலத்துச் சங்க நூலில் சில வகைப் பாடல்களுக்குத் தாளம் வரையறை செய்து அமைத்திருக்கிறார்கள்.

மனிதன் குழந்தைப் பருவத்திலே பாட்டைக் கேட்டு இன்புறக் கற்றுக்கொண்டிருக்கிறான். ஒலியின் இனிமையில் தன்னை மறந்து தூங்கும் குழந்தையை நாம் பார்க்கிறோம். தாய்மார்கள் தாலாட்டுப் பாடிக் குழந்தையைத் தூங்க வைக்கிறார்கள். குழந்தைக்குப் பாட்டின் ஒலி இன்பத்தைத் தருகிறது. சிறிது வளர்ந்த பிறகு குழந்தை சொற்களைக் கேட்கிறது; கதை கேட்க ஆசைப்படுகிறது. இதற்காகவே பாட்டிமார்கள் கதையும், பாட்டும் குழந்தைகளுக்குச் சொன்னார்கள்.

நுட்பமான கவிதையை ஆண்டில் முதிர்ந்தவர்கள் அனுபவிக்கிறார்கள். ஆனால் கவிதையை உணரும் உணர்ச்சி பிள்ளைப் பிராயத்தில் மனிதனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. நுட்பமான கவிதையை உணரும் ஆற்றல் இல்லாவிட்டாலும் ஒருவகையில் இசையோடு கலந்த பாட்டை அனுபவிக்கும் ஆற்றல் குழந்தைகளுக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது.

தமிழில் நூல் வடிவிலுள்ள கவிதை யாவும் பெரியவர்களுக்கே அமைந்தவை. சின்னஞ்சிறு குழந்தைகளுக்கும் சற்றுப்பெரிய சிறுவர்களுக்கும் உரிய கவிதை தமிழில் இல்லையே என்று குறைபடுவார் உண்டு. இப்போது குழந்தைக் கவிஞர்கள் சிலர் இருக்கிறார்கள். பழங்காலத்தில் அப்படி ஒரு கவிஞர் இல்லையா என்று கேட்கத் தோன்றும்.

குழந்தைகளுக்குரிய பாடல்கள் அந்தக் காலத்தில் நாடோடியாக வழங்கின. நாட்டிலுள்ள தாய்மார்களும், பாட்டிமார்களும் குழந்தைகளுக்குக் கவி பாடி விளையாடச் செய்தார்கள். அழும் குழந்தைக்குப் பாட்டு, ஆடும் குழந்தைக்குப் பாட்டு, தூங்கும் குழந்தைக்குப் பாட்டு, விளையாடும் குழந்தைக்குப் பாட்டு என்று அவ்வப்போது பாடல்கள் மூலமாகக் குழந்தைகளைத் தாய்மார்கள் உருவாக்கி வந்தார்கள். அந்தப் பாடல்களை வாய்மொழியாகவே தாய் தன் மகளுக்குச் சொல்ல, மகள் தன் மகளுக்குச் சொல்ல வழங்கிவருகின்றன. எனவே, நம் நாட்டுக் குழந்தைப் பாடல்களை ஏட்டில் எழுதிய புலவர் நூல்களில் காண முடியாது. ஏட்டில் எழுதாத நாடோடி இலக்கியத்தில்தான் காண முடியும்.

குழந்தைக்குச் சோறு ஊட்டும் தாய்,

'நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப்பூக் கொண்டுவா'

என்று பாட்டுப் பாடிக்கொண்டே ஊட்டுகிறாள். இந்தப் பாட்டை எழுதிய ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. ஆனாலும் அப்படி ஒரு கவிதை தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் வழங்கிவருகிறது. இதைப் போலப் பல கவிதைகள் நாடோடி இலக்கியமாக அங்கங்கே வழங்குகின்றன. தாலாட்டுப் பாடல்களும் பலப்பல.

குழந்தையின் உள்ளப்பாங்கை நன்கு தெரிந்து அவர்களுடைய உள்ளத்தைக் கவரத்தக்க வகையில் குழந்தைக் கவிதை அமைய வேண்டும். குழந்தைகளின் உள்ளம் சொல்லின் நயத்திலும், பொருளின் சிறப்பிலும் ஈடுபடுவதில்லை. அவர்கள் மென்மையான ஒலியைத்தான் கவனிக்கிறார்கள். காதுக்கு இனிய ஒலிகளைக் கேட்கிறார்கள். அவர்கள் மொழியே ஒலியின் தொகுதியாகத்தான் முதலில் அமைகிறது. நாயைத் தோதோ என்று சொல்வார்கள். குழந்தையைப் பாப்பா என்று சொல்லுவார்கள். பாட்டனாரைத் தாத்தா என்கிறார்கள். இப்படியே ஒரே எதுகையில் அமைந்த பூச்சி, பாச்சி, தோச்சி, மரப்பாச்சி, என்பவை குழந்தை அகராதியில் வரும் சொற்கள். அவற்றில் ஒரு வகையான ஒலி அமைதி இருப்பதைக் காணலாம்.

குழந்தைக்கு ஏதேனும் ஒரு செய்தியோ, கதையோ சொல்லும் போது இடைஇடையே ஒலிக் குறிப்பு வந்தால் குழந்தை கும்மாளம் போட்டுக்கொண்டு கேட்கும். 'குதிரை ஓடி வந்தது' என்று மற்றவர்களுக்குச் சொல்லலாம். குழந்தைக்குச் சொல்லும் போது, 'குதிரை தடதடவென்று ஓடி வந்தது' என்று சொன்னால் அந்தக் குழந்தைக்குத் தடதட என்ற ஒலிக்குறிப்பினால் குதிரையின் ஓட்டத்தைக் கற்பனை செய்து கொள்ளும் பாங்கு அமையும். 'கண்ணன் ஓடினான்' என்பதை, 'கண்ணன் குடுகுடுவென்று ஓடினான்' என்று சொல்வதில் குழந்தை

விரும்பும் நயம் இருக்கிறது. 'படார் படார் என்று அடித்தான்', 'சதங்கை கலகல என ஒலித்தது' என்ற ஒலிக்குறிப்புகளை அமைத்துச் சொல்லும் போது குழந்தைகளுடைய உள்ளத்தில் இன்பம் ஏறுகிறது.

கதைகளிலும், செய்திகளிலும் இப்படி ஒலிக்குறிப்புகளைச் சொல்லிக் குழந்தைகளுக்கு இன்பத்தை உண்டாக்கும் வழக்கத்தை / நாம் பார்க்கிறோம். அது போலவே குழந்தைக் கவிதையிலும் இத்தகைய ஒலி அமைதிகள் இருக்கவேண்டும்.

''ஜிகுஜிகுச்சான் குருவிவந்து
ஜிலாம் மாட்டிக்கிச்சாம் — ஜிலாம் மாட்டிக்கிச்சாம்
அதிலே ஒரு டேக்குருவி
அதுவும் மாட்டிக்கிச்சாம்''

என்ற ஒரு கதைப் பாடல் குழந்தைகளுக்காக வழங்கி வருகிறது. அதில் குருவி மாட்டிக்கொண்டது என்ற செய்தி ஒலிக்குறிப்போடு 'ஜிகுஜிகுச்சான் குருவி' என்ற பாட்டின் ஆரம்பமே அமைகிறது. அதைக் கேட்டவுடன் குழந்தைளுக்குக் கிளுகிளுப்பு உண்டாகும்.

''சங்கு சக்கரச் சாமி வந்து, சிங்கு சிங்குன்னு ஆடுமாம்''

என்பது ஒரு பாட்டு. இந்தப் பாட்டைச் சொல்லும்போது அந்தக் குழந்தையும் குதிக்கும். 'சிங்குசிங்கு' என்னும் ஒலியே அதற்குக் காரணம். சில சமயங்களில் சில சொற்களை அடுத்தடுத்துச் சொல்வது இன்பத்தை உண்டாக்கும்.

''கொழுகொழு கன்னே''

என்ற பாட்டில் ஒன்றுக்கொன்று தொடர்ந்து வரும்போது ''கொழு கொழு கன்னே, கன்றின் தாயே'' என்ற தொடரும் பல முறை அடுத்தடுத்து வரும். அதைக் கேட்டால் வயசு வந்தவர்களுக்குத் திருப்பித் திருப்பிச் சொல்வதால் அருவருப்புத் தோன்றும். ஆனால், குழந்தைகளுக்கோ எத்தனை தடவை சொன்னாலும் அலுக்காது. காரணம், மீட்டும் மீட்டும் சொல்லும்போது குழந்தைகளுக்கு அது பாடமாகி விடுகிறது. ஆகவே அதுவும் சேர்ந்து பாடுகிறது. நம்மோடு சேர்ந்து பாடுவதனால் அதற்குச் சுவை பிறக்கிறது. ஆகையால், மற்றக் கவிதைகளில் கூறியது கூறல் என்னும் குற்றமாக உள்ள ஒன்று குழந்தைக் கவிதையில் அழகாக அமையும்.

குழந்தையின் உள்ளத்தில் அழகான சித்திரங்களை அமைக்கும்படி பாட்டில் பொருள்களை எடுத்துக்காட்டுவது நல்லது. பழங்காலத்தில் நிலாவையும், மலையையும், மலரையும் காட்டிக் குழந்தை உள்ளத்தைக் கவர்ந்தார்கள். அன்றியும் மனிதர்களைப் பற்றிச் சொல்வதைக் காட்டிலும் விலங்குகளைப் பற்றிச் சொன்னால் குழந்தைகள் காதுகொடுத்துக் கேட்கும். களிப்புடன் தாமும் பாடும். உலகத்துக் குழந்தைக் கவிதையிலும் சரி கதையிலும் சரி, பெரும்பாலும் விலங்குகளைப் பற்றிய வேடிக்கைக் கதைகளே அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

குழந்தைக்குரிய கவிதையில் வெள்ளையான சொற்கள் மிகுந்திருக்க வேண்டும். வாய்மொழியில் சிதைந்துபோன சொற்களை அமைத்தல் சுவையை ஊட்டும்.

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு—அங்கு
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி"

என்று தேசிய விநாயகம் பிள்ளை பாடினார். 'மேயுது, குதிக்குது' என்பதை 'மேய்கிறது, குதிக்கிறது' என்று மாற்றினால் அவற்றின் ஜீவனே போய்விடும். பசு மாடு நிற்பதையும், கன்றுக்குட்டி துள்ளிக் குதிப்பையும் வேறு வார்த்தைகளால் சொன்னால் அழகாய் இராது. இங்கே அந்தப் பாட்டில் துள்ளிக் குதிக்குது என்கிறதில் ஓசை நயம் இருக்கிறது. அதைத்தான் குழந்தை உள்ளம் சுவைக்கிறது.

பாரதியார் குழந்தைகளுக்காகப் பாட்டுப் பாடியிருக்கிறார். குழந்தைகள் நாள்தோறும் பார்க்கின்ற காக்கையையும், பசுவையும், நாயையும் வைத்து நீதியைப் புகட்டுகின்றார். "ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்று வரும் பாப்பா பாட்டில்,

"கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்கை—அதற்கு
இரக்கப்பட வேணும் பாப்பா"

என்று சொல்கிறார். இந்த வார்த்தைகளில் கடினமான சொற்கள் எதுவும் இல்லை. பொருளிலும், கடினம் இல்லை. ஆனால் கோழியைச் சும்மா அலங்காரம் பண்ணிக் காட்டாமல் அது செயல் செய்யும் நிலையைக் காட்டுகிறார்.

"கொத்தித் திரியும் அந்தக் கோழி"

என்னும் பொழுது, நம்முடைய கைகளைக் கோழி கொத்துவது போல அபிநயம் பிடித்துக் காட்டுவது போல இருக்கிறது. உண்மையில் ஒரு குழந்தைக்கு முன்னால் நாம் பாட்டைச் சொன்னால் அந்தக் குழந்தை தன் விரலை வளைத்துக் கோழி கொத்துவது போலச் செய்யும். இதுதான் அந்தக் கவிதை, குழந்தையின் உள்ளத்தைப் பிணிக்கிறது என்பதற்குச் சாட்சி.

குழந்தைக்குரிய கவிதைகளில் இனிய ஓசையும் துள்ளும் ஒலிக் குறிப்பும் அமைந்திருக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது. அடுத்தது சொற்கள் விள்ளாமல் விரியாமல், பலாச்சுளையை முழுமையாக எடுத்தது போல அமைந்திருக்க வேண்டும். அந்தச் சொற்கள் வெள்ளைச் சொற்களாகவும், சொன்னவுடன் மனத்தில் பொருள் புரியும் வார்த்தைகளாகவும் இருக்கவேண்டும்.

விலங்குகளைப் பற்றியும், இயற்கைப் பொருள்களைப் பற்றியும் சொன்னால், எளிய வருணனைகள் அமைத்தால், மிகவும் பிடிக்கும். கலகல

என்று வரும் ஒலிகளும், கணகண, குடுகுடு என்ற ஒலிக் குறிப்புகளும் குழந்தையின் உணர்ச்சியைத் தூண்டுவன. ஒரு செயலை வருணிக்கும் போது அதற்கு ஏற்ற இசையும் அமைந்தால் குழந்தையும் அந்தச் செயலைச் செய்ய முனையும்.

பாரதியார் குழந்தைக்குப் பூகோளம் சொல்ல வருகிறார். பாரத தேசத்தின் எல்லைகளைச் சொல்ல வருகிறார். வடக்கிலே மிகப்பெரிய இமய மலையும், தெற்கே கன்னியாகுமரி முனையும், கிழக்கும் மேற்குமாகிய இரண்டு பக்கமும் கடல்களும் இருக்கின்றன. அவர் சின்னஞ்சிறிய சொற்களால் மிகச் சிறிய அடைகளை வைத்துப் பாட்டில் சொல்கிறார்.

"வடக்கில் இமய மலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரி முனை பாப்பா
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா"

என்கிறார். இமய மலையைப் பற்றி குழந்தைக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் தமிழ்நாட்டுக் குழந்தைக்குக் குமரிமுனை தெரியும். இங்கே மனிதர்கள் வாழ்கிறார்கள் என்பதும் தெரியும். பனி அடர்ந்த இமயமலையில் மனிதர்கள் நிரந்தரமாக எப்படி வாழ முடியும்? ஆகவே குழந்தைக்குச் சொல்லும் பாடலில்கூட, அழகான அடையைச் சொல்லி நம்முடைய குமரி முனை நாம் வாழ்வதற்குரியது என்பதைச் சொல்லிவிடுகிறார். கடல்களைச் சொல்லும்போது "கிடக்கும் பெரிய கடல்" என்கிறார். அந்த ஒலிக் குறிப்பே அளவிட முடியாமல் விரிந்து கிடக்கின்ற பரப்பைக் காட்டி விடுகிறது. 'பெரீய' என்று குழந்தை கையை விரித்து அநுபவிக்கும்படி இருக்கிறது.

கவிதை, நுட்பமும் திட்பமும், வண்ணமும் வடிவமும், ஓசையும் அழகும் உடையது. பெரியவர்களுக்குக் கவிதை எழுதுவது எளிய காரியம். குழந்தைகளுக்குப் பால் போல் தெளிவாக இருக்கவேண்டும். அதில் கலப்பில்லாத இன்சுவையும் இருக்கவேண்டும். குழந்தையின் மனத்தைக் கெடுக்காததாக இருக்கவேண்டும். குழந்தை இலக்கியத்தில் மிக முக்கியமான இந்த ஒன்றை நாம் கவனித்தல் அவசியம். குழந்தைக்கு என்ன சொல்வது என்று ஆராய்வதைவிட எதைச் சொல்லக் கூடாது என்று ஆராய்வது மிக அவசியம். ஒரு சிற்பி அழகான விக்கிரகத்தைச் செதுக்குகிறான். மண்ணால் பொம்மை செய்கிறவனும் இருக்கிறான். இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. மண் பொம்மை செய்பவன் மண்ணை ஒட்டலாம்; எடுத்துவிடலாம். ஆனால் சிலை வடிப்பவன் அவ்வாறு செய்ய இயலாது. எந்த எந்தப் பகுதி அழகுக்கு மாறுபாடாக இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் செதுக்கிவிடுகிறான். வேண்டாததைச் செதுக்கியபின் சிலை வேண்டிய வடிவு பெற்றுவிடுகிறது. அவன் கல்லைச் செதுக்குவது போல நாம் குழந்தையின் உள்ளத்தில் அழகிய கவிதை பதிவதற்குச் சொல்லையும், பொருளையும் நன்கு தேர்ந்து

எவற்றை ஒதுக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ள வேண்டும். கல்லில் செதுக்குவதும், சொல்லில் ஒதுக்குவதும் இருவகைச் சிற்பிகளுக்கும் இருக்கவேண்டிய திறமை. ஆகவே குழந்தைகளோடு பழகி, குழந்தைகளின் வெள்ளை உள்ளத்தைத் தெரிந்துகொண்டு, அந்த உள்ளத்திற்கு எது கவர்ச்சியை உண்டுபண்ணும் என்பதை நன்கு தெரிந்து, அதில் மாசு ஏற்படாமல் இருக்க, இன்னதைச் சொல்லக் கூடாது என்பதை நீடு நினைந்து கவிதையோ, கதையோ சொல்ல வேண்டும். இப்படிக் கவிதை சொல்பவர்கள் தாமும் குழந்தையாகி நின்றால்தான் குழந்தைகளுக்கென்று கவிதை எழுத முடியும்.

தாய்மார்களும், பாட்டிமார்களும், குழந்தை உள்ளத்தை நன்கு தெளிந்து பழங்காலத்தில் பல கவிதைகளைச் சொல்லிவந்தார்கள். அவற்றை எல்லாம் இப்போது நாம் மறந்துவிட்டோம். ஆனாலும் புதிய குழந்தைக் கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். பழங்காலத்துக் குழந்தைப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டால் குழந்தைக் கவிதைகளின் இலக்கணத்தை ஒருவாறு அவற்றிலிருந்து தெரிந்துகொள்ள முடியும். இக்காலத்துக் குழந்தைக் கவிஞர்கள் நல்ல வகையில் குழந்தையின் உள்ளம் உணரும்படியும், கவியும்படியும் சிறந்த கவிதைகளை இயற்ற வேண்டும்.

அன்பர் குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா இந்தத் துறையில் ஓங்கி நிற்பது நம்முடைய பாக்கியம். குழந்தைகளோடு பழகி, குழந்தைகளின் உள்ளத்தை நன்கு அறிந்து, குழந்தை உலகத்திற்கு எந்தச் சொற்கள் இனிக்கும் என்பதைத் தெரிந்து அவர் கவிதை புனைந்து வருகிறார். அவருடைய வாக்கு வளம் வளரட்டும்!

கல்வி

டாக்டர். மு. வரதராசனார்

மனிதன் குழந்தையாக இருக்கும்போது முதல் மூன்று ஆண்டுகளில் எவ்வளவோ கற்றுக்கொள்கிறான். மனித மூளை அந்த மூன்று ஆண்டுகளில் பெறும் வளர்ச்சியே பெரிய வளர்ச்சி என்று கூறுவார்கள். அதற்குப் பிறகு பத்து ஆண்டுகள் அதற்குச் சிறிது குறைந்த வேகத்துடன் அறிவு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. பிறகு அந்த வேகத்தை வாழ்நாளில் எப்போதுமே காண்பதற்கில்லை. ஆகவே, வேகமாக மூளை வளரும் அந்தச் சிறு பருவத்தில், மூளைக்கு உரிய அறிவு விருந்தைக் குழந்தைகளுக்குக் கொடுத்தபடியே இருக்கவேண்டும். குடலுக்காவது உண்ட உணவைச் செரிப்பதற்கு நேரம் வேண்டும். மூளைக்கு அப்படி நேரம் தேவையில்லை. சுவையான அறிவு விருந்தாக இருந்தால் போதும், உட்கொண்ட உடனே அறிவுணவு செரித்துவிடுகிறது. ஆகவே உறங்கி ஓய்வுகொள்ளும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம், இளமூளைக்கு விருந்து படைத்தபடியே இருக்கலாம். பெற்றோர்களும் ஆசிரியர்களும் சிறுவர்களுக்கு அறிவு விருந்து ஊட்டிக்கொண்டே இருக்கவேண்டும்.

ஆனால், ஒரு வகையில் மிக விழிப்பாக இருக்கவேண்டும். அறிவு விருந்துதானே என்று கருதி, கட்டுரை வடிவில் கருத்துகளைத் திணிக்கக் கூடாது. கட்டுரைகள் சமைக்கப்படாத பச்சைக் காய்கறிகள் போன்றவை. குழந்தைகளின் இளமூளைகள் அவற்றைச் செரிப்பது அரிது. அந்த இடர்ப்பாட்டால் மூளை வளர்ச்சி கெடும்; சோர்வு ஏற்படும்; கல்வியில் வெறுப்பு ஏற்படும். கட்டுரைகளுக்கு ஈடாகக் குழந்தைகள் விரும்பும் அறிவு உணவு ஒன்று உண்டு என்றால், அது குழந்தைகளின் கண்கள் பொருள்களை நேரே பார்த்துக் கற்றுக்கொள்ளும் காட்சி அறிவு ஆகும். ஆகவே பொருள்களைக் காட்டி இயக்கியும், அவை பற்றிய படங்களைக் காட்டி விளக்கியும் சிறுவர்களின் அறிவைப் பெருக்கலாம். அவற்றையும் சிறுவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையில் காட்டி விளக்கவேண்டும். சில இடங்களுக்கு நேரே அழைத்துச் சென்று அங்கே காணும் காட்சிகளின் வாயிலாக அறிவுபெறும்படியாகச் செய்யலாம்.

அறிவு என்பதே புலன்களின் துணைகொண்டு—சிறப்பாக, கண் செவி ஆகியவற்றின் துணை கொண்டு—வளர்வதாகும். ஆகவே, சிறுவர்களுக்கு அத்தகைய காட்சிகளைக் கண்டு அறிவு பெறுமாறு செய்வது கடமையாகும்.

இவை தவிர, வேறு ஒன்றும் சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுவதாகும். அது, சிறுவர்களிடத்தில் சிறு பொருள்களைக் கொடுத்து விட்டு, அவர்களின் கையால் அந்தப் பொருள்களைக் கொண்டு ஏதேனும் செய்யச் சொல்வது. அது சிறுவர்களுக்கு விளையாட்டுப் போன்ற கல்வியாகும். மூளையில் கிளர்ச்சி உண்டுபண்ணும் கல்வி அது. சிறுவர்களுக்கு இயல்பாக உள்ள படைப்புத்திறன் வளர்வதற்கு அது உதவியாகும். மற்றவர்கள் செய்வதைப் பார்த்துப் பின்பற்றும் இயல்பை வளர்த்து அதன் வாயிலாக அறிவை வளர்ப்பதற்கும் அது பயன்படும்.

குழந்தைகளின் அறிவுப் பசிக்குப் போதிய, தகுந்த உணவளிக்கப் படவேண்டும். இல்லையெனில் குழந்தைகளின் மனம் சரியான வழியில் செல்லாமல் கோணல் வழியில் செல்லும். அப்போது வருந்திக் கவலைப் படுவது நோய் வந்தபோது கவலைப்படுவதைப் போன்றது. வருமுன் காப்பதே முதல் கடமை; அதுவே அறிவுடைமைக்கு அறிகுறியாகும். நல்ல சமுதாயம் குழந்தைகளின் நன்மையையே முதலில் போற்றி மகிழும்.

'மனிதன் வளர்ந்த பின் அவனிடம் குறை இருப்பதற்குக் காரணம், குழந்தைப் பருவத்தில் அவனிடம் இருந்த குறை திருத்தப்படாததுதான்' என்று மேல்நாட்டு உள நூல் அறிஞர்கள் கண்டு பிடித்துள்ளனர். நாம் உடலை எப்படி குழந்தைப் பருவத்திலிருந்து காக்கின்றோமோ அப்படியே உள்ளத்தையும் அந்தப் பருவத்திலிருந்தே கருத்துடன் காக்கவேண்டும்.

குழந்தைகளுக்குக் கலையுள்ளம் இயற்கையாகவே இருக்கிறது. இது வளர்க்கப்படவேண்டும்; பண்படுத்தப்பட வேண்டும். விளையாட்டாகவே படிப்பதற்கு வகை செய்யப்படவேண்டும். கல்வியிலே விளையாட்டு, விளையாட்டிலே கல்வி என்ற முறை நல்லது.

இவை தவிர, சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் இரண்டு, மிகச் சுவையானவை. அவை கதையும் பாட்டும் ஆகும். சிறுவர்களுக்கு இவற்றில் தீராப் பசி உண்டு. சிறுவர்கள் வளரும் வயதில் கதைகளையும் பாட்டுகளையும் கற்பிப்பதால், அவர்களின் மூளை திறமான வளர்ச்சி பெறும்.

குழந்தைகளுக்கு எழுதுவது அரிய செயல். சொல்லும் கருத்தும் எளிமையாக இருக்க வேண்டும். உள நூல் அறிவும் இதற்குத் தேவை.

அந்தக் காலத்திற்கும், இந்தக் காலத்திற்கும் கல்வி முறையிலே வேறுபாடு மிகுதி. இந்தக் காலத்தில் மூன்றும் வகுப்பிலேயே கதைப் புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இந்தியா ஏழை நாடாக இருந்தபோதிலும், குழந்தைகள் கையில் புத்தகங்கள் காணப்படுகின்றன. ஆனல், இப்புத்தகங்களில் குழந்தை களுக்கான பொருள்கள் இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும். 10 முதல் 16 வயது வரையுள்ள பிள்ளைகளைக் கவரும் எண்ணத் துடன் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அசட்டை செய்கின்றனர். இது தவறு. வயதுக்குத் தக்கபடி புத்தகங்கள் எழுதப்படவேண்டும். குழந்தைகளிடம் நல்ல ஒழுக்கமும் ஆராய்ச்சி மனப்பான்மையும் ஏற்பட நல்ல கருத்துகளைத் தரவேண்டும்.

கதைகள் பெரும்பாலும் பறவைகளைப் பற்றியும் விலங்குகளைப் பற்றியும் அமையலாம். சில கதைகள் சிறுவர்களைப் பற்றி அமையலாம். குழந்தைகளின் கதையிலே ஆண், பெண்களைக் கணவன் மனைவி என்பதைவிட அப்பா, அம்மா என்று அறிமுகப்படுத்த வேண்டும். அவர்கள் எல்லா ஆண் பெண்களையும் அப்பா அம்மா என்றே பார்க் கின்றனர். வயது உணர்ச்சிக்கேற்ற சொற்களையும் பொருள்களையும் பாத்திரங்களையும் வைத்தே எழுத வேண்டும். அந்தக் கதைகளைக் கேட்பதால் சிறுவர்களின் மனம் விரிவடையும்; உணர்ச்சி பண்படும். புறத்தே உள்ள கண்கள் வெளியே காணும் காட்சிகளைக் காண்பன. அவை போல அகத்தே காட்சிகளைப் படைத்து இன்ப துன்ப உணர்ச்சிகளை உணரும் கற்பனைத்திறன் உண்டு. அந்த அகக் காட்சிகளைப் படைத்துக் காண்பதற்கு உதவுவது அகக்கண் அல்லது மனக்கண்; கற்பனைக் கண் என்றும் அதைக் குறிப்பிடலாம். அந்த மனக்கண் மனிதப் பிறவியின் சிறப்பியல்பு. அதன் வளர்ச்சியாலேயே, மனித நாகரிகம் வளர்ந்து வந்திருக்கிறது; அரசாங்க அமைப்பு, கலைவளர்ச்சி, சமயநெறி முதலிய வற்றிற்குத் திட்டமிட்டு வழிவழியாக வளர்த்துவருவதற்கும் அதுவே அடிப்படையாக இருந்து உதவுவது. அத்தகைய மனக்கண்ணை வளர்ப் பதற்குச் சிறுவர்களுக்கு மிகத் தேவையானவை கதைகள். கதைகளைக் கேட்கும்போது (அல்லது, படிக்கும்போது) சிறுவர்களின் மனம் அந்தக் கதைகளில் வரும் நிகழ்ச்சிகளை மனத்திரையில் அப்படி அப்படியே தீட்டிக்கொள்கின்றன. அதனுல் சிறுவர்களின் மூளை வேகமான வளர்ச்சி பெறுகிறது.

சிறுவர்கள் வளர்ந்து இளைஞராகும்போது, வரலாறு, மொழிகள், அறிவியல், அரசியல் முதலியவற்றைக் கற்கவேண்டியுள்ளது. அவற்றிற் குப் பெரும்பங்கான நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது. அவற்றில் ஈடுபட்ட இளைஞர்களின் நெஞ்சம், எந்தக் கதையையும் உண்மை என நம்புவதில்லை. ஆகையால், கதைகளைக் கற்றுலும், சிறுவர்கள்போல் நம்பிக் கற்பதில்லை. சிறுவர்கள் கதை நிகழ்ச்சிகளைக் கேட்கும்போது,

அந்தந்த உணர்ச்சிகளை அப்படி அப்படியே உணர்கிறார்கள். தம்மை மறந்து கதைகளில் ஈடுபட்டு ஒன்றிவிடுகிறார்கள். பொய் என்றோ, கற்பனை என்றோ ஆராய்ச்சியறிவுடன் ஒதுக்குவதில்லை. கதைகளில் வரும் வாழ்க்கைகளை அவர்களின் மனம் அப்படியே வாழ்ந்து உணர்கிறது. நாடகம் பார்ப்பவர்கள் நாடக நிகழ்ச்சிகளில் ஒன்றிவிடுவது போல், கதை நிகழ்ச்சிகளில் சிறுவர்களின் மனம் ஒன்றிவிடக் காண்கிறோம். அந்த மனநிலை, வளர்ந்த இளைஞர்களிடம் காண முடியாதது. இளைஞர்கள் கதைகள் படித்தாலும் அந்தக் கதைகள் வேறு. அவைகள் துப்பறியும் கதைகளாக, அல்லது காதலின் கோணல்களைக் காட்டும் கதைகளாக இருக்கும். அவற்றால் மனம் பண்படுவது அரிது. அல்லது, சமுதாயச் சிக்கல்களைக் காட்டும் நல்ல கதைகளாகவே இருந்தாலும், இளைஞர்கள் ஆராய்ச்சி அறிவுடனே அந்தக் கதைகளைக் கற்பார்கள்.

தவிர, வரலாறு முதலியவற்றை நெஞ்சில் பதியுமாறு கற்கவேண்டுமானால், மனக்கண் வளர்ச்சி பெற்றிருந்தால்தான் முடியும். அதற்குச் சிறுவராக இருக்கும்போது கதைகளைப் படித்தும் கேட்டும் பெற்ற பயிற்சி தேவையாகிறது. ஆகவே எவ்வகையில் நோக்கினாலும், சிறுவர்களாக வளரும்போதே, அவர்களின் மூளையும் கதைகளின் வாயிலாக விரிவடையப் பெற்றிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.

இன்னொரு வகையில் பார்த்தாலும், அந்த வயதில் கதைகளைப் புகட்டவேண்டிய தேவை புலப்படுகிறது. நாகரிகம் வளரவளர, இளைஞர்கள் பல வகை மக்களோடு பழகவேண்டி ஏற்படுகிறது. பல வகை நூல்களையும் வாரஇதழ் திங்கள் இதழ்களையும் படிக்க நேர்கிறது. பல வகைத் திரைப்படங்களையும் பார்க்க வாய்ப்புக் கிடைக்கிறது. இளமையில் இவற்றில் ஈடுபடுவதால், எது நல்ல வழி, எது தக்க நெறி என்று தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியாத குழப்பம் விளைகிறது. இதுவா அதுவா என்று திகைக்கிற நிலையில் மனம் இருக்கும்போது யார் நெருங்கிப் பழகுகிறார்களோ அவர்களையே சார்ந்து, அவர்களின் வழியையே கண்மூடிப் பின்பற்றிவிடுகிறார்கள். ஆனால் எல்லோரும் இப்படி ஆவதில்லை. நெஞ்சில் நல்வாழ்க்கை பற்றிய கதைகள் பதியாத சிறுவர்களே, இளைஞர்களாக வளரும்போது இப்படி ஆகிவிடுகிறார்கள். நல்ல நெறியைப் புகட்டும் கதைகளைக் கற்று மனம் பண்பட்ட சிறுவர்கள் இப்படி ஆவதில்லை. அந்த நல்ல கதைகள் நன்மை தீமைகளைத் தெளிவாகப் பிரித்துக் காட்டி நெஞ்சில் ஒருவகை அடிப்படை இட்டிருப்பதால், இளைஞராக வளரும்போது நல்லவற்றை விரும்பவும் தீயவற்றை வெறுக்கவும் ஆற்றல் பெறுகிறார்கள். அந்நிலையில் உதவாத நூல்களையும் இதழ்களையும் படித்தாலும் கெடாத உரம் பெற்றுவிடுகிறார்கள். அந்த நூல்களையும் இதழ்களையும் மெல்ல மெல்ல வெறுத்துவிடுகிறார்கள். அப்படியே தகாத திரைப்படங்களையும் தீய நண்பர்களையும் வெறுக்கக் கற்றுக்கொள்கிறார்கள். நல்ல அடிப்படை அவர்களின் உள்ளத்தில் இருப்பதால்,

இளைஞர்களாகக் காணும் உலகத்தின் புயலும் கொந்தளிப்பும் அவர்களைத் தாக்குவதில்லை.

அப்படிப்பட்ட பயன் உடைய கதைகளுக்கு அடுத்தபடியாகச் சிறுவர்களின் மூளை விரும்பும் உணவு பாடல்கள் ஆகும். சிறுவர்களுக்கு உரிய பாடல்களில் ஆழ்ந்த பொருள் பொதிந்திருக்கத் தேவையில்லை. நயங்கள் இருக்கத் தேவையில்லை. ஒரு கருத்து அல்லது இரண்டு கருத்துக்கு மேல் அமையாத எளிய சிறு பாடல்கள் வேண்டும். அவற்றில் வந்த சொற்கள் திரும்ப வரவேண்டும். வந்த ஒலியே திரும்ப அமையும் எதுகை மோனைகள் நிரம்பவேண்டும்; அளவுபட்ட அழகான ஓசை நயங்கள் (ரிதம்) நன்றாக அமையவேண்டும். செவிக்கு இன்பம் பயக்கும் பாடல்களாக அவை இருக்கவேண்டும். அவற்றால் மூளை பெறும் பயன் என்னவென்றால், ஒருவகை ஒழுங்குமுறைப் பயிற்சி ஆகும். கண்ட படி கோணல்மாணலாக இயங்காமல், ஒருவகைக் கட்டுப்பாட்டுடன் இயங்குவதற்கு மனம் கற்றுக்கொள்ளும். மூளை களைப்பு நீங்கி ஊக்கம் பெற்று உழைக்கும். இந்தப் பயன் கருதியே சிறுவர்களுக்குப் பாடல்களைக் கற்றுத்தர வேண்டும். பாடல்களைப் படிக்கச் செய்வதால் பயன் இல்லை. வாய்விட்டுப் பாடச் செய்யவேண்டும். செவி, திரும்பத் திரும்பக் கேட்டு இன்புறச் செய்யவேண்டும். அவற்றின் பொருளை இன்னது என்று சுட்டிக்காட்டி, அந்த அளவோடு விட்டுவிட வேண்டும். பிறகு பொருளை அவர்களே பாடிப்பாடி உணர்ந்துகொள்வார்கள். பாடல்கள் அவ்வாறு எளிமையும் தெளிவும் ஒலிநயமும் உடையனவாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் சில தலைமுறைகளுக்குமுன், சிறுவர்களுக்குக் கதையும் பாட்டும் ஊட்டி வளர்க்கும் முறை வீடுதோறும் இருந்துவந்தது. கதையுணவும் பாட்டுணவும் பள்ளிக்கூடங்களில் தருவதைவிட மிகுதியாக வீடுகளில் பாட்டிமாரும் பெற்றோரும் அளித்துவந்தார்கள். 'கற்றலின் கேட்டலே நன்று' என்று இருந்து வந்த காலம் அது. காலம் மாறியது. அச்சு நூல்கள் பெருகின. கேட்டலின் கற்றலே மிக்கது என்று ஆயிற்று. வீடுகளில் பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஓய்வு குறைந்தது. கதை சொல்ல நேரம் வாய்ப்பது அரிது ஆயிற்று. பள்ளிக்கூடங்களிலும் இரண்டு மூன்று புத்தகங்களைப் படிக்கும் நிலைமை மாறி, சின்ன வயதிலேயே இருபது முப்பது புத்தகங்களைச் சுமக்கும் நிலைமை ஏற்பட்டது. வீடு ஓய்வு இல்லாத பட்டறை ஆகியது; பள்ளிக்கூடம் அமைதி குறைந்த தொழிற்சாலை ஆகியது. இந்த நிலையில் சிறுவர்களின் கதைப்பசியையும் பாடற்பசியையும் உணர்ந்து அமைதியாக ஊட்டும் சூழ்நிலை இல்லை. கதைகளையும் பாடல்களையும் அச்சிட்டு, படங்களுடன் விளக்கங்கள் தந்து, சிறுவர்களே தட்டுத்தடுமாறிப் படித்து, ஈடுபாடு கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால் உணவைப் பிசைந்து ஊட்டும் நிலை குறைந்து, உணவைத் தாமே அள்ளி

உண்ணும் நிலை உள்ளது. ஆகவே, கதை நூல்களும் பாட்டு நூல்களும் எழுதி அளிப்பவர் பலர் தேவையான காலம் இது. உலகமெல்லாம் இந்த நிலை உள்ளது. தமிழகத்தில் சென்ற தலைமுறையில் கா. நமச்சிவாயர் முதலியவர்கள் சிறுவர்களின் தேவைக்கு ஏற்றபடி, சிறுசிறு சொற்களால் எளிய கதைகளையும் பாடல்களையும் இயற்றித் தந்தார்கள். இந்தத் தலைமுறையில் இத்துறையில் பலர் தொண்டாற்றிவருகிறார்கள். அவர்களுள் குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா ஆற்றிவரும் தொண்டு தனிச்சிறப்புடன் போற்றத்தக்கதாகும்.

அறிவியல்

கே.எஸ்.மகாதேவன்

அறிவியல் கற்பிக்கப் புதிய முறைகளும், கருவிகளும் நம் பள்ளிகளில் நுழைந்தபடி இருக்கின்றன. இருந்தாலும், கல்வி யாளரும், பெற்றோரும், பொதுமக்களும் ஓர் அடிப்படையான கேள்வியை எழுப்பத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். "நாம் செல்ல வேண்டிய வழியில்தான் சென்று கொண்டிருக்கின்றோமா?" என்பதே அக்கேள்வி! இவ்வாறு கேட்பது ஏதோ அணுக்குண்டுகளையும் இராக்கெட்டுகளையும் கண்டு அஞ்சியதன் விளைவு என்று யாரும் எண்ணி விட வேண்டாம். இறப்பைக் கண்டு எத்தகைய அச்சமும் இல்லாமல்தான் கேட்கின்றோம்; அறிவியல் மீது இன்று நாம் கொண் டுள்ள 'திடீர் ஆர்வம்' நமக்கு வளம் அளிப்பதுதானா?

அறிவியல் தூண்டல்!

நம் குழந்தைகள் தூண்டல் செய்யா மணிவிளக்குகள்! அவர் களின் அறிவுச்சுடரை நாம் அணையாமல் பார்த்துக் கொள்வதே போதும். யாரும் சென்று கோலெடுத்து அதனைத் தூண்ட வேண்டு வதில்லை! ஆனாலும், அறிவியல், வாழ்க்கையில் அதிக இடம் பெறுவ தால் அறிவியலில் ஆர்வம் கொள்ளக் குழந்தைகளைத் தூண்ட வேண்டும் என்று சிலர் பேசுவதை அடிக்கடி கேட்கின்றோம். இன்று செய்தித்தாள்களும், புத்தகங்களும், வானொலியும் கிளர்ச்சியூட்டும் அறிவியல் 'செய்திகளை' வெளியிட்டுக் கொண்டிருப்பதையும் காண கின்றோம். இன்று திங்களில் அடிவைத்து மீண்ட மக்களினம் எதிர் காலத்தில் ஏனைய கோள்களில் குடியேறப் போவதையும், அலைவீசும் நீலக்கடல்கள் பயிர் விளையும் பசும்பழனங்களாக மாறப்போவதை யும், அணுவாற்றல் வளர்ந்து எரிபொருள் என்ற சொல்லையே அகராதியிலிருந்து விரட்டிவிடப்போவதையும், கடலை அணையிட்டுத் தேக்கி அல்லற்படும் இன்றைய நிலை நீங்கி ஆழ்கடலின் அடியி லேயே நகரங்கள் முளைக்கப் போவதையும் குழந்தைகள் அறிந்து மெய் சிலிர்க்கின்றனர்! சிந்திக்கும் ஆற்றலைப் போதிய அளவிற்கு வளர்க்

காது கிளர்ச்சியூட்டுகின்ற தூண்டல்கள் அறிவியல் கல்விக்கு உண்மையில் துணைசெய்ய மாட்டா. அவ்வாறே ஆய்ந்து காணுமல் அறிவியல் பயிற்ற மேற்கொள்ளப்படும் முறைகளும் நல்ல முன்னேற்றத்திற்கு வகைசெய்ய மாட்டா. அறிவியல், வாழ்வில் அதிக இடம் பெற்றுள்ளதால் இத்தகைய அறிவியல் தூண்டல்கள் வேண்டும் என்பதற்கும், பால் உணர்வு வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெறுவதால் குழந்தைகள் பால் உணர்வு பற்றிப் பேசும் இலக்கியங்களை மிகுதியாகப் படிக்க வேண்டும் என்பதற்கும் வேற்றுமை காண்டல் அரிது!

முறைவழி எண்ணும் திறப்பாடு

அறிவியல் என்ற பெயரில் நம் குழந்தைகள் பாறைகள், செடிகள், விலங்குகள், பூச்சிகள், மூச்சு விடுதல், இரத்தச் சுழற்சி, வானியல், பருவங்கள், வான்வெளிச் செலவு போன்ற பல்வேறுபட்ட செய்திகளையும் மூளையில் ஏற்றிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு செய்திகளை மூளையில் பதிவு செய்வதைப் போலி அறிவியல் முறை என்றுதான் சொல்லவேண்டும். சிந்தனையை நெறிப்படுத்திச் செயல்படச் செய்யும் முறைதான் உண்மை அறிவியல் ஆகும்! அறிவியலில் காலம், தொலைவு, வேகம், ஆற்றல், வெப்பநிலை போன்ற எண்களால் குறித்து உணர்த்தப்படும் அளவுகள் எத்துணையோ உள்ளன. அவற்றை அடியாகக் கொண்டு எழும் சிக்கலான வினாக்களுக்கு விடை காண இன்றைய மாணவர்கள் அஞ்சுகின்றனர். பாடப்புத்தகங்களிலும் அறிவியல் கணக்குகள் வெறும் பிற்சேர்ப்புக்களாகவே இணைக்கப்படுகின்றன! உழைத்துச் சிக்கல்களை ஆய்ந்து விடுவிக்கும் அடிப்படைத்திறனை அவர்கள் பெறுது போய்விடுகின்றனர். செய்திகளை நேர் முகமாகத் தெரிந்து கொள்வதினும் அறிவியல் அடிப்படையில் முறைப்பட எண்ணி முடிவு செய்யும் பயிற்சியைக் குழந்தைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே அறிவியல் கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். பொருள்களைக் காணுதல், வகைப்படுத்துதல், பொதுவான ஒரு விதியை உருவாக்குதல், அதன் வரையறையைத் தீர்மானித்தல், ஏதேனும் ஒன்று அப்போது விதியுடன் முரணித் தோன்றினல் அதனையும் அடக்கும் வகையில் பொது விதியில் தகுந்த மாறுதலைச் செய்தல் போன்ற செயல்களை—முறைவழிச் செய்து முடிக்கும் திறப்பாட்டைக் குழந்தைகள் பெற வேண்டும். இரும்பு, நீரில் மூழ்கிவிடும்; ஆனல் இரும்பால் செய்த கப்பல் நீரில் மிதக்கின்றது; ஆக்சிஜன் இல்லாத இடத்தில் எதுவுமே எரியாது; ஆனல் எதுவுமே இல்லாத வெளியில் ஞாயிறு எரிந்து கொண்டிருக்கிறது! இவ்வாறு முரணித் தோன்றும் செய்திகளைப் பொருத்திக் காணும் பயிற்சி நம் குழந்தைகளுக்கு மிகவும் வேண்டுவதாகும். கைவிரலை மணலில் தேய்த்து எழுதிப் பழகிய

காலமும், அரை, கால், அரைக்கால், வீசம், முந்திரி முதலிய கீழ் இலக்கங்களின் பெருக்குப் பலன்களை மனப்பாடம் செய்த காலமும், "திட்டைச் சேரியில் எட்டுப்பனை, பனைக்கு எட்டுப் பொந்து, பொந்துக்கு எட்டு ஆந்தை, ஆந்தைக்கு எட்டுக் குஞ்சு, குஞ்சுக்குக் காற்படி அரிசி" என்று அடுக்கிப் பெருக்கப் பயின்ற காலமும் இன்று பழஞ்செய்திகளாகி விட்டன! இன்றைய குழந்தைகள் வண்ணப்படங்கள் நிறைந்த புத்தகங்களை விரித்துப் பொம்மை பார்ப்பதுடன் நின்று விடுகின்றனர். எண்களின் பெருக்கல் வாய்ப்பாடுகளைக்கூட நினைவில் கொள்ளாத நிலையில் மேல் வகுப்புகளுக்குச் சென்று அங்கு எதிர்ப்படும் எண்களின் அடுக்குகள் எண்களின் மூலங்கள், சமன்பாடுகள் ஆகியவற்றைக் கண்டு மலைக்கின்றனர். 'பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது' என்ற ஏளன மொழியும் காலப்போக்கில் எழுந்துவிட்டது. பகுத்தறிவு பற்றியோ இன்று கேட்கவே வேண்டாம். கண்டது பாம்பு, கடித்தது மாங்கொட்டை, அடித்தது பிசாசு! என்ற நிலை ஏற்பட்டு விட்டது. 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றிருந்த நிலை மங்கி வருகிறது!

இளமையும் கல்வியும்

இளமையிலேயே கற்றலைத் தொடங்க வேண்டும் என்ற கருத்தில்தான் ஔவை மூதாட்டி 'இளமையில் கல்' என்று கூறினர். எல்லாவற்றையும் இளமையில் கற்றுவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பதோ, எல்லாவற்றையும் இளமையிலேயே கற்றுவிட்டோம் என்று மன நிறைவு கொள்வதோ அறிவுடைமையாகாது! ஐன்ஸ்டீன் போன்ற அறிஞர்கள் அனுபவமும், வயதும் வளர வளர அறிய வேண்டுவன எவ்வளவோ உள்ளன. என்பதை உணர்ந்து, வியந்து, ஆராய்ந்து அறிவியலில் பெரும் புரட்சியைச் செய்திருக்கின்றனர். கற்றல் என்பது தொடர்ந்து நிகழ்த்த வேண்டிய ஒரு செயல். எதனையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற அறிவுப்பசி—அறிவியல் ஆர்வம் குழந்தை நிலையில் தொடங்கி இறுதி நிலை வரையிலும் நீடித்தல் வேண்டும். வசதியும், வாய்ப்பும் அமையாத நிலையில், நல்லாசிரியரும் நல்ல புத்தகங்களும் இல்லாத நிலையில், குழந்தைகளுக்கு ஊட்டும் அறிவியல் கல்வி அவர்களின் அறிவுப்பசியை மந்திக்கச் செய்து விடுகிறது. பெரியவர்களான நிலையில் அறிவியலுக்கே முழுக்குப் போட்டு விடுகின்றனர்! தோன்றில் புகழொடு தோன்றுக என்னும் பொன்மொழியை மறந்து உத்தியோகம் புருஷலட்சணம் என்ற அவலட்சண மொழிக்கு அடிமையாகி வாழ்நாளை ஓட்டுகின்றனர்!

கலை உரைத்த கற்பனை

கலையுலகம் என்பது கற்பனைவளம் செறிந்த ஒரு தனி உலகம். 'கண்களில் தீப்பொறி பறந்தது' என்று பேசுவதுதான்

கலையுலகத்து மொழி. ஆனல், அந்தத் தீப்பொறியைக் கொண்டு சூடத்தைக் கொளுத்தவோ, சுருட்டைப் பற்ற வைக்கவோ முடியாது! பால் போல் நுரைத்துப் பொங்கும் கடல்தான் பாற்கடல். அங்குப் பசுவின் பாலோ, எருமைப் பாலோ, அல்லது சத்தூட்டப்பட்ட பாலோ இருக்கும் என்று எண்ணுவது மடமையாகும். முத்து சிப்பியில்தான் பிறக்கும் என்ற கட்டுப்பாடு கலையுலகத்தில் இல்லை. கரும்பிலும் மூங்கில் கணுவிலும், யானை மருப்பிலும் பிறக்கும். இன்னும் சொல்லப் போனல் தலைவனை விரும்பி ஏங்கும் தலைவியின் கண் களிலும்கூட மாலை மாலையாக முத்துக்கள் தோன்றி உதிரும்! மாணவர் உலகம், குழந்தைகள் உலகம், அரசியல் உலகம் என்று மக்கள் பேசுவது போன்றே தேவர் உலகம், நரகர் உலகம் என்று கலை உலகம் பேசும். மாணவர் உலகத்திற்குச் செல்ல இராக்கெட் தேடுவதோ, அரசியல் உலகத்திற்குச் செல்ல அந்தரத்தில் எழுந்து உயர்வதோ நகைப்பிற்கிடமாகும் என்பது வெளிப்படை. அவ்வாறே தேவர் உலகம் என்றதும் மேல் நோக்குவதோ, நரகர் உலகம் என்றதும் கீழ் நோக்குவதோ பொருளற்ற செயலே யாகும்! இருபத்து நான்கு மணிக்கு ஒரு முறை சுழன்று கொண் டிருக்கும் பூமியில் நாம் இருக்கின்ருேம்; பன்னிரண்டு மணிக் காலத்தில் தேவர் உலகம் இருந்த திசையில் நரகர் உலகமும், நரகர் உலகம் திசையில் தேவர் உலகமும் வந்துவிடும்! கலை யுரைத்த கற்பனையை நிலை எனக்கொள்வதைக் கண்மூடி வழக்கம் என்று இராமலிங்க அடிகள் கூறி மக்களை எச்சரிக்கின்ருர்; அச் செயல் குழந்தைகளின் அறிவியல் உள்ளத்தையே பாழ்செய்து விடுவதால் அது மண்மூடிப் போக வேண்டும் என்றும் வலியுறுத்து கின்ருர். இன்று நாம் அடிக்கடி கேள்விப்படும் மறுபிறப்பு எடுத்த மகவு, கருவில் கதை பேசும் குழந்தை, உண்ணுது உயிர்வாழும் மங்கை, பூமியைப் பிளந்து புறப்படும் கற்சிலை போன்ற 'அற்புதங்கள்' எல்லாம் கலையுரைத்த கற்பனையை நிலையெனக் கொள்வதால் எழுகின் றவையே! அறிவியல் ஒளியின் முன்னர் அவை யாவும் இயக்குவோர் பின்னின்று தூண்ட நாணல் உயிர் மருட்டும் பொம்மலாட்டங் களாகி விடுவதைக் காண்கின்ருேம். இத்தகைய 'அற்புதங் 'களைக் கேட்டுக் குழம்பும் குழந்தைகளைப் பார்த்துப் பெற்ருேரும், ஆசிரியரும் "கேழ்வரகில் நெய் வடிகிறது என்ருல் கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று?" என்ற அறிவியல் மொழியினை நினைவூட்டித் தெளிவிக்க வேண்டும்.

தமிழும் அறிவியலும்

தமிழில் வெளிவரும் அறிவியல் நூல்களில் பல வெறும் மொழி பெயர்ப்பாக இருக்கின்றன; அறிவியலை முற்றிலும் அயல் நாட்டுச் சரக்கு என்ற அளவிலேயே அறிமுகப்படுத்துகின்றன! "மேற்கத்திய

நாடுகளின் தொடர்பு தமிழ்நாட்டில் ஏற்பட்ட பின்பே விஞ்ஞானம் இங்கே தலைகாட்டத் தொடங்கிற்று'' என்று பேசுகின்றவர்களையும் நாம் காண்கின்றோம். காட்சித் திறனும் ஆராய்ச்சி உள்ளமும் இருக்கும் எந்த ஒரு நாட்டிலும் அறிவியல் வளரவே செய்யும் என்ற உண்மையை ஏனோ இவர்கள் உணர்வதில்லை! குழந்தைகளுக்காக எழுதப்படும் இன்றைய அறிவியல் ஏடுகளில் அறிவியலில் முன்னோடிகளாகத் திகழ்ந்த நம் நாட்டுப் பெரியார்களின் கருத்துக்களைச் சிறிதேனும் குறிப்பிட்டுச் செல்லும் நிலை இன்னும் ஏற்படவில்லை. நீர்ப்பொருளை அழுத்திச் சுருக்க முடியாது என்று பதினேழாவது நூற்றாண்டில் வாழ்ந்திருந்த பாஸ்கல் (Pascal) கூறினர் என்று குழந்தைகள் முன்னர் பேசும்போது அவர்கள் மனத்தில் இளமையிலேயே இடம் பெற்றுள்ள "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் நாழி முகவாது நானாழி" என்ற ஔவையார் சொல்லுக்கும் உரிய இடம் அளித்தாக வேண்டுமன்றோ? கலிலியோ மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மடித்துத் தூசி போய்விட்டதா என்று பார்க்கப்போய்த் தொலைவிலுள்ள கோபுரம் அருகிலே வந்து தெரியும் தொலைநோக்குக் காட்சியைக் கண்டார் என்று கதையளக்கும் பொழுது கலிலியோவிற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே

"தினையளவு போதாச் சிறு புன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்!"

என்று கண்டுகூறிய கபிலரின் காட்சித் திறனைக் கூறாமல் செல்வது அறிவியலாகுமா? நீண்டு தொங்கும் ஊசலினும், நீளம் குறைந்து தொங்கும் ஊசல் விரைந்து ஆடுகிறது என்று தெளிவாகக் கூறும் சிவஞான முனிவரை அறிவியல் எல்லைக்கு அப்பால் துரத்திவிட்டுக் கலிலியோ கோவிலுக்குச் சென்றதையும்'' அங்கு ஆடிய விளக்கைக் கண்டு எளிய ஊசலின் இயக்கம் பற்றிய முறைமையைக் (Laws of simple pendulum) கண்டுபிடித்து விட்டார் என்று பேசுவதிலும் என்ன வரலாற்று உண்மை இருக்க முடியும்? பறவைகளின் எலும்புக்கூட்டில் அடைபட்டுள்ள காற்று உடல் வெப்பத்தால் விரிந்து இலேசாவதால் பறவைகள் காற்றிலே மிதக்கின்றன என்று பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் மேல் நாட்டினர் அஞ்ஞானம் பேசிக்கொண்டிருந்ததைக் காண்கின்றோம்! ஆனால், ஒன்பதாம் நூற்றாண்டிலேயே பறவைகள் காற்றை விடக் கனமானவை என்றும், காற்றில் மிதப்பதில்லை என்றும், அவை சிறகடித்து உந்தி எழுவதாலேயே உயர்ந்து 'விண் தவழ் மேகம் போழ்ந்து விசும்பிடை ஏகுகிறது' என்றும், பின்னர் இறங்கும் போது காற்றினைக் கிழித்தபடி சறுக்கித் தாழ்ந்து 'கண்டவர் மருள வீழ்ந்து கால் குவித்து' இறங்குகின்றன என்றும் கூறிய திருத்தக்க தேவருக்கு அறிவியல் வரலாற்றில் இடமில்லை என்றால் அது எங்ஙனம் அடுக்கும்?

அறிவியலை அயல்நாட்டுப் பண்பாடு என்று கருதுவதால் போலும் நம் குழந்தை நூல்களில் அறிவியல் தலை காட்டவும் தயங்குகிறது! அன்னம், வாத்து போன்ற நீரில் நீந்தும் பறவைகள் மரக்கிளைகளைப் பற்றி அமரும் கழுகுகளைப்போல் கால் விரல்களைப் பெற்றுள்ளன. ஆர்டிக் பகுதியிலே பனிப்பாறையில் நின்றபடி 'வால் ரஸ்' வேட்டையாடும் மனிதன் வெப்ப மண்டலத்துச் சென்னைக் கடற் கரையில் வாழும் பரதவர் போன்று இடையிலே முழத்துண்டு மட்டும் உடுத்தி நிற்கின்றான்! அணுவைப் பற்றி அறிமுகப் படுத்தும் ஒரு புத்தகம் காலைக் கதிரவன் சாளரத்தின் வழியே எட்டிப்பார்க்கும் போது 12 மணி, 20 நிமிடம் காட்டும் ஒரு கடிகாரத்தையும் அறிமுகப்படுத்து கிறது! வானவில்லிற்கு விரும்பியவாறு வண்ணங்களைத் தரும் ஏடு களும், வானவில்லையும் ஞாயிற்றையும் ஒரே திசையில் வைத்துப் 'பூமத்தாப்பு' வேலை செய்யும் புத்தகங்களும் இல்லாமல் இல்லை! அனுமன் எடுத்த மலையின் அடிப்பகுதியைத் தட்டையாகத் தீட்டிக் காட்டும் ஓவியர்கள் "அங்கது வேரொடு அங்கை தாங்கினன்" என்று பேசும் கம்பரிடமாவது அறிவியல் கற்றுத் திருந்தலாம்! இலக் கியம் அறிவியலுடன் குழைந்து மணம் வீசினல் தான் இளைஞருலகம் அதனை விரும்பி ஏற்கும்.

சித்திரக் கதை

வாண்டுமாமா

என் நண்பரொருவர். அவர் பாரதப் பிரஜைதான். ஆனாலும் அவருக்கு அந்நிய நாட்டினர்களைப் புகழுவதில் ஒரு தனி ஆனந்தம். ஒரு நாள் அவர் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் வரும் சித்திரக் கதைகளைப் பற்றி என்னிடம் கொஞ்சம் தாராளமாகவே பேசினார். நாலைந்து அயல்நாட்டுப் பத்திரிகைகளை என் முன்னால் எடுத்துப்போட்டு, "நீங்களும் படக்கதை போடுகிறீர்களே, இதோ பாருங்கள். இதன் காலில் கட்டி அடிக்கவேண்டும். உங்கள் சித்திரத் தொடர் கதைகளை!" என்றார். "அதுமட்டுமா? வெள்ளையனைப் போலவே நாமும் எல்லாம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டால் மட்டும் போதுமா?" என்று ஏகத்தாளமாகச் சிரித்துக் கெக்கொலி கொட்டினார் நண்பர்.

பத்திரிகைத் துறையில் அனுபவமில்லாத அவரது அறியாமையை எண்ணி உள்ளுக்குள் சிரித்துக்கொண்டேன். மேலை நாட்டினர் நம்மிடமிருந்து கற்றுச் சென்ற எத்தனையோ கலைகளுள், சம்பவங்களைக் கோவையாகப் படங்களின் மூலம் விளக்கிச் சொல்லும் முறையும் ஒன்று என்பதை நான் அவரிடம் கூறி இருந்தால் அவர் அதை ஒப்புக்கொள்ளவா போகிறார்?

கதை சொல்லும் கலையே பாரதத்தில் பிறந்ததுதான். இன்று மேலை நாட்டில் பிரபலமாகி விளங்கும், 'காமிக்ஸ்' என்னும் கதைகளைச் சித்திரங்களின் மூலம் சொல்லும் முறை நமக்குப் புதியதல்ல. ஆனால் சித்திரக் கதைச் சொல்லுவோரைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்போர் பாரதத்தில் இல்லாமல் போனபடியினால் இன்றைக்கு அது நமக்குப் புதுமையாக இருக்கலாம்.

'சித்திரக் கதைகளின் பிறப்பிடம் பாரதம்தான் என்று எப்படிச் சொல்லமுடியும்?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? உலகோர் வியக்கும் உன்னதக் கலைப் படைப்புக்களாகப் பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள கோயில்கள்தாம் நான் சொல்லும் சித்திரக் கதைகளின் பிறப்பிடம்.

தஞ்சைக் கலைக்கூடமான சரஸ்வதி மஹால் புத்தகசாலையைப்பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். சரபோஜி சேகரித்து வைத்துள்ள பல்லாயிரக் கணக்கான ஓலைச்சுவடிகளில் எத்தனையோ அற்புதமான சித்திரக் கதைகளைக் காண்கிறோம். பனை ஓலையில் எழுத்தாணிகொண்டு ஐதீகப் படங்களைக் கீறி வண்ணங்களைக் கொடுத்து வனப்புடன் விளக்கியுள்ளனர். இது சித்திரக் கதையின் அமைப்புத்தானே ?

சுவடிபோன்ற அளவில் கையெழுத்துப் பிரதியொன்று. நாகரியோ, மராட்டியோ, மொழி நினைவில்லை. ராமாயணக்கதையையும் எழுதி அருகே காட்சிகளைப் படங்களாக அற்புதமான வர்ணங்களில் மிக மெல்லிய தூரிகைகொண்டு தீட்டி இருக்கிறார்கள். எனக்கு மொழி தெரியாது. ஆனால் படங்களைக்கொண்டு அது என்ன காவியம் என்பதை ஊகித்துக் கொண்டேன். இத்தகைய முயற்சி இன்றைய சித்திரக் கதைக்கு எந்த விதத்திலும் தாழ்ந்ததல்லவே !

உங்களில் எத்தனையோ பேர் கும்பகோணம் போயிருப்பீர்கள், மதுரைக்குச் சென்றிருக்கலாம், திருச்சிராப்பள்ளி போயிருக்கலாம். கும்பகோணம் ராமசுவாமி கோயிலின் உட்பிராகாரத்தின் சுவர்களில் ராமகதை முழுவதையும் படங்களாக எழுதிப் பட்டாபிஷேகம் செய்து முடித்திருக்கும் விந்தையைப் பார்த்ததுண்டா ? மதுரையில் பொற்றாமரைக் குளத்தைச் சுற்றிப் போகும் பிராகாரத்தில் சிவபிரானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் அற்புதமான கதைப் படங்களாக ஆக்கி வைத்திருக்கும் அழகைக் கண்டிருப்பீர்களே ! திருச்சிராப்பள்ளியில் மலைக் கோட்டைக் கோயிலின் மீது ஏறிப் போயிருப்பவர்களுக்கு வழியிலேயே—நூற்றுக்கால் மண்டபத்தைத் தாண்டி ஏறும் போது ஈசன் செட்டிப் பெண்ணுக்கு மருத்துவம் பார்க்கவந்த சம்பவத்தைச் சுவரில் அழகான சித்திரத் தொடர்களில் வரைந்திருப்பதைக் காணலாமே ! இன்னும் மேலே போனால் சுவாமிகோயில் வெளிப் பிராகாரத்துச் சுவர்களிலும் விதானத்திலும் சிவபிரானின் பல்வேறு அவதாரங்களை விளக்கும் அற்புதக் கதைப்படங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் எழுதப்பட்டிருக்கும். இவையெல்லாம் கதைகளைச் சித்திரங்கள் மூலம் சொல்லுவதிலே நாம் எத்தனை முன்னோடிகளாக இருந்திருக்கிறோம் என்பதற்குச் சில உதாரணங்கள்.

தங்கள் கருத்துக்களை வெளியிடப் பத்திரிகையோ காகிதமோ இல்லாத காலம் அது. கோயில்களில்தான் கலையும் கல்வியும் வளர்ந்தன.

திருச்சியையும், மதுரையையும், கும்பகோணத்தையும் எல்லாருக்கும் தெரிந்த ஊர்கள் என்பதற்காகச் சொன்னேனே தவிர அதே போன்று நம் தமிழ்நாட்டுப் பதிகள் பலவற்றின் சுவர்களிலும் இது போன்ற சித்திரக் கதைகள் இருப்பது உங்களில் பலருக்கும் தெரிந்த உண்மைதான்.

இன்றைக்கு அச்சுக் கலையில் ஏற்றம் பெற்று அற்புதங்கள் நிகழ்த்தும் அயல்நாட்டுப் பத்திரிகைகளில் சித்திரக் கதைகளைச் சிந்தையைக் கவரும் முறையிலே வெளியிடுவதை நாம் பார்க்கிறோம். சித்திரங்கள் வரைவதில் பல நவீன முறைகளையும், அவற்றை அச் சடிப்பதற்கான நவீன யந்திரச்சாதனங்களையும் பெற்றிருக்கிறார்கள் அவர்கள். ஆனால் நம் பாரதத்திலோ இன்னும் பத்திரிகைத் தொழிலே பூரண வளர்ச்சி பெறவில்லை. இந்த நிலையில் நமக்குச் சித்திரக் கதை களைப் பத்திரிகைகளில் வெளியிடுவதென்பது மகத்தான சாதனையாக இருக்கிறது.

சாதாரணமாக ஒரு கதையை எழுத்தில் உருவாக்குவதற்கும் அதையே சித்திரங்களில் உருவகப்படுத்திக் காட்டுவதற்கும் எத்தனையோ வித்தியாசங்கள் உண்டு. வர்ணனைகளையும், பாத்திரங்களின் மனோ பாவங்களையும் படிக்கும் கதைகளில் அழகாக எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் சித்திரக் கதைகளில் வர்ணனையையோ மனோபாவங் களையோ உணர்ச்சிகளையோ சித்திரித்துக் காட்டுவது கடினம். சித்திரக் கதைக்குச் சம்பவங்கள்தாம் முக்கியம். ஆகவே சித்திரக் கதைகளின் முதல் கட்டம் தகுந்த கதைகளைத் தேர்ந்தெடுப்பதே யாகும்.

சித்திரக் கதைகளை இன்றைக்கு வயது வந்தவர், சிறுவர் ஆகிய இரு சாராருமே ஆர்வத்துடன் படித்தாலும்கூட பெரியவர்களுக்கான சித்திரக் கதை, குழந்தைகளுக்கான சித்திரக் கதை என்று அதை இரண்டு வகையாகப் பிரித்துக்கொள்ளத்தான் வேண்டும். இவ் விரண்டுக்கும் கதையில், கதை அமைப்பில், வரையும் படங்களில் எத்தனையோ வித்தியாச மிருக்கிறது. வீரச் செயல்களையும் விந்தை நிகழ்ச்சிகளையும் விசித்திரமான கதைப் போக்கையும் கொண்டதாக இருக்கவேண்டும்.

கூடுமானவரை சித்திரக் கதைகளில் கதையின் விருவிருப்புக் கென்று முன்னுக்குப் பின்னாகச் சம்பவங்களை மாற்றியமைத்துக் குழப்பக் கூடாது. கதை நேரான கதியில் சிக்கல்கள் இல்லாமல் செல்ல வேண்டும். கூடுமானவரை குறைவான பாத்திரங்களைக் கொண்டு கதையை அமைப்பதுதான் வெற்றிக்கு வழியாகும்.

இரண்டாவது கட்டம் திட்டமிட்டுத் தேர்ந்தெடுத்த கதையின் சம்பவங்களை வரிசைப் படுத்திக்கொள்ளவேண்டும். வாரப் பத்திரிகையில் வெளியிடுவதானால் கதையை எத்தனை வாரங்களில் முடிக்கவேண்டும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டு கதையை அத்தனை கட்டங்களாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் (வாரமும்) கதையின் சுவையான சம்பவங்களை அமைத்து, அவ்வாரக் கதையை இத்தனை படங்களில் விளக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கவேண்டும்.

மூன்றாவது கட்டமாகச் சித்திரக்காரருக்குப் படங்கள் போடுவதற்கு வேண்டிய குறிப்புகளை எழுதிக்கொடுப்பதைக் கூறலாம். ஒவ்வொரு

படத்திலும் எந்த எந்தக் கதாபாத்திரங்கள் எப்படி எப்படி இருக்க வேண்டும் ; அவர்களுக்கு என்ன வயது, என்ன உடை என்பன போன்ற நுணுக்கமான விஷயங்களைக் குறித்துக் கொடுக்கவேண்டும் ; பாத்திரங்களோடு காட்சியின் சூழ்நிலை வர்ணனைகளையும் அவர்களுக்கு விளக்கியாகவேண்டும். இன்னின்ன பாத்திரங்கள் இப்படி இப்படி நிற்க, உட்கார, ஓட, குதிக்க, கூச்சலிட, அழ, சிரிக்க வேண்டுமென்று சித்திரக்காரருக்கு விளக்கும் குறிப்புக்களைத் தயாரித்தாகவேண்டும். இரண்டு பாத்திரங்கள் மாறி மாறிப் பேசுவதாகக் கதையில் வருமானால் ஒரே மாதிரியான படங்களைத் திரும்பத் திரும்பப் போட்டுக் காண்பித்தால் அது அழகாக இருக்குமா ? அலுப்பை அல்லவா கொடுக்கும். ஆகவே அந்தப் பாத்திரங்களை வெவ்வேறான கோணங்களில் மாறுபட்ட சூழ்நிலைகளில் உருவாக்கிக் காட்டும்படி அவர்களுக்குக் குறிப்பெழுதித் தரவேண்டும். கதையைத் தேர்ந்தெடுப்பதோடு கதாபாத்திரங்களையும் நம் மனத்திரையில் நடமாடவிட்டுப் பார்த்துக் காட்சி ஜோடனைகளை அமைக்கவேண்டும். கதாசிரியர் ஒரு சித்திரக்காரராகவோ அல்லது சித்திரக்காரரே ஒரு கதாசிரியராகவோ இருப்பாரானால் அவர்கள் ஆக்கித்தரும் சித்திரக் கதைகள் வாசகர்களின் உள்ளத்தைக் கவர்ந்து பாராட்டுக்களைப் பெற்றுப் பிரமாதமான வெற்றியை அடையும் என்பதில் சந்தேகமே இல்லை.

அடுத்து சித்திரக்காரர்களின் ஒத்துழைப்பைப் பெறும் கட்டம் நாம் கொடுக்கும் இத்தனைக் குறிப்புக்களையும் கொண்டு அவர் கதைக்கு உயிரும், உணர்வும், அழகும் கொடுக்கவேண்டும். சித்திரக் கதைகளின் வெற்றி சித்திரக்காரர்களின் கையில்தான் இருக்கிறது. மிகக் குறைவான கோடுகளில் உருவங்களை அமைத்து பாவங்களைக் கொண்டு வரவேண்டும். கூடுமானவரை உருவங்களைப் பார்த்தாலே அது இன்ன கதாபாத்திரம் என்று சொல்லும் அளவுக்குத் தொடர்ந்து பல படங்கள் போடும்போது சாயல் மாறாமல் இருக்கவேண்டும். இடம், பொருளுக்கு ஏற்றபடி பாத்திரங்களின் உருவம், உடை, சூழ்நிலை இவைகளில் ஏற்படும் சிறு மாற்றங்களைக் கவனித்துப் போடவேண்டும். உதாரணமாக நான் 'வீர விஜயன்' என்ற சித்திரக் கதையை எழுதும்போது, சித்திரக்காரர் விஜயனின் இடதுகாலில் மட்டும் அழகுக்கு ஒரு காப்பை அணிவித்திருந்தார். அடுத்தடுத்து வரும்போது இந்தக் காப்பைச் சில சமயம் போட மறந்து விடுவார். இல்லாவிடில் வலது காலில் மாற்றிப் போட்டு விடுவார். இதுபோன்ற சிறு குறைகள் நேராமல் கவனிக்கவேண்டும்.

கதாபாத்திரம் ஓரிடத்தில் காயமடைந்ததாகக் குறிப்பிட்டால் அடுத்த படத்தில் அந்தப் பாத்திரம் காயத்தில் கட்டுடன் வரும்படி போடவேண்டும். முதல் படத்தில் கதாநாயகன் ஏதாவது கொடிய மிருகத்தோடு போராடினால் அடுத்த படத்தில் அவனது உடைகள் கிழிந்திருப்பதாகக் காட்டவேண்டும். இதுபோன்ற நுணுக்கமான விஷயங்களை

படத்திற்கு ஜீவனையும் கதைக்கு ஓட்டத்தையும் கொடுக்கக் கூடியவை. ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டியது சித்திரக் கதையின் முக்கிய அம்சம்.

அடுத்து எழுத்து.

சித்திரக் கதைகளில் பல வகைகள் இருக்கின்றன. வெறும் படங்களை மட்டும் போட்டு, வார்த்தைகள் எதுவும் எழுதாமல் படங்களே கதையைச் சொல்லும் படியாக அமைக்கும் மௌனப் படக் கதை முறை ஒன்று. அதற்கு வார்த்தை விளக்கங்களே தேவையில்லாமல் தம் சித்திரத்தையே பேசவைக்கும் அபாரத் திறமைசாலியாக இருக்கவேண்டும் சித்திரக்காரர்.

இரண்டாவது முறை, படங்களைப் போட்டு அதன் கீழே அந்தப் படம் சொல்லும் கதையின் பகுதியை எழுதியோ அல்லது அச்சுக்கோத்துப் போட்டோ தொடருவது. இதில் அதிகச் சிரமமில்லை. நம் இஷ்டப்படி கதையை எழுதிக் கொண்டு போய்விடலாம். அதாவது சாதாரணச் சிறு கதை ஒன்றுக்குப் பல படங்கள் போட்டு விளக்குவதுபோல.

மூன்றாவது, பாத்திரங்களே நேருக்கு நேராகப் பேசிக்கொண்டு கதையை இயக்கிச் செல்லும் முறை. இதுதான் சித்திரக் கதைகளில் சிறந்தது, பிரபலமானது. பாத்திரங்களின் வாயிலிருந்து கோடு கிழித்து அவர்கள் பேசுவதை, நினைப்பதை அதற்குள் குறிப்பிட்டு எழுதவேண்டும். இடையிடையே கதாசிரியர் தம் குறிப்புக்களையும் கொடுத்துக் கதையின் ஓட்டத்துக்கு உதவவேண்டும்.

இம் முறையில் சித்திரக்காரர் படங்களை ஓர் அளவுக்கு முடித்துக் கொடுத்ததும் எழுத்தாளர் அந்தப் படங்களைப் பார்த்துத் தான் அமைத்துக்கொண்டுள்ள கதையின்படி அந்த அந்தப் பாத்திரங்களுக்கு வசனம் தயாரித்தாகவேண்டும். அது சுருக்கமாகவும் இருக்கவேண்டும்.

சித்திரங்கள் பேசும் வார்த்தைகளை எழுதியானதும் சித்திரக் கதை பூர்த்தி யடைகிறது. இரண்டு மூன்று வர்ணங்களில் அது அச்சாகும் வசதி இருக்குமானால் படங்களில் வர்ணங்களைக் குறிப்பிட்டுக் காட்டும் வேலை ஒன்று மிச்சம் இருக்கும். அனேகமாக இது சித்திரக்காரரின் கடமைதான்.

ஒரு சித்திரக் கதையின் பின்னால் இத்தனை ஏற்பாடுகள் இருக்கின்றன. பத்திரிகையை வாங்கிப் பிரித்து ரசித்து மகிழும் வாசகருக்கு இதெல்லாம் தெரிய நியாயமில்லை.

நம் நாட்டில் பத்திரிகைகளில் சித்திரக் கதை போடுவதென்றாலே தயங்குகிறார்கள். காரணம் அதற்கு ஏராளமாகச் செலவாகும். பெரிய பத்திரிகைகளினால்தான் அதைச் சமாளிக்க முடியும். சொந்தத்தில் பிளாக் தயாரிக்கும் பத்திரிகைகள்தாம் சித்திரக் கதைகளைத் துணிந்து வெளியிட முடியும். அவர்களுக்கும்கூட நல்ல சித்திரக்காரர்கள் கிடைக்க

வேண்டும். சித்திரம் போடும் எல்லோராலும் சித்திரக் கதைக்குப் படம் போட்டுவிட முடியாது. இது நச்சுப்பிடித்த வேலை. ஒரே பக்கத்தில் பல படங்கள் போடவேண்டி இருப்பதால் அலுப்பு ஏற்படும். நாளெல்லாம் இதே வேலையாக உழைத்தாகவேண்டும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் தராத வேலை இது. இதற்குச் செலவிடும் நேரத்தில் இரண்டு மூவர்ண அட்டைப் படங்களைத் தயாரித்து இதைப்போல நாலைந்து மடங்கு வருவாயைப் பெற்றுவிடலாம் என்றுதான் சித்திரக்காரர்கள் நினைப்பார்கள். அவர்கள் நினைப்பு நியாயமானதும்கூட. காரணம் உழைப்பறிந்து ஊதியம் தரும் மனப்பான்மை நம் நாட்டில் இன்னும் ஏற்படாததுதான்.

மேலை நாடுகளில் பண்டங்களைக் கடையில் வாங்குவதுபோலப் பத்திரிகைகளுக்கு விஷயங்களை விலைக்கு விற்கும் ஏஜென்ஸிகள் இருக்கின்றன. அவர்கள் கதை, கட்டுரை, படங்கள், ஹாஸ்யங்கள், சித்திரக் கதைகள் ஆகியவற்றை வல்லுநர்களிடமிருந்து தயாரித்து வாங்கி வைத்துக்கொள்ளுகிறார்கள். இதுபோன்ற ஸ்தாபனங்களிடமிருந்து பத்திரிகைகள் ஒப்பந்த முறையில் எதையும் பெற்றுக் கொள்ளலாம். இது சுலபமான முறை. நம் நாட்டில் இப்படியெல்லாம் வருவதற்கு இன்னும் பல காலமாகும்.

சித்திரக் கதைகள் நம் நாட்டுக்குப் புதியதல்லவாயினும் இன்றைய சூழ்நிலையில் நவீன வசதிகள் எதுவுமில்லாத நிலையில் பத்திரிகைகளில் அதை வெளியிடுவதில் எத்தனையோ சிக்கல்கள், தொல்லைகள், கஷ்டங்கள் இருக்கின்றன. இன்று ஒரு பத்திரிகையில் சித்திரத் தொடர்கதை வருகிறதென்றால் இத்தனையையும் சமாளித்துக்கொண்டு வெளியாகும் ஒரு சாதனையாகத்தான் அதைக் கொள்ளவேண்டும். சித்திரக் கதைகள் வளம்பெற வசதிகள் பெருகவேண்டும், சித்திரக்காரர்களின் எண்ணிக்கையும் தரமும் உயரவேண்டும்.

ஓவியம்

கல்கி சாமா

குழந்தைகளுக்கு எந்த ஓவியத்தில் ஈடுபாடு, எதை ரஸிக்கின்றன, அவர்களுக்கு விருப்பு வெறுப்பு உண்டா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து, பிறகு அம்முயற்சியைக் கைவிட்டு விட்டதாகவே நான் நினைக்கிறேன். குழந்தைகளைத் தாங்கள் புரிந்துகொண்டு விட்டதாகவும் அவர்களுக்குத் தேவை இதுதான் என்று பறைசாற்றும் அப்பாவிகளைக் கண்டு நான் பரிதாபப்படுவதுண்டு. ஆனால் குழந்தைகள் பரிதாபம் அதற்கு மேலேயிருக்கும் ! அதற்குமேல் குழந்தைகளைப் பற்றி ஒரு முடிவு கட்டும் நபரின் வளர்ச்சிக்கும் நாம் ஒரு முடிவு கட்ட வேண்டியதுதான் ! குழந்தைகளின் மன நிலையைப் பார்த்தால் அவர்களது வளர்ச்சி நன்றாகத் தெளிவாகும். கவிச்சக்கரவர்த்தி கம்பர் இந்தக் குழந்தைகளின் கை வண்ணத்தைக் கண்டு அதிசயிப்பதை நினைக்காமலிருக்க முடியாது—

'அறையும் ஆடரங்கும் படப்பிள்ளைகள்
தரையில் கீறிடில் தச்சரும் காய்வரோ?'

நாம் வேறு, குழந்தை வேறு என்று கருதும் சூழ்நிலையை மாற்றி விடுகிறது, அவர்களது ரஸிகத் தன்மை. குழந்தைகள் ஏதேனும் ஓர் ஓவியத்தைக் கண்டு ரஸிக்கும்போது அவர்களது ரஸனையைக் கண்டு நாமும் அந்தக் குழந்தையாகவே ஆகிவிடுவது மனித இயல்பு.

அதற்குச் சான்றாக ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன்:

சிறுவர் பள்ளியில் பூனைப்படம் கரும் பலகையில் தீட்டி, அதன் அங்கங்களையெல்லாம் பிரமாதமாக வர்ணிக்கிறார் ஆசிரியை. குழந்தைகளின் கவனம் வேறு எங்கோ திரும்பி விடுவதைக் கண்டு ஆசிரியைக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடுகிறது. 'நான் பிராணனை விட்டுப் பூனையைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எல்லோரும் எங்கே திரும்பிப் பார்க்கிறீர்கள் ? உங்களுக்கு உதைதான் கிடைக்கப் போகிறது !' என்று ஆசிரியை அம்மையார்

இரைகிருர். ஆனல் குழந்தைகளோ ஆசிரியை, பூனை வடிவம், கரும் பலகை, அடி, உதை அனைத்தையும் மறந்து தங்கள் மனத்தை ஆழ்ந்து ஏதோ ஒன்றில் செலுத்தி மகிழ்ந்தன. குழந்தைகளின் கவனத்தைத் திருப்பிய அந்த அதிசயத்தைக் காணக் கோபத்துடன் வந்தாள் ஆசிரியை. குழந்தைகள் அமர்ந்த பெஞ்சுக்கடியில் நிஜப் பூனை பவனி வந்தது! அவர்கள் அந்தப் பூனையைக் கண்ட ஆனந்தத்தில் குதூகலித்துக்கொண்டிருந்தனர். ஆசிரியையின் சீற்றம் இப்பொழுது பூனையின் மேல் திரும்பியது !

'சனியனே ! நீ நுழைந்து குழந்தைகளின் பாடத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டாய் !' என்று கடிந்து, அதை வெளியே அடித்துத் துரத்தினள் ! பாவம் ! குழந்தைகளின் ரஸனையில் பங்குகொள்ளத் தெரியாத ஒருத்தி அவள்!

இந்தப் பூனை பட்ட பாடு இருக்கட்டும். யானைப் படத்தைப் பார்த்துக் குழந்தைகள் கேட்கும் சரமாரியான கேள்விகளுக்குப் பதில் அளிப்பதென்பது சாமான்யமான காரியமா ? நமக்குத் தெரிந்தவற்றைச் சொல்லி வைப்போம் ! குழந்தைகள் நாம் சொல்லுவது சரிதானு, இல்லையா என்று ஆராய்ந்து காணும் சூக்ஷ்மபுத்தி நம்மை அயரவைக்கும். அவர்கள் நேரில் யானையைப் பார்த்திராவிட்டாலும், நாம் ஏதேனும் தவருகச் சொல்லிவிட்டால் அவர்களிடம் மாட்டிக்கொண்டு விடுவோம் !

ஒரு சமயம் நான்கு கால்களிலும் சக்கரங்கள் அமைத்த பொம்மை யானையை 'யானை' என்று சொல்லிவைத்தார் தந்தை. திருவிழாவுக்கு ஊரில் நிஜயானையே வந்தது. குழந்தை தன் தகப்பனுரிடம், "ஏனப்பா ! நீ யானையைச் சக்கரம் கட்டி இழுக்கணும்னு அன்னிக்குச் சொன்னயே ! இந்த யானை தானே நடந்து வர்றதே அப்பா !' என்று கேட்டான்.

"அதுவா? சக்கரமுள்ள யானை மர யானை; இது நிஜ யானை!" என்று சொல்லி அசடு வழிந்தார் தந்தை.

குழந்தைகள் மனம் ஓவியத்தில் எவ்வளவு தூரம் ஈடுபட்டுவிடுகிறது என்பதை மேல்நாட்டார் கண்டு அதிசயித்ததைப் பார்ப்போம். 'அம்டி டம்டி சாட் ஆன் தி வால்....!' என்று முட்டைபோல் பருத்துள்ள ஒரு மனித உருவத்தைச் சுவரில் அமர்ந்திருப்பதுபோல் வரைந்திருக்கிருர்கள். அந்தப் பருத்த உருவம் 'டமால்' என்று உருண்டு விழுகிற மாதிரி படம் போட்டு, 'அம்டி டம்டி ஆட் ஏ கிரேட் ஃபால்!' என்று எழுதியிருப்பதைப் பார்த்ததும் குழந்தைகள் சிரித்துக் கொம்மாளமடிக்

கின்றன. பருத்த உருவங்களைக் கண்டாலே குழந்தைகளுக்குக் களிப்பு! அவை கீழே உருண்டுவிட்டால் ஒரே சிரிப்பு. 'ஜாக் அண்ட் ஜில்' படத்தைப் பார்த்ததும் இதே கும்மாளம்தான்? ஹாஸ்யச் சம்பவங்களை குழந்தைகள் ரஸிப்பதே அலாதிதான்.

சோக நிகழ்ச்சிகளில் குழந்தைகளின் மனம் ஈடுபட்டுவிடும் அற்புதத்தைப் பார்ப்போம். ஒரு நாய் சித்திரம். நன்றியுள்ள நாய் எஜமானரைக் கண்டு குதித்துக்கும் மாளம் போடுகிறது...குழந்தையும் இந்தப் படத்தைப் பார்த்துக் குதூகலிக்கிறது...ஆனல் அடுத்த சித்திரத்தில் அந்த நாய் தன் எஜமானரின் காரில் மாட்டிக்கொண்டு காலில் அடிபட்டுக் கொள்வதைப் பார்க்கிறது! குழந்தைக்கு அது அறியாமலே துக்கம் பீறிட்டுக்கொண்டு வருகிறது! "அப்பா! ஐயோ பாவம்! அந்த நாய்க்கு அடிபட்டுடுத்தே! டாக்டர் வருவாரா? ஊசி போடு வாரா? ஆஸ்பத்திரிக்கு நம்மை மாதிரியே அழைச்சுப் போவாளா?" இப்படிக் கேள்விக் கணைகளை அநுதாபத்தில் தொடுத்துக்கொண்டே யிருக்கும். நமக்குப் பதில் சொல்வதில் அக்கறையிருக்காது. ஆகவே, ஏதாவது பொய்யை உளறிவைப்போம். ஆனலும் குழந்தைகளின் ஆர்வம் அடங்காது! கேள்விகள் வந்து கொண்டே யிருக்கும்! 'இருக்கிற' பொய்யெல்லாம் சொல்லியாச்சு! இனி பொய்க்கு எங்கே போவது? என்று தவியாய்த் தவிப்போம்! குழந்தைகள் அளவுக்கு நமக்குக் கருணை நீடித்திருப்பதில்லை. நமக்கும் குழந்தைகளுக்கும் உள்ள வித்தியாசம், அது நிஜமாகவே துயரத்தைக் கண்டு கண்ணீர் வடிக்கும்! நாம் போலியாகப் பல நீலிக்கண்ணீர் வடிப்போம். குழந்தைகளும் தெய்வமும் ஒன்றென்று சும்மாவா சொன்னர்கள்?

நமது ரஸனையையும் பல தடவைகள் குழந்தைகள் தூக்கியெறிந்துவிடுவதும் உண்டு. சில ஓவியங்களைப் பார்த்து நாம் சிரித்து மகிழ்ந்துகொண்டிருப்போம். குழந்தைகள் ஓடிவந்து, "எதைப் பார்த்து அப்பா சிரித்தாய்? அதைக் காட்டு!" என்று தொந்தரவு படுத்தி வாங்கிப் பார்க்கும். படத்தைக் காட்டி, அதற்கு நாம் விளக்கமும் சொன்னல், குழந்தைகள், "இது சுத்த 'போர்'! இதுக்கா, இப்படி

நீ விழுந்து விழுந்து சிரித்தாய்!' என்று தூக்கியெறிந்து பேசிவிட்டுப் போவதைப் பார்த்து நாம் அசடு வழிவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? 'ஏதோ சிறிசுகள்! நாம் பெரியவர்கள். நம் அறிவு வளர்ச்சி அதற்கில்லே' என்று பிறகு சமாளித்துக் கொள்வோம். ஆனால் உண்மை இதுதான்! நம் வியாக்கியானம் அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்குப் பதிலாகத் துயரத்தை உண்டாக்கிவிடுகிறது. அதற்கு அவர்களா பொறுப்பாளி?

அதே மாதிரி துக்கப்படும்படியான சம்பவம் நம் விபரீத வியாக்கியானத்தினுல் அவர்களுக்கு நகைப்பைக் கொடுத்து விடுகிறது. ஒரு வயதான பாட்டி கண்ணீர் விட்டு அழும் காட்சி சோகசித்திரமாக வரையப்பட்டிருக்கிறது. குழந்தைகள் இந்தச் சித்திரத்தைப் பார்த்ததும் "ஏனப்பா! இந்தப் பாட்டி ஏன் அழுரு?" என்று கேட்கின்றன.

"ரயில் தவறிப்போய், அவளே அழைத்துப் போகிறவங்க அவளே விட்டுட்டுப் போயிடருங்க...அதனுலே...ஊ...ஊனு பாட்டி அழுரு!" என்கிருர் தந்தை.

"ஓ! வயதான பாட்டி அழுருடோய்!" என்று குழந்தைகளெல்லாம் சேர்ந்து சிரிக்கத் தொடங்கி விடுகின்றன.

இதிலிருந்து பெரியவர்களாகிய நாம் குழந்தைகளிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய கட்டம் வந்துவிட்டது! சித்திரங்களேப் பார்த்து ரஸிக்கக் குழந்தைகளுக்கு நன்கு தெரியும். நாம் அவர்களே நம் பாதையில் இழுத்துச் சென்று காட்டுவதைவிட, அவர்கள் காட்டும் பாதையில் நாம் சென்று அவர்களது ரஸனேயில் மகிழ்ந்து, நாமும் ரஸிகராக மாறிவிடுவதே நல்லது. இதுதான் சரியான உணர்ச்சிகளுக்கு வழிகாட்டி. நாம் அறிவினுல் அவர்களே உதாசீனம் செய்யாமல் அறிவைக் கழற்றி மூட்டை கட்டி வைத்துவிட்டு, உள்ளத்தின் ஒற்றுமையுடன் அவர்களேப் பார்க்கவேண்டும். அப்பொழுது தெரியும், நாம் இப்படி ஏன் வளர்ந்து பெரியவனுேம், நாமும் குழந்தைகளாக இருந்து அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லேயேயென்று! குழந்தைகள் உலகமே அலாதிதான்.

குழந்தைகளிடம் ஹாஸ்ய உணர்ச்சிப் படங்களுடைய ரஸனேயைப் பார்த்தோம்; இரக்கத்தை வெளியிடும் படங்களேயும் பார்த்தோம். இதோ, குழந்தைகளின் கருணை உள்ளத்தை இங்கே காணுவோம்:

“இதோ இந்தத் தொடர்படங்களைப் பார்,கமலா!” கமலா சொல்கிறாள்: “பிச்சைக்காரன். இரு, இரு. பாவம், அவன்! அவனுக்குக் கண் தெரியாது போலிருக்கே?”

விமலா கேட்கிறாள்: “உனக்கு எப்படித் தெரிந்தது?”

“கையிலுள்ள தடியாலே தடவிக்கொண்டே போகிறானே, உனக்குத் தெரியவில்லையா? அவனுக்கு ஒரு வீட்டிலும் பிச்சை போடவில்லையே!”

“ஆமாம்! போடவில்லை. பசியோடு ஆற்றங்கரையோரமாக நடக்கிறான். மூன்று பையன்கள் களிமண் உருண்டையை உருட்டி அவரவர்களுக்கு முன்னால் வைத்துக்கொண்டு ‘பிக்னிக்’ விளையாட்டு ஆடறாங்க!”

“ஆமாம்! அவர்கள் ஏதோ ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்கிறார்களே, அது என்ன?”

“ஒவ்வொரு களிமண் உருண்டையும் சாதமாகவும், பருப்பாகவும் எண்ணி ‘வாங்கிச் சாப்பிடலாம்’ என்கிறார்கள். டேய், இருப்பது இவ்வளவுதான். அதிகமாய்க் கேட்காதீர்கள் என்கிறான் வாண்டு. அவர்கள் குரலைக் கேட்டுக் குருட்டுப் பிச்சைக்காரன் ‘குழந்தைகளா! எனக்கும் பசி!’ என்கிறான்!”

“ஐயோ, பாவம்! அப்புறம்? அப்புறம்?”—என்று கமலா கேட்கிறாள்.

“இதோ இந்தப் படத்தைப் பார். பரிமாறிக்கொண்டிருந்த சுட்டிப் பயல் ஓடி வந்து குருடன் கைகளைப் பிடித்துக்கொண்டு இரண்டு களிமண் உருண்டையை அவன் கையில் வைத்து, ‘நீயும் சாப்பிடு!’ என்று கொடுக்கிறான்”

“குருடன் தடவிப் பார்க்கிறான். அது களிமண் என்று புரிந்துவிட்டது. இருந்தாலும் குழந்தைகளின் அன்புக் கரங்களை நினைத்துப் பூரிக்கிறானே!”

“ஆமாம்! குருடன் சந்தோஷப்படறான். அவன் பசியும் குழந்தைகள் குதூகலத்திலே அடங்கிவிட்டது!”

“பார்த்தாயா? குழந்தை மனத்துக்கு அது களிமண்ணாச்சே, அவன் எப்படிச் சாப்பிடுவான் என்று தோன்றவில்லை. களிமண்ணையே சாதமாக நினைத்த பிஞ்சு மனத்துக்குக் கருணையும் தரும சிந்தனையுமே தலைதூக்கி நின்றிருக்கின்றன!”

இதில் மனித ஆராய்ச்சி எதுவுமில்லை. நாமும் குழந்தைகளாகத் தான் பிறந்து வளர்ந்தோம். ஆணிவேருடன் ஒரு மரமாக வளர்ந்தோம்! கம்பும் கிளையுமாக அந்த அன்பு, பாசம், கருணை, தரும சிந்தனை என்ற கிளைகளெல்லாம் போய்ப் பட்ட மரமாக நிற்கிறோம். மீண்டும் துளிர்க்கக் குழந்தைகள் அடிச்சுவட்டில் செல்வோமாக.

கலைக் களஞ்சியம்

பெ. தூரன்

குழந்தைகளுக்கு நல்ல கதை வேண்டும், நல்ல பாட்டு வேண்டும் என்று சொன்னால் உடனே அனைவரும் ஆமோதிப்பார்கள். அவற்றின் அவசியத்தைப் பலரும் உணர்ந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கு முன்பெல்லாம் பாட்டிகள் கதை சொல்லுவார்கள். எளிய பாடல்களும் பாடிக் காட்டினார்கள். அவற்றைக் கேட்டுக் குழந்தைகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தன. கதை சொல்லுவதே ஒரு தனிக் கலையாகப் பல பாட்டிகளுக்கு வாய்த்திருந்தது. இரவிலே கட்டிலைப் போட்டுப் பாட்டி படுத்துக்கொள்வாள். "பாட்டீ, ஒரு கதை சொல்லு ; பாட்டீ, ஒரு பாட்டுச் சொல்லு" என்று கெஞ்சிய குரலிலே கேட்டுக் கொண்டு பல குழந்தைகள் கட்டிலைச் சுற்றிச் சூழ்ந்து கொள்ளும். நான் இவ்வாறு பாட்டியிடமிருந்து எத்தனையோ கதைகளை என் இளமையிலே கேட்டு இன்பமடைந்திருக்கின்றேன்.

குள்ளக் குள்ளனை
குண்டு வயிறனை
வெள்ளிக் கொம்பனை
விநாயகனைத் தொழு

என்று விநாயகனைப் பற்றி, யாரோ பெயர் தெரியாத ஒருவர் எந்தக் காலத்திலோ எழுதிய பாட்டு ஒன்று உண்டு. இதுதான் பாட்டியின் முதல் பாட்டாக இருக்கும். இந்தப் பாட்டிற்கு இரண்டு கைகளாலும் பாட்டி அபிநயம் பிடித்தும் காட்டுவாள்.

இவ்வாறாகக் கதையும் பாட்டும் கேட்டு அக்காலத்தில் குழந்தைகள் மகிழ்ச்சி அடைந்தன. இக்காலத்தில் சமூகச் சூழ்நிலைகள் பெரிதும் மாறுபட்டு இருப்பதால் பாட்டிகள் கதை சொல்லும் வழக்கம் பெரும்பாலும் மாறிவிட்டது. பல பாட்டிகளுக்குக் கதை சொல்லத் தெரியாது என்றே கூறிவிடலாம். தெரிந்தாலும் பாட்டி ஓர் இடத்திலே இருப்பாள்; பேரக் குழந்தைகள் வேறு இடத்தில் இருக்கும். மேலும் புதிய முறையிலே புதிய எண்ணங்களையெல்லாம் புகுத்தி இன்று கதையும் பாட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. கதை, பாட்டு இவற்றோடு புதிய அறிவியல் தொடர்புள்ள கருத்துக்களையும் தரவேண்டியிருக்கிறது.

இதன் காரணமாகவே குழந்தை எழுத்தாளர்களென்று ஒரு எழுத்தாளர் இனம் உலகமெங்கும் தோன்றியுள்ளதை நாம் கண்டு மகிழ்கிறோம். மூன்று வயது ஆனவுடன் குழந்தையைப் பள்ளிக்குப் பெற்றோர்கள் அனுப்பிவிடுகிறார்கள். குழந்தை எழுத்தாளர்கள் குழந்தையின் இன்பத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் வேண்டியவற்றை எழுதி வழங்குகிறார்கள். பெற்றோர்களின் பொறுப்பு இப்படிக் குறைந்துவிடுவதால் அவர்களுக்கு மகிழ்ச்சிதானே ! குழந்தைப் பள்ளிக்கு நிறையச் செலவு செய்கிறார்கள். ஆனால் குழந்தை எழுத்தாளர்களுக்கு அதே போல ஆதரவு தருவதில்லை என்ற குறையை யும் இந்த இடத்திலே எடுத்துக்காட்டித்தான் ஆகவேண்டும்.

இக்காலத்திலே பல துறைகளிலும் விஞ்ஞானம் அதிவேகமாக வளர்ந்துவருகின்றது. அந்தத் துறைகளைப் பற்றியெல்லாம் நம் குழந்தைகளுக்கு அவர்களுடைய வயதிற்குத் தக்கவாறு எளிய முறையிலும் கவர்ச்சியாகவும் எடுத்துக் கூறுவது அவசியம். இது விஞ்ஞான யுகம். இதிலே வாழப் போகின்ற ஒவ்வொரு குழந்தையும் இதற்கேற்ற தகுதியும் அறிவும் பெற்றிருக்க வேண்டும். குழந்தையின் வளர்ச்சிக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் இது மிக முக்கியமானது. நாம் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறாவிட்டாலும், குழந்தைகளே நூற்றுக் கணக்கான கேள்விகளைக் கேட்கின்றன. அந்தக் கேள்விகளுக்கு அவர்களுக்குப் புரியும்படியான முறையிலே விளக்கம் சொல்வது பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் ஏற்பட்டுள்ள முதற் கடமையாகும். அப்படிச் செய்தால்தான் குழந்தை தனது அறிவிலே ஓங்கி வளர முடியும்.

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே வாலாட்டிக் குருவி ஒன்று ஒரு நாள் வந்து மேய்ந்துகொண்டிருந்தது. "குடுகுடு" வென்று தரையில் ஓடுவதும், எப்போதும் வாலை ஆட்டிக்கொண்டிருப்பதும் அந்தக் குருவியின் இயல்பு. குழந்தை அதைப் பார்த்து ஆச்சரியம் அடைகின்றது. அது என்ன குருவி என்று கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றது.

"அப்பா, இது என்ன குருவி ? வாலை சும்மா ஆட்டிக்கொண்டே இருக்குதே !"--இது குழந்தையின் கேள்வி.

"இதுதான் வாலாட்டிக் குருவி" என்று பதில் சொல்ல வேண்டாமா?

"இத்தனை நாளா இது இங்கே காணுமே !"

"இது குளிர்காலத்தில்தான் நம்முடைய நாட்டிற்கு வரும்."

"அப்புறம் எங்கே போகும் ?"

"இமயமலை தெரியுமா உனக்கு ? நம் நாட்டின் வடக்கிலுள்ள உயர்ந்த மலை அது."

"ஆமாம் அப்பா. எனக்குத் தெரியும் - வடக்கில் இமயமலை பாப்பா என்று பாரதியார் பாடியிருக்கிறாரே !"

''ஆமாம் அந்த இமயமலைதான். அந்த இமயமலைக்கு வடக்கிலே இன்னும் வெகுதொலைவிலே வாலாட்டிக் குருவி எப்பொழுதும் வசிக்கும். அங்கே குளிர் ரொம்ப அதிகமாகிவிட்டால் இந்தியாவுக்கு வரும். பிறகு இங்கே வெய்யில் காலம் வரும்போது அது பழையபடி தனது இருப்பிடத்திற்கே திரும்பிவிடும்.''

ஆர்வத்தோடு கேட்கும் குழந்தைக்கு இப்படிப் பதில் சொல்ல வேண்டாமா ? பறவைகள், விலங்குகள், தாவரங்கள், கணிதம், வானவியல், ரசாயனம் என்று இப்படிப்பட்ட தனித்தனித் துறைகளுக்கு சிறிய சிறிய நூல்கள் விளக்கப்படங்களோடு இருப்பது நல்லதுதான். இத்தகைய நூல்களும் நூற்றுக்கணக்கில் வெளியாக வேண்டும்.

அதே சமயத்தில் எல்லாத் துறைகளையும் தாங்கிய குழந்தைகள் கலைக்களஞ்சியமும் வேண்டும். ஆங்கிலத்திலே குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியங்கள் வேறுவேறு முறைகளைப் பின்பற்றி வெளி வந்திருக்கின்றன. ஆர்தர் மீ (Arthur Mee) வெளியிட்டுள்ள அறிவுக் களஞ்சியத்தைப் பற்றிப் பொதுவாகப் பலருக்கும் தெரிந்திருக்கும். இது மிக விரிவானது. ஒரு பொருளை முதலில் சுருங்கக் கூறிப் பிறகு வேறுவேறு அத்தியாயங்களிலே விரித்து விரித்துச் சொல்லும் வகையிலே இது அமைந்தது. கிணற்றிலே ஒரு சிறிய கல்லைப் போட்டால் முதலில் ஒரு சிறிய வட்டமான அலை தோன்றும். பிறகு அது விரிந்து வட்டமாகிக் கொண்டே போகின்றதல்லவா ? அப்படி இந்த நூல் விரிகின்றது.

ஆங்கிலத்திலே அண்மையிலே வெளியான மற்றொரு குழந்தைகள் கலைக்களஞ்சியம் உரையாடல் முறையைப் பின்பற்றி உருவாக்கப் பட்டிருக்கின்றது. பட்டணத்தில் வசிக்கும் ஒரு தந்தை இளம் பருவத்தினரான தம்முடைய மகனையும் மகளையும் அழைத்துக்கொண்டு பல இடங்களுக்குச் செல்லுகிறார். பயிர்த்தொழில் நடைபெறும் பண்ணைக்குச் செல்லுகிறார். அங்கே உள்ள ஆடுமாடுகளையும் மற்ற கால் நடைகளையும் குழந்தைகள் வியப்போடு பார்க்கின்றன. உழவுத் தொழிலை யும் அதற்குப் பயன்படும் அங்கே உள்ள கருவிகளையும் கவனிக்கின்றன. மற்றொரு நாள் தந்தை தம் குழந்தைகளைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்லுகின்றார். மணலின்மீது கிடக்கும் கிளிஞ்சில்களையும், சங்குகளை யும் குழந்தைகள் கையில் எடுக்கின்றன. இவைகளைப் பற்றியெல்லாம் எத்தனையோ கேள்விகள் கேட்கின்றன. குழந்தைகளின் கேள்விகளுக்குப் பதில் கூறும் வகையிலே பல விஞ்ஞான உண்மைகளைத் தந்தை சொல்லு கின்றார். இது உரையாடல் உத்தியைப் பின்பற்றி அமைந்த கலைக் களஞ்சியமாகும். இதிலே எந்த வரிசைக்கிரமமும் இராது. பல்வேறு வகைப்பட்ட சூழ்நிலைகளில் குழந்தைகள் இயல்பாகக் கேட்கும் கேள்விகளுக்கு விடை கூறும் பாவனையில் விஞ்ஞான உண்மைகளை இது ஓரளவு தருகின்றது.

அகர வரிசையிலே அறிவுத்துறைகள் எல்லாவற்றிலுமுள்ள முக்கியமான பொருள்களைப் பற்றி விளக்கப்படங்களோடு எடுத்துக் கூறுவதாக அமைந்தது மற்றொரு வகையான குழந்தைகள் கலைக்களஞ்சியமாகும். பொருள்களைப் பற்றிக் குறிப்புக்களாக எழுதியிருப்பதைவிட விளக்கப் படங்களே அப்பொருள்களைப் பற்றிப் புரிந்துகொள்வதற்குச் சிறந்த உதவியாக இருக்குமாறு இக்கலைக்களஞ்சியம் அமைந்துள்ளது. பல வகையான வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ள விளக்கப்படங்கள் குழந்தைகளின் உள்ளத்தைக் கவர்ந்து இந்நூலை அவர்களே எடுத்துப் படிக்குமாறு தூண்டுகின்றன. சுமார் எட்டு முதல் பத்து வரை வயதுள்ள குழந்தைகளுக்கு நீண்ட கட்டுரைகள் பொருத்தமானவை அல்ல. விஞ்ஞான நுட்பங்களையெல்லாம் விரித்துக் கூறினாலும் அக் குழந்தைகளால் புரிந்து கொள்ள இயலாது. ஆகவே, இக்கலைக் களஞ்சியத்தில் சுருக்கமான குறிப்பும் படங்களுமே இருக்கும்.

இவ்வாறான ஒரு கலைக்களஞ்சியத்தைத் தமிழிலும் உருவாக்கி வெளியிட்டால் தமிழ் நாட்டுக் குழந்தைகளும் விஞ்ஞான மனப்பான்மை அடையும் என்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவரான திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கருதினார்கள். முயற்சி புதிதாக இருந்தாலும், இதைச் செய்யவேண்டும் என்ற ஆர்வத்தையும் அவர்கள் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆர்வத்தின் விளைவாகவே குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் இரண்டு தொகுதிகள் இப்போது வெளி வந்திருக்கின்றன.

நம் நாட்டுக் குழந்தைகள் விஞ்ஞான மனப்பான்மையுடன் வளர வேண்டும். இந்த மனப்பான்மை இளமையிலேயே உள்ளத்தில் ஊற்றெடுக்குமாறு செய்யக் குழந்தைகள் கலைக்களஞ்சியம் துணைபுரியும். முதல் முயற்சியிலேயே குறைகள் இருக்கலாம். ஆனால், அவை பின்னால் வரும் பதிப்புக்களிலே நீக்கப்படும் என்பது ஆங்கிலத்தில் உள்ள பெரிய பெரிய கலைக்களஞ்சியங்களின் புதிய பதிப்புக்களைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். ஆங்கிலத்திலே ஒரு கலைக்களஞ்சியம் செய்வதென்றால் இன்று பல வசதிகள் உண்டு. லட்சக்கணக்கான பிரதிகள் அச்சிடவும் அவற்றிற்காக ஏராளமாகச் செலவு செய்யவும் அவர்களால் இயலும். நமக்குள்ள வசதிகளுக்கு ஏற்றவாறுதான் இங்குக் கலைக்களஞ்சியத்தை உருவாக்க முடியும். ஆனால் இந்த முயற்சி நமது குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு மிகத் தேவையானது என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறலாம்.

ஒரு குழந்தைக்கு எந்தத் துறையிலே இயல்பான திறமையும் ஆர்வமும் இருக்கும் என்று எடுத்த எடுப்பிலேயே கூறமுடியாது. ஆதலால் எல்லாத் துறைகளையும் எடுத்துக் கூறும் குழந்தைகள் கலைக் களஞ்சியம் இருக்குமானால் குழந்தைகள் தாமாகவே தமது விருப்பத்திற் கேற்றவாறு பொருள்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும். இதுவே முழுமை

யான அறிவை எல்லாத் துறைகளிலும் தந்துவிடும் என்பது கருத்தல்ல. அகர வரிசையில் உள்ள' பொருள்களை எவ்வாறு பார்த்து அறிந்து கொள்வது என்ற பயிற்சியை இளமையிலேயே பெற்றிருந்தால் பின்னல் பெரிய கலைக்களஞ்சியங்களைப் பயன்படுத்துவதும் எளிதாகும். எல்லாவற்றிற்கும் மேலாகப் பல துறைகளும் குழந்தைகள் கலைக் களஞ்சியத்தில் இடம் பெறுவதால் தனக்கு விருப்பமான துறையில் குழந்தையின் ஆர்வம் வளர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. இப்படிப் பட்ட நூலை நமது குழந்தைகளுக்கு அளிப்பது பெரிதும் பயன் தருவதாகும்.

பத்திரிகை

தி.ஜ.ர

பல விதமான தகவல்களைத் தருவது, அறிவு வளர்ச்சிக்கு உதவுவது, பொழுதுபோக்கப் பயன்படும் இனிய கட்டுரை கதை கவிதைகளைத் தாங்கி நிற்பது இவைதான் பொதுவாகப் பத்திரிகைகளின் முக்கியமான அம்சங்கள். இந்த அம்சங்களுக்குத் துணை புரிபவை சித்திரங்கள், காகிதச் சிறப்பு, அச்சுச் சிறப்பு, அமைப்புச் சிறப்பு ஆகியவை. பொருளிலே ஆரோக்கியமும் தொனியிலே கண்ணியமும் நடையிலே அழகும் சிந்தனையிலே செறிவும் சொல்லிலே அடக்கமும் இருப்பது பண்பாட்டை உயர்த்துவிக்கும் மேன்மையான பத்திரிகைகளின் லட்சணம். இதெல்லாம் பெரியவர் பத்திரிகைகளுக்கும் பொருந்தும்; சிறுவர் பத்திரிகைகளுக்கும் பொருந்தும்.

'சிறுவனே மனிதனின் தந்தை' என்று சொல்லுவார்கள். சிறுவன் எப்படி வளர்கிறானோ அதைப் பொறுத்தேயிருக்கும் அவன் வளர்ந்து பெரியவனாகும்போது அவனுடைய தன்மை என்பதே இதன் கருத்து. ஒவ்வொரு மனிதனும் 'சிறுவ'னிலிருந்து வளர்ந்தவனே. சிறுவர்கள், உயிர் ராசிகளில் மனித வர்க்கத்திலிருந்து வேறுபட்ட இனம் அல்ல; அவர்களும் மனித இனமே. வயதுக் கிரமத்தால் உடல் வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சி சம்பந்தப்பட்ட சிறப்பான உள்ள உணர்வுகளுக்கும் இருக்கும் வரம்புகளால், சிறுவர் முதல் பெரியவர் வரையில் இடைப்படிகள் பல இருப்பது உண்மை. ஆனால் ஒரு குழந்தை பிறக்கும் நொடியிலிருந்தே அதை ஒரு சுதந்திர ஆத்மா என்று கருதினார் உலகப் புகழ் பெற்ற கல்வி மேதை மாண்டிஸோரி அம்மையார். அறிவு வளர்ச்சி, பண்புப் பக்குவம், சுவை முதிர்ச்சி இவையெல்லாம் வயது வரம்புக்குக் கட்டுப் படாதவை. ஏழு வயதுப் பையன் சதுரங்க (chess) விளையாட்டில் உலக நிபுணன் ஆகி விடுகிறான்; பத்து வயதுப் பையன் கணித மேதையாகிறான். பல அறிவியல் பிரிவுகளிலும் நுண்கலைத்துறைகளிலும் வயது வரம்புக்குக் கட்டுப்படாத இத்தகைய அநேகம் அதிசயப்பிறவிகளைக் காண்கிறோம்.

பண்பையும் அறிவையும் சுவையையும் பொறுத்த விஷயங்களில் பெரியவர்களைவிடச் சிறுவர்கள் மிக உயர்ந்திருப்பதையும் சில சமயம் நாம் பார்க்கலாம். ருஷ்யஞானி டால்ஸ்டாய், 'குழந்தைகள் அறிவு' (Wisdom of children) என்ற தலைப்பில் அருமையான சில காட்சிகளை எழுதியிருக்கிறார். குழந்தைகளின் மகோன்னத ஞானத்தையும் பண்பையும் அவற்றிலே நாம் காண்கிறோம். பெரியவர்களின் பல மூடத்தனங்களைச் செருக்கும் அறிவொளி வீசும் கருத்துக்களைக் குழந்தைகளின் வாய் மொழியாக அந்தக் கற்பனைச் சித்திரங்களிலே அவர் தருகிறார். குழந்தைகள்தான் அவ்வளவு எளிதாக, அவ்வளவு இயல்பாக அந்த அரிய ஞானத்தை வெளியிட முடியும். குழந்தைகளின் இயற்கையான காரண காரியவாத அறிவும், மறுக்கலவாத மேன்மையான உணர்ச்சிகளும், செயற்கையான வாழ்வு வாழும் பெரியவர்களின் நாகரிகப் பகட்டிலே மங்கி மறைந்துபோகின்றன. கருத்திலோ உணர்ச்சியிலோ ஆசையிலோ ஆனந்தத்திலோ மயக்கமும் திகைப்பும் சிறுவர்களுக்கு இல்லை. வயசு ஆக ஆகத்தான் ஐயந்திரிபு வக்கிர விபரீதங்களெல்லாம் ஏற்படுகின்றன. கேட்பதையும் பார்ப்பதையும் நம்புவது குழந்தைகளின் குணம். பின்னுளில் விழும் மனப்பதிவுகளைவிடக் குழந்தைப் பருவ மனப்பதிவுகள் நெடுங்காலம் அழியாதிருக்கும். குழந்தை பிறந்ததிலிருந்து சில மாத காலம் வரையில் அதன் புலன் உறுப்புக்கள் வளர்ந்து வந்து பிறகே முதிர்ச்சி அடைகின்றன என்பது உண்மை. ஆனால் அதன் பிறகு பல பொருள்களையும் அறியும் அடங்கா ஆவல் அதனிடம் எழுகிறது. அப்படிப்பட்ட ஆவல் நிறைவேறும் ஒவ்வொரு சமயமும் பெரியவர்கள் உள்பட யாருக்குமே ஆனந்தம் உண்டாகும். ஆனால், குழந்தைகளுக்கு உண்டாகும் ஆனந்தத்தையோ அளவிட்டுச் சொல்ல முடியாது. அறிவின் வாயில் ஆனந்தமே; வாழ்க்கையைச் செழுமைப் படுத்துவது ஆனந்தமே; அதுவே அழகு தருவது, பண்பாடு தருவது.

இந்த ஆனந்தத்தைக் குழந்தைகளுக்கு அளிப்பதுதான் நல்ல விதமான குழந்தைப் பத்திரிகை. ஆனந்தமும் அறிவும் அழகும் நிலவுமிடத்திலே நீதி போதனையும் கண்டிப்பும் தண்டனையும் பலவந்தக் கட்டுப்பாடும் தேவையில்லை. பண்பாடு சிறந்தோங்கும் போது, கட்டுப்பாடும் ஒழுங்கும் தாமே வந்தமையும்.

ஆங்கிலத்தில் குழந்தைகளுக்கென்று பல பத்திரிகைகள் பல விலைகளில்—மூன்று பென்னியிலிருந்து சில ஷில்லிங்குகள் வரை விலை உள்ளவை இருக்கின்றன. சிறந்த கதைகள், ஒலியின்பமும் கருத்தழகும் வாய்ந்த கவிதைகள், அறிவு புகட்டும் கட்டுரைகள், கண்ணுக்கினிய சித்திரங்கள், மனம் மகிழச் செய்யும் பொழுதுபோக்குகள், உடல் நலந்தரும் விளையாட்டுகள், பல தகவல்கள்—இப்படிப் பல அம்சங்களையும் கொண்டு விளங்குகின்றன சிறந்த குழந்தைப் பத்திரிகைகள். இப்படி இங்கே தமிழ் நாட்டிலும் குழந்தைப் பத்திரிகைகளை நடத்தும் முயற்சிகள் சுமார் முப்பது ஆண்டுகளுக்குள்ளேதான் தொடங்கின. அதற்கு முன்னே,

1930-க்கு இரண்டு மூன்று ஆண்டுகள் பின்னே, 'ஆனந்த விகடன்', 'கலைமகள்', 'சக்தி' போன்ற சில பெரியவர்கள் பத்திரிகைகளில் அப்போதப்போது குழந்தைப் பகுதிகள் இடம் பெற்றதுண்டு. ஆனால், முற்றும் குழந்தைகளுக்கென்றே 1940-க்குச் சிறிது பின்னேதான் ஏராளமான பத்திரிகைகள் தோன்றின. முதல் முதல் மிக விலை மலிவாக வெளியான பல பத்திரிக்கைகளுள் அழ. வள்ளியப்பாவை ஆசிரியராகக் கொண்ட மூன்றை இங்கே முக்கியமாகக் குறிப்பிடலாம். அவற்றுள் 'பாலர் மலர்' முதலாவது; அடுத்தது, 'டமாரம்'; மூன்றுவது, 'சங்கு'. மாதம் இருமுறையான ஓர் அணாப் 'பாலர் மலர்' 17 ஆயிரம் பிரதிகளும், வாரம் ஒரு முறையான அரையணா 'டமாரம்' 20 ஆயிரம் பிரதிகளும், வாரம் இருமுறையான காலணாச் 'சங்கு' 25 ஆயிரம் பிரதிகளும் விற்றன என்று அவற்றை வெளியிட்ட புதுக்கோட்டை 'தமிழ்நிலைய' உரிமையாளர் வெ. சுப. நடேசன் கூறுகிறார். அதே சமயம் இன்னும் ஏராளமான மலிவு விலைக் குழந்தைப் பத்திரிகைகள்—சுமார் 60, 70-க்கு மேல் இருக்கும்—வெளிவந்தன. இந்நாளில் சற்று முன் பின்னாகத் தொடங்கிய வாஹினியின் 'அம்புலி மாமா', 'சக்தி' அதிபர் வை. கோவிந்தனின் சகோதரர் தியாகராஜனுடைய 'பாப்பா', 'சாந்தி பிரஸ்' இராம. அருணாசலம், சித. இராமநாதன் இவர்களின் 'பூஞ்சோலை' மூன்றும் சுமார் நாலணா விலையில் வெளிவந்தன. இவற்றுள் கடைசியாக நாலாண்டுக் காலம் தொடர்ந்து நடந்த 'பூஞ்சோலை'யின் ஆசிரியரும் அழ. வள்ளியப்பாவே. அது சுமார் எண்ணாயிரம் பிரதிகள் வரை விற்பனையாயிற்று. லட்சியக் குழந்தைப் பத்திரிகை என்று அதைச் சொல்லலாம்.

அந்தப் பத்திரிகையில் எத்தகைய விஷயங்கள் வெளிவந்தன என்பதைத் 'தீபம்' பத்திரிகைப் பேட்டியில் வள்ளியப்பாவே அண்மையில் கூறியிருக்கிறார். 'பூஞ்சோலை' பத்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை மனத்தில் கொண்டே வெளிவந்தது. மூவண்ண அட்டை; உள்ளே ஏராளமான படங்கள்; சுவைமிக்க கதைகளும் அறிவியல் செய்திகளும் அதில் அதிகமாய் இடம் பெற்றன. திரு. வி. க., சேதுப்பிள்ளை, நாமக்கல் கவிஞர், மு. வ. போன்ற பெரியவர்கள் 'நான் சிறுவனாயிருந்தபோது' என்ற தலைப்பில் தங்கள் இளமைப்பருவம் பற்றி அதில் எழுதினர்கள். 'நான் பிறந்தது கேரளம்', 'நான் பிறந்தது மைசூர்' என்று அந்த அந்த மாநிலச் சிறுவர் சிறுமியர்கள் தங்கள் தங்கள் மாநிலம் பற்றி அதில் எழுதினர்கள். இன்னும், உலகப் பெரியோர் வரலாறுகள், திருத்தமாக எழுதும் முறைகள் இப்படியெல்லாம் பல விஷயங்கள் வெளிவந்தன. ஸினிமா உலகம் பற்றிய விஷயங்கள், மாயக்கதைகள், மர்மக்கதைகள், வார்த்தைப் பரிசுப் போட்டி, அதிர்ஷ்ட எண் பரிசு இவற்றுக்கெல்லாம் கண்டிப்பாய் அதில் இடம் கொடுப்பதில்லை என்று அதை நடத்தியவர்கள் உறுதியோடிருந்தது போற்றத்தக்க ஒன்று.

சின்னஞ்சிறுவர்களுக்கு மிகவும் கவர்ச்சியாக உள்ள நல்ல பத்திரிகை இன்று ஏதும் இல்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. சிறுவர்க்கு என்று தொடங்கிச் சுமார் இருபது முப்பது வயதுக்'குழந்தை' களுக்கே சுவையாயிருக்கக்கூடிய சில பத்திரிகைகள் இருக்கின்றன. அவையும் அவ்வளவு வலுவாயில்லை.

சிறுவர் பத்திரிகை சிறுவர்களுக்கு நலன் தருவதாயிருப்பது மட்டும் போதாது; அப்படி அவர்களுக்கு அது நலஞ் செய்யும் என்று பெரியவர்களுக்குத் திருப்தி ஊட்டுவதாயுமிருக்க வேண்டும். அப்போது தானே அவை விற்பனையாக முடியும்? தங்களுக்கு ஏற்ற பத்திரிகையைத் தேர்ந்தெடுப்பது சிறுவர்க்குச் சாத்தியம் இல்லை. அதற்கு அந்தப் பத்திரிகையின் அமைப்பும் பொருளும் அவர்களுக்குக் கவர்ச்சி அளிப்பதாயிருக்கவேண்டும். பெரியவர்களோ, தங்கள் சொந்தச் சுவைகளைக் கொண்டும் செயற்கையான பல கருத்துக்களைக் கொண்டும் அந்தப் பத்திரிகையின் தராதரத்தை அளப்பார்கள். அதற்கும் ஈடுகொடுத்துக்கொண்டு சிறுவர் பத்திரிகை நல்ல முறையில் அமைய வேண்டும்.

கண்ட கண்ட பத்திரிகைகளையெல்லாம் சிறுவர்கள் இன்று வாங்கிப் படிக்கிறார்கள்; பெரியவர்களே படிக்கக் கூடாத பத்திரிகைகளை யெல்லாங்கூட அவர்கள் படிக்கிறார்கள். இது மிகவும் விபரீதமான விளைவைத் தரும் நிலையாகும். எனவே, சிறுவர்க்கே உரிய நல்ல சிறுவர் பத்திரிகைகள் தோன்றுவது இன்று மிக மிகத் தேவையாகும். இந்த நிலையில் குழந்தை இலக்கியப் படைப்பிலும் பத்திரிகைப் பொறுப்பிலும் அநுபவம் வாய்ந்த வள்ளியப்பா போன்ற நண்பர்களின் சில அரிய கருத்துக்களும் யோசனைகளும் இங்கே சிந்திக்கத்தக்கவை.

*பத்திரிகைகள்தான் எழுத்தாளர்களை வளர்க்கின்றன; புது முயற்சிகளை வரவேற்றுப் பிரபலப்படுத்துகின்றன.

*இன்று குழந்தை எழுத்தாளர்கள் பெருகாததற்கும், உள்ள எழுத்தாளர்கள் வளராததற்கும், குழந்தைகளுக்கான போதிய நல்ல பத்திரிகைகள் இராத பஞ்சமே காரணம்.

*மூன்று லட்சம் பிரதி விற்கும் வாரப்பத்திரிகை இன்று தமிழ் நாட்டில் பெரியவருக்காக வெளிவருகிறது. ஆனால் குழந்தைகளுக் கென்று 4, 5 பத்திரிகைகள்கூட வெளிவரவில்லை. வெளிவரும் பத்திரிகைகளிலும் சில, பல வித இடையூறுகளால் தரமாயில்லை.

*7 வயது முதல் 9 வயதுக்கு உட்பட்ட சிறுவருக்குப் பல வண்ணப் படங்கள்கொண்ட பத்திரிகை தேவை. கண்ட கண்ட பத்திரிகைகளைப் படித்துப் 'பிஞ்சிலே பழுத்து விடாமல்' சிறுவர்களைத் தடுக்கச் சிறப்பான சிறுவர் பத்திரிகை தேவை.

*நல்ல கதை, நல்ல கட்டுரை, நல்ல பல பொருள்கள், சித்திரக் கதைகள், அறிவியல் தகவல்கள், வேடிக்கைகள் இவையெல்லாம்

சிறுவர் பத்திரிகையில் இடம் பெறுதல் இன்றியமையாதது. அதற்கு அரசினர் ஆதரவு தருவது அவர்களின் கடமை. பாரி கம்பெனி போன்ற வியாபார நிறுவனங்களும், விளையாட்டுச் சாமான்கள் செய்வதிலும் அவற்றின் வியாபாரத்திலும் ஈடுபடும் நிறுவனங்களும் விளம்பரங்கள் தந்து அதை ஆதரிப்பதும் அவசியம்.

*நல்ல சிறுவர் பத்திரிகைகளைத் தம் குழந்தைகளுக்குப் பெரியவர்கள் வாங்கித் தருவதில்லை. இது ஒரு பெரிய குறை. இதைப்பற்றி வள்ளியப்பா இப்படி வருத்தப்படுகிறார்: "ஒரு தாய் தனக்கென்று வாரந்தோறும் மூன்று பத்திரிகைகளை வாங்குகிறாள்; ஆனால், தன் வீட்டில் உள்ள மூன்று குழந்தைகளுக்கும் சேர்த்து, மாதத்துக்கு ஒரு பத்திரிகைகூட வாங்குவதில்லை."

இங்கே இன்னொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும். ருஷ்யப் பேராசிரியரும் ஞானியுமான டால்ஸ்டாய், பெரியவர்களுக்குப் பல அரிய நூல்களை எழுதினார். பெரியவர்களைப் பண்பிலே உயரச்செய்ய எவ்வளவோ முயன்றார். தமது கடைசி நாளில் இவையெல்லாம் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தார். பெரியவர்களை ஒருநாளும் சீர்திருத்த முடியாதென்று அவருக்குத் தோன்றியது. சிறுவர்களை நல்வழியில் செல்லச் செய்வதன் மூலமே மனித குலத்தைச் சீர்திருத்த முடியும் என்று எண்ணினார். அவர்களுக்குக் கல்விகற்பிக்க முயன்றார். அவர்களுக்காகச் சில கதை, கட்டுரைகள் எழுதினார். சிறுவர்களுக்காக அவர் எழுதிய இரண்டு மூன்று அறிவியல் கட்டுரைகள் அற்புதமானவை.

இதே போல், நம் நாட்டின் இன்றைய சீர்கேட்டைக் கண்ட பிரபல இசைப் புலவர் வி. வி. சடகோபன், சிறுவரை ஆடலும் பாடலுமாய்ப் பண்பாடும் கலை உணர்வும் பெறச்செய்வதே சிறந்த கல்வி; அதுவே சமூகத்தின் அடிப்படையைச் சீர்படுத்தும் மார்க்கம் என்ற உறுதிப்பாடு கொண்டு, 'தியாகபாரதி' என்றோர் இயக்கமே தொடங்கி நடத்தி வருகிறார். அந்த இயக்கத்தை ஒட்டித் 'தியாக பாரதி' என்றோர் அரிய பத்திரிகையும் வெளியிட்டு வருகிறார். அதன் ஆசிரியர் அவர். என்னையும் அதில் 'ஆலோசகர்' என்று குறிப்பிட்டுத் தொடர்பு படுத்தியிருப்பது எனக்குப் பெரிய கௌரவமாகும். அந்தப் பத்திரிகை முக்கியமாகக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியையும் கலையார்வச் செழிப்பையும் நோக்கமாகக் கொண்டது. இதற்காகக் குழந்தைகள் இசை நயத்தோடு பாடத்தக்க பல பாடல்களை இயற்றி அவற்றை இசைக் குறிப்போடு 'தியாகபாரதி'யில் அவர் வெளியிட்டு வருகிறார். குழந்தைகள் ரஸிக்கத்தக்க கதைகளும் கட்டுரைகளும் அதில் பெரிதும் இடம் பெறுகின்றன. ஆயினும், குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதும், நல்ல கல்வி வளம் பெறச் செய்வதும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் மேற்கொள்ள வேண்டிய காரியம் இல்லையா? அவர்களுக்கும் பயன்படத்தக்க பல பொருள்களைத்

தாங்கியிருப்பது 'தியாகபாரதி.' கொலம்பியா இசைத் தட்டிலும் 'தியாக பாரதி' பாடல்களைக் குழந்தைகள் கோஷ்டியோடு இசைவல்ல வி. வி. சடகோபன் பாடியிருக்கிறார். நாடெங்கும்—வடநாட்டில்கூட—பல ஊர்களுக்குச் சென்று குழந்தைகளைக் கூட்டி வைத்துக்கொண்டு தாமும் ஆடிப் பாடி அவர்களையும் பாடி ஆடச்செய்து அவர்களுக்கு ஆனந்த மூட்டுகிறார். இதை அவர் ஆத்மார்த்தமான ஓர் இயக்கமாகவே நடத்துகிறார்.

இந்த இயக்கத்தின் ஓர் அங்கமே 'தியாகபாரதி' பத்திரிகை. குழந்தைகளுக்கான பத்திரிகைத் துறையில் அது புதுமையான ஒரு முயற்சி. பிரபல ஓவியர் ரெஸாக் அதற்குப் பக்கபலமாய் நின்று படங்கள் தீட்டி அதை அலங்கரிப்பது அதற்கொரு சிறப்பைத் தருகிறது. எதிர் பாராத சில தடங்கல்களுக்கும் கஷ்டநஷ்டங்களுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு தன்னந்தனியாய் உழைத்து, விடாப் பிடியாய் அதை அவர் நடத்துவதன் ரகசியம் என்ன ?

வறட்டு அறிவியல் செய்திக் குவியல் மட்டும் மனிதனை உய்வடையச் செய்ய முடியாது ; கலையழகும் கற்பனை வளமும் பண்பாடும் இணைந்து இசை பெற்றால்தான் கல்வி நிறைவுறும்—இது அவருடைய திடமான அபிப்பிராயம். குழந்தைகளை இந்த முழுமையான கல்வி பெறச் செய்ய வேண்டும் என்ற ஒரு 'பித்தே' தமக்குப் பிடித்திருப்பதாக அவர் கூறுகிறார். வியாபார ரீதியில் அல்லாமல் சமூகப்பணி என்ற முறையிலே 'தியாகபாரதி' நடக்கிறது ; அதில் அரசியல் சார்பு இல்லை; சமய போதம் இல்லை ; நீதிநெறிப் படிப்பினை இல்லை ; பகட்டு ஏதும் இல்லை. ஆழ்ந்த பொருளும் அமைதியும் வாய்ந்த எதுவுமே எளிதில் மக்களைக் கவர்வதில்லை ; ஆர்ப்பாட்டமும் ஆடம்பரமுமே பிரசாரமாகின்றன. குழந்தைகளுக்கான பத்திரிகைத் துறையிலே 'தியாகபாரதி' ஒரு புதுமை. அது கணிசமான வெற்றி பெறுமானால், இந்தத் துறையிலேயே ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் ; வேறு பல சிறுவர் பத்திரிகைகளுக்கு ஊக்கமும் உள்வலியும் உண்டாகும். இன்றைய தமிழ் நாட்டுக் குழந்தை இலக்கியத் தலைவரும் வழி காட்டியுமாய் விளங்கும் வள்ளியப்பாவைப் போன்றோரின் முயற்சியும் உழைப்புமெல்லாம் வெற்றி தரும் வாய்ப்பு இத்தகைய புது முயற்சிகளால் நிச்சயம் ஏற்படும்.

நூல் நிலையம்

டாக்டர்.எஸ்.ஆர்.ரங்கநாதன்

நூலகத்தில் சுதந்திரம்

சரியான முறை : இங்கிலாந்தில் கண்டு, கற்றது

இங்கிலாந்திலுள்ள கிராய்டன் மத்திய நூலகத்தில் 1924-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், யான் நூலகப் பணியாற்றிய, பயிற்சி பெற்றுவந்த நேரமது. அங்குதான் நூலகப் பணியின் சரியான முறைகளைக் கற்றுணர்ந்தேன்.

ஒரு நாள், இந் நூலகச் சிறுவர் பகுதிக்குப் பொறுப்பாளனேன். அன்று மாலை சுமார் 3-30 மணி இருக்கும். நூலகத்தின் வெளியே கீச் கீச் என்ற குரல் ஒலிகள் கேட்டன. அப்போது அங்கே களித்து விளையாடும் இளம் பருவ வயதினரின் மகிழ்ச்சி பொங்கும் நிலை காணப் பட்டது. சற்று நேரத்திற்கெல்லாம், கும்பல் கும்பலாகச் சிறுவர்கள், நூலகத்திற்குள் நுழைந்து என்னருகே குழுமி விட்டரர்கள்.

புதியவனை என்னை அங்கு அப்போது கண்ட குழந்தைகளில் சிலர், உற்றுப் பார்த்தனர்.

சிலர் புன்னகையுடன் 'என்ன சௌக்கியமா?' எனக் கேட்டுக் குசலம் விசாரிக்கவும் செய்தார்கள்.

நூலகத்தின் உள்ளே குழுமிய அவர்கள் சற்று நேரத்திற்கெல்லாம், நேரே புத்தக அடுக்குகளுக்குச் சென்று விட்டனர். 10 நிமிடங்கள் கழிந்தன. தங்களுக்கு மிகப் பிடித்தமான, தேவையான நூலைத் தேர்ந் தெடுத்துக் கொண்டு, ஒருவர் பின் ஒருவராகப் படிப்பறைக்கு விரைந்தனர். வசதி நிறைந்த இருக்கைகளில் அமர்ந்தனர். மௌனமாகப் படிக்கவும் துவங்கி விட்டனர். இவற்றையெல்லாம், திரைப்படம் பார்ப்பதுபோல் அன்று பார்த்துக்கொண்டிருந்தேன். இன்றும் அக்காட்சி என் நெஞ்சை விட்டு நீங்காமல், பசுமையாய் உள்ளது.

சில சிறுசுகள் ஒதுக்குப் புறமாக, மூலைக்குச் சென்று அமர்ந்தன. அவர்கள் கூட்டாக ஒரே நூலைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்தனர். அவர்களிடையே லேசாகச் சிரிப்பொலி அவ்வப்பொழுது எழுந்தது.

ஒரே ஒரு குழந்தை மட்டும், நூல் அடுக்கில் நீண்ட நெடு நேரமாக ஒரே புத்தகத்தை உற்று நோக்கிக் கொண்டும் இடைஇடையே என்னையும் ஓரக் கண்ணால் லேசாக நோட்டம் விடுவதுமாக இருந்தது. இதை யான் கவனிக்கத் தவறவில்லை.

பாசத்துடன் அக்குழந்தை அருகே சென்று, நேசக் கரங்களை நீட்டி "உதவலாமா ?" என்றேன்.

'தங்கள் உதவி இப்போது அவசியமில்லை. உதவ முயன்றமைக்கு நன்றி' என புன்முறுவலுடன் பதிலளித்துவிட்டாள்.

கடைசியாக, கனமான, பெரிய புத்தகம் ஒன்றை, திறந்த பக்கங்களுடன், என்னிடம் காட்டு முகத்தான், கைகளில் ஏந்தி என்னருகே வந்தது அக்குழந்தை. திறந்திருந்த அப்பக்கங்களின் ஒன்றில் இந்தியர் ஒருவரின் மார்பளவு உருவப்படம் காணப்பட்டது. அவர் டர்பன் அணிந்திருந்தார். படத்தின் அடியில் "கீழே விழுந்தால் உருக்குலைந்து விடக்கூடிய டர்பன் என்ற தலைப்பாகை (குல்லாய்) அணிந்த இந்தியர்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சிறிது ஐயத்துடனும், நம்பிக்கை உறுதியற்ற குரலுடனும், 'தங்கள் டர்பன் கீழே விழுந்தால், உருக்குலைந்துவிடக் கூடியதா ?' என வினவினள். இக்கூற்றின் உண்மை நிலையை மெய்ப்பிக்கவும், இக் கருத்து எவ்வளவு தவறானது என நம்பவைக்கவும், எனது டர்பனைத் தலையிலிருந்து மெதுவாகக் கழற்றி, அதன் பிஞ்சுக் கரங்களில் வைத்தேன்.

உடனே டர்பன், வெறும் துண்டுப் பட்டாடையாக உருமாறி விட்டது.

"ஐயையோ ! தங்கள் டர்பனை வீணாக்கி விட்டேனே" ! என்று பயந்து அலறியது குழந்தை

சமாதானம் கூறினேன். அத்துண்டை வாங்கி, மீண்டும் டர்பனாக உருவாக்கி, தலையிலும் வைத்துக் காட்டினேன்.

இக்காட்சியைக் கண்ட குழந்தையின் முகம் மலர்ந்தது. மகிழ்ச்சி பொங்கியது. பயம் நீங்கி, "உண்மையை உணர்ந்தேன்" என்றது. நன்றி கூறிச் சென்றாள் அச்சிறுமி.

இதையே சரியான நூலகப் பணிமுறை என்பேன்.

தவறான வழி — அமெரிக்காவில் அனுபவித்து உணர்ந்தது

அமெரிக்க நகர நூலகத்தின் சிறுவர் பகுதி ஒன்றிற்கு 1950 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் விஜயம் செய்தேன். அங்கு அப்போது கண்ட காட்சிதான் இது.

அந்நூலகத்தில், ஒரு குழந்தை, தனது தங்கைக்கு ஒரு புத்தகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. அப்பகுதி நூலகர், இதைக் கண்டு சினந்து, அக்குழந்தையை அடித்தும் விட்டார். குழந்தை அழுதும் விட்டது.

இக்காட்சியைப் பார்த்துக்கொண்டே உள்ளே வந்த என்னைக் கண்ட அப்பகுதி நூலகர் திடுக்கிட்டார்.

அப்போது எங்கள் இருவரிடையே நடைபெற்ற உரையாடல் இதுதான் :

நூலகர் : இன்று எங்கள் நூலகத்திற்குத் தாங்கள் வருகை தரும் தகவலை நேற்றே தலைமை நூலகர் தெரிவித்திருந்தார்.

எஸ். ஆர். ஆர் : அதற்காக, நூலகத்தைச் சிறப்பாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளச் சொன்னுர் அல்லவா ? என் யூகம் சரிதானு ?

(இப்போது அந்நூலகர் லேசாகப் புன்முறுவல் பூக்கிருர்)

எஸ். ஆர். ஆர் : (மேலும் தொடர்ந்து கேட்கிருர்) ஏன் அந்தக் குழந்தையை அப்படிக் கடிந்துகொண்டு அடித்தீர்கள் ?

நூலகர் : நாளை பிரபல இந்திய நூலகர் ஒருவர் நமது நூலகத்திற்கு விஜயம் செய்ய இருக்கிருர். அப்போது அனைவரும் மிக அமைதியாக இருக்க வேண்டுமென்று, துடுக்குத்தனம் மிக்க இச் சிறுவர்களுக்கு நேற்றே அறிவுரை சொன்னேன். மறந்துவிட்டு மாசு கற்பிக்கலாமா? அதுதான் பூசை கிடைத்தது அக்குழந்தைக்கு.

எஸ். ஆர். ஆர் : அமைதியை மட்டும் காணவா இந்நூலகத்திற்கு வந்தேன் ? இல்லவே இல்லை, தங்கையே. இந்நூலகத்தின் பணி முறைகளின் சிறப்பை அறியத்தான் வந்தேன். வாசகர்கள் எவ்வாறு பயன்படுத்துகிருர்கள் எனக் கண்டறியவே வந்தேன்.

குழந்தை நூலகங்களில், அவர்கள் இங்குமங்கும் சிட்டாய்ப் பறந்து புத்தகத் தேர்வு செய்வதை ஆதரிக்க வேண்டும்; ஊக்குவிக்க வேண்டும். என்னென்ன எங்கெங்கே இருக்கின்றன என்கிற விவரங்களையும் கூறி, உடனிருந்து உதவவேண்டும். பரபரப்பான சூழ்நிலைதான் அவர்களுக்கு உற்சாகமளிக்கும். குழந்தைகள் மூன்று நான்கு பேர்களாக, சிறுசிறு குழுக்களாக மூலைகளில் அமர்ந்தும், நன்ருக இணைந்தும், புத்தகங்களை படிப்பதும் பிறகு விமர்சிப்பதுமாக இருக்க வேண்டும்.

அன்ருடம் இப்படிப்பட்ட காட்சிகள் பலவற்றைக் காணக்கூடிய இடம்தான் குழந்தை நூலகம். இத்தகைய நூலகங்களைக் கண்டு பெரிதும் ரசித்து மகிழவே வந்தேன்.

சிறுவர் நூலகத்தின் 'மேக்ஞ-கார்டாவில்' (சட்டதிட்டங்களில்) 'நூலகங்களில் குழந்தைகளுக்கு முழுச் சுதந்திரம் அளிப்பது'தான் முதல் அத்தியாயமாக இருக்கவேண்டும். இதுவே குழந்தை நூலகத்தின் முக்கிய முதல் நோக்கமாக இருக்க வேண்டும். (Freedom is the first Section in the Magna-Carta of a Children's Library)

குழந்தைகளின் அறிவுவேட்கை

குழந்தைகளின் மனம் விநோதமானது. அவர்கள் அறிவார்வம் மிக்கவர்கள். எதையும் எப்போதும் அறிந்து கொள்வதில் தீவிரம் காட்டுவார்கள். அவர்கள், புதுமையாக ஒன்றைக் கண்டால், அதுபற்றி முழுமையான தகவல்கள் அனைத்தையும் தெரிந்து கொள்வதில் காட்டும் ஈடுபாடு மிகச் சிறந்ததாகப் போற்றக் கூடியதாக இருக்கும். நூலகர் இவற்றை முற்றும் உணர்ந்து அவர்களைத் திருப்தி செய்வது அவசியம். அதுவே குழந்தை நூலகரின் முதல் கடமையாகும்.

சரியான வழி — இங்கிலாந்து அனுபவம்

இங்கிலாந்தில் உள்ள கிராய்டன் பொது நூலகத்தில் எனக்கேற்பட்ட மற்றுமொரு அனுபவத்தை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அப்போது பெர்விக் சேயர்ஸ்தான் அந்நூலகத்தின் தலைமை நூலகர். அவரே சிறுவர் பகுதியில் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கதை சொல்வது வழக்கம். அவரே கதை சொல்லும் பணியை மேற்கொண்டதுதான் குறிப்பிடத் தகுந்தது.

அவர் கதை சொல்லும் பாணியை, நிகழ்ச்சியைக் கவனித்த யான், அவரிடம் தமிழ்நாட்டு சங்கீத உபன்னியாச முறைபற்றி விரித்துரைத்தேன். அன்றே அவரும் உபன்னியாச பாணியில் கதை சொல்லவும் தொடங்கிவிட்டார்.

ஒரு நாள் அவரைச் சுற்றி 50க்கும் அதிகமான சிறுவர் சிறுமியர் சூழ்ந்திருக்கக் கண்டேன். அன்று 'ரேடியாவின் கதை'யைச் சொல்லிக் கொண்டிருந்தார். அன்றைய கதை நேர முடிவில் ஒரு குழந்தை அடுத்த நாளைக்கு ரெயில் எஞ்சினின் கதை வேண்டும் என்றது.

ஆகாய விமானத்தின் கதைதான் வேண்டும் என்றது அடுத்த குழந்தை. யானையின் கதை வேண்டுமென்றது மூன்றாவது குழந்தை. இப்படி ஒவ்வொருவரும் ஒரு கதை வேண்டும் என்று குறிப்பிட்டு வேண்டுகோள் விடுத்தன. 'உங்கள் அனைவரின் விருப்பங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றுவேன்' என்றார் சேயர்ஸ். குழந்தைகள் மகிழ்ந்தன. இப்பொருள்கள் பற்றி ஏராளமான படங்களுடன் கூடிய நூல்கள் இந்நூலகத்தில் நிறைய உள்ளன. கதை கேட்க வருமுன் அனைவரும் இவற்றை, முன் கூட்டியே படித்து வருவது பயன் உள்ளது என சேயர்ஸ் குழந்தைகளுக்குச் சொன்னார். கதை கேட்கும்போது, ரசிக்கும் படியாக நிகழ்ச்சி அமைய இதுவே வழி என்றார். 'ஒவ்வொரு நாள் கதை முடிவிலும் அக்கதை தொடர்பான மேலும் படிக்கவேண்டிய அனைத்து நூல்களைப் பற்றியும் விரிவாக விளக்கமாகக் கூறுவேன்' என மேலும் விளக்கினார்.

இதுதான் நூலகப் பணியின் சரியான முறையாகும்.

சிறுவர்களின் அறிவார்வம் அளவிடற்கரியது. எல்லாமே அவர்களுக்குப் பிடிக்கும். இந்த ஆர்வத்தை நேர் முறையில் சிறுவர் நூலகங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சிறுவர்கள் தொடர்ந்து நூல்களைப் படிக்கும் பழக்கத்தை வளர்க்கவேண்டும். தொடர் கல்விக்கு இதுவே நல்ல முறை. இவ்வாற்றலை வளர்ப்பது நூலகரின் முதற் கடமையாகும்.

தவருன வழி—இந்தியாவில் கண்டது

சில ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டில் உள்ள ஒரு பள்ளி நூலகத்திற்குச் சென்றிருந்தேன். சிறுவர்களுக்கான நூலகம்தான் அது. அங்கு அமர்ந்திருந்த மாணவர்கள் மேஜையின்மீது தலையைச் சாய்த்துக்கொண்டு மும்முரமாகப் படிப்பதைக் கண்டேன். அவர்கள் மிக சுவாரஸ்யமாக படிக்கும் நூல்களைப்பற்றி அறிந்துகொள்ள ஆவல் கொண்டேன். நோட்டம் விட்டேன். பாடப்புத்தகங்களையே நூலகத்திலும் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்; திடுக்கிட்டேன்.

அப்போது நூலகருக்கும் எனக்கும் நடந்த உரையாடலை நீங்களும் தான் அறிந்து கொள்ளுங்களேன். அது இது.

எஸ். ஆர். ஆர் : ஐயா, நூலகரே, தாங்களாவது மாணவர்களை நூலகத்திலாவது பொது அறிவு நூல்களை படிக்க அனுமதிக்கக் கூடாதா?

நூலகர் : அவர்கள் பொது அறிவு நூல்களைப் படிக்க ஆரம்பித்து விட்டால், பாடப்புத்தகங்களைப் படிக்க மாட்டார்கள். மேலும் அந் நூல்களைப் பலர் தொடர்ந்து பயன்படுத்தினுல், நூல்கள் அழுக்கடைந்து பாழாகிவிடுமே!

எஸ். ஆர். ஆர் : இது என்ன விநோதமான விளக்கமாக இருக்கிறதே!

நூலகர் : வகுப்பு ஆசிரியர்கள்கூட, பொதுஅறிவு நூல்களைக் கொடுத்து, மாணவர்களைக் கெடுத்து, மார்க்கு அதிகம் வாங்குவதைத் தடுத்து விடாதீர்கள் என எச்சரித்துள்ளனர்.

எஸ். ஆர். ஆர் : ஐயோ பாவம் ! பரிதாபம் !

அப்பள்ளி நூலகர், ஆசிரியர்களைப் பற்றி அறியும்போது பரிதாபமாகவே உள்ளது. அம்மாணவர்கள் அதிர்ஷ்டக் கட்டைகள் போலும். இப்பள்ளி நூலகரிடமிருந்து அறிவார்வமோ, தொடர்கல்வி வேட்கையோ அழிக்கப்பட்டுவிட்டனபோலும். ஆசிரியர்களிடமிருந்தும் தொடர்ந்து கற்று, கற்பிக்கும் அறிவுவேட்கை தணிந்துவிட்டதுபோலும். சிறுவர்கள் அற்புத உலகத்தில், அதன் கற்பனையில் வாழ்பவர்கள். அவர்களுக்கு உலகில் காணும் அனைத்தும் அற்புதமாகவே தோன்றும் என்ற உண்மையை நூலகரோ, ஆசிரியரோ நினைத்துப் பார்ப்பதில்லை போலும்!

அது என்ன ? இது என்ன ? இது ஏன் இப்படி இருக்கிறது ? இது இப்படி இருக்கக் காரணம் யாது ? என்று தாங்கள் காணும் அனைத்துப் பொருள் பற்றியும் சிறுவர்கள் முழுமையாக அறிந்துகொள்ள ஆவல்

காட்டுவது இயல்பே. இதையும் ஆசிரியர்களும் நூலகரும் மறந்து விட்டனர் போலும்.

எல்லாப் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளின் எல்லா வகைக் கேள்விகளுக்கும் தகுந்த சரியான விவரமான விளக்கங்களைச் சொல்லிக் கொடுக்க முடியும் என்று கருதிவிட முடியாது. எல்லோரும் அத்தகைய தகுதி பெற்றிருக்க மாட்டார்கள். இந்தியாவில் பலரின் சக்திக்கு அப்பாற்பட்ட செயலாகவே அது இருக்கும்.

சிறுவர் நூலக 'மேக்ஞ—கார்ட்டா'வின் இரண்டாவது அத்தியாயம் இதுதான். சிறுவர் நூலகத்தில் எல்லா விதச் சிறுவர் நூல்களும் இடம் பெற்றிருப்பது மிகமிக அவசியம். எந்தப் பொருள் பற்றியும் அறிய விரும்பும் சிறுவர்களின் அறிவு வேட்கையை வளர்க்க வல்ல நூல்களாக அவை இருப்பது போற்றத் தகுந்தது. நல்ல பலன் விளைவிக்கக் கூடியது.

மேலைநாட்டுச் சிறுவர் நூலகங்களில் எல்லா மொழியிலும் எல்லா வித சிறுவர் நூல்களும் ஏராளமாக உள்ளன.

தமிழில் நல்ல சிறுவர் நூல்களுக்குப் பஞ்சம்
பஞ்ச நிவாரண முதல் நடவடிக்கை

தமிழ் நாட்டிலும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, சிறுவர் நூல்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை இல்லை எனலாம். பாடப் புத்தகங்களே சிறுவர் நூல்களாகக் கருதப்பட்டன. பெரியவர்களுக்கும் தமிழில் பொது அறிவு, அறிவியல் நூல்களும் அதிகமாக வெளியாகாத காலமது.

1930-ம் ஆண்டு சென்னைப் புத்தகாலய பிரசார சங்கம் மாநாடு ஒன்று நடத்தியது. பெரியவர்கள், சிறியவர்கள் தேவைக்கேற்ப நல்ல தரமான நூல்களை உருவாக்கி வெளியிட உதவும் பொருட்டே அம்மாநாடு நடந்தது.

அம்மாநாட்டு வேலைகளுக்கு ராஜா அண்ணாமலைச் செட்டியார் இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை அளித்து, மாநாட்டு வேலைகளைத் துவக்க உதவினார். ஆரம்ப வேலைகளுக்கு ரூபாய் பத்தாயிரம் நிதி திரட்டப்பட்டது. இம்மாநாட்டுக்கு மகாமகோபாத்தியாய சாமிநாத அய்யர் தலைமை தாங்கினார். அந்நாளைய கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. குமாரசாமி ரெட்டியார் மாநாட்டைத் துவக்கிவைத்தார். பிரபல எழுத்தாளர்களும், பதிப்பாளர்களில் சிலரும் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஒரு சிறு கும்பல் மாநாட்டில் குழப்பம் விளைவித்தது. மாநாடு பாதியிலேயே முடித்துக்கொள்ளப்பட்டது. மாநாட்டின் நோக்கம் வெற்றி பெறவில்லை. தோல்வி காணச் செய்தவர்கள், நல்ல தமிழ் நூல்களின்

வளர்ச்சிக்கே அல்லவா தடை செய்துவிட்டார்கள். வசூலிக்கப்பட்ட நன்கொடைகள், திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டன.

இரண்டாவது நிவாரண முயற்சி

1942-ல் 'பள்ளி கல்லூரி நூலகங்கள்' என்ற நூலை எழுதி வெளியிட்டேன். தமிழில் சிறுவர் நூல் தயாரிப்புக்கும் வெளியீடுகளுக்கும் என ஒரு சிறப்பான திட்டத்தை உருவாக்கி அந்த நூலில் வெளியிட்டிருந்தேன். பள்ளி ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியும் என நம்பினேன். அவர்களின் ஆதரவும் கிடைக்கவில்லை. திட்டம் ஏட்டளவோடு நின்றுவிட்டது. அதனால் அதைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது.

குழந்தைகளுக்கு எழுதுவது எளிதன்று. அது இயல்பாகவே கைவரவேண்டிய கலைத்திறமையாகும். குழந்தை எழுத்தாளர்களின் சிறப்பினையும் திறமையினையும் நன்கு உணர்ந்தவர்களுக்கே இது தெரியும்.

குழந்தைகளுக்கு எழுதுவது கடினம். குழந்தைகள் நிறைந்த அறிவு பெறாதவர்கள். அவர்கள் அறிந்த சொற்கள் மிகக் குறைவே. அவர்கள் உள்ளமோ, எதையும் நம்பும் இயல்புடையது. தீயவை நல்லவை என்று பகுத்தறிய முடியாதது. இவை அனைத்தையும் நினைவில் வைத்துக் கொண்டு, குழந்தைகளுக்கு எழுதுபவர்களைப் பிறவிக் குழந்தை எழுத்தாளர்கள் எனலாம்.

குழந்தைகளுக்கு எழுதப்படும் எந்த எழுத்தோவியமும் எளிமை, இனிமை என்ற இரண்டு குணங்களைப் பெற்றிருக்கவேண்டும். விஷயத்தைச் சொல்லும் முறையில் ஒரு வேகமும் விறுவிறுப்பும் இருக்க வேண்டும்.

குழந்தைகள் மனத்தைக் கெடுக்கத் தக்க, தீய செயல்களைச் செய்யத் தூண்டத் தக்க எதுவும் குழந்தை இலக்கியத்தில் இடம் பெறக்கூடாது. இது மிகமிக இன்றியமையாததாகும். எழுதப்படும் விஷயம் ஏதாவது ஒரு முறையில் குழந்தைகளின் மனத்தைப் பண்படுத்தத் தக்கதாக இருக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் குழந்தை எழுத்தாளர்கள் தோற்றம்

நற்குணங்களையும், வீரத்தையும், விவேகத்தையும் இளமையில் குழந்தைகளுக்கு எளிதாகக் கற்றுத்தருவது ஒன்று உண்டு. அதுதான் நல்ல முறையில் உருவாகும் குழந்தை இலக்கியம். இத்தகைய இலக்கியம் படைப்பவர்களையே பிறவிக் குழந்தை எழுத்தாளர்கள் எனலாம்.

'இளமையிற்கல், தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா, விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்னும் முதுமொழிகள் படிப்பையும் பண்பையும் இளமையிலேயே

பெறவில்லை எனில் வாழ்க்கை பயனற்றதாகும் என்பதையே புலப்படுத்துகின்றன.

படிப்பை மட்டுமே ஆசிரியர் கற்றுத் தருகிறார். பண்பை யார் கற்றுத் தருவது? பெற்றோரையும் மற்றோரையும் பார்த்து ஓரளவு கற்றுக்கொள்ளலாம். ஆனால் அது மட்டும் போதுமா? நல்ல குழந்தை இலக்கியம்தான் மற்றதைப் புகட்ட வல்ல சக்தி வாய்ந்தது.

1945-ம் ஆண்டிலேயே தமிழ் நாட்டில் பல குழந்தை எழுத்தாளர்கள் தோன்றியிருந்தனர். தமிழ் குழந்தை இலக்கியம் இன்று பிறரால் மதிக்கப்படுகிறது என்றால், அதற்கு முக்கிய காரணம் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவே ஆவார். அவர்தான் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குத் தமது பாடல்கள் மூலமும் பணியின் மூலமும் ஓயாது உழைத்து வருகிறார். இவர் குழந்தை எழுத்தாளர்களின் முன்னோடி யாவார். இப்போது இருநூறுக்கும் மேற்பட்ட குழந்தை எழுத்தாளர்கள், தமிழ் நாட்டில் உற்சாகமாகப் பணி புரியும் செய்தியை அறிய, சிந்தை குளிர்கிறது.

குழந்தை நூல் என்றால் என்ன ?

12 ஆண்டுகளுக்குப் பிறகு 1957-ல் சென்னைக்குத் திரும்பி வந்தேன். ஒரு நாள் ஓய்வாக மாடியில் அமர்ந்திருந்தேன். அந்த வீட்டுச் சிறுவர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளிக் குதித்துக் கொண்டு என்னிடம் ஓடோடி வந்தனர். குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வருகிறார் என்ற செய்தியை என் காதுகளில் குசுகுசு என்று ரகசியம் ஓதினர். அதற்கு ஏன் இந்த ஆர்ப்பாட்டம் என்று வினவினேன். குழந்தை கவிஞர் அவர்; எங்களுக்கு நல்ல சுவையான எளிமையான கதைகளையும் பாடல்களையும் எழுதி வருபவர். அவர் இலக்கியம் என்றால் எங்களுக்கு அவ்வளவு ஆசை; உயிர்; பிடித்துப் போய்விட்டது என்று பதிலளித்தனர் அச்சிறுவர்கள். இது தெரியாதா உங்களுக்கு? என்று கேள்விவேறு எழுப்பிவிட்டனர். பிறகுதான் அவரைப் பற்றிச் சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டேன்.

'சமைத்த பண்டத்தின் ருசி சுவைத்துப் பார்த்தால்தானே தெரியும்?

அன்று வெளியான குழந்தை நூல்களின்
எண்ணிக்கையும் தரமும்

1957 ஆகஸ்டு மாதத்தில் திரு. அழ. வள்ளியப்பா என்னிடம் வந்தார். 1957-ம் ஆண்டில் குழந்தைப் புத்தகங்கள் பற்றி ஒரு மதிப்பீடு (சர்வே) செய்வதற்காக 263 குழந்தை நூல்களையும் கொண்டுவந்திருந்தார்.

புள்ளி விவர ஆய்வு அறிக்கை தயாரித்ததில் 73 சதவிகிதம் கற்பனைக் கதைப் புத்தகங்களாக இருந்ததைக் கண்டோம். அப்பொழுதே கதையின் செல்வாக்கு பெருகியிருந்ததை இக்கூற்று உறுதிப்படுத்தியது. பொருள், அமைப்பு, தரம் இவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

Education Review என்ற பருவ ஏட்டில் 1957 மலர் 63 பக்கம் 476—478-ல் இந்த ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டது.

கவிதை, நாடகம், கதை போன்ற சமூக இயல் இலக்கிய நூல்கள் 73 சதவிகிதம். 27 சதவிகிதம் மற்றைய பொது நூல்களாக இருந்தன. சென்னை பாரி நிலைய அதிபர் திரு. கா. அ. செல்லப்பன் அளித்துள்ள இன்றைய தகவலின்படி, விஞ்ஞானம், அறிவியல், பொது அறிவு நூல்கள் 30 சதவிகிதமேயாகும் என அறிகிறேன்.

சிறுவர் நூல்களின் பொருள் விகிதாசாரத்தில் மாற்றம் தேவை.

குழந்தை இலக்கியத்தைப் புறக்கணித்தால் வருங்காலத்தில், பிற இலக்கியங்கள் புறக்கணிக்கப்படும்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு !

இன்றைய குழந்தைகள் நாளைய பெரியோர்கள் !

அவர்களே வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கும் வன்மைபெற்ற வர்கள். இதைத்தான் குழந்தைக் கவிஞரும் கூறுகிறார்.

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார் !

நாடு காக்கும் நாளைய தலைவர்கள் நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டுமானால் இன்றைய குழந்தைகளின் மனம் பண்பட வேண்டும். அதைச் செய்ய வல்லது குழந்தை இலக்கியம். அத்தகைய நூல்கள் நிரம்பி இருக்கவேண்டிய இடம் குழந்தை நூலகம். இதனால் சமுதாயம் வளம் பெறும்; நாடும் வளமிக்க நாடாகத் திகழும். அப்போதுதான் மிகச் சிறந்த விஞ்ஞானிகளும், தொழிலதிபர்களும், அரசியல்வாதிகளும், மற்ற வர்களும் உருவாவார்கள். இந்நோக்கு வெற்றி பெற 30 சதவிகிதம் அறிவியல் நூல்களாகவும், 30 சதவிகிதம் பிற கதை, கவிதை, நாடகம் முதலிய பொழுதுபோக்கு நூல்களாகவும் எழுதப்பட்டு வெளிவருவது விரும்பத்தக்கதாகும்.

சிறுவர்களிடம் கதைப் புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் குறைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

சத்தற்ற வைக்கோலைப் போல, அறிவியல் நூல்கள் வெளிவரக் கூடாது ; தவறான செய்தியோ, படங்களோ அந்நூல்களில் இடம் பெறக் கூடாது.

பசு, புல் வைக்கோலை உண்டாலும் சுவையான பாலைச் சிறுவர் களுக்கு அளிப்பது போல், திறன் மிக்க குழந்தை எழுத்தாளர்கள் ஆங்கில அறிவியல் நூல்களைப் படித்து, தமிழில் சுவைபட கதைப் போக்கில் சிறுவர்களுக்கு எழுத வேண்டும்.

எழுத்தாளர்களுக்கு இப்படி இப்படி எழுது எனக் கட்டளை இடுவதால் எந்தவித நல்ல அறிவியல் நூல்களும் உருவாகிவிடா.

மறுமலர்ச்சி இந்தியாவில் படைப்பாற்றல் மிக்க எழுத்தாளர்கள் ஏராளமாக உள்ளனர். குறிப்பாகத் தமிழ் நாட்டில் இத்தகையோர் மிகுதியாகவே உள்ளனர். இவர்களில் பலர் குழந்தை எழுத்தாளர்களாகச் சிறந்து விளங்குகின்றனர்.

இத்தகைய ஆற்றல் மிக்க குழந்தை எழுத்தாளர்கள், இன்றைய அறிவியல் நூல்களின் தேவையை உணர்ந்து, அதற்குத் தகுந்த முறையில், நவீனமான கருத்துகளுடன் கூடிய நூல்களை எழுதி, சிறப்பான அச்சு, அமைப்புக்களுடனும் விளக்கப்படங்களுடனும் வெளியிடுவது அவசியம்.

ராமபிரானுக்குச் சீதையும் பரதனும் வெகு நேர்த்தியாகச் சொன்னது போல் "நினைவுபடுத்துகிறேன். அறிவுரையோ கட்டளையோ இல்லை இது" என அக்குழந்தை எழுத்தாளர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

விருப்பமும் வேண்டுகோளும்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் நோய் நொடியின்றி இன்னும் நூறாண்டு காலம் வாழ்ந்து, இன்று அவர் குழந்தை இலக்கிய உலகுக்குச் செய்துவரும் தொண்டைத் தொடர்ந்து, மேலும் சிறப்பாகச் செய்யவேண்டும். இந்திய, தமிழ் மரபுப்படி வாழ்த்துகிறேன்—பல்லாண்டு வாழ்க என !

தமிழில் குழந்தை இலக்கியம் மேலும் சிறப்பாக வெளிவரவேண்டும். அறிவியல் துறைக்கும் பொழுதுபோக்குக்கும் (70 : 30) முறையே 70ம் 30ம் சதவிகிதங்களாக இருக்கவேண்டும். திரு. வள்ளியப்பா அவர்கள் குழந்தை எழுத்தாளர்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டி வரவேண்டும்.

சிறுவர் நூலகங்கள் நாடு முழுவதும் ஏற்படவேண்டும். இன்றைய நிலையில் பொது நூலகங்களில் சிறுவர் பகுதி அவசியம் இருக்கவேண்டும். அங்கு கதை சொல்லும் பணியும் நடக்கவேண்டும். இதற்குச் சிறுவர் நூல்கள் அனைத்தையும் எல்லா நூலகங்களும் வாங்கவேண்டும். இதற்கு நிதி மிகுதியாகத் தேவைப்படும். அதற்குத் தக்கபடி நிதி நிலையை உயர்த்த, இன்றைய தமிழ் நாடு பொது நூலகச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்.

தமிழ் நாட்டுக் குழந்தைகள் அனைவரும், வெளியாகும் எல்லாச் சிறுவர் நூல்களையும் படிக்கச் சகல வசதிகளையும் பொது நூலகங்களிலும், பள்ளி நூலகங்களிலும் தாமதிக்காமல் ஏற்பாடு செய்துதர வேண்டும். அரசு தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

நகரத்திலுள்ள குழந்தை நூலகங்களும் பொது நூலகச் சிறுவர் பகுதிகளும், பட்டி தொட்டிகளுக்குச் செல்லும் நடமாடும் நூலகங்கள்,

கிளை நூலகங்கள் ஆகியவற்றின் மூலமும் சிறுவர் நூலகப் பணியைச் சிறப்பாக அமைத்து, வழங்கவேண்டும்.

தமிழ்நாட்டுக் குழந்தைகள் முழுமையான நூலகப்பணியை இன்னும் பெறவில்லை. அரசு ஆவன செய்ய முன் வரவேண்டும்.

குழந்தை இலக்கியம் வளர, குழந்தை நூலகங்கள் பெருகி, சிறப்பாகப் பணியாற்ற, அனைவரும் உற்சாகமாக இடைவிடாமல்பாடுபட்டால், வெற்றி காண்பது சுலபமே.

தமிழில் : **பா. பெருமாள்**, B. A., B. Lib. Sc.
நூலகர், வைணவக் கல்லூரி, சென்னை.

நாடகம்

ஔவை தி.க.சண்முகம்

'அச்சந்தவிர்', 'ஆண்மை தவறேல்' என்றார், மகாகவி பாரதியார். தாம் இயற்றிய புதிய ஆத்திசூடியின் மூலம் இளம் குழந்தைகளுக்கு இவ்வாறு புரட்சிகரமான அறிவுரைகள் கூறினார். இவை இயல்.

> சாதிகள் இல்லையடி பாப்பா ! — குலத்
> தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் !
> நீதி உயர்ந்த மதி கல்வி — அன்பு
> நிறைய உடையவர்கள் மேலோர்.

என்று இசையின் மூலமும் குழந்தைகளுக்குப் பாடி உணர்த்தினார். இயல், இசை இவற்றின் மூலம் அறிவுரைகள் கூறினால் போதுமா ? நாடகங்களின் வாயிலாகவும் நல்லுரைகள் பகரவேண்டாமா ?

ஆம் ! இயல் இசையினைவிட நாடகம் வலிமை வாய்ந்தது ; பயனுடையது ; பிஞ்சுமனங்கள் இளம் பருவத்திலேயே நற்பண்புகளைப் கடைப்பிடிக்க வேண்டும். இதைத் தூண்டும் முறையில் நாடகங்கள் அமைய வேண்டும். தொடக்கப் பள்ளிகளுக்கென்றும், உயர்நிலைப் பள்ளிகளுக்கென்றும், கல்லூரிகளுக்கென்றும் வெவ்வேறு நாடகங்கள் வேண்டும். பருவத்திற்கேற்றவாறு படிப்பினைகள் ஊட்டவேண்டும். இத்தகைய நாடகங்கள் நமக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றன.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கடமையுணர்வு, நெஞ்சுறுதி—இவை யெல்லாம் இளம் பருவத்திலேயே குழந்தைகள் இதயத்தில் இடம் பெற வேண்டும். சாதி வேற்றுமை, உயர்வுதாழ்வு இவற்றையெல்லாம் இளமையிலேயே குழந்தைகள் உள்ளத்திலிருந்து அகற்றிவிட வேண்டும். தன்னம்பிக்கை உடையவர்களாக நம் குழந்தைகள் வளரவேண்டும் ; வாழவேண்டும்.

நகைச்சுவைக் காட்சிகள் குழந்தைகளுக்கு நிரம்பவும் பிடிக்கும். எனவே, அவர்கள் விரும்பிப் பார்க்கக்கூடிய முறையில் நகைச்சுவை நாடகத்தில் இடம் பெற வேண்டும். கசப்பு மருந்தை இனிப்புடன் கலந்து கொடுப்பதைப் போல், நகைச்சுவையோடு நல்ல கருத்துக்களையும்

புகட்டலாம். வெறும் ஏட்டுக்கல்வி இந்த இனிய பண்புகளை வளர்க்காது. காட்சிப்படுத்திக் காட்டும் கலையினுல்தான் இதைச் செய்ய முடியும்.

'பஞ்ச தந்திரக் கதைகள்' நமக்கெல்லாம் தெரியும். இவை போன்ற நல்ல கதைகளை நாடகங்களாக நடிப்பது மிகவும் பயன் தரும்.

ஒரு காட்டிலே நான்கு எருதுகள் இருந்தன. அவை நான்கும் ஒற்றுமையாக இருந்தன. வலிமை வாய்ந்த சிங்கம்கூட அவற்றை ஒன்றும் செய்ய முடியவில்லை. எருதுகளின் ஒற்றுமையைக் குலைக்க நரி ஒரு தந்திரம் செய்தது. தன் சூழ்ச்சியினுல் எருதுகளைப் பிரித்தது. தனித்தனியாக எருதுகள் பிரிக்கப்பட்டதும் சிங்கம் மிக எளிதாக அவற்றைக் கொன்றது. ஒற்றுமையின் வலிமையை விளக்க இது ஒரு நல்ல கதை. மனிதர்களைப் பயன்படுத்துவதைவிட இக்கதையின் மூலம் விலங்குகளைப் பயன்படுத்துவது குழந்தைகளுக்கு உற்சாகமூட்டும். இதற்காகப் பெருமுயற்சி தேவையில்லை. சிங்கம், எருது, நரி இவற்றின் தலைகளை மட்டும் செய்துகொண்டால் போதும். அவற்றைக் கொண்டு தங்கள் முகத்தை மறைத்துக் கொள்ளலாம் ; குழந்தைகளே நடிக்கலாம். இவ்வாறு நடிப்பது குழந்தைகளுக்கு வேடிக்கையாகவும் இருக்கும். அதே நேரத்தில் ஒற்றுமையை வலியுறுத்துவதாகவும் அமையும். எடுத்துக் காட்டுக்காக இக்கதையினைக் குறிப்பிட்டேன். இவ்வாறு குழந்தைகளுக்காக எழுதப் பெற்றுள்ள சிறுகதைகள் பல இருக்கின்றன. விலங்குகளையும், பறவைகளையும் பாத்திரங்களாக வைத்து எழுதப்பெற்றுள்ள கதைகள் குழந்தைகள் நடிப்பதற்கு ஏற்றனவாக இருக்கும்.

உணவு வகைகளில் எது நல்லது, எது தீயது என்பதை விளக்கக் கூட குழந்தைகள் நாடகம் நடிக்கலாம்.

முருங்கை, கத்தரி, வெண்டை, வாழை, பூசணி, தக்காளி முதலிய காய் வகைகளையெல்லாம், நன்கு புலப்படுத்தும் முறையில் குழந்தைகள் வேடம் புனையலாம். காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இவ்வாறு 'நெல்லம்மாள்' என்ற ஒரு கதையை மேடையில் நடித்துக் காட்டினுர். அதில் நெல், பூசணி அணைக்கட்டு இவற்றையெல்லாம் கூட உடைகளின் மூலம் புலப்படுத்தினுர். நாடகம் மிகவும் நன்ருகவும் பயனுடையதாகவும் இருந்தது. பூசணியும், முருங்கையும், வெண்டையும் அரங்கில் தோன்றும்போது, இவை எதைக் குறிப்பிடுகின்றன என்பதைச் சபையோர் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் ஒப்பனை அமையவேண்டும். பெரியவர்களைவிடக் குழந்தைகள் இதில் அபாரமான திறமை பெற்றவர்கள். இவ்வாறு காட்சிப் படுத்துவதை அவர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். உரையாடல்கள் அந்தந்தக் காயின் தன்மையை விளக்குவதாகவும், நகைச்சுவையோடும் இருக்க வேண்டும். இப்படியொரு நாடகம் நடைபெறுமானுல் எந்தக் காய்

சத்துள்ளது, எந்தக் காயில் எந்தத் தன்மை இருக்கிறது என்பனவற்றை யெல்லாம் குழந்தைகள் எளிதாகப் புரிந்துகொள்வார்கள்.

இதே போன்று பொறுமை, ஆத்திரம், சினம், கருணை, ஆணவம் முதலிய குணப்பண்புகளையெல்லாம் பாத்திரங்களாக்கி நடிக்கலாம். அந்தந்தப் பாத்திரங்களைப் புரிந்து கொள்ளும் முறையில் ஒப்பனைகளும் உடைகளும் அமைய வேண்டும். பள்ளியரங்குகளிலேயே இத்தகைய நாடகங்களை நடிப்பது, குழந்தைகளின் பண்புகளை வளர்க்கப் பெரிதும் பயன்படும். இன்று நாட்டுக்குத் தேவைப்படும் நாடகங்கள் இவைதாம் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

உணர்ச்சி வசப்பட்ட மாணவர்களின் உள்ளங்கள் உயரவும், வளர வும், நமக்கு நிறைய நாடகங்கள் தேவை. இவை மிகவும் கவனத்தோடு எழுதப்பெற வேண்டும். நாடகங்கள் மாணவர்களின் மனத்தைப் பண் படுத்துவதாக அமைய வேண்டுமே தவிர, புண்படுத்தும் முறையில் அமைதல் கூடாது.

இன்று பாரதம் முழுதும் நடைபெறும் வன்முறைச் செயல்களை நாள்தோறும் நாம் பத்திரிகையில் படித்து வருகிறோம். கல்வியறிவு பெற்ற கல்லூரி மாணவர்கள் நாட்டின் சொத்துக்களைச் சூறையாடுவதும், தீயிலிடுவதும், அழிப்பதும், உடைப்பதும் ஆகிய செயல்களைச் செய்து வருகின்றனர். நாளுக்குநாள் இவை அதிகரித்து வருகின்றன. நாட்டின் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் இந்தப் போக்கைக் கண்டித்து வருகின்றனர். படித்துப் பட்டம் பெற்ற மாணவர்கள் ஏன் இப்படிச் செய்து வருகின்றனர் என்பது நம்மில் பலருக்கு வியப்பைத் தருகிறது. மாணவர்களுடைய மதி—இளைஞர்களின் அறிவு அவர்கள் கற்ற கல்வியால் வளர்ந்திருக்கிறது. அதில் சிறிதும் ஐயமில்லை. நம்முடைய மதியை வளர்ப்பது கல்வி; ஆனால் மனத்தை வளர்ப்பது கல்வியன்று; காட்சி. இதை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். மாணவர்களின் மனத்தை வளர்ப்பதற்கு இன்றைய கல்வி முறையால் முடியவில்லை யென்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. நாம் அளிக்கும் கல்வி முறை சரியல்லவென்றும், ஒழுக்கமும், பண்பாடும் மாணவர்களிடையே வளர வில்லையென்றும், இந்தியக் குடியரசுத் தலைவர் உள்ளிட்ட பேரறிஞர்கள் எல்லோரும் சொல்லிவிட்டார்கள். கல்வி முறை சரியல்ல என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதல் பாரத ஜனாதிபதி வரை அழுத்தமாகச் சொல்லிவிட்ட பிறகு இன்னும் அது மாற்றப்படாதிருக்கும் அவல நிலை ஏன் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

ஒழுக்கமும், பண்பாடும் வளரவேண்டுமானால் அது கல்வியால் மட்டும் இயலாது என்பது என் கருத்து. கருத்துக்களைக் காட்சிப்படுத்தும் சக்தி வாய்ந்த கலையினால்தான்—அதிலும் சிறப்பாக நாடகம், திரைப்படம் ஆகிய கலைகளினால்தான் இளைஞர்களிடையே ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் வளர்க்கமுடியும். இதை என் நீண்ட கால அனுபவத்தி

லிருந்து அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். எனவே, மாணவர்களின் பருவத்திற்கேற்றவாறு நல்லொழுக்கத்தையும், பண்பாட்டையும் வளர்க்கும் சிறப்பு வாய்ந்த நல்ல நாடகங்கள் நாடு முழுதும் நடைபெற வேண்டும்.

'அப்பாவின் ஆசை' என்னும் ஒரு குழந்தைகள் நாடகத்தை 1965-ஆம் ஆண்டில் நாங்கள் அரங்கேற்றினோம். உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பார்ப்பதற்குரிய நல்ல நாடகம் அது. குழந்தை எழுத்தாளர் திருச்சி பாரதன் எழுதிய நாடகம் இந்நாடகத்தை அப்போது நம் கல்வித்துறை இயக்குநராக இருந்த—இப்போது சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருக்கும் திரு. சுந்தரவடிவேலு அவர்கள் பாராட்டியபோது,

> "தமிழ்நாட்டின் ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் இந்த நாடகம் நிச்சயமாக நடைபெற வேண்டும். அதனால் மாணவர்களின் உள்ளங்கள் வளர்ச்சி பெறும்."

என்று கூறினர்.

'அப்பாவின் ஆசை'யைத் தொடர்ந்து 'பலாப்பழம்' என்னும் மற்றொரு குழந்தைகள் நாடகத்தையும் நாங்கள் அரங்கேற்றினோம். அதையும் குழந்தை எழுத்தாளர் திருச்சி பாரதன் எழுதி உதவினர். இவ்விரு நாடகங்களின் மூலம் நான் பெற்ற அனுபவத்தைக் கொண்டு மேலும் கூற விரும்புகிறேன்.

குழந்தைகளின் — மாணவர்களின் நற்பண்புகளை வளர்ப்பதற்கு நாடகங்களை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்நாடகங்கள் பெரும்பாலும் பள்ளிகளில் நடிக்கத் தக்கனவாகவே அமையும். எனவே, இத்தகைய நாடகங்களைப் பள்ளி ஆசிரியர்களும், கல்வித் துறையினரும்தான் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வியறிவோடு, கலையறிவையும் ஊட்டினால்தான் பிஞ்சு உள்ளங்களிலே—மாணவப்பருவத்திலே நல்லொழுக்கத்தையும், நற்பண்புகளையும் வளர்க்க முடியும் என்பதை அழுத்தமாகக் கூற விரும்புகிறேன்.

கதை சொல்லுதல்

தம்பி சீனிவாசன்

கதை கேட்பதில் எல்லா நாட்டாருக்கும் எந்த நாளிலும் ஆர்வம் உண்டு. மிகச் சிறு குழந்தைக்கும் இயல்பாக உள்ளது இந்த ஆர்வம். இதனை, பெற்றோரும் ஆசிரியரும் நன்கு பயன்படுத்தினால், குழந்தைகளின் மன வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும்.

குழந்தைகள் ஆர்வத்துடன் கதை கேட்கச் செய்ய ஓரளவு திறமை தேவை. இதைப் பழக்கத்தாலும் அனுபவத்தாலும் அடையலாம்.

நோக்கமும் பயனும்

கதை சொல்லுவதன் முக்கிய நோக்கம் குழந்தையை மகிழ்விப்பதே. அறிவியல் நுட்பங்களையும் அறிவுரைகளையும் நேரே தெரிவிப்பதைவிட, கதை வாயிலாகத் தெரிவித்தால் குழந்தைகள் மனத்தில் அவை ஆழப் பதிகின்றன.

குழந்தைகள் ஆர்வத்துடன் கதை கேட்பதால் அவர்களின் கவன சக்தி வலுப்படுகிறது. கதைகளில் வரும் சம்பவங்களைப் புரிந்து கொள்வதால் அவர்களின் பொது அறிவு வளர்கிறது. மிருகங்கள், பறவைகள், தாவரங்களின் பல இயல்புகளைப் பற்றிக் கதையோடு கதையாக அறிய முடிகிறது. புரியாத விஷயங்களைக் கேள்வி கேட்டு அறிந்து கொள்கிறது.

நல்ல இயல்புகளுக்குப் பாராட்டும், தீய எண்ணங்களுக்குத் தண்டனையும் கிடைக்கும் என்பதைக் கதைகள் வழியே அறிந்து நல்லது பொல்லாதது பகுக்கும் பண்பு உருவாகிறது.

வீரம், அழகுணர்ச்சி, தியாகம், பரோபகாரம், இரக்க சிந்தனை, பொறுமை, விடாமுயற்சி, ஒற்றுமை, பக்தி ஆகிய நற்பண்புகளை உதாரண வாயிலாக, கதைச் சம்பவங்களைக் கொண்டு குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள். இவற்றின் உயர்வையும், இதற்கு மாறான குணங்களின் தாழ்வையும் உணர்கிறார்கள்.

பல கதைகளாலும், கதைச் சம்பவங்களாலும் நகைச்சுவை உணர்ச்சியைக் குழந்தைகள் அனுபவித்து வளர்த்துக்கொள்ளும். வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு பண்பு நகைச்சுவை உணர்வு.

இவ்வாறு பல விரிவான நலன்களைத் தவிர, வேறு சில பயன்களும் கதை சொல்வதால் விளைகின்றன. உதாரணமாக, கதை வாயிலாகப் புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் பழமொழிகளையும் பாடல்களையும் அறியமுடிகிறது. பின்னர் அக்கதைகளைத் தாமே சொல்லிப் பார்க்க முயல்வதின் பயனாகக் குழந்தைகளின் நினைவாற்றல், கற்பனையாற்றல், பேசும் திறன், குரல் பழக்கம், கூச்சமின்மை, தன்னம்பிக்கை ஆகியவை விளைகின்றன.

மற்றுமொரு நலன், படிப்பிலே ஆர்வம். கதையைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் காரணமாகப் படிக்கும் திறமையையும் மொழிப்பயிற்சியையும் பல குழந்தைகள் பெருக்கிக்கொள்கின்றன.

கதை சொல்பவர் தகுதிகள்

குழந்தைக்குக் கதை சொல்பவருக்குச் சில அடிப்படைத் தகுதிகள் இருப்பது நல்லது. குழந்தைகளை நேசிக்கும் மனமும், பொறுமையும், திரும்பத் திரும்பச் சொல்வதில் அலுத்துக்கொள்ளாத தன்மையும், எளிமையும், கூச்சமின்மையும் தேவை. நல்ல குரல் இருந்துவிட்டால் மிகவும் நன்று. குரல் நயம் எப்படியிருந்தாலும், பழகிப் பழகி, குரலிலே பல உணர்ச்சிகளையும் காட்டும் திறமையை வளர்த்துக் கொள்ளலாம். மற்றுமொரு தகுதி, கற்பனைத் திறன். புதுப் புதுக் கதைகளையே கற்பனைச் செய்துகொள்ளாவிட்டாலும், தெரிந்த பழங் கதையானாலும தனித்தன்மையுடன் கூற ஓரளவு கற்பனை தேவை. பழக்கத்தாலும், பலரைக் கவனித்துக் கிடைக்கும் அனுபவத்தாலும், கற்பனையை வளர்த்துக்கொள்ளலாம்.

ஓரளவு பாடத்தெரிந்தால் அந்தப் பயிற்சியையும் கதைகளிடையே பயன்படுத்தலாம். கதைப்பாடல்களைப் பாடிக் காட்டலாம்.

பயிற்சியும் அனுபவமும் கதைகளைப் பற்றிய ஞானமும் பெற, சில கதைத்தொகுதிகளைப் படித்தறிவது நன்று. ஈசாப் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், பல நாட்டு நாடோடிக்கதைகள், பாரதம், ராமாயணம், புத்தர் ஜாதகக்கதைகள், பைபிள் கதைகள், பக்தர் கதைகள் போன்ற பலவற்றிலும் பயிற்சி இருப்பது நன்று. பல ஊர்களைப் பற்றியும், சரித்திர வீரர்கள் பற்றியும் தெரிந்திருந்தால் அந்த அறிவும் பயன்படும்.

சொல்லும் முறை

கதை சொல்லத் தொடங்குவதற்கு முன்னே, அக்கதைச் சுருக்கத்தை நினைவுபடுத்திக்கொண்டு, சீராகத் தொடங்கி, தடையில்லாமல் சொன்னால் குழந்தைகளின் கவனம் கலையாமல் கேட்கச் செய்யலாம். கதைச் சம்பவத்துக்கு ஏற்ப, சொல்பவர்தம் குரலில் ஏற்ற இறக்கம் செய்து

கொள்ளலாம். கதாபாத்திரங்களின் தன்மைக்கு ஏற்ப, குரலில் மாறுதல்கள் காட்டலாம். புதிய மிருகமோ, இடமோ, செய்தியோ கதையில் வரும்போது, சுருக்கமான விளக்கம் தரலாம்.

நடுநடுவே, குழந்தைகளின் கவனம் கலையாதிருக்க, குழந்தைகளிடையே கேள்வி கேட்டு, விடை பெற்று, கதையைத் தொடரலாம். இயன்றபோதெல்லாம் நகைச்சுவைப் பகுதியைப் பக்குவமாகக் கூறி, குழந்தைகளை மகிழ்விக்கவேண்டும். அது போலவே, சோகமான விஷயங்களையும் சாவு நிகழ்ச்சிகளையும் சொல்லும்போது நாசுக்காகச் சொல்லவேண்டும்.

பள்ளி ஆசிரியராக இருப்பது வேறு. கதை சொல்பவராக இருப்பது வேறு. பள்ளி ஆசிரியரே, தம் வகுப்பு மாணவருக்கே கதை சொல்ல வந்தால்கூட, வேறு விதமாகத்தான் பழகுவார், பழக வேண்டும். கதை சொல்லத் தெரிந்த எவருமே குழந்தைகளின் அன்பையும் மதிப்பையும் எளிதில் பெற்றுவிடுகிறார்கள். எனவே கண்டிப்புக் காட்டவும் அதட்டிப் பேசவும் பெரும்பாலும் தேவையிராது. மேலும், இது வகுப்பறை அல்லவே. கேட்பவரும் சொல்பவரும் ஒரு குடும்பத்தவர் போல 'அற்புதக் கதை உலகத்'துக்குள் புகுந்துவிட சுமுகமான சூழ்நிலை தேவை.

குரல் ஆற்றலாலும், சைகை அபிநயங்களாலும், முக பாவங்களாலும் நடித்துக் காட்டிக் கதை சொல்வதற்குச் சிறப்பு ஏற்படுகிறது.

கதை சொல்பவர்கள், தாம் சொல்லும் கதைத் தொடர்புள்ள பல படங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டால், உபயோகமாக இருக்கும்.

சொல்வதற்கு ஏற்ற கதைகள்

பற்பல வயதுப் பிரிவிற்கும் அனுபவத்தில் மாறுபட்ட பிரிவிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற கதைகளையே குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். புதிதாகச் சொல்லிப் பழகவும், மிக இளம் குழந்தைகளுக்கு ஏற்பவும் சிறு கதைகளை முதலில் கூறலாம். குறைந்த கதாபாத்திரங்களுடன் குறைந்த அளவு கதை நிகழ்ச்சிகள் கொண்ட கதைகளை முதற் பிரிவாக அமைக்கலாம். இவ்வாறான ஒரு கதையே "காகமும் குடமும்."

தாகமுள்ள காகம் ஒன்று, நீருக்குத் தவிப்பதையும், கிடைத்த தண்ணீர் வாய்க்கு எட்டாது போவதும், முயற்சியினால் பிறகு அதை அடைவதையும் கூறும் எளிய கதை. இதிலுள்ள கதாபாத்திரம் ஒன்றே ஒன்று. அதுவே காகம். கதை நிகழ்ச்சியும் ஒன்றே. தாகத்துக்கு நீர் தேடிப் பெறுவது.

ஆனால் இந்தச் சிறு கதையையும் சுவையாகக் கூற முடியும். காகத்தை விவரித்து, அதன் தாகத்தை விவரித்து, நீர் கிடைக்

காமல் வாடித் தவிப்பதை விவரித்து, நீரைக் கண்ணுல் பார்த்ததும் ஏற்படும் மகிழ்ச்சியையும், பின்னர் நீர் எட்டாததால் ஏற்படும் ஏக்கத்தையும், காகத்தின் விடா முயற்சியையும், உழைப்பையும், முயற்சியின் வெற்றியையும் சுவையுடன் கூறலாம்.

இவ்வாறு ஒவ்வொரு கதையிலும், ஆழ்ந்து சிந்தித்து, குழந்தையின் மனக்கண்முன்னே அந்தந்தக் காட்சிகள் வருமாறு சுவைபடக் கூறுவதற்குப் பழகவேண்டும்.

இவ்வாறு பழங்கதைகளையெல்லாம் குழந்தைகளுக்குப் பல நிலைகளில் சொல்லிப் பழகலாம். பஞ்சதந்திரம், ஈசாப் கதைகளில் உள்ள நீதி போதனைகளை இயல்பாகப் புரியும்படி வெளியிடலாம்.

கதைகள் பல ரகம்

வாழ்விலே அனைவருக்கும் நகைச்சுவை உணர்ச்சி நிரம்பத் தேவை. இந்த உணர்வை வளர்க்கும் வகையிலும், பிறரைப் புண்படுத்தாத இயல்பில் சிரிக்கக் கற்றுக்கொள்ளவும், தன்னைத் தானேகூட பார்த்துச் சிரிக்கும் எளிமையை வளர்த்துக்கொள்ளவும், குழந்தைகளுக்குப் பல கதைகளைக் கூறலாம். சில கதைகள் கெட்டிக்காரத்தனத்தைக் காட்டும் வகையிலும் இருக்கும்.

ஒவ்வொரு கதையும் குழந்தைக்கு ஒரு புதிய விஷயத்தையாவது தெரிவிக்கும். கதைகள் இன்பமூட்டும்போதே அறிவியலையும் வளர்க்கின்றன. சில பிராணிகளின் இயல்பையும் அவற்றைப் போன்ற மக்களுடன் பழக நேரின் எச்சரிக்கையையும் கூறும் நீதிக்கதைகள் பல உள்ளன.

சரித்திரமும், பெரியோர் வாழ்வும் பல சுவையான சம்பவங்களைக் கொண்டவை. அவற்றிலிருந்து பல பாடங்களை அறிய முடியும். இவையெல்லாம் கதை போலக் கூற ஏற்றவை.

குழந்தைகளிடம் ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையும் மனிதாபிமானமும், 'இறைவன் அன்பே வடிவானவன்' என்ற கருத்தும் தோன்றி வளர, சில கதைகள் பயன்படும்.

இராமாயணக் கதையையும் பாரதக் கதையையும் சுருக்கமாகக் குழந்தைகளுக்குத் தெரிவிக்கலாம். அவற்றிலே வரும் கிளைக் கதைகள் பத்து இருபதாவது தெரிந்துவைத்திருக்கலாம்.

விரிவாகக் கதை கூறும்போது ஒரு சுவை இருக்கிறது. அது போலவே, சுருக்கமாக, இசையுடன் சொல்லும் கதைப்பாடல்களுக்கும் ஒரு தனிச்சுவை இருக்கிறது. குழந்தைகள் கதையுடன் பாடலையும் மனப்பாடம் செய்துகொள்கிருர்கள். பல வகைப்பட்ட சந்தங்களும் எளிமையும் இவ்வகைப் பாடல்களில் இருப்பது நலம்.

மற்றும் நாடோடிக்கதைகள், பல நாட்டுக் கதைகள், இலக்கியக் கதைகள் என்று பலவற்றைப் படித்தும், கேட்டும், அறிந்தும் குழந்தைகள் புரிந்துகொள்ளும் முறையில் கூறலாம்.

எழுத்தாளர் பயனடைய

இவ்வாறு கதை சொல்லுபவர்கள் குழந்தை எழுத்தாளராக இருந்து விட்டால் இரட்டிப்புப் பயன் விளையும். தம் எழுத்து குழந்தைகளுக்குப் புரிகிறதா என்று காணும் சோதனைச்சாலையாகக் கதை சொல்லும் நிகழ்ச்சி களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் தொடர்ந்து நடத்திய கதை நிகழ்ச்சி களில் பல எழுத்தாளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டனர். பல வெளிநாட்டுக் கதைகளைத் தென்னிந்திய மொழிகளில் பெயர்க்க வேண்டியிருந்தபோது, நான் கதை சொல்லும் நிகழ்ச்சியைப் பயன் படுத்திக்கொண்டேன். எந்தெந்த வெளிநாட்டுக் கதை நமது குழந்தை களுக்குப் புரிகிறது என்று பார்த்து அவற்றையே தேர்ந்தெடுத்தேன். இந்த அனுபவம், அந்த நூல் வெற்றிகரமாகத் தயாராவதற்கு உதவியது.

கதை சொல்லுபவர் ஆற்றலாலும் முயற்சியாலும் குழந்தைகள் மனத்தில் நாட்டுப்பற்று, நல்ல இயல்புகளில் நாட்டம், தெய்வநம்பிக்கை ஆகியவற்றைப் பதியச் செய்ய முடியும். இளமையில் கேட்ட கதைகள் வீரசிவாஜியையும், அண்ணல் காந்திஜியையும் உருவாக்கின என்பது வரலாற்றுச் செய்தி. லட்சியக் குடிமக்கள் உருவாக நடைபெறும் நன் முயற்சிகளில், கதை சொல்லுவதும் ஒரு பெரும் பணி—முக்கியமான சேவை.

குழந்தைக் கவிஞர்

உள்ளம் கொள்ளை கொள்கிற
உயர்ந்த பாடல் எழுதிடும்
பிள்ளைக் கவிஞர் தமிழ்மொழி
பெருமை ஓங்கப் பிறந்தவர்.

தெள்ளு தமிழில் கவிதைகள்
தேனாய் எழுதித் தந்திடும்
'வள்ளி யப்பா' குழந்தைகள்
மனத்தில் வாழும் கவிஞராம்.

தமிழில் குழந்தை இலக்கியம்
தழைத்தே ஓங்கச் செய்தவர் ;
அமுதப் பாடல் தந்தவர் ;
அவரை நாமும் போற்றுவோம்.

—புலவர் அ. அப்துல்கரீம்

[தமிழ் நிலையத்தார் வெளியிட்ட,
'கவிதை தந்தவர் கதை' என்னும் நூலிலிருந்து]

வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு	:	7—11—1922.
இடம்	:	இராயவரம், திருச்சி மாவட்டம்.
பெற்றோர்	:	அழகப்பச் செட்டியார், உமையாள் ஆச்சி.
ஆரம்பக் கல்வி	:	சு. கதி. காந்தி பாடசாலை, இராயவரம்.
உயர்நிலைக் கல்வி	:	ஸ்ரீ பூமீஸ்வர ஸ்வாமி உயர்நிலைப் பள்ளி இராமச்சந்திரபுரம், திருச்சி மாவட்டம்.
கவிதை எழுதத்தொடங்கியது	:	13வது வயதில்.
சென்னை வருகை	:	1940–அமரர் வை. கோவிந்தன் அவர்களின் சக்திகாரியாலயத்தில் பொருளாளராகச் சேர்ந்தார்.
இந்தியன் பாங்க் பணி	:	1941–ல் இந்தியன் பாங்கில் உத்தியோகம் பெற்று, இன்று அதன் ஆள்வார்ப்பேட்டை கிளையின் ஏஜென்ட்.
திருமணம்	:	4—2—1944–ல் இராயவரத்தில் பிறந்த வள்ளியம்மையை மணந்தார்.
குழந்தைகள்	:	5 குழந்தைகள். அலமு, அழகப்பன், கஸ்தூரி, உமா, தேவி.
முதல் புத்தகம்	:	'மலரும் உள்ளம்' என்ற பெயருடன் 23 பாடல்கள் கொண்ட நூல் 1944–ல் புத்தக நிலையத்தாரால் வெளியிடப் பெற்றது.
பத்திரிகைகளின் ஆசிரியர்	:	1944 முதல் 1951 வரை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பாலர் மலர், டமாரம், சங்கு ஆகியவற்றின் ஆசிரியராகவும் 1951 முதல் 1954 வரை வெளிவந்த 'பூஞ்சோலை'யின் கௌரவ ஆசிரியராகவும் இருந்தார்.
குழந்தை எழுத்தாளர் சங்கம் நிறுவியது	:	1950–ல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தை திரு. வை. கோவிந்தன் அவர்களின் தலைமையில் நிறுவி

ஞர். பொதுச் செயலாளர் (1950–55), தலைவர் (1956–61), ஆலோசகர் (1961–67), மீண்டும் தலைவர் 1968 முதல்.

தமிழ் எழுத்தாளர் சங்கப் பணி : 1956-ல் திரு. தேவன் அவர்கள் தலைவராக இருந்தபோது, பொதுச் செயலாளரானார். 3 ஆண்டுகள் செயலாளராகவும் பொருளாளராகவும் துணைத் தலைவராகவும் இருந்து 1966–ல் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

புத்தக டிரஸ்டில் : குழந்தைப் புத்தகத் தனி அலுவலராகப் பொறுப்பேற்று தென் மொழிகள் நான்கிலும் குழந்தைப் புத்தகங்கள் வெளிவர உதவினார் (1957–1961).

எழுதியுள்ளவை : 700–க்கு மேற்பட்ட கவிதைகளும் 43 நூல்களும் இயற்றியுள்ளார்.

பரிசுகள் : மத்திய அரசினர் பரிசையும் தமிழக அரசினர் பரிசையும் பெற்ற நூல் 'மலரும் உள்ளம்' முதல் தொகுதி. தமிழக அரசினர் பரிசு பெற்ற மற்ற நூல்கள்: 'நல்ல நண்பர்கள்' (கதை), 'சின்னஞ் சிறுவயதில்', 'பெரியோர் வாழ்விலே' 'பிள்ளைப் பருவத்திலே'(மூன்றும் வாழ்க்கை வரலாறுகள்) பாப்பாவுக்குப் பாட்டு (கவிதை).

பாராட்டு : குழந்தை எழுத்தாளர் சங்கம் 1961–ல் திரு. ஆர்வி தலைமையில் நடத்திய மூன்றாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் டாக்டர் ஜாகிர் ஹுசேன் வெள்ளிக் கேடயம் வழங்கிப் பாராட்டினார்.

1963–ல் லக்னோவில் நடந்த அகில இந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் பதக்கமும் பாராட்டும் வழங்கப் பெற்றார்.

கவிஞர் படைத்தவை

கவிதை

1.	மலரும் உள்ளம்—முதல் தொகுதி	பாரி நிலையம்	5	00
2.	மலரும் உள்ளம்—இரண்டாம் தொகுதி	,,	5	00
3.	பாட்டிலே காந்தி கதை	,,	3	50
4.	ஈசாப் கதைப் பாடல்கள் முதல் தொகுதி	,,	1	25
5.	ஈசாப் கதைப் பாடல்கள் 2–ஆம் தொகுதி	,,	1	25
6.	சுதந்திரம் பிறந்த கதை	,,	0	60
7.	குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள் முதல் தொகுதி	,,	1	00
8.	,, ,, 2-ஆம் தொகுதி	,,	1	00
9.	குழந்தைக் கவிஞரின் வேடிக்கைப் பாடல்கள்	,,	1	00
10.	பாப்பாவுக்குப் பாட்டு	,,	0	40
11.	சின்னஞ்சிறு பாடல்கள்	,,	0	40
12.	பாட்டுப் பாடுவோம்	,,	1	50
13.	பாலர் பாடல்	தமிழ் நிலையம்	1	00
14.	சிட்டுக்குருவி	,,	1	00
15.	மல்லிகை	,,	0	75
16.	குழந்தைக் குரல்	பாப்பா மலர்	1	00
17.	பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள்	நேஷனல் புத்தக டிரஸ்ட்	1	25

கதை

18.	பர்மா ரமணி	பாரி நிலையம்	4	00
19.	வேட்டை நாய்	,,	1	[illegible]
20.	மணிக்கு மணி	,,	1	[illegible]
21.	எங்கள் பாட்டி	,,	1	[illegible]
22.	நல்ல நண்பர்கள்	பழனியப்பா பிரதர்ஸ்	1	[illegible]
23.	குதிரைச் சவாரி	,,	1	50
24.	உமாவின் பூனைக்குட்டி	ஸ்டார் பிரசுரம்	1	50
25.	ரோஜாச் செடி	,,	1	50
26.	அம்மாவும் அத்தையும்	,,	1	50
27.	மூன்று பரிசுகள்	தமிழ்ப் புத்தகாலயம்	1	00
28.	வித்தைப் பாம்பு	,,	1	00
29.	பாலர் கதைகள்	தமிழ் நிலையம்	1	00
30.	நிமிஷக் கதைகள்	,,	1	00
31.	நான்கு நண்பர்கள்	எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை	1	40

வாழ்க்கை வரலாறு

32.	பிள்ளைப் பருவத்திலே	பாரி நிலையம்	2	[illegible]
33.	சின்னஞ்சிறு வயதில்	,,	1	25
34.	பெரியோர் வாழ்விலே முதல் தொகுதி	,,	1	25
35.	,, 2-ஆம் தொகுதி	,,	1	00
36.	கதை சொன்னவர் கதை முதல் தொகுதி	தமிழ் நிலையம்	1	75
37.	,, 2-ஆம் தொகுதி	,,	1	00
38.	,, 3-ஆம் தொகுதி	,,	1	00
39.	நேருவும் குழந்தைகளும்	பழனியப்பா பிரதர்ஸ்	5	[illegible]

பொது

40.	எங்கள் கதையைக் கேளுங்கள்	பாரி நிலையம்	2	00
41.	வெளிநாட்டு விடுகதைகள்	,,	0	[illegible]
42.	மிருகங்களுடன் 3 மணி	எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை	1	75
43.	வாழ்க்கை விநோதம்	பழனியப்பா பிரதர்ஸ்	1	50